Ru13 m211,N12.
N12.5
161395

உ

[redacted]

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின்
## மாதாந்தரத்
## தமிழ்ப் பத்திரிகை.

---

### ஐந்தாந்தொகுதி.

---


பத்திராசிரியர்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

**சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர்,**

(மணவழகு)


---


சென்னை

மஹா லக்ஷ்மீ விலாச அச்சுக்கூடம்.

1917.

161395

# சித்தாந்தம் ஐந்தாந்தொகுதியின் உள்ளுறை.


அப்பர்தேவாரத்தால் கொள்ளக்கிடக்குங் கிரணர்யார்
ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. ... ... 156
அர்ச்சுனனும் பாண்டியமரபும்-தடிசைகிழார் அ சிதம்பரனர் } 184, 195, 252, 269
அறிவுஞ்சமயக்கல்வியும் - ஞானகாசம் ... ... 236
ஆன்மாவுக்குச் சிற்றறிவெதனாலறிவது - சைவகுக்குமார்த்தபோதினி 158
இவைநமக்குத் துணையாகுமா - வ-மு-இரத்தினேசவரையர் ... 68
உயிர் — இராமசாமிக் கவிராயர் ... ... 117, 139
உயிருண்மைக்குப் பிரமாணம் - வியாசத்திரட்டு ... 90
ஐதரேயோபநிஷத்து - மணவழகு ... ... 1, 25
குருவணக்கம் - துறைசை-நமசிவாயத்தம்பிரான் சுவாமிகள் 5, 28
கோபம் - கா-வேதாசல முதலியார் ... ... 129
சமய அருட்சி - S. சபாரத்தின முதலியார் 22, 47
சமய சூக்கும பஞ்சாக்கரம் - கா-நாகலிங்க முதலியார் 215
சந்தான குரவர் - தி-த-கனகசுந்தரம் பிள்ளை ... 276
சிவவழிபாடு - வியாசத்திரட்டு ... ... 45, 82
சிவஞானசுவாமிகளும் அத்துவிதக் கொள்கையும்
அம்பலவாண நாவலர் ... ... 180
சிவனடியார் சிறப்பும் அடியவர் பூஜாபலனும்
பா-கண்ணப்ப முதலியார் ... 232, 263, 279
சிவோபாசனமகிமை - S. நடேச தேசிகர் ... 34
செல்வம் - W. T. கோவிந்தராஜ முதலியார் 37, 54, 78
சைவசித்தாந்த சமாஜத்தின் பத்தாவது வருடக்கூட்டம்
களந்தைகிழான் ... ... 11
ஷை சமாஜத்தின் தீர்மானங்கள் ... ... 14.
சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்
C. சங்கரராயர் B. A. 94, 100, 124, 164, 189, 199, 220
சைவமடமும ஸ்மார்த்தமடமும் - மணவழகு ... 192
தமிழர்க்கான சிலகுறிப்புகள் - தடிசைகிழார்-அ-சிதம்பரனர் 229

2. இங்ஙனம் சங்கற்பித்து அம்பஸ் என்னும் சுவர்க்கலோகத்தையும், அதன்மேலுள்ள உலகங்களையும், மரீசி என்னும் அந்தரிக்ஷலோகத்தையும், மரம் என்னும் பூமியையும், ஆபஸ் என்னும் ஜலசம்பந்தமான பூமியிற் கீழுள்ள உலகங்களையும் சிருஷ்டித்தனர்.

௩. இவ்வுலகங்களைப் பரிபாலிப்பவனைச் சங்கற்பித்தனர், புருஷாகாரமானவொருபிண்டத்தைப் பஞ்சபூதங்களினின்றுந் திரட்டினர்.

௪ அப்பிண்டத்தினைப் பற்றிச் சங்கற்பித்தார். பட்சியின் முட்டை போன்று அப்பிண்டத்தில் முகமுண்டாயிற்று. அம்முகத்தில் வாக்குண்டாயிற்று, அவ்வாக்கினின்றும் அதனதிஷ்டானமாக அக்கினிதேவதை தோன்றிற்று. பின் நாசியுண்டாயிற்று, அந்நாசியினின்றும் கிராணேந்திரியமுண்டாயிற்று. அதனதிஷ்டானமாக வாயுதேவதையுண்டாயிற்று. பின் கண்ணுண்டாயிற்று. அதில் நேத்திரேந்திரியமுண்டாயிற்று. அதனதிஷ்டானமாகச் சூரியதேவதையுண்டாயிற்று, பின்காதுண்டாயிற்று அதில் சுரோத்ரேந்திரியமுண்டாயிற்று, அதனதிஷ்டானமான திக்தேவதையுண்டாயிற்று, பின் தோல் உண்டாயிற்று, அதில் ஸ்பரிசேந்திரியமுண்டாயிற்று. அதனதிஷ்டானமான ஔஷதங்களும் வனஸ்பதிகளும் தோன்றின, அந்தக்கரணத்தினதிஷ்டானமான இருதயத்தினின்று மனம் தோன்றிற்று. அதனதிஷ்டானமாகச் சந்திரதேவதை தோன்றிற்று. பின்நாபிதோன்

ஷத்தாலும், "பிரமனும் விஷ்ணுவும் உருத்திரனும் எல்லாப்பூதங்களோடுஞ் சேர்த்தாற் படைக்கப் படுகின்றனர், வடவைத்தீயால் ஜலம் நாசமாதல்போல அப்பூதங்களோடு அவர்களே இலயமேயடைகிறார்கள்" எனும் பொருளைத்தரும் "ப்ரஹ்மாவிஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வாவா பூதஜாதய: நாசமேவாநுயாந்திஸலிலாநிவபாடபம்" எனும் மகோபநிஷத்தாலும் சிவபெருமானொருவனேஜகத் உற்பத்திக்கு முன் இருந்தானென்பது வச்சிரலேபமாம். அன்றியும், "பரத்துக்குப் பரமாவன் பிரம்மன், அவனுக்குப்பரமாவன் விஷ்ணு, அவனுக்குப்பரமாவன் ஈசனுகியசிவன்" எனும் "பராத்பரதரம் ப்ரம்மதத்பராத்பரதோஹரி: தத்பராத்பரதோஹீச" எனும்சரபோபநிஷத்துகூறியிருக்கவும் ப்ரதிஷ்டாகலைக்குட்பட்ட பிரளயகாலத்தில் சிவன் தாங்கினனென்றெழுதிய எழுத்து ஊஷரபூமியிற் செய்தகிருஷியேயாம்.

† மகாசங்காரமுடிவில் உலகங்களை மீளம்படைத்தற் பொருட்டுப்பரமாத்மாவாகிய ஈஸ்வரனுடைய பராசக்தி மாயையதிட்டிக்க அம்மாயை காரியப்பட அவசரமே சங்கற்பமாம்.

161395



றிற்று. அதன் பாயுவென்னுமிந்திரியத்தில் அதனதிஷ்டானமான மிருத்யு தேவதையுண்டாயிற்று. பின்குஹ்யம் தோன்றிற்று. அதன் ரேதஸ்ஸுடன் கூடியகுஹ்ய இந்திரியத்தின் அதிஷ்டானமான ஜலமுண்டாயிற்று.

## இரண்டாவது கண்டம்.

இந்தேவர்கள் சமுசாரத்திலமுழ்ந்தினர். இவர்கட்குக் காரணமாகவிருந்த முதல் அப் புருஷபிண்டத்திற்குப் பசிதாக முதலியவற்றையுண்டாக்கினர். அப்பிண்டத்தினின்றும் வெளிப்பட்டவர்கட்கு அங்ஙனம் பசிதாக முதலிய உண்டாயின. நாங்களெவ்விடமிருந்து அன்னத்தைப் புசிப்போமோ அத்தகைய விடத்தை காட்டியருளுகவென்று அவர்கள் முதல்வனைக் கேட்டார்கள்.

2 அவர்கட்கு (ஈஸ்வரன்) பசுவைக் காட்டினர். அது போதாதென்றனர், ஒருகுதிரையைக் காட்டினர், அதுவும் போதாதென்றனர். ஒருபுருஷனைக் காட்டினர். சந்தோஷமென்று தேவர்கள் ஒப்புக்கொண்டார்கள், அவர்களை யதனுள் பிரவேசியுமென்றனர்.

௩. வாக்கின் அபிமானியான சூரியன் நேத்திரத்திலும், சுரோத்ராபிமானியான திக்குகள் காதுகளிலும், ஔஷதிகளும் வனஸ்பதிகளும் துவக்கிலும், மனோபிமான சந்திரன் இதயத்திலும், அபானாபிமானியான மிருத்யுநாபியிலும் ரேதசாபிமானியானஜலம் குஹ்யத்திலும் அடைந்தார்கள்.

௪. பசிதாகம் எங்கட்கிருப்பிடம் வேண்டுமென ஈஸ்வரனைக் கேட்டன. இத்தேவதைகளே யிடமென்றனர், அவர்கட்குக் கிடைக்கும் ஆகாரத்தில் உங்கட்கும் பாகமுண்டென்றனர். ஆகலின் எந்தத் தேவதையின் பொருட்டு அவிசானது கொடுக்கப்படுகிறதோ அத்தேவதையிடத்தில் பசிதாகங்கட்குப் பாகமுண்டு.

## மூன்றாவது கண்டம்

இந்தலோகங்களும் லோகபாலர்களும் பசிதாகத்தையுண்டாக்க ஈஸ்வரனினைத்தார்

2. ஜலங்களை (பஞ்சபூதங்களை) சங்கற்பித்தார், அவற்றினின்றும் சராசரரூபமானவை உண்டாயிற்று அவை அன்னம்.

௩. அவ்வன்னம் லோகபாலர் முன்வைக்கப்பட்டது. அதனைக் கிரகிக்க அவர் திரும்பினர்கள். அவ்வன்னம் ஓடத்தொடங்கியது.

நியாநாநந்தந்திகழுமிடமெது-யாழ்ப்பாணம் வ.மு.இரத்திநேசுவரையர் 41
தெய்வச்சேக்கிழார் திருவாக்குண்மை - வி-குஞ்சிதபாதம் பிள்ளை 108
தேவாரக்குறிப்பு - வி-குஞ்சிதபாதம்பிள்ளை 175, 225, 244
தைத்திரீயோப நிஷத்து மணவழகு } 49, 121, 145, 169, 193, 217, 241, 265
நாணயம் - மாகறல்-கார்த்திகேய முதலியார் ... 231
பதிபசுபாசவிளக்கம் - சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகள் 17
பதிபுண்ணியம் - கா-வேதாசல முதலியார் 61, 15, 85
பழஞ்சரித்திரச்சுருக்கம் - மாகறல் கார்த்திகேய முதலியார் 148
பகுத்தறிவு - இந்துசாதனம் ... ... 205
பரிமேலழகருரைச்சந்தேகவினு அசந்தேகம்
பூ-நா-இராசகோபாலப் பிள்ளை ... ... 212
பாழையென்னுஞ் சொல்வழக்கம் - மாகறல்-கார்த்திகேய முதலியர் 171
பொறுமையும் அதனால் விளையுங்கேடுகளும்-ஞானகாசம் 258
பெருமிதமும் ஆற்றலும்-பாரதி ... ... 208
முத்திரை-மாகறல்-கார்த்திகேய முதலியார் ... 249
மூர்த்திதலந்தீர்த்தமும் குருலிங்கசங்கமும்-கா-சூலாலசுந்தரம்பிள்ளை 113
மெய்ம்மொழிவிளக்கம்-குஞ்சிதபாதம் பிள்ளை ... 67
வேதாந்தம்-மணவழகு ... ... 73
வேதாந்தமும் மாயாவாதமும்-இராதாகிருஷ்ண ஐயர் எம் ஏ; எல், டி. 159
யோகம்-மணவழகு 97
வேண்டுகோள்-மோ-கந்தசாமி B. A. 274

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1916
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1916ஆ ஜனவரிமீ [பகுதி க,

## ஐதரேயோபநிஷத்து.

### முதலத்தியாயம் கண்டம் க.

இங்குக் காணப்படும் ஜகத்து சிருஷ்டிக்கு முன்னே ஒரு ஆத்துமாவேயிருந்தது. * அதனையன்றி வேறுவியாபாரமில்லை, அவ்வாத்துமா ஜகத்தினைச்சிருஷ்டிக்க வேண்டுமெனச் சங்கற்பித்தது†.

* பிரளயகாலத்தில் குணருத்திரன் விட்டுணு பிரமன் முதலினோர் தொழிலிழந்துந் தூங்கியும் கிடத்தல்போல் கிடவாது விழித்திருந்தே பெயர்த்துஞ் சிருஷ்டி தொடங்கும் சிவமாம் பொருள் ஒன்றேயாகலின், ஆன்மா ஒன்றே யிருந்ததென்றதென்க. இங்ஙனம் கருப்பகிசுவைக் கருப்ப வயிற்றடக்கிக் கூறுமாற்றான் ஒருத்தியே யிருந்தனள் என்ற தொக்கு மெனினுமேயும், அற்றாகலினன்றே "தஸ்மிந்நே வாகிலம் விச்வம் ஸங்கோசித படவர்த்ததே" என்று பைங்கலோபநிஷத்து கூறுவதாயிற்று. அதாவது அவனிடத்திலேயே எல்லாப்பிரபஞ்சமும் சித்திரப்படம் சுருட்டப்பட்டமைபோல அடங்கியிருந்ததுவெனலாம். இராமாநுஜர் இச்சுலோகத்திற்கு வியாக்கியானம் செய்தபோது பிரளயகாலத்தில் இலட்சுமியோடுங் கூடிய நாராயணனொருவனே யிருந்தானென்றும், சிவன்முதலியபத்தஜீவர்கள் தூங்கிக் கொண்டிருந்தாரென்றும் எழுதினைத்தனர். இருபத்துநாலு தத்துவங்களுடன் கூடியபிரதிஷ்டாகலையிலுண்டாகும் பிரகிருதிபிரளயத்தில் நாராயணனொருவனே யிருந்தானென்பதிற்றட்டில்லை. முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த சாந்தியாதீத கலையிலுண்டாகும் சர்வசம்மாரகாலத்தில், "சீவகர்த்தாவான உருத்திர னொருவனேயுளன் இரண்டாமவனுளனெனயாரும் ஒருப்படுகின்றிலர்" எனும் பொருளைத்தரும் "ஏகோருத்ரவகஎவருத்ரோநத்விதீயாயதஸ்துர்ய" எனும் அதர்வசிரோப

முதலினுண்டாகிய புருஷன் அவ்வன்னத்தை வாக்கினால் கிரகிக்க உத்தேசித்தான். அது முடியவில்லை, அங்ஙனமுடியுமாயின் அன்னத்தைப் பற்றிப்பேசுவதினாலேயே திருப்தியடையக் கூடும்.

௪. பின்னர் மூக்கினால் கிரகிக்க உத்தேசித்தான், அதுமுடியவில்லை. அங்ஙன முடியுமாயின் அன்னத்தைமுகத்தினாலேயே திருப்தியடையக்கூடும்.

௫. பின்னர் கண்ணால் கிரகிக்க உத்தேசித்தான். அது முடியவில்லை, அங்ஙன முடியுமாயின் அன்னத்தைப் பார்த்தலினாலேயே திருப்தியடையக் கூடும்.

௬. பின்னர் காதினால் கிரகிக்க உத்தேசித்தான். அது முடியவில்லை, அங்ஙன முடியுமாயின் அன்னத்தைக்கேட்பதினாலேயே திருப்தியடையக்கூடும்.

௭. பின்னர் பரிசத்தால் கிரகிக்க உத்தேசித்தான். அது முடியவில்லை, அங்ஙன முடியுமாயின் அன்னத்தைத் தொடுதலினாலேயே திருப்தியடையக்கூடும்.

௮. பின்னர் மனதினாலேயே கிரகிக்க உத்தேசித்தான். அதுமுடியவில்லை, அங்ஙனமுடியுமாயின் அன்னத்தை நினைத்தலினாலேயே திருப்தியடையக்கூடும்.

௯. பின்னர் குகியத்தாலே கிரகிக்க உத்தேசித்தான்; அதுமுடியவில்லை, அங்ஙனமுடியுமாயின் விசர்ஜனத்தினாலேயே திருப்தியடையக்கூடும்.

௰. பின்னர் முகமார்க்கமாக உள்ளே செல்லுகிற வாயுவினாலே கிரகித்துக் கொண்டது. வாயுவே அன்னத்தைக் கிரகிக்கத்தக்கது; அன்னத்தை யாதாரமாக்கொண்டே வாயுஜீவிக்கிறது.

௧௧. பேசுவது வாக்கானாலும், கிரகிப்பது மூக்கானாலும், பார்ப்பது கண்ணானாலும், கேட்பது செவியானாலும், பரிசிப்பது துவக்கானாலும், தியானிப்பது மனமானாலும், கிரகிப்பது அபானமானாலும், ஆனந்திப்பது குகியமானாலும் இவை என்னையின்றி எங்ஙனம் நிலைபெறும் நான் எவ்விதசொரூபனென ஈஸ்வரனினைத்தார்.

இன்னும்வரும்.

மணவழகு.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
29 FEB 1916
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# குருவணக்கம்.

குருவணக்கம் என்பதற்கு குருவுக்குச் செய்யும் வழிபாடு என்பது பொருளாய் நான்காம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையாய் நின்றது. குரு என்பது வடசொல், கு என்றதற்கு இருள் அல்லது அஞ்ஞானம் என்பது பொருளாம். ரு என்பது நீக்கம் அல்லது ஒளி எனப் பொருள்படும். ஆகவே அஞ்ஞானமாகிய இருளைநீக்கி ஞானமாகிய ஒளியைக் கொடுப்பவரே குரு எனப்படுவாரென்பர். தன்னின்வேறாகாது ஒற்றுமைப்பட்டுத் தோன்றும் உடலையும் தன்னின் வேறாகத்தோன்றும் பொன் பூமி முதலிய பொருள்களையும் யான் எனது எனப்பற்றிக் கோடலாகிய அறியாமையைக்களைந்து கண்ணுக்குத் தோன்றும் உடற்பொருளும் உலகப்பொருளும் போலாது ஸ்பரிசத்தல் அறியப்படும் பொருளாகியஉயிர் என்பதொன்றுண்டு, அவ்வுயிரே யானெனப்படும் பொருளாகுமென வறிந்துகொள்வதுடன், இவ்வான்மாவின் இலக்கணம்யாது? ஆன்மா அடையவேண்டிய பேறியாது? அடைதற்குரிய வழிகளெவை? என்பனாதியவற்றை யாராய்ந்தறியச் செய்பவரே குருவாவர். இவர் இலக்கணத்தை ஆத்திரையன் பேராசிரியர் கூறிய,

"வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யாறன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந்தன்ன நலம்பட லொழுக்கமும்
திங்களன்ன கல்வியுந் திங்களொடு
ஞாயிறன்ன வாய்மையும் யாவது
மஃகாவன்பும் வெஃகா வுள்ளமும்
துலைநாவன்ன சமநிலை யுளப்பட
வெண்வகையுறப்பின ராகித் திண்ணிதின்

வேளாண் வாழ்க்கையுந் தாளாண்மையு
முலகியலறிதலு நிலையிய தோற்றமும்
பொறையுநிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவுமுருவு மாற்றலும் புகழுஞ்
சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன்மையும்
கற்போர்நெஞ்சங் காமுறப் படுதலு
மின்னோரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லாசிரியர்.'' எனும்

தொல்காப்பிய பாயிர சூத்திரத்தாலறிக. மற்றும் ஓராகமத்தின்கணுள்ள கிரியாகாண்டம் ஞானகாண்டமென்னுமிரண்டையும் ஓதித் திரிபதார்த்த லக்ஷணத்தை யறிந்தவனே ஆசிரியனாவானென்றலும் ஒன்று.

குருவகை ''முந்திப்பிரேரிப்பான் போதிப்பான் முத்திதனென் றிந்தவிதத்தார் தேசிகர்' என்று சைவசமய நெறியிற்கண்டபடி பிரேரகாசிரியனென்றும், போதகாசிரியனென்றும் முத்திதாசிரிய னென்றும் குரு மூவகைப்படுவர்.

பிரேரகாசிரியன் அம்மூவகை யாசிரியருள் முதலாவதாகிய பிரேரகனென்பான் சைவத்திற்கு யோக்கியர்களாகிய மாணாக்கர்களை உமக்கு அருள் செய்தற்கு யோக்கியராகிய ஆசாரியரிவரென்று காட்டி அவரையடையும்படி செலுத்தி உய்விப்பவனும். (பிரேரிப்பான்-முற்பட்டுச் செலுத்துவான்) பிரேரகனெனினுஞ் சோதகனெனினு மொக்கும். இதை ''சைவரைச் சாரவருட்டக்கா னியமனென்றே, யுய்விப்பான் முந்தினனென்றோர்'' என்பதாலறியலாம்.

போதகாசிரியன் போதகாசிரியனாவான் தன்மேலன்பு கொண்டு தன்னையடைந்தமாணாக்கனுக்குச் சமயதீக்ஷைவிசேஷ தீக்ஷைகளைச் செய்து ஆசாரங்களைக் கற்பித்தருளுவோன். இவரே கிரியா குருவென்றும், குலகுருவென்றும் சொல்லப்படுவர். இவர் சுபாசுபக்கிரியைகளைச் செய்தலுடன் தீக்ஷாக்கிரமத்தால் சமயப்பிரவேசம் செய்விப்பவர். ஒருவன் ஞானத்தை யடையவேண்டுமாயின் பற்றுவிடல் வேண்டும். கருமத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஆகவே கர்மானுஷ்டானங்களால் பற்றுவிடலும், பற்றுவிட்டால் ஞானமும் கைகூடுமென்பது பெறப்பட்டது. ஆதலால் ஞானத்தை அடைவதற்குச் சமயப்பிரவேசம் செய்விப்பதே முக்கிய சாதனமாகும். இப்படிச் சமயப்பிரவேசம் செய்விப்பவர் குலகுருவாவர்.



முத்திதாசிரியன் மூன்றாவதாகிய முத்திதாசிரியனாவான் முந்திய சமயதீக்ஷை விசேஷதீக்ஷைகளைப் பெற்ற மாணாக்களைப் பன்னிரண்டு வருஷத்திற்குள்ளே பக்குவம் பரீக்ஷித்து நிர்வாணதீக்ஷை செய்து அவனுடைய பாசத்தைச் சோதிப்பவன். இதனை ''அடைந்தவனைப் பக்குவம் பார்த்தாண்டாறிரண்டுட், டடிந்தவனே பாசமுத்திதன்'' என்னும் குறளால் அறியலாம்.

இவனே ஞானாசிரியன் - அனுபவிகளே ஞானகுருவாவர். இவர் அதிட்டிதகுரு, ஆவேசகுருவென விருவகைப்படுவர். இவர்கட்கு மேற்கூறிய ஜாதிவரம்பு இல்லை. பிராமணர் முதலிய மூன்று வருணத்தாராகிய சூத்திரருள் ஞானாசிரியனுண்டாயின் அவ்வாசிரியனிடத்திலே பிராமணர் முதலாயினோர் ஞானோபதேசம் பெறலாம். ஞானோபதேசம் மாத்திரம் பெறுதலேயன்றிக் கிரியாஉபதேசம் ஒருக்காலும் பெறக்கூடாது. இதனை,

அற்றிடினே யந்தணருள் ஞானி யடுத்தவன்பாற்
பெற்றிடுக வந்தணன்மெய்ப் பேறு.
இந்த முறைமற் றையர்க்கு மேற்கு மிதுதன்னை
நிந்தையல வென்றே நினை.
பிரயோபதேசம் பெறுதலே பாங்கு
கருமோபதேசங்கழி. என்னும் பாக்கள் வெளிப்படுத்தும்.''

ஸ்ரஷதாநஸ்பாடவிவுலாமா
ஷஷ்தாவரதபி அந்தலாஷ
ஃபாதர்மம்ஸ்த்ரீரத்நம்
தமஷ்கூலாவுபி. என்னும் மனுஸ்மிருதி சுலோகத்தாலும் உணரலாம்.

இதற்குச் சான்றாக பிரமவிருடிகளாகிய துருவாசர் முதலாயினோர் பிராமணர் முதலிய மூன்று வருணத்தாருள்ளும் ஞானாசிரியனில்லாமையால், நான்காம்வருணத்தாராகிய விதுரனிடத்திலே ஞானோபதேசம் பெற்றார்களென்று பாரதபாகவதங்களிலும், சைவத்திலே திருத்துறையூரிலிருந்த ஆதிசைவராகிய சகலாகம பண்டிதரென்னும் அருணந்தி சிவாசாரியர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்த நான்காம் வருணத்தாராகிய மெய்கண்ட தேவரிடத்திலே ஞானோபதேசம் பெற்றாரென்றும் கூறப்பட்டுள்ளது.

அதிட்டிதகுரு சமயகுரு, சந்தானகுரு என விருவகைப்படுவர். சமயகுரு உலகத்திலே மதத்திற்கு ஆபத்துவருங் காலத்தில் இறைவனருளாலவதரித்துப் பலவற்புதங்களைச் செய்துகாட்டி மெய்ச்சமயமிதுவென விளக்கிப் பொய்ச் சமயங்களைக்களைந்து உலகத்தை உய்விப்பவர். இவர்களே ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் ஸ்ரீதிருநாவுக்கரசு சுவாமிகள் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளெனப்போற்றப்பட்டவர்கள். இதனைத்திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்தபடலத்திலுள்ள "ஆயவளம் பதியதனி னமாத்தியரி லருமறையின், றூயசிவா கமநெறியின் றுறை விளங்க வஞ்சனையான் மாயனிடும் புத்தவிருளுடைந்தோட வந்தொருவர், சேயவிளம் பரிதியெனச் சிவனருளாலவதரித்தார்" என்னும் செய்யுளாலறியலாம்.

சந்தானகுரு இறைவனருள் பெற்று உலகத்தார்க்கு ஞானோபதேசம் புரிந்து உய்வித்தற் பொருட்டு உலகில் வந்து சஞ்சரித்துப் பரம்பரையாக வருபவர். இவர்வரலாறு ஆதியில் திருக்கைலாய மலையில் அருள்வடிவாகி எழுந்தருளிய ஸ்ரீகண்டபரமசிவன்பால் ஞானோபதேசம்பெற்றவர் திருநந்திதேவர். பின்னரவர்பால் சனற்குமாரமுனிவரும் அவர்பால் பரஞ்சோதிமுனிவரும் ஞானோபதேசம் பெற்றனர். பின்பரஞ்சோதி முனிவர் தமிழுலகம் பெற்றமாதவப் பேற்றால், திருவெண்ணெய் நல்லூரையடைந்து மெய்கண்டதேவருக்கு உபதேசிக்க அவர் அருணந்தி சிவாசாரியருக்கு உபதேசிக்க அவர் மறைஞான சம்பந்தருக்கும் அவர் உமாபதி சிவாசாரியருக்கும் உபதேசித்தருளினர். இவருக்குப்பின் அருணமச்சிவாய தேசிகர், மறைஞானதேசிகர், அம்பலவாண தேசிகர், உருத்திரகோடி தேசிகர், வேலப்ப தேசிகர், முற்குமாரசாமி தேசிகர், மாசிலாமணி தேசிகர், இராமலிங்க தேசிகர், முன்வேலப்ப தேசிகர் பின் வேலப்ப தேசிகர், திருச்சிற்றம்பல தேசிகர், அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாண தேசிகர் சுப்பிரமணிய தேசிகர் என்றோர் நிஷ்டாபரர்களாய் உபதேசக்கிரமத்தில் வந்தவர் பதினெண்மராவர். இவர்களால் அருளப்பட்ட ஞானநூல்கள் பலவுள.

இன்னும்வரும்.

**துறைசை-நமசிவாயத் தம்பிரான் சுவாமிகள்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சைவ சித்தாந்த மகாசமாஜத்தின்

# பத்தாவது வருடக்கூட்டம்.

இம்மகாசமாஜம் தஞ்சையில் டிசம்பர்மீ 25உ பகல் 12-மணிக்கு அவ்வூர் கலியாணசுந்தரம் ஹைஸ்கூலில் அதற்கென அமைத்த, பெரியதோர் கொட்டகையில் கூடியது. யாழ்ப்பாணம் ஸ்ரீமத்-அம்பலவாண நாவலர் சுவாமிகள் அக்கிராசனம் வகித்தனர். கூட்டமானது, ராவ்பகதூர் T. சீனிவாசப் பிள்ளையவர்கள், பாலவனம் ஜமீன்தார் ஸ்ரீமான் - A. V. பண்டாரத்தார் அவர்கள், ஹரித்துவாரமங்கலம் ஸ்ரீமான்-B.V.கோபாலசுவாமி ரகுநாதராஜாளியார் அவர்கள், ஸ்ரீமான் E.சூர்யநாராயண அய்யரவர்கள், ஸ்ரீமான்-I. K.குமாரசாமிப்பிள்ளையவர்கள், ஸ்ரீமான்-T. உமாமஹேஸ்வரம் பிள்ளையவர்கள், ஸ்ரீமான்-சாலியமங்கலம் சாம்பசிவநயினார் அவர்கள் முதலியபலபிரபுக்களடங்கிய தஞ்சைவாசிகளும், ஸ்ரீமான்-J. M. நல்லசாமிப்பிள்ளை அவர்கள், ஸ்ரீமான்-T. நல்லசிவன்பிள்ளை அவர்கள், சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள் முதலியபலசமாஜ அங்கிகளும், சைவாபிமானிகள்பலரும் மலைக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ-தம்பிரான் சுவாமிகளும் ஆகியபலர்கூடியதாகவிருந்தது. முதல்முதலாகச் சிதம்பரம் நடராஜ ஓதுவார் அவர்களாலும் அவருடைய குமாரர்களாலும் தேவாரபாராயணம் நடந்தது. பின் உபசரணைக்கமிட்டி பிரசிடென்டாகிய பாலவனம் ஜமீன்தார் ஸ்ரீமான்-A. V. பண்டாரத்தார் அவர்கள் அக்கிராசனாதிபதியையும், மற்றுமுள்ளோரையும் வரவேற்று, அக்கிராசனாதிபதிக்கு வரவேற்புப் பத்திரமும் வாசித்தனர். அன்றியும் ஜமீன்தார் சுவாமிகளை அக்கிராசனம் வகிக்குமாறு கேட்டுக்கொள்ளலும் ஸ்ரீசிதம்பரத்திலிருந்து வந்திருந்த குப்புசாமி தீக்ஷிதரவர்கள் அதை ஆமோதித்தலும் சுவாமிகள் அக்கிராசனத்திலமர்ந்தனர்.

சுவாமிகளுக்குப் புழல் ஸ்ரீமான்-திருநாவுக்கரசு முதலியாரவர்கள் சுவாமிகள் மீதுபாடிய அழைப்புப்பத்திரத்தைப் படித்து அவரிடம் கொடுத்தனர். பின்னர் அக்கிராசனர் மிகப்பெரியதாக அமைத்தரோஜாப்புட்பங்களாலாகிய மாலைப்போடப்பட்டு உபசரிக்கப்பட்டபிறகு மகாசமாஜத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான்-K. குப்புச்சாமி முதலியார் அவர்கள், அவ்வருடத்திய அறிக்கைப்பத்திரத்தைப் படித்தனர். சபாநாயகர் தமது ஆரம்பப் பிரசங்கமாகச் சைவசித்தாந்த மகாசமாஜ முக்கிய நோக்கங்களைப்பற்றியும், அதனாலுண்டாகும் நன்மைகளையும், சைவசித்தாந்தக் கொள்கைகளையும் மிகவிரிவாக வெடுத்துப்பேசி 1859-ம் ஆண்டில் மாட்சிமை தங்கிய நமது விக்டோரியா மகாராணியார், அவரவர் மதங்களில் தம்மிஷ்டம் போல் நடக்கலாமென்றுவாக்களித்ததையும், ராஜாங்கத்தார் அவற்றில்பிரவேசிப்பதில்லையென்பதையும் அறிவித்து, மிகுதியும் நன்மைபயக்கக்கூடியதாய இத்தருமம்இல்லாவிடில் இந்தியாவில் அனேகமதங்களுக்கு அநேகர் அநேக தீங்குகள் செய்திருக்கக்கூடுமென்றும், அவ்விதகாருணியம் தங்கிய மகாராணியாரது பேரனாராகிய ஜியார்ஜ் சக்ரவர்த்திக்கு இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் ஜெயம் உண்டாகக்கடவதென்றும் சிவபெருமானைத் தோத்தரித்தனர்.

பின்னர், முதல் பிரசங்கமாகத் தூத்துக்குடி ஸ்ரீமான்-போ-முத்தைய பிள்ளையவர்கள் "சிவச்செயலும் சீவச்செயலும்" என்னும் விஷயத்தையாரம்பித்துச் சிவத்தின் தன்மையும், உயிரின் தன்மையும் இதுவிதுவெனவிளக்கி அவைகளின் செயல்களையும் விளக்கினர். இரண்டாவது செங்கல்பட்டு ஸ்ரீமான்-பொ-நடேச முதலியார் அவர்கள் "பற்று" என்னும்விஷயமாக மிகவிரிவாகப் பிரசங்கம் செய்தனர். மூன்றாவது, சென்னை ஸ்ரீமான்-M. கந்தசாமி முதலியார் B. A. அவர்கள் "அருளிலக்கணத்தின் ஓர்பகுதி" என்னும் விஷயத்தைத் தமக்குள்ள ஆங்கிலப்பயிற்சியையும், தமிழ்ப்பயிற்சியையும் ஒன்றுபடுத்தி நீண்டதோர் உபந்நியாசத்தை எழுதிவாசித்தனர். நான்காவது, குளித்தலை பிரம்மஸ்ரீ-அரங்கசாமி அய்யர் அவர்கள் "ஈஸ்வரன்" என்னும்விஷயத்தைத் தமக்குள்ள அனுபவமிகுதியால் ஆங்கிலத்தில் எழுதி வாசித்தனர். ஐந்தாவது ஸ்ரீமான்-J. M. நல்லசாமிப் பிள்ளை B. A., B. L அவர்கள், "சிலபழையதீர்மானங்கள்" என்றதை விஷயமாகக் கொண்டு சைவசித்தாந்தத்தில் ஆசாரியர்கள் வகுத்துள்ள சித்தாந்தங்களெல்லாம் பழையதீர்மானங்கள் என்று எடுத்துக்



காட்டி, தமது சித்தாந்தப் பயிற்சியைப் பலரும் அறியச் செய்தனர். பிறகு இரவு 8-மணிக்கு அக்கிராசனர் முறையே ஒவ்வொருவருடைய பிரசங்கத்தைப் பற்றியும் மிகவிரிவாகவெடுத்து எவருமறியப் போதித்ததன் பின் கூட்டம் கலைந்தது.

பிறகு 26உ ஞாயிற்றுக்கிழமை பகல் 1-மணிக்கு மறுபடியும் கூட்டம்கூடிற்று. வழக்கம்போல் தேவாரபாராயணம் நடந்தேறியது. ஸ்ரீமான் J. M. நல்லசாமி பிள்ளையவர்கள் சைவசித்தாந்த மகாசமாஜத்திற்குப்பொருளுதவி செய்தல்வேண்டுமென்றும், மகாசமாஜத்தார் வெளியிடும் சித்தாந்த மென்னும்பத்திரிகையைச் சைவசமயாபிமானிகள் ஒவ்வொருவரும் வாங்கி அதை ஆதரித்தல் வேண்டுமென்றும், சமாஜநன்மைக்கு உற்றபல விஷயங்களைப் பேசினர். பின்னர் முதற்பிரசங்கமாகத் திருநெல்வேலி, ஸ்ரீமான்-S. பால்வண்ண முதலியார் அவர்கள் "சித்தாந்தமும் திருவாசகமும்" என்னும் விஷயத்தைத்தமக்குள்ள சாத்திரப் பயிற்சிக்குத்தக்க அளவாக விஷயத்தைப்பொருத்திக்காட்டினர். பிரம்மஸ்ரீ-கலியாணசுந்தர பட்டரவர்கள் "சிவாகமப் பிரமாணம்" என்னும்விஷயத்தைப் பலவடமொழிமேற்கோள்களுடன் வெகு விரிவாகப்பேசினர். மூன்றாவது, மகிபாலன்பட்டி ஸ்ரீமான்-கதிரேசம் செட்டியாரவர்கள் "சேக்கிழார் கவித்துவம்", என்னும் விஷயமாக எடுத்துக்கவியின் இருதயமுழுதும் இதுவெனப் பல்லோரறியப் பலபடப் பேசினர். நான்காவது, பெங்களூர் ஸ்ரீமதி-ஆண்டாளம்மாளவர்கள், "திராவிடச்சுருதிப் பொருண்மாண்பு" என்னும் விஷயத்தைத்தமிழ்மொழி வடமொழிமேற்கோள்களுடன் எடுத்துக் காட்டிப் பெரியதோர் உபந்நியாசஞ்செய்தனர். கடைசியாக, ஈரோடு ஸ்ரீமான்-அர்த்தநாரி ஆச்சாரியரவர்கள் "சங்கானுகூலங்கள்" என்னும் விஷயத்தைப் பேசிமுடித்தனர். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் தமது அபிப்பிராயத்தைக்கூறலும் சபை 8-மணிக்குக் கலைந்தது.

மூன்றாம் நாளாகிய 27உ திங்கட்கிழமை பகல்12-மணிக்குக் கூட்டம் கூடினது. தேவாரபாராயணம் நடந்தது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ-துறைசை-நமசிவாய தம்பிரான் சுவாமிகள் எழுதியனுப்பிய வியாசத்தை அவரால் அனுப்பப்பட்ட பிரதிநிதியால் வாசிக்கப்பட்டது. முதலாவது ஸ்ரீமான்-மாகறல்-கார்த்திகேய முதலியாரவர்கள் "முன்பிறப்பும் மறுபிறப்பும்" என்னும் விஷயத்தை யெடுத்துத்தமக்குள்ள தமிழாராய்ச்சியின் மிகுதியால் வெகு நயம்படப்பேசினர். இரண்டாவது

ஸ்ரீமான்-மணி-திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் "அகரவுயிர்" என்னும் விஷயமாக இலக்கிய இலக்கணப் பண்பு தோன்றப்பிரசங்கித்தனர். மூன்றாவது, காவித்தண்டலம்ஸ்ரீமான்-வேதாசலமுதலியார் அவர்கள் "பதிபுண்ணியம்" என்னும் விஷயமாகப்பல்லோர்மகிழ்வெய்தப்பல மேற்கோளுடன் பேசினர். நான்காவது, பெங்களூர்-ஆறுமுக முதலியார் அவர்கள் "தேவார பாராயணம்" என்னும் விஷயமாக நால்வர் மகிமை நயம்படப்பேசினர். ஐந்தாவது, மறைத்திருவன்-விருதை சிவஞானயோகிகள் அவர்கள் "சைவசித்தாந்த உண்மை" என்னும் விஷயமாகத் தமிழ்மொழி வடமொழி ஆகியஇரண்டிலும் கூறியுள்ள சித்தாந்த சாத்திரத்திரங்களை எடுத்தோதிச் சைசிவத்தாந்தத்தின் உண்மையாவும் மிகப்பழமையாகிய தமிழ்மொழியில் கூறியுள்ள சாத்திரங்களாலேயே உணர்தல் கூடுமெனப்பசுமரத்தாணியறைந்தது போல் பலரும் அறியப்பேசினர். ஆறாவது, ஸ்ரீமான்-ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள் "ஆசார்யப்பிரபாவம்" என்னும் விஷயமாக அத்தெய்வப் பெரியோர்மகிமையாவரும் அறியப் பிரசங்கித்தனர். ஏழாவது, வயித்தீஸ்வரன் கோயில்ஸ்ரீலஸ்ரீ-சொக்கலிங்கத் தம்பிரான் "சுவாமிகள் பதிபசுபாச விளக்கம்" என்றெழுதியனுப்பிய விஷயமானது யாவரும் அறியப் படிக்கப்பட்டது. எட்டாவது சித்தாந்த மகாசமாஜத்தின் பொருட்டே அங்கு வந்திருந்த கும்பகோணம் Professor K. சுந்தரராமய்யர் அவர்கள் சித்தாந்தத்தைப் பற்றியும் பல பேசியதுடன் சைவ சித்தாந்தத்தை இத்தேசத்திலும் இன்னும் பலதேசங்களிலும் பரவச்செய்யவேண்டு மென்றும் கூறினர். ஒன்பதாவது, தஞ்சை ஸ்ரீமான் சிவஞானம் பிள்ளையவர்கள் "அன்பு" என்னும் விஷயமாக அறியதோர் உபந்நியாசத்தை யெழுதி வாசித்தனர். பத்தாவது, சமாஜ காரியதரிசி ஸ்ரீமான்-கி-குப்புச்சாமி முதலியார் அவர்கள் "புணை" என்னும் விஷயத்தை யெடுத்து பிறவிக்கடலைத்தாண்ட சிவபெருமான் திருவடியே புணை என்றும் அதையடைதற்கு ஸ்ரீபஞ்சாக்ஷரமே வழியென்றும் உபந்நியாசித்தனர். பதினோராவது, திருக்கோவலூர் ஸ்ரீமான்-M. R. குமாரசாமிப் பிள்ளையவர்கள் 'நல்லிசை' என்னும் விஷயம் கொண்டு நம்மையாளும் சக்கரவர்த்தியையும் அவரது அரசையும் புகழ்ந்துபேசி அவருக்கு ஜெயம் உண்டாகுக எனவாழ்த்தித் தம்பிரசங்கத்தை முடித்தனர். பன்னிரண்டாவது, சமாஜபொக்கிஷதாரர், ஸ்ரீமான்-W. T. கோவிந்தராஜமுதலியார் அவர்கள், 'செல்வம்' என்னும் விஷயமாகப்பேசியதில்



செல்வம் அடையவேண்டுமாயின் செல்வக் களஞ்சியமாய் உள்ளநமது மடாதிபதிகளிடம்சென்று நம்குறைகூறிச்செல்வத்தையடையவேண்டுமென்று கூறினர். பதின்மூன்றாவது பிரம்மஸ்ரீ-இராமசந்திர அய்யர் அவர்கள் "நந்தனாரும், ஈசுவரபக்தியும்" என்னும் விஷயமாகப்பேசியதில் எக்குலத்தவராயினும் பக்தியிருக்கின் முத்திபெறலாம்என்றுஉபந்நியசித்தனர். கடைசியாகச் சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரரவர்கள், "வேதாந்தத்துண்மை சித்தாந்தம்" என்னும் விஷயமாக வேதாந்தத்துக்கும், சித்தாந்தத்துக்கும் உள்ள சம்பந்தத்தை விரிவாக எடுத்துக்காட்டி இரண்டும் ஒன்றே என்னும் உண்மையை யாவரும் அறியப் பெரும்பொழுது பேசினர். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் தமது அபிப்பிராயங்களையும் முடிவுரைப் பிரசங்கத்தையும் பேசி முடித்தனர்.

முதலில் அக்கிராசனாதிபதிக்கு மாலைசூட்டியபின், ஹரித்துவாரமங்கலம் ஸ்ரீமான்-கோபால சுவாமி ரகுநாத ராஜாளியார் அவர்கள் உபசாரணைக்கமிட்டி உபஅக்கிராசனர் என்னும் முறையில் சமாஜ உத்தியோகஸ்தர்களுக்கும், உபந்நியாசகர்களுக்கும் தம்முடைய ஆழ்ந்த தமிழறிவின் தன்மையில்வெகு நயம்படப்பேசிவந்தனம் செலுத்திப்பூமாலை சூட்டி, உபசாரணைக்கமிட்டியின் தலைவராக விஜயம்செய்திருந்தவருக்கும் முறையே பாலவனம் ஜமீன்தாரவர்களது பிரபுத்துவத்தையும் அவர்களது குலப்பெருமையையும் பல்லோர் அறிய நூலாதாரத்துடன்பெரும்பொழுது பேசியாவரையும் உபசரித்தனர். பிறகுசமாஜ உபஅக்கிராசனர் ஸ்ரீமான்-T. நல்லசிவன் பிள்ளையவர்கள் அக்கிராசனருக்கும் உபசாரணைச் சங்கத்தின் தலைவர் முதலியவர்களுக்கும் நன்றி கூறி வந்தனம்புரிந்தனர். இரவு 12-மணிக்கு யாவரும் தத்தமிருப்பிடமேகினர். சமாஜக்கூட்டம் பாங்குபெற நடந்தவைபவங்களை விரிவாக எழுதப்புகின் இச்சித்தாந்தம் இடம் தராதெனவெண்ணி வெகுசுருக்கமாக எழுதியுள்ளேன். இதில் ஏதேனும் மறைப்பின் மிகுதியால் விடுபட்டிருக்குமாயின் அன்பர்பொறுத்தருளக் கேட்டுக்கொள்ளுகிறேன். இச்சமாஜம் நீடூழிவாழ்வதாக. சுபம்.

களந்தைகிழான்.

உ

சிவமயம்.

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

# தீர்மானங்கள்.

1915-வருடம் டிசம்பர்மீ 26, 27, தேதிகளில் தஞ்சையில் கூடிய மகாசமாஜக்கூட்டத்தில் நடந்த தீர்மானங்கள்.

I. 1915-ம்வருட அறிக்கைப் பத்திரம் வாசித்து அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று ஸ்ரீமான்-S. பால்வண்ண முதலியார் அவர்கள் பிரேரேபித்தும் ஸ்ரீமான்-D. மாயூரமுதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டும் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

II. சமாஜஉத்தியோக வேலையைப் பார்த்து வந்தவர்களுக்குச் சமாஜம் வந்தனமளிக்க வேண்டுமென்று ஸ்ரீமான்-சபாபதி முதலியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டும் ஸ்ரீமான் - நமசிவாய முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டும் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

III. சமாஜ உத்தியோகஸ்தர்கள் அடியில் கண்டபடி நியமிக்கப்பட்டனர்.

சபைத்தலைவர்.

ஸ்ரீமத்-அம்பலவாண நாவலர்சுவாமிகள் யாழ்ப்பாணம்.

உதவிசபைத்தலைவர்கள்.

ஸ்ரீமான் J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள் B. A., B. L.
High Court Vakil, மதுரை
,, T. நல்லசிவன்பிள்ளையவர்கள் B A., B. L.
High Court Vakil, சென்னை.

காரியதரிசி.

,, கி-குப்புச்சாமி முதலியார் அவர்கள், சென்னை.

பொக்கிஷதாரர்.

,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள், சென்னை.

பத்திராசிரியர்

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்
சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள் சென்னை.
(மணவழகு.)

கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான்-S. விநாயக முதலியார் அவர்கள், B. A. சென்னை



உள்ளூர்நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்- T. V. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்
,, P. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்
,, M. கந்தசாமி முதலியார் அவர்கள் B. A.
,, C. V. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள்
,, K. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் M. A., B. L.
,, M. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்
,, A. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் Monthly Auditor.
,, வல்லை-சண்முகசுந்தர முதலியார் அவர்கள்
,, T. S சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்
,, A. சிவசங்கர முதலியார் அவர்கள்
,, C. ஏகாம்பர முதலியார் அவர்கள்.

வெளியூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் B. A., B. L.
கோயம்புத்தூர்.
,, S. சபாரத்தின முதலியார் அவர்கள், யாழ்ப்பாணம்.
,, T. S. குமாரசாமிப்பிள்ளை அவர்கள், B. A., B. L.
தூத்துக்குடி.
மறைத்திருவன்-விருதை சிவஞானயோகிகள் அவர்கள்கோயில்பட்டி.
ஸ்ரீமான்-C. ஏகாம்பர முதலியார் அவர்கள், செங்கல்பட்டு.
,, T. சபாபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல்.
,, K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரமேரூர்.
,, M. R. குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.
,, J. சாமிநாதப் பிள்ளையவர்கள், பெங்களூர்.
,, A. R. அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.
பிரமஸ்ரீ-கிரிவாசகுருக்கள் அவர்கள், சேலம்.
ஸ்ரீமான்-P. C. முருகேச முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.
,, காங்கேயம் அஷ்டாவதானம்-சேஷாசலம் நாயுடு அவர்கள், அவிநாசி.
,, P. முத்தைய பிள்ளையவர்கள், தூத்துக்குடி.
,, S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.
,, T. S. சாமிநாதப்பிள்ளை அவர்கள், திரிசிரபுரம்.
,, S. மெய்கண்டப் பிள்ளை அவர்கள், நாகை.
,, C. T. பார்த்தசாரதி முதலியார் அவர்கள், B. A., L. T.
சித்தூர்.
,, M. வேலுசாமித் தேவர் அவர்கள், இராமநாதபுரம்.
,, A. T. முத்துக்குமாரசாமி செட்டியார் அவர்கள், கூடலூர்.
,, M. கதிரேசம் செட்டியார் அவர்கள் மகிபாலன்பட்டி.

ஸ்ரீமான்-P. L. இராமசாமிநாயகர் அவர்கள், மிட்டாதார்பாகல்பட்டி.
,, T. N. சீதாராமப் பிள்ளையவர்கள், தஞ்சை.
,, S G. சிவலிங்க செட்டியார் அவர்கள், ஜலகண்டபுரம்.

வனிதையர் பக்கக் சாரியதரிசி.

ஸ்ரீமதி-ஆண்டாளம்மாள் அவர்கள், சென்னை.

IV. சைவசமயசாஸ்திரங்களைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும் பரீக்ஷைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், அதற்காக விதிகள் ஏற்படுத்துவதற்கு ஸ்ரீமான் J. M. நல்லசாமிபிள்ளையவர்கள், ஸ்ரீமான் T. நல்லசிவன்பிள்ளையவர்கள், சிவஸ்ரீ-கலியாணசுந்தரயதீந்திரரவர்கள், ஸ்ரீமான்-K-குப்புச்சாமிமுதலியார் அவர்கள், ஸ்ரீமான்-மணி-திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் ஆகிய இவர்களடங்கியஒரு சபை இரண்டு மாதங்களுக்குள் இதற்கு வேண்டிய விதி, இடம் முதலானவைகளை ஏற்படுத்தி நிர்வாகசபையினர் முன்பாகக்கொண்டு வரவேண்டுமாய் ஸ்ரீமான்-T. நல்லசிவன்பிள்ளையர்களால், பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் T. S. சோமசுந்தரம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டது. மசோதாவிதிகளைச் சித்தாந்தத்தில் பிரசுரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

துண்டுப்பத்திரிகைகளும், சிறுபுத்தகங்களும் பிரசுரம் செய்வதற்காக வேண்டும் செலவுகளைப் பொறுப்பதற்குப் பிரத்தியேகமான நிதி ஏற்படுத்துவதற்கும், மேல்குறித்த பரீக்ஷைக்கு வேண்டிய செலவுகளுக்கும் பிரத்தியேக நிதி ஏற்படுவதற்கும் சகல சைவ சபைகள் ஒருமித்து வேலை செய்யவும் அதற்காகப் பொருள் உதவி செய்யவேண்டுமாயும் அச்சபைகளைக் கேட்டுக்கொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது.

V. காசியில் கூடியிருக்கும் "பாரதமகாமண்டல்" என்னும் சபைக்கு நன்மொழி கூறத்தீர்மானிக்கப்பட்டது.

VI. பரோடாமகாராஜா அவர்கள் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டுவர ஏற்பாடு செய்ததைப்பற்றி அவருக்கு வந்தனமளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

VII. மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 சப்பளமும் பிரயாணச் செலவும் உள்ள ஒருபிரசாரகரை உடனே நியமிக்கத்தீர்மானிக்கப்பட்டது.

VIII. ஸ்ரீமான்-P. முத்தையபிள்ளையவர்கள், இராமநாதபுரம் மதுரை, திருநெல்வேலி, திரிசிரபுரம், கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் சமாஜசம்பந்தமாக உழைப்பதற்கு முன வந்ததை வந்தனத்துடன் அங்கீகரிக்கப்பட்டது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதிபசுபாசவிளக்கம்.

பதி, பசு, பாசம் என்கின்றபரிபாஷை பிறசமய நூல்களாலேயுணர்த்தப்பட்ட பர, சீவ, பந்தங்கட்குச்செல்லுமாயினும், பெரும்பான்மையும், சைவ சித்தாந்தமாகிய சிவப்பிரணீத சிவாகமங்களினாலே உணர்த்தப்படும் பதார்த்தங்களாகிய பர, சீவ, பந்தங்கட்கே வழங்கிய பரிபாஷையென்பது நன்குதுணியப்படும். ஆனால் பதி, பசு, பாசவிளக்கமென்பது விசாரிக்கப் புகுந்தால், பதியும், பசுவும், பாசமுமென்னும் மூன்று பொருள்களையும் விளக்கும் விளக்கமென்பது துணியப்படும், படவே, விளக்கமென்பது மறைந்த ஒருபொருளைக் காணவேண்டினவன், ஒரு விளக்குங்கொண்டே, அப்பொருளைக் கண்டுபிடிக்க வேண்டியது, அவசியமன்றோ? அப்படியானால் மேற்கூறிய பதிமுதலிய மறைபொருளைக் கண்டெடுத்தற்குப் பிறசமய நூலுணர்வு என்கின்ற விளக்குகள் எல்லாவற்றிலும், சிவப்பிரணீத வேதாகமசித்தாந்த சிவாகம நூலுணர்வு விளக்கே மயக்கமறவிளக்கும் முக்கிய விளக்கம் என்பது, நம்மனோர்களாகிய சைவசித்தாந்திகளாலே கொண்டாடப்படும் சைவசித்தாந்த தத்துவ ஞானிகளுடைய துணிபு. அந்தத்துணிபுதான் என்னவென்பதைச் சற்று நாம் விசாரித்துப்பார்ப்போம். அங்ஙனம் விசாரிக்கும்போது, பதியென்பதென்னை? பசுவென்பதென்னை? பாசமென்பதென்னை? என்று விசாரிக்க வேண்டி வரும் அப்போது பதியாவதென்னை? யென்பதை முதலில் விசாரிக்கப்படும். பதியென்ற சொல்லின் சத்தார்த்தத்தைப் பார்த்தால் காக்கிறவனென்கிறபொருளைத் தருகின்றது. காக்கிறவனென்றால் எதைக்காக்கிறவன் யாரைக்காக்கிறவன் என்கிற ஆகாங்க்ஷைக்கு இடமுண்டாகிறது, உண்டாகவே, தன்னையா? பிறரையா? என்று பார்த்தால், பிறரைத்தான் காக்கிறவனென்கிறது வெளியாகின்றது. அப்படியானால் இப்பொழுது சக்கிரவர்த்தி முதலியவர்களுக்கும்

காக்குந் தன்மையுண்டு, அப்படிப்பட்டவர்களிடத்தில் செல்லட்டுமே யென்றால், இவர்களுக்குச் சிற்சிலவிடங்களில்மட்டும் காக்குந்தன்மை செல்லுமேயன்றிசர்வலோகங்களிலுமிவர்கள் காவல்செல்லுமென்பது துணிய இடங்கொடாது, பின்னை? சர்வலோகத்தையும் இவர்கள் காக்கக்கூடாதென்றால் இவர்களெல்லாம், சிற்றறிவு, சிறுதொழில், சுதந்தர ஹீனமுதலிய உடையபசுக்களென்பது தெளிவாதலால் முற்றறிவுமுற்றுத்தொழில், சுதந்தரம் ஆகிய அவைகளை முழுதுமுடைய அப்பரமபதி ஒருவனே காக்கவேண்டுமென்பது வெளியாகும். அப்படிப்பட்ட முற்றறிவு முதலிய இன்றியமையாத இறைமைக் குணங்கள் முற்றுமுடையவன் சிவபெருமான் ஒருவரே யென்று தெள்ளிதிற்றுணியப்படும். படவே, பதி யென்பது சிவபெருமான் ஒருவரே! முற்றறிவு முதலிய எண்குணங்களும் முற்றவுடையார் அச்சிவபெருமானே யென்பது சிவாகம நூலுணர்வாகிய விளக்கத்தால் விளங்குகின்றது. பதி யென்பது சோபாதிக நாம மென்பது சிவாகம நூற்றுணிபு.

இனி, பசுவென்பதை விசாரிப்போம். பசு என்பது கட்டுப்பட்டவன் எனப்பொருள்படுகின்றது. எதனாற்கட்டுப் பட்டவனெனிற் பாசத்தாற் கட்டப்பட்டவன். அநாதியே அறிவு தொழில்கள் விளங்காது மறைக்கப்பட்டவன் என்பது தாற்பரியம்.

அப்பசு அப்படிப் பந்திக்கப் பட்டமையால் தற்சொரூபமிழந்து அணுத்தன்மைமுதலியவுற்றுச் சுதந்தரனாகிய பதியினுடையபேருபகாரத்தை அபேக்ஷித்தவனாயினான். அவ்வுபகார அபேக்ஷையென்றது? பசு தன்னுடைய பந்தம் நீங்குதற்கேதுவான சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களுக் குட்பட்டு அப்பதியினால் பாதுகாக்கப் படுதலே.

பசு, பதி யுபாசனையினால் பாதுகாக்கப் படுதலாவது என்னை? எனில் அப்பசு பிறப்பிறப்பு நீங்கி நிரதிசய பேரின்பம் பெற்றுய்தல். இவ்வகையால் பசுவானவன் அநாதியே பாசபந்த முடையனென்பதும், அப்பந்தத்தால்வேண்டுதல் வேண்டாமையும் அவற்றால் பிறப்பிறப்பும் உடையனாகின்றானென்பதும், அப்பிறப்பிறப் புடைமையினாற் பதியினுபகாரத்தை வேண்டியவனென்பதும், அந்த உபகாரம் அப்பதியின் உபாசனையினாற் பெறற்பாலனென்பதும் ஆகிய இவ்வுண்மைகள் சிவாகம நூலுணர்வாகிய விளக்கத்தால் நன்கு விளங்குகின்றன.



இனிப் பாசத்தை விசாரிப்பாம். பாசமென்பது கட்டுதலுடையது, அது அநாதியே அப்பசுவினுடைய அறிவு தொழில்களை விளங்காது பந்திப்பது. அதாவது, மறைப்பது. அப்பாசம் இப்பசுவுக்கு அநாதியாகவே யேற்பட்ட தொருவியாதி, இந்தவியாதி தீர்தற்குப் பசுவுக்குப்பதி உபாசனையென்னும் மருந்தால் தீரத்தக்கது என்பது சிவாகமநூலுணர்வாகிய விளக்கத்தால் இனிது விளங்குகின்றது. இக்கருத்தை நோக்கியன்றோ (ஸ்ரீவாகீச சுவாமிகள்) பேராயிரம் பரவி, என்னும் திருத்தாண்டகத்தால் நன்குவிளக்கி யிருக்கின்றார்கள். பசு, பாசமென்னும் பெயர்களும் சோபாதிக நாமங்கள் என்பது சிவாகம நூற்றுணிபு.

ஆறாறு தத்துவமு மாணவமும் வல்வினையு
நீறாக முத்திநிலை நிற்போற்குப்—பேறாகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
யோர்விருத்தப் பாதிபோ தும்.

என்னை யறிவென்றா னென்னறிவி லானந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமு—மென்னையுன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றானிம் மூன்று
மோராய்ந்தவர் முத்தராம்.

எங்கு மிருக்கு மறிவுநீ யேகமா
யங்கங் குணர்த்து மறிவுநாம்—பொங்கு
மலமறைத்தன் மாயை மயக்கல் விகாரப்
பலமனைத்துங் கன்மமலம் பார்.

வைத்தீஸ்வரன்கோயில்
சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமய அருட்சி.

சமய அருட்சி பூர்வகாலந்தொட்டு எல்லாத் தேசங்களிலும் ஓர் ஓர் காலத்துக் கிளர்ந்து நிகழ்ந்துகொண்டே வருகின்றது. எல்லாத் தேசத்தார்க்கும் எல்லாச் சாதியாருக்கும் தங்கள் தங்கள் சமயமே மற்றைச்சமயங்கள் அனைத்திலும் மேலானதென்பது கருத்தாகலின், அவர்கள் எல்லாம் தத்தம் சமயத்தை விருத்திசெய்தற்கண் பெருஞ் சிரத்தை எடுப்பது வழக்கமாயிற்று. ஆனால் இங்ஙனம் சிரத்தை எடுப்பதெல்லாம் சர்வான்மாக்களும் ஈடேறிவிடுதல் வேண்டும் என்னுஞ் சீவகாருண்ணியம்பற்றியே என்று சொல்லத்தக்கதல்ல. இந்தச் சீவகாருண்ணியநோக்கமும் சிற்சிலரிடத்தே உளதாமாயினும், அநேகமாகச்சனங்கள் சமயவிருத்தியில் கிளர்ச்சி கொள்வதெல்லாம் ஓர் ஓர் லௌகிகப்பயன் கருதியேயாம். இந்த நோக்கத்திற்றானும் ஒரு சிறு நன்மை எய்துதற்குரியதாயினும், இது லௌகிகமுதிர்ச்சிக்குப் பெருந் துணைக்காரணமா யிருக்கின்றது. சமயவிருத்தி செய்யுமிடத்தெல்லாம் உலகநன்மையே எமதுபெருநோக்கமாக இருத்தல்வேண்டும்.

முற்காலத்திலே மேலைத்தேசங்களிலே சமயக் கிளர்ச்சி காரணமாகப்பல குரூர யுத்தங்கள் மூண்டு சனங்களை யெல்லாம் பெரிதும் வருத்தியதுண்டு. மேலைத்தேசத்தாரது சமயவிஷ்ரோம் எமது ஆரியவர்த்தத்தும் நுழைந்து எம்மவரையும் வருத்திய காலங்களுமுண்டு. எமது தேசத்திற்றானும் ஓர் ஓர் காலத்திலே ஓர் ஓர் சமயக் கிளர்ச்சி கிளர்ந்ததுண்டேனும், அக்கிளர்ச்சிகளால் நமதுதேசத்தார் அத்துணை நிற்பந்தமுற்றாரென்று சொல்லத்தக்கதல்ல. எங்கள் வேதங்களும் உபநிடதங்களும் சிரத்தையோடுகேட்கப்பட்டு வந்த காலங்களிலே பற்பல தரிசனகர்த்தாக்கள் கிளர்ந்து தத்தமக்குரியகொள்கைகளை நாட்டி விவாதங்கள் விளைத்தார்கள். அதன்பின் கௌதமபுத்தன் முதலியோர்கிளர்ந்து ஓர் ஓர் சமயத்தைப்போதித்து வாதித்தார்கள். அதன்பின் சங்கராசாரிய சுவாமிகளும் பிறருந்தோன்றி உபநிடதக் கொள்



கைகளுக்கெல்லாம் ஓர் ஓர் பொருள் கற்பித்து வாதித்தார்கள். சுத்த சித்தாந்தமாகிய நமது திவ்விய சமயத்தின்பொருட்டும் காலத்துக்குக் காலம் பல முயற்சிகள் நம்மவராற் செய்யப்பட்டன. இவர்கள் செய்த முயற்சிகள் எல்லாம் இந்தத் தக்கிணபாகத்தே எங்கெங்கும் மலிந்து பொலிந்து விளங்குஞ் சிவாலயங்கள் மடங்களாலும, நமது சமயக் கொள்கைகளை எடுத்துக்காட்டிக் காலந்தோறுஞ் செய்யப்பட்ட புராணங்கள் இதிகாசங்கள், சமய சாஸ்திரங்கள் வியாக்கியானங்கள் முதலிய பன்னூறு கிரந்தங்களாலும் நாம் எல்லாம் தெள்ளிதின் அறியக்கிடக்கின்றன. இந்த முயற்சிகளை எல்லாம் கீழ்ப்படுத்தி மேற்பட்டு விளங்குவன எங்கள் நாயன்மார் திருவவதாரஞ் செய்து காலந்தோறுஞ் செய்தருளிய அற்புதங்களும் அவர்கள் அருள்வாக்கிற் றோன்றிய தேவார திருவாசக முதலிய அதிமதுரச் செந்தமிழ்களுமாம். இவர்கள் திருவாக்கிற்பிறந்த இந்த அருண்மொழிகளும், எங்கள் சிவாலயங்களும் இந்தப் பரதகண்டத்திலே நிலையுற்று விளங்குந்தனையும் எங்கள் சமயம் ஒருபோதுந் தளர்வடைய மாட்டாதென்று நாம் வற்புறுத்திச் சொல்லலாம். எங்கள் சிவாலயங்களிற் சிலவற்றுக்கும், எங்கள் சமயக் கிரந்தங்கள் தமக்கும் இடையூறு சம்பவித்த காலங்களுமுண்டு. ஆனால் அவைகள் அவ்விடையூறுகள் அனைத்தையும் மேற்கொண்டு, இத்துணைக்காலஞ் சென்றும் இப்பரதகண்டத்திலே நிலைபெற்றுநின்று கிரிதீபம்போல் விளங்கி, ஏனைத் தேசங்களினும் தமது திவ்விய தேசோமயத்தை வீசிநிற்றும் இந்தமாட்சிதானே அவற்றின் பெருமைக்குச் சிறந்த சாட்சியாகும்.

இத்துணைப் பெருமைவாய்ந்த நமது சமயத்தின் நிகழ்கால நிலையை நோக்குமிடத்து அது நமது தேசத்தின்பெருமைக்கு ஏற்புடையதொன்றாகத் தோன்றவில்லை. எமது சமயத்தின் விருத்திக்குப்பெருந்தடையாக அகத்தும் புறத்துமாகிய இருபாலும் பெருங்கேடுகள் உண்டாயிருத்தலைச் சிந்திக்கும்போது எமது மனம்பெரிதும் வருந்துகின்றது. புறத்தே அந்நிய சமயிகளால் தத்தம் மத விருத்தியின் பொருட்டுச் செய்யப்படும் முயற்சிகள் எமது தேசத்திலே காலந்தோறும் வளர்ந்துகொண்டேவருகின்றன. அந்நியசமயங்களை எமதுதேசத்தில் விருத்திசெய்வதற்காகச் செலவிடப்படுந் திரவியத்தின் தொகையும், அதன்பொருட்டு ஏவல்கொள்ளப்படுவோரது பெருக்கமும், அவர்கள் தமதுமுயற்சிகளை நடத்துமக்கிரமமும் பிறவும், நாம்மௌனமுற்றிருப்பதுண்டாயின் எமது சமயவிருத்திக்குப் பெருங்கேடு செய்து

விடும் என்பதிற் றடையேயில்லை. மேலைத்தேசத்தார் நமது பரத கண்டவாசிகளது தற்கால நிலைமையையும், அவர்களது துர்ப்பலத்தையும் நன்குணர்ந்து, அவர்களுக்குப் படிப்படியாக லௌகிகச்சுவையை ஊட்டி, அவர்களது சமயப்பற்றை நாள்தோறுங் குன்றச்செய்து தாம் ஊட்டும் லௌகிகச்சுவை வாயிலாக அவர்களைத் தமது சமய வலையுட்படுக்கும் நோக்கங்கொண்டு பெருமுயற்சி செய்கின்றார்கள். இவர்கள் இந்த நோக்கங்கொண்டே லௌகிக கல்விக்குரிய வித்தியாசாலைகளைத் தாபித்தும் பலவாறான பொருள் வருவாய்களைக் காட்டியும், பின்னும் பல லௌகிக சிலாக்கியங்களான் மருட்டியும் நம்மவர்களை மயக்குவாராயினர். இவர்கள் இங்ஙனம் எல்லாஞ் செய்வதனால் நமது தேசத்தார் தமது சமயப்பற்றையும் இழந்து அந்நியசமயத்தையும் அங்கிகரிக்க மனங்கொள்ளாராய், ஒருசமயப் பற்றுமின்றிக் கடவுளைமறந்து கலகமிடுவதற் கேதுவாயிற்று. இது எத்துணைப்பெருங் கெடுதியா மென்பதை நமது தேசத்திலே தமது சமயத்தை விருத்தி செய்யவந்த இந்தப் பரசமயிகள் சிறிதுஞ் சிந்திக்கின்றார்களில்லை. இவர்கள் செய்யுங் கேட்டை நன்கறிந்த நமது சமயத்தவர்களாகிய விவேகிகள் பலரும், இவர்களுடைய செய்கையைக் கண்டித்தால் தமக்கு இவர்கள்வாயிலாகப் பெறப்படும் மதிப்புக் குறைந்துவிடும் என்று அஞ்சிப்போலும் மௌனஞ் சாதிப்பாராயினர். மௌனஞ்சாதித்தலொன்றோ? இவர்களுக்கு இயலுந்தோறும் வேண்டிய சகாயஞ் செய்யவும் முற்படுவாராயினர்! இதுபற்றியன்றே இவ்வன்னிய சமயிகளுக்குத் தத்தம் சுவதேசத்திலும் நமது தேசத்திலே அதிக கவர்ச்சியுளதாதற் கேதுவாயிற்று!

இங்ஙனமே நமது சமயவிருத்திக்குப் புறப்பகைமாத்திரமல்ல, எமது சாகியத்துட்டானே தோன்றியுள்ள அகப்பகையும் பெரிதென்றே சொல்லத்தக்கது. புறப்பகையினும் அகப்பகையே எமக்குப் பெருங்கேடு செய்தற்கு ஏதுவாயிற்று என்று கொள்ளினும் இழுக்காது. இந்த அகப்பகைகளுள்ளே புறச்சமயத்தவர்களுக்குச் செய்யப்படுஞ் சகாயம் ஒருபுறமாக, எமது சமயத்துக்கு நேரே செய்யப்படும் கெடுதிகளும் அநேகமுண்டு. இக்கேடுகளுள்ளே மிகக் கொடியது, சமயத்தின் பொருட்டுத் தம்வாழ்நாளைத் தர்ப்பணஞ் செய்ய வேண்டிய கடப்பாடு பூண்டவர்களாகிய எங்கள் பிராமணகுலத்தவருட் பலர் செய்யுங் கெடுதியேயாம். இவர்கள் பிறப்புரிமையானத் தப்பாற் சுமத்தப்பட்டுள கடப்பாட்டைக் குறித்துச் சிறிதுஞ் சிந்தி



யாது, தங்கள் கருத்து அனைத்தையும் லௌகிகத்துக்கே தானஞ் செய்துவிட்டார்கள். சமய விஷயத்தைக் குறித்து இவர்களோடு சம்பாஷிக்கத் தலைப்படுவார் யாவரும் உளர் எனில் அவர்களைப் பைத்தியக்காரராக மதிக்கவேண்டும் என்பது இவர்கள் கருத்தாய்க் கொண்டது. இவர்கள் ஆரிய பாஷையினும் தமிழ் மொழியினுமுள்ள அருமருந்தன்ன சமயசாத்திரங்களை எல்லாம் உவர்த்தொழித்து விட்டு ஆங்கில பாஷையிலுள்ள லௌகிகக்கல்வியின் கண்ணே அதிமோக முற்றுநிற்பாராயினர். அங்ஙனம் ஆங்கில லௌகிகக் கல்வியிற் பயின்றுளார் எல்லாம் இராசாங்க உத்தியோகங்களினும் லௌகிககோலங்களினுமே தமது கருத்தைச் செலுத்துகின்றாரன்றி, சமயத்தைக் குறித்த சிந்தனை அவர்கள் மனத்திலே கிளர்வது அரிதினும் அரிதாகக் கொண்டது. இந்த லௌகிகப் பிரமையால் இவர் எல்லாம் பெரிது பீடிக்கப் பெற்றுத் தங்கள் ஊண் உடை முதலியவற்றையும் சமயாசார சாதியாசாரங்களையும் மாற்றி ஐரோப்பிய கோலம்பூண்டதலின் வேணவாக்கொண்டு நிற்கின்றார்கள். இவர்கள் சமயத்தின் பொருட்டு உழைக்கவேண்டிய கடப்பாடு பற்றியே முதல்வருணத்துக்குரிய முதன்மைகளுக்கெல்லாம் பாத்தியம் படைத்தாராயினும், இப்போது அப்பாத்தியதைக்கு வேண்டப்படும் சாதனமாகிய சமயசிரத்தை சிறிதுமின்றி எவ்வருணத்துக்குரிய முதன்மைக்கு மாத்திரம் முந்திநிற்கின்றார்கள். அந்தோ! இது கலிகால வலிமை போலும்! இவர்கள் தமது மனதைக் கொள்ளைகொண்டுள லௌகிக வேட்கை மிகுதியால் சமயானுட்டானங்களுட் பலவற்றைக் கைநெகிழ விடுதன் மாத்திரையோடமையாது, அவற்றுட் பலவற்றை வீண்செயல் என்று கண்டிக்கவுந் தொடங்கிக்கொண்டார்கள். ஆலய வழிபாட்டை விக்கிரகவணக்கம் என்றும், கோயில் அர்ச்சகர்களைக் கற்கழுவிகள் என்றும், அனுட்டான செபதபங்களைப் பித்தாட்டங்கள் என்றும் தம்முள்ளே நகைத்துப் பரிகசிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதுமட்டோ! ஆங்கில மாக்கள் தாம் எல்லாம் ஆரியபரம்பரையைச் சார்ந்துளார் என்று தாபிக்குமுகத்தால், இவர்கள் தாமும் அவர்களோடு இனமுறைகொண்டாடக் கருதிப்போலும், திராவிடர்களையும் திராவிட சமயசாத்திரங்களையும் திராவிட மெய்யடியார்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட தேவார திருவாசகங்களையும் அலட்சியஞ் செய்வதிற்றலைப்பட்டு விட்டார்கள். அங்ஙனம் தலைப்பட்டார் ஆங்கிலகல்விபயின்றுளார் மாத்திரமல்ல, சமயநெறியை ஒரு

வாறு அனுட்டித்துவரும் வைதிகர்களுமே இங்ஙனஞ் செய்யத் தலைப்படுவார்கள் என்றால், எமது சமயவலி எவ்வளவுக்குக் குன்றத்தக்கது என்பதை நம்தேசத்தின்கண் அபிமானமுடையார் எவ்வெவரும் ஆத்திரமுற்றுச் சிந்தித்தல் வேண்டும். இவர்கள் திராவிட கிரந்தங்களையும் பரிபாலித்து வந்த சேர சோழ பாண்டியர்கள் காலத்திலே திராவிடாபிமானம் மிகப்பூண்டிருந்தார் என்பது எங்கள் ஆலயங்களிலே இன்று காறும் நிலைபெற்று விளங்கும் பல விஷயங்களால் இனிது துணியத்தக்கதாக இருக்கின்றது. இப்போது ஆரியபரம்பரையைச்சாதிக்கும் ஆங்கிலசெங்கோல் நிகழ்தல் பற்றித்திராவிடத்தை அலக்ஷியஞ்செய்து ஆரியத்தைப் போற்றத் தொடங்கிக் கொண்டார்கள். இவர்கள் இங்ஙனஞ் செய்வதைக் கண்ட திராவிடர்கள் கோபாவேசமுற்று ஆரிய தர்மங்களையும் ஆரியசாத்திரங்களையும் இழித்துரைக்குமாறு தூண்டப் பெற்றுவிட்டார்கள். இங்ஙனமே இருதிறத்தாரும் ஒருவர்க்கொருவர் பகைமை சாதித்தலால், ஆரியத்துக்கும் திராவிடத்துக்கும் பொதுமையில் விளங்குவதாகிய நமது சமயத்தின் விருத்தி பெரிது துற்பலம் அடைதற்கேதுவாயிற்று.

இக்காலத்திலே இங்கிலிஷ்கல்வியில் தேர்ச்சியுற்ற நமது நாட்டவர் எல்லாம், புண்ணியபூமியாகிய நமது பரதகண்டத்தின் மாட்சிக்குக் காரணங்களாயுள்ளன எமது திவ்விய சமயமும் அந்தச் சமயத்துக்குரிய சாத்திரங்களுமே என்பதைச் சிறிதேனும் சிந்தியாமல், மேலைத்தேசத்தாரது லௌகிக விருத்தியாற் பெரிதும் மருட்டப்பெற்று "ஆங்கோர் பேரின்ப முண்டென்பர் எதனையார்கண்டார்" என்று "நாத்தழும்பேற நாத்திகம்பேசும்" உலோகாயதர் கொள்கையையே மேற்கொண்டவர்களாய், லௌகிகவிருத்தி ஒன்றே எமக்கு வேண்டப்படுவதன்றிச் சமயத்தைக் குறித்துச்சிந்திப்பது வீண்செய்கையாம் என்றும், அதுமட்டோ, சமயசிந்தனை எமது லௌகிக விருத்திக்குப் பெருந்தடையாகும் என்றும், ஆதலால் அதை நாம் எத்துணை விரைவில் எமது நாட்டில் நின்று ஓட்டிவிடுதல் கூடுமோ அத்துணை விரைவாக எமது நாடு உயர்வடையும் என்றும் லௌகிகப் பிராந்தி தலைக்கேறப்பெற்று, எமது தேசத்திற்குத் தீர்த்தற்கரிய பெருங்கேடு சூழ்வாராயினர்.

இன்னும்வரும்.

S. சபாரத்தின முதலியார்.

சிவமயம்.

திருசிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916வு பிப்ரவரிமீ [பகுதி உ.

## ஐதரேயோபநிஷத்து.

### கண்டம் மூன்று (தொடர்ச்சி.)

கஉ. உச்சியினைப்பிளந்து அவர் விதிருதி (பிளப்பு) வாயிலாகப் பிரவேசித்தனர். இது ஆனந்தமயதுவாரம். இத்துவாரத்திற்புகுந்த இவருக்கு ஜாக்கிரம், சுவப்னம், சுழுத்தியென முறையேயிடம் கண், மனது, இருதயம் என மூன்றிடமுண்டு.

கங. இங்ஙனமுதித்த ஜீவன் நாமே எல்லாமென அபிமான முற்றும் பின்னர்த்தெளிந்து தன்னிடத்திற்றானே புருஷனைப்பார்க்கிறான்.

கச. ஆகலினிப்புருஷனுக்கு இதந்திரனெனப் பரோட்சமாகச் சொல்லுவர்.

### இரண்டாமத்தியாயம் கண்டம்-க.

இச்சீவன் பிரதமத்தில் புருஷனிடம் கர்ப்பமாயிருக்கிறான். அன்னமயமான கோசத்தில் சகலவங்கங்களின் சாரமான ரேதஸ்ரூபமாகிற ஆத்மாவைத்தன்னிடம் பிதாதாங்குகிறான். அந்த ரேதஸ் ஸ்திரீயின் ஸம்யோகக்காலத்தில் வெளிவரும்போது அப்போது அச்சீவனுக்குமுதல் ஜென்மம்.

௨. அந்த ரேதஸானது அந்த ஸ்திரீயினையே சார்ந்துவிடுகிறது. அக்கர்ப்பம் இவளைப்பாதிப்பதில்லை. இக்கர்ப்பத்தினை அவள் காக்கின்றாள்.

௩. ஸ்திரீயானவள் கர்ப்பத்தைக் காப்பாற்றிவரப் பத்தாவது மாதத்தில் புத்திரன் ஜனிக்கின்றான். பிதாவே புத்திரரூபம். அப்புத்திரனுக்குப் பிதா சமஸ்காரஞ்செய்து தானாகப்பாவிக்கின்றான் அங்ஙனஞ்செய்தல் உலகவிருத்தியை நாடியாம். இது இரண்டாவது ஜன்மம்.

௪. இப்புத்திரன் பிதாவிற்குப்புண்ணியகர்மங்களை நிறைவேற்றப் பிரதி நிதியாகிறான். அப்போது பிதாவாகிய ஆத்மா கிருதகிருத்தியனாய் வயோதிகம்பெற்று இறக்கின்றான். பின்வேறு ஜென்மம் மூன்றாவதாக வடைகிறான்.

௫. கர்ப்பவாசமாகவிருந்து அக்னியாதி தேவர்களின் சகல சன்மங்களையுமறிந்தனன். இரும்பு விலங்கிட்டுக் கிடந்த பல சரீரங்கள் முன்னர்க்காக்கப்பட்டன. இப்போது சேனமெனும் பறவைபோன்று தத்துவஞானத்தால் புறப்போந்தேன் எனக் கர்ப்பத்திலிருந்தே வாமதேவ முனிவர் மொழிந்தனர்.

## மூன்றாவது அத்தியாயம் கண்டம்-௧.

ஆத்துமாவென்றவரைச்சாட்சாத்தாக உபாசிக்கவேண்டுமோ? அவரியாவர்? இருவர்கட்குள் எவராத்மா? எதனாலுருவத்தைக் காண்கின்றானோ? எதனாற் சத்தத்தைக் கேட்கின்றானோ? எதனால் வாசனையை முகருகின்றானோ? எதனால் வசனங்களைப் பேசுகின்றானோ? எது நலம் எது தீமை என்றறிகின்றானோ அஃதியாது?

௨. எஃதிருதயமோ? எதுமனதோ? அவையிரண்டாம், அவற்றின் பிரஞ்ஞான விருத்தியாவன—ஸமஞானம் (சேதனபாவம்), ஆக்ஞானம் (ஈஸ்வரபாவம்); விஞ்ஞானம் (இலௌகிகஞானம்), பரஞானம் (பேரறிவு), மேதா (மறவாமை), திருஷ்டி (நோக்கு), திருதி (தைரியம்), மதி (நினைவு), மநீஷா (நிச்சயம்) ஜூதி (மனத்துன்பம்) ஸ்மிருதி (நினைவு) ஸங்கல்பம் (ஏற்பாடு), க்ருது (தீர்வை), அஸூ (ஜீவவிருத்தி), காமம் (இச்சை), வசம் (மாதராவல்),

௩. இவரிந்திரன், பிரஜாபதி, தேவர்கள், பஞ்சபூதங்கள், சர்ப்பாதிகள், பீஜங்கள், அண்டஜந்துக்கள், கர்ப்பஜந்துக்கள், சுவேதஜந்துக்கள், விருட்சங்கள், அசுவங்கள், பசுக்கள், புருஷர்கள், கஜங்கள், பட்சிகள், ஸ்தாவரங்கள், எல்லாம் பிரமம்,* யாவும் பிரஜ்ஞாநேத்திரம் யாவும் பிரஜ்ஞானத்திலிருப்பன, உலகமே பிரஜ்ஞானகேத்திரம், பிரஜ்ஞையே பிரதிஷ்டை பிரஜ்ஞானமே பிரமம்.†



௪. முன்னர் கூறிய வாமதேவ முனிவரும், பிரமவித்துக்களும் இந்தப் பிரஜ்ஞானாத்மாவை யறிவதால் இவ்வுலக நீங்கிச் சுவர்க்க முற்றுச் சகலமுமனுபவித்து அமுர்தராகிறார்கள்.

---

*எல்லாம் பிரமமென்றது அகண்ட வியாபகமான பிரமம், கண்டப்பொருளாமெவற்றினும் அவ்வப்பொருளளவாகவும் கூடிஆதார அந்தரவத்துவாக நிற்றலினாலென்க. "ஐததாத்ம்ய மிதக்ஸர்வம்" அந்த இந்தச் சத்தான ஆன்மாவையுடையதே இந்த (உலகு) எல்லாம் எனும் சாந்தோக்யோப நிஷத்திற் காண்க. அன்றியும் பிரமத்தைவிட்டு நீங்காப் பொருளனைத்தும் பாசம்பசுவினிரண்டிலடங்கும். அவை ப்பிரமமாகிய பதிக்குதேயு வாயு ஆகாயம் சந்திரன் சூரியன் சிவான்மாவெனும் அஷ்டமூர்த்தங்களாயிருத்தலின் அப்பிரமத்தை எப்பொருளாக் கொள்ளினும் கொள்ளலாம் "ஆத்மாதஸ்யாஷ்டமீ மூர்த்திஃஶிவஸ்யபரமாத்மந" ஆன்மாவானது சிவமாகிய பரமான்மாவினது எட்டாவது மூர்த்தியாகும் எனும் உபப்பிருங்கணமும் கூறிற்று.

†பிரஜ்ஞானம் பிரஹ்மம். இது மகாவாக்கியங்களிலொன்று. இதன் பொருள். பிரஜ்ஞானம்=பெரியஞானமே சொரூபமாகவுள்ளது, எனவே சிறிய ஞானமுடையது ஜீவான்மாவெனபது சொல்லாமேயமையும், பிரஜ்ஞானமாவது சத்தி "சத்தியின் வடிவேதென்னிற்றடையிலாஞானமாகும்" எனுஞ் சிவஞானசித்தியார் சுபக்கம். (?) திராவிடோப நிடதம். இச்சத்தியை யுடையவன் சத்தன். ஆகவே சத்திகுணமும் சத்தன்குணியுமாம். கதிரும் கதிரோனும் போலும், இங்ஙனமாயின் வேதம் பரமான்மாவைப் (பிரமத்தை) நிர்க்குணன் குணாதீதன் என்றதென்னையெனின் அது பிரகிருதிபாற்பட்ட இராஜச தாமச சாத்துவிகங்களுடன் கூடிய சகுணபிரமம் போன்ற தன்றென்பதே தாற்பரியம். பரமான்மா எண்குணமுடையனாதலை "கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான்-றாளைவணங்காத்தலை," என உத்தரவேதமும், "எட்டுவான் குணத்தீசனெம்மான்றனை எனத் "தேவாரமும், "இறையவனை மறையவனை யெண்குணத்தினானை" எனத்திருப்பாட்டும், "தானுமெண்குணன் சங்கரன்" எனப்பிங்கலநிகண்டுங்கூறியவாற்றாலறிக. இவ்வெண்குணங்களும் சிற்குணங்களாம், இவையும் பரமான்மாவிற்கு வேண்டுவதில்லை யென்பாரேல் அப்பரமான்மா ஒரியல்புமில்லாவெறும் பாழாய் முடியுமென்க. மேற்குறித்த சிறியஞானமாகிய அஞ்ஞானத்தையுடைய ஜீவான்மாவின் சத்தியாகிய அறிவைச் சுருக்குகின்ற ஆணவமலமும் அந்த வறிவைக் கன்ம மலவழியே சிற்றறிவாச் செய்து நிற்கின்றமாயாமல முண்டென்பதும் பெறப்படும். இம்மூன்றும் பாசமாம். ஆகவேபிரஜ்ஞானம்பிரமம் என்றமகாவாக்கியத்தில் பதிபசுபாசமாகிய திரிபதார்த்தவுண்மை ஸர்வசம்பிரதிபந்நமாம். மற்றமகாவாக்கியங்களின் உண்மைப் பொருளைச் சித்தாந்தம் தொகுதி-௧. பகுதி-௩. பக்கம்-௭௩-ல் கண்டுகொள்க.

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# குருவணக்கம்.

தொடர்ச்சி-பகுதி-க-பக்கம்-ரு.

19-வது ஞானாசிரியராய் இப்போது வீற்றிருப்பவர்களே திருவாவடுதுறை யாதீனமடாதிபதியாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள். ஏனைய ஆதீனங்களும் கைலாயபரம்பரையில் வந்த சந்தான குரு நிலையங்களெனக் கூறப்படினும் சந்தான குரு சுவாமிகள் நால்வரையும் பூஜிக்கு முரிமை திருவாவடுதுறைக்கே உரிமையுடையதாதலால், சந்தான பரம்பரையென்றவளவில் திருவாவடுதுறை யாதீனத்திற்கே சிறப்புரிமையுண்டென்க.

1. "கயிலாயபரம்பரையிற் சிவஞானபோதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மைமெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞானபானுவாகி
குயிலாரும் பொழிற்றிருவாவடுதுறைவாழ்குரு நமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன் திருமரபு நீடூழிவாழ்கமாதோ"

2. திருந்துவடகயிலைதனிற் பரமசிவ னளித்த
சிவஞான போத மூணர்நந்தி முதற்சி றந்தே
வருங்குரவர் வெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர்
வழங் கருட்சந்ததி யருணமச்சிவாய தேசிகனும்
இருங்குரவ னளித்தசிவப்பிரகாசதேசிக
னிலங்குமறை வனத்தருகோர் வன்குகையி னுறைநாட்
பொருந்தியவன் திருவடிக்கீழ வனருளேவலினாற்
போந்தருளாவடுதுறைவாழ் நமச்சிவாயனைப் புகழ்வாம்.

3. சிற்றுரையும்பேருரையும் சிவஞானபோதமெனு
தெய்வநூற்குக்
கற்றறிந்தோர்களிகூரக் கருணையினாற் செய்தளித்தான்
கலைகடேர்ந்து
முற்றுணர்வு முதலியவற்றூர் சிவனே யென்றறிஞர்
குழாம்மொழிந்து போற்ற
நற்றுறைசைப் பதிமருவுஞ் சிவஞான யோகியெனு
நாமத்தானே"



இம்முறை வழங்கப்படுவது நவகோடி சித்தபுரமென்னும் திருவாவடுதுறையாதீன சந்தான குருபரம்பரையேயாம். இவ்விடயத்தை மேற்கூறியுள்ள பக்கங்களின் செய்யுளாலுணர்க. இந்த அதிட்டித பெத்தான்மாக்களிடம் உள்ளதுபோல்வதன்று. இறைவன் பெத்தான்மாக்களிடம் அதிட்டித்து நிற்பது

ஆவேசகுரு—பக்குவான்மாக்களை யாட்கொள்ள வேண்டி இறைவன் ஆசிரியராக வந்து மெய்ப்பொருளை விளக்கி ஆட்கொள்ளும் அருள் வடிவம். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொள்ளக் கருதித் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தினடியிலே யெழுந்தருளியவர் ஆவேசகுருவே யாவர். இவர் இருவினையொப்பு வந்து மலபரிக முற்றுச்சத்திநிபாதம் பெற்ற ஆன்மாதன்னைப் பற்றி நின்ற பாச நீக்கம் பெற்றவுடன் அயரா அன்பின் அரன்கழல் சேருந்தன்மையைச்சின் முத்திரையா லுணர்த்தியாட் கொள்ளுவ ரென்பர். இதனை நமது கவிச்சக்கர வர்த்திகச்சியப்பமுனிவர் அருளிய.

மும்மலம் வேறுபட்டொழிய முத்தியில்
அம்மலர்த்தாணிழ லடங்குமுண்மையை
கைம்மலர்க்காட்சியிற் கதுவநல்கிய
செம்மலையலதுளஞ் சிந்தியாதரோ.

என்னும் செய்யுளாலறியலாம்.

குமாரகுருபரசுவாமிகளும் பண்டாரமும் மணிக்கோவையின்

மீகெழுபாஞ்சுடர் வெளிப்பட்டம்ம
வெம்மனோர் போலவினிதெழுந்தருளிக்
கைம்மாறற்ற கணக்கில் பேரின்ப
மோனவாழ்வளிக்கும் ஞானதேசிகன்

என்றும் அருளியிருக்கின்றதாலறியலாம்.

குருவின் கடமை—அபக்குவர்களைத் தம்மிடத்தன்பும் அவர்களிடத்தருளுங் கொண்டு தள்ளிப்பக்குவர்களுக்கு நிர்வாண தீக்ஷை செய்து திரிபதார்த்தங்களையு முணர்த்தும் ஞானசாத்திரங்களை யுபதேசிக்கக் கடவர். ஞானகுரு நினைத்தலால் பக்குவ வான்மாக்கள் சிவமாகும். மீன் தன்பார்வையால் முட்டையினின்று குஞ்சுகளைத் தோற்றுவித்தல்போல பக்குவ வான்மாக்களைச் சிவனுந்தன்மை

யெய்தச் செய்வது அவாது தன்மையென்பர். இதனை திருவிளையாடல் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில் உள்ள

பார்த்தபார்வையாலிரும் புண்டரீகனெனப் பருகுந்
தீர்த்தன் றன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப்
போர்த்த பாசமுந் தம்மையு மறந்து மெய்ப்போத
மூர்த்தியாயொன்று மறிந்திலர் வாதவூர் முனிவர்

என்பதால் அறியலாகும்.

குருவின் பெருமை—"ஈசனுக்கிழைத்த குற்றம் தேசிகனெண்ணித் தீர்க்கும், தேசிகற்கிழைத்த குற்றம் குரவனேதீர்ப்பதன்றிப் பேசவதெவனோ" என்ற பெரியர்வாக்கின்படி கடவுளுக்கு ஈவொரு குற்றஞ் செய்தால் அவ்வபராதத்திற் கேற்றபரிகாரஞ் செய்து குருவானவர் தீர்ப்பர். குருவுக்கு அபராதஞ் செய்தால் அவரே தீர்க்கவேண்டுமே தவிரவேறு கதியில்லை. இதனைத் தர்மசாஸ்திரங்களிலொன்றி லுள்ள

ஶிவேருஷ்டேகருஸ்தாதா
குரௌருஷ்டேநகஶ்சந

என்னும் சுலோகமும் வற்புறுத்தும்.

"நான்மறைக்கிழவ நற்றவமுதல்வ
நூன்முறைபயின்ற நுண்மைசாலறிஞ
சொற்சுவைபழுத்த தொகைத்தமிழ்க்கவிஞ
கற்றவர்வியக்குங் காவியப்புலவ
செவிதொறுஞ் செவிதொறுந்தெள்ளமு தூட்டு
கவிஞர்வயினிரப்புங் கல்விப்பிரசங்க
வெள்ளிடைத்தோன்று முள்ளத்துணர்த்தவுஞ்
செய்கிலையின்று திருக் கண்சாத்தவுஞ்
சாயாமும்மலச் சகலரோமுய்ய
வெம்முருக்கொண்டு மெம்மொடுபயின்று
மும்மலக்கிழங்கை முதலொடு மகழ்ந்து
சிற்பரமுணர்த்துஞ் சற்குருநாய
பனிக்கினிற்குயின்ற பனிநிலாமுற்றத்து
விளங்கிழைமடந் தையர்விளையாட்டயர்தரச்
கொங்குவார்குழலுங் குவளைவாள்விழியும்
பங்கயமுகமும்பத்தி பாய்ந்தொளிர்தசிற்



சைவலம்படர்ந்து தடங்கயலுகளுஞ்
செய்யபூங்கமலஞ் செழுமலரோடையென்
றுடவர்சிற்சிலர் நாடினர்காணுஉ
வம்மின்வம்மின் மடந்தையர்நீவிர்மற்
றம்மெல்லோதி யரம்பையராதலி
னீர்நிலைநிற்றிரா னீரவர்தங்களுள்
யார்கொல்யார் கொல்லிசைமினிசைமினென்
றிறும்பூதெய்தி யிரந்தனரிசைப்ப
மறுமொழிகொடாது குறுநகைமுகிழ்த்தாங்
கையுறவகற்று மணிமதிற்கமலை
நன்னகர்புரக்கு ஞானதேசிக
வாசிலாவண்புகழ் அணிநிலாவெறிக்கு
மாசிலாமணி ஞானசம்பந்த
வென்பொருட்டாயினு மென்பொருட்டன்றிது
நின்பொருட்டொரு பொருணிகழ்த்துவன் கேண்மோ
வறிஞனேம்பிய சிறுவொன்றேய்ப்ப
பக்குவநோக்காப்பவந் தொறும்பவந்தொறு
மிருவினைப்போகமு மேற்கொண்டார்த்துபு
மற்றென்னுருக்கொடு முற்றினையாலினித்
தாகமின்றாகலிற் பாகமின் றெனக்கென
வருளாதொழியினு மரிபலவினக்கே
செய்முகம்பாரான் சினந்தனளேகினும்
போயெடுத்தாற்றுமத் தாய்மீட்டன்றே
யாதலினென்னைப்போ லடிக்கடித்தோன்றலை
யீதியாலின்னரு ளின்னணமெமக்கே
சமையத்தீர்ந்த தலிப்பொருடெறித்தற்
கமையத்தேர்கலை யருளுதியாயினு
மென்னீராண்டைக் கிலக்கமிட்டிருந்த
வண்ணலங்குமாரற் காருயிர்தோற்றக்
கடாவிடையூர் திபாற்கண்டு
மடாதெனமொழிகுந ரார்கொன்மற்றுனையே"

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலு மென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும் முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைபிரா னஞ்செழுத்தெங்கே"

என்னும் செய்யுள்களாலும் அறியக்கிடக்கின்றது மற்றுமிவர் பெருமையாவர்க்குந் தெரிந்ததே.

குருவையடையும் வழி:—சமுசார சாகரத்தினின்று தவிக்கும் சீடன் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்துப் பிறவிநோயை நீக்கக் குருவை யடையவேண்டும் "கள்ளக் காதலனிடத் தன்புகலந்து வைத்தொழுகு முள்ளக் காரிகைமடந்தைபோல்" குருநாட்டங் கொண்ட பக்குவ சீடர்கள் எத்தொழிலைச் செய்தாலும் எதவத்தைப் பட்டாலும் அத்தனாகிய குருவையடையுநாள் எதுவோ வென்றேக்க மேலிட்டவராகியே யிருப்பர். அப்படித் தேடும் நன்மாணாக்கர்களை ஆட்கொள்ளுவது இப்பரம குருவின் தன்மை.

குருவைவழிபடு முறை—மாணாக்கன் குருவினிடத்தில் விருப்பமுடையனாய், அவனை அன்புடன்வணங்கி ஆசிரியர் நித்திரை நீங்கி எழுந்திருந்து இன்னது செய்யென்று ஏவுதற்கு முன்னே தானெழுந்திருந்து ஸ்நானம்பண்ணி அநுஷ்டானஞ் செய்து முடித்துக்கொண்டு அவர்முன்னே வந்துநின்று அவரைப் பலமுறை ஸ்தோத்திரஞ் செய்து அவருக்கு வேண்டுந் தொண்டுகளைச் செய்து பாசத்தை நீக்கும் ஆசிரியரைச் சிவபெருமானிவரேயென்று மனதினால் அன்போடு பாவனை செய்யக் கடவன்.

"புரிந்தே குரவனடியிணையும் போற்றிப்
பரிந்தேயவர் துய்ப்பணிந்து"

"ஏவுதன்முன்னே யியற்றிப்பணி யறிந்து
நாவினவின் றவ னுமய்"

"சிந்தனைசெய்க சிவனிவனே யென்றுளத்துட்
பந்தமறுப்பானைப் பரிந்து"

என்னும் சைவசமய நெறிச்செய்யுளா லுணரலாம். மற்றும்,

"அழலினீங் கானணு கானஞ்சி, நிழலினீங்கா நிறைந்த நெஞ்சமோடு, எத்திறத் தாசானுவக்கு மத்திறம், அறத்திற்றிரியாப் படர்ச்சிவழிபாடே, என்ற நன்னூல் சூத்திரத்தாலும் அறியலாம். மேலும் ஞானதீக்ஷையால் உடல்பொருள் ஆவி மூன்றையும் தானஞ் செய்ய வேண்டும். அதாவது முன்செயற்கையாய்த் தன்னுடைமையாய் நின்ற இம்மூன்றனையுந் தனக்கின்றிச் சிவபெருமானுக்கே உடைமையாகச் செய்தலாம். ஆவியாகிய தன்னைத் தானஞ்செய்தலாவதுதான் சிவபெருமானுக்குப் பரதந்திரனென்றுணர்ந்து அவரருளல்லது ஒன்றைச் செய்யானாகி நிற்றலேயாம். தானே தனக்குச் சுதந்தரமின்றிச்



சிவபெருமானுக்கே உடைமையாய வழித் தன்னின் வேறாய உடல் பொருள்கள் தன்னுடைமையாமாறு யாண்டைய தென்க. மறைஞானசம்பந்த சிவாசாரியர்

"பொருளுடலாவியெனு மூன்றும் புதல்வன், குரவன் கொளென்கை குணம்"

என்று மாணாக்கன் தீக்ஷாகாலத்தில் உதகஞ்செய்யு முறைமையை யுணர்த்துகின்றார். இன்னும் இதை யொட்டியே,

"அன்றே யென்றனாவியு முடலும் உடைமை யெல்லாம், குன்றேயனையாய் என்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ"

என்றும்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கராயார் கொலோசதுரர்" என்றும்,

"வஞ்சவினைக் கென்கலமா முடலைத் தீவாய் மடுக்கிலென் வரையுருண்டுமாய்ப் பேனல்லேன், நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பேனல்லேன் நாதனே யாதுனதுடைமை யென்றே யஞ்சினேன்"

என்று கூறியுள்ள இன்னோர் வாக்கியங்களா லுணரலாம். மற்றும் சிஷ்யன் ஆசாரியர்களை அவர்களுடைய எதிரில் நிற்றலானும் அவர்களுக்குப் பணிவிடைசெய்தலானும் வணக்கத்தோடிருத்தலானும், அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தலானும் அவர்களுடைய உபதேசத்தைக் கடைப்பிடித்தலானும், கௌரவப்படுத்தவேண்டும். ஆசிரியன் நீதியுடனாவது, நீதியில்லாமலாவது ஒருகாரியத்தைச் செய் என்றேவினால் அதைச் சிஷ்யன் சிரமேற்கொண்டு செய்யவேண்டும். இதை

"அய்யனங் கதுகேட்டற னல்லவும்
எய்தினலது செய்கவென் றேவினால்
மெய்யநின் னுரைவேத மெனக்கொடு
செய்கை யன்றோயறஞ் செய்யுமா றென்றான்"

என்னும் பாவாலறிக.

ஆகையால் எய்துதற்கரிய மானிடஜென்மமெடுத்த நாமெவ்வொருவரும் அடையவேண்டியபேற்றைச் சற்குருவாயிலாகவுணர்ந்து, சிவபெருமான் திருவடிக்கீழ் உய்வோமாக.

துறைசை-நமசிவாயத் தம்பிரான் சுவாமிகள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவோபாசனா மகிமை.

தொகுதி 4. பக்கம் 181, தொடர்ச்சி.

"யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றத்தெய்வங்கள், வேதனைப்படு மிறக்கும் பிறக்கும்மேல் வினையுஞ்செய்யு, மாதலா லிவையிலா தானறிந் தருள்செய்வனன்றே"

எனச் சிவஞானசித்தியார் திருவிருத்தத்திற்கூறியபடி எவரெவர் எவ்வெவ்வத் தேவரைக்குறித்து வழிபடினும் அவ்வவ்வத் தேவரிடமாக நின்று அவ்வழிபாட்டை பெற்று அவரவர்வேண்டிய பலன்களை அளிக்கவல்ல முதற்கடவுள் சிவபெருமா னொருவரே என ஒருதலையாகத் துணியக் கிடந்தன.

இது பற்றியே நமது சிவப்பிரகாசரும் தெய்வசிகாமணி என்றருளினர்.

அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபிரானொருவர்க்கே பிறப்பில்லை என்பதற்கு,

"எல்லார் பிறப்புமிறப்பு மியற்பாவலர்தஞ், சொல்லாற்றெளிந்தே நஞ்சோணாசரில்லிற், பிறந்தகதையுங் கேளேம் பெருலகில் வாழ்ந்துண், டிறந்தகதையுங் கேட்டிலேம்"

என, அருணகிரி யந்தாதியானும் உரைக்கிடந்தன.

இத்தன்மைத்தாய முழுமுதற் கடவுளை உபாசித்து மோட்சமடைய முயலவேண்டும். ஒருவன் மோட்சமடைதற்குச் சாதனமாயுள்ளது ஞானம். அந்தஞானம் உண்மை உபதேசத்தான் எய்தற்பாலது. அவ்வுபதேசமோ ஒருகுருவின் றிருவாக்கால் நிகழத்தக்கது, குருவோ அவரவர்பக்குவகாலங்கண்டே எழுந்தருளிவந்து உபதேசஞ்செய்வர்.



ஆதலால் மோட்சமடைய விரும்புகிறஒருவனுக்கு முதற்கண்ணே பக்குவம் உண்டாகவேண்டியது அவசியமாம். அப்பக்குவம் சிவபுண்ணியத்தால் வரவேண்டும். சிவபுண்ணியமாவது சிவபெருமானை நாம் வணங்கும் வணக்கத்தால் வரும் வினை நிகழ்ச்சியாம்,

நாம் வணங்கி முத்தியின்பம் பெரும்பொருட்டே இவ்வுலகில் பலதலங்களைத் தமக்கு வாசஸ்தானமாகக்கொண்டு ஆலயத்தில் எழுந்தருளி யிருக்கின்றார் ஆலயவழிபாடு எவற்றினும் சிறந்தமையை,

"என்று கூடுமிப்பருவ மென்றியம்பில் யாமிருந்துளவிடந்தொறு மிறைஞ்சி, நன்றிசேர் சிவபுண்ணியம் புரியும் நன்மையாலது நாளுகு மென்றறிநீ"

என வாதவூரடிகள் புராணத்தானும் முதல்வனென்றே வழிபடுதலை,

செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலறநேய மலிந்தவர் வேடமு
மாலயந்தானு மரனெனத் தொழுமே.

எனச் சிவஞான போதத்தானும் தெளியக்கிடந்தன. ஆன்மாக்களுய்தற்குரிய இவ்வுலகில் தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்களுடைமையின் சிருட்டியாதிகர்த்திருத்துவ முதலியவற்றை அருள்விளையாட்டி னெய்தினர் என்க.

எனவே இனி உயிர்கள் பொருட்டு அவராலே செய்யப்படுகின்ற கிருத்தியங்கள் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என ஐந்து வகைப்படும்.

அறிகருவிகளாகிய இந்திரியங்களைக் கொடுத்தலே சிருட்டி, அறிகருவிக்காதியாகிய மனமுதலிய கரணங்களை நிலைநிறுத்தலே திதி, அறிகருவியை நீக்குதலே சங்காரம், அறிதற்றொழில் நிகழுமிடத்து இன்பதுன்பங்களைக் கொடுத்து அதில் அறியாமையைச் செய்தலே திரோபவம், அறிதற்றொழில் நிகழ்வித்தலே அநுக்கிரகம். கடவுள் இங்ஙனம் ஐந்தொழிலியற்றல் யாதுக்கெனில், உயிர்களைப்பந்தித்த ஆணவமலம் ஒழிதற்பொருட்டாம், மலநோயைத் தீர்க்கும் கடவுள் ஒருவைத்தியராவர், மலபந்தத்தால் வருந்தும் உயிர்கள் பிணியாளராவர்,

ஆணவமல பந்தமே பிணியாகும், அப்பிணிக்கு மருந்தாயுள்ளது பிராரத்தகன்மம், அம்மருந்தை வைத்துண்ணும் பாத்திரமாயுள்ளது மாயையினாலாகிய சரீரம், அம்மருந்தை யுண்பித்துப் பிணியைநீக்கும் வைத்தியமே பஞ்சகிருத்தியமா மென்றறிக.

அவர் இங்ஙனஞ்செய்யும் ஐந்தொழிலினாலே மலவலிகுன்றிமடங்கும், அதனாற் புண்ணிய வினைவு மேம்படும். அதனாற் சிவபுண்ணியம் மேலும் அதனால் இருவினையொப்பு மலபரிபாகங்க ளுள்வாம், அதனாற் சத்திநிபாதம் பிறக்கும், அதற்கேற்பகடவுள் ஆசாரியமூர்த்தியா யெழுந்தருளிச் சமயவிசேட நிருவாணதீட்சைகளைச் செய்து, சரியை, யோகஞானங்களில் நிறுத்திச் சாலோக்கிய, சாமீப்பிய, சாரூப்பிய, சாயுச்சியங்களாகிய அபரபா முத்திகளைத்தந்து, மலநீக்கமும் சிவப்பேறும் உதவிச் சுத்தாத்துவித முத்திநிலையில் இருத்தி என்றும் அழியாப்பேரின்ப வாழ்வாகிய பரமானந்த வைபவத்தை ஆன்மாக்களுக்கு அளித்தருளுவர்.

ஆனதால் இவ்விதம் எளிதில் அளிக்கவல்ல சித்துகளைப்பெருங் கருணை சமுத்திரமாகிய முழுமுதற்கடவுளை நாம் என்றென்றைக்கும் மறவாது மெய்யன்போடு வழிபட்டு அவர் அருளிச்செய்த வேதசிவாகமவழி யொழுகி அவரது திருவருளைப் பெற்று அவராலே தரப்படுகின்ற திருவடிப் பெரும்பேறாகிய முத்திநிலையை எய்துதல் தெள்ளியோர் கடைமையாகும்.

இன்னும்வரும்.

இங்ஙனம்,

S. நடேச தேசிகர்,

கவர்ன்மெண்ட் ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

கோட்டைச்சேரி

OFFICE OF THE REGISTRAR OF JO...
REGISTERED
4 - APR 1916
MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# செல்வம்.

செல்வம்—பொருட்செல்வம், கல்விச்செல்வம், அருட்செல்வம், என முத்திறப்படும். அவற்றுள் பொருட்செல்வமாவது இரத்தினம், பொன், வெள்ளி முதலியனவேயாம். அவை இம்மை யின்பத்திற்கு இன்றியமையாதனவாம். ஆகலான் மானுடராய்ப்பிறந்த யாவரும் அத்தியாவசியம் அவற்றைத் தேடல்வேண்டும். தேடுங்காலத்து அறத்தின்வழி யீட்டில் எண்ணில நன்மையையும் உண்டாக்கும். இக்கருத்துப்பற்றியே தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரும்,

> அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள் [illegible]

என்று அருளிச்செய்தார். ஆகலான் அறத்தையும் இன்பத்தையும் விரும்பிய நாம் எல்லோரும் தரும வழியாலேயே அப்பொருளைத் தேடல்வேண்டும் என்பது சித்தித்தவாறு கண்டுகொள்க. நம்மனோருள்ளும் இவ்வுலக வின்பத்தைப் பெரும்பாலும் வேண்டிநிற்கும் இல்லறத்தார்க்கேயன்றி மறுமையின்பம் வேண்டிநிற்கும் துறவறத்தார்க்கும் அதுவேண்டும் என்னும் கருத்தால், மாணிக்கவாசக சுவாமிகள் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்றும், "வறியார் இருமையறியார்" என்றும் திருக்கோவையாருள் அருளிச் செய்திருக்கிறார். அங்ஙனமாயின் இப்பொருட்செல்வத்தின் பெருமை யென்னுஞ்சியம்பலாம் தகைத்தன்று. இச்செல்வமிலார்க்குப் பலவகையினும் இடையூறும் துன்பமும் விளையுமென்பது பிரத்தியக்ஷம். அதிமதியுடையனேயாயினும் செல்வமிலனேல் அவன்வாக்கை மனைவி மைந்தர் முதலாயினோரும் ஏற்றுக்கொள்ளார். செல்வம் ஒன்றுமாத்திரம் உளனேல் அவன் இழிகுலனாயினும் அறிவிலனாயினும் எல்லோரும் ஏற்று நன்குமதிப்பர். அக்கருத்தினாலேதான் திருவள்ளுவநாயனாரும், ஔவையும்,

இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு—எனவும்

கல்லானே யானாலும் கைப்பொரு ளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கெதிர் கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாது அவன் வாயிற்சொல்—எனவும்,

அருளிச் செய்தார்கள். சமணமதத்தவராகிய திருத்தக்கதேவரும் இவர்கள் கருத்தைப் பின்பற்றியே,

பொன்னினாகும் பொருபடையப்படை
தன்னினாகுந் தரணிதரணியிற்
பின்னையாகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங்காலை துன்னாதனவில்லையே—எனவும்,

வென்றியாக்கலும் மேதகவாக்கலும்
குன்றினார்களைக் குன்றெனவாக்கலும்
அன்றியும் கல்வியோடழகாக்கலும்
பொன்னுஞ் சாகத்தினைப் பொருள்செய்யுமே.—எனவும்

அருளிச்செய்தார். இத்தகையசெல்வத்தை எத்தகையிடையூறுவரினும் பொருட்படுத்தாது "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்பதற்கு இணங்க பெருமுயற்சி செய்து தீவினைவிட்டு ஈட்டி இம்மையின்பத்திற்கும் மறுமையின்பத்திற்கும் எதுவாகிய அறங்களைச் செய்குவோமாக. அங்ஙனம் செய்யாது,

"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரேயனுபவிப்பார்
பாவிகாள் அந்தப்பணம்—என்பதற்கு இலக்கியமாய் வாளா

ஈட்டி வைத்து இறந்து படுவோமாயின் நம்மினும் அறிவிலிகளாகிய ம்மக்கள் வேறியார்? இக்கருத்தினாலன்றோ பட்டினத்தடிகளும்,



பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மே
லிறக்கும்போது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கு மிச்செல்வம் சிவன்தந்ததென்று கொடுக்கறியா
திறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் இறைவாகச்சியேகம்
[பனே—எனவும்

நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டையாடி நயம்புரியும்
தாயார் வயற்றில் நரராய்ப் பிறந்தபின் சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங்குளமும் கல்லாவு மென்ன
ஈயாமனிதரையேன் படைத்தாய்இறைவாகச்சியே கம்பனே.

எனவும், அருளிச்செய்தார்.

ஆகலான் பாவத்திற்கஞ்சி பொருளைச் சம்பாதித்து இல்லறதருமங்களை லோபமின்றி அப்பொருளுக்கேற்ப விரித்தும் சுருக்கியுஞ் செய்து இருமையின்பத்தையுமடைதலே அறிவுடையார்க்கு அழகாகும் என்பது உணரக்கிடந்தவாறு காண்க.

இனி, கல்விச்செல்வமாவது,

"கற்க கசடறக்கற்பவை கற்றபின்
நிற்கவதற்குத்தக" என்றவாறு கற்றற்குரிய நூல்களை

நல்லாசிரியனை யடைந்து நன்குவழிபட்டுக் கேட்குமுறையிற் கேட்டு ஐயந்திரிபு அறக்கற்றலாம். அந்நூல்களாவன—அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்களை யுணர்த்துவனவேயாம். அவற்றைக் கற்றவர்கட்கு அக்கல்வி எல்லாவற்றையும் பகுத்துணர்தற்கும், கொள்ளற் பாலனவற்றைக் கொள்ளுதற்கும், விள்ளற்பாலனவற்றைவிடுதற்கும் கருவியாய்இம்மை, மறுமைவீடென்னும் மும்மையினும் இன்பம் பயத்தலினாலும், அவர் பிறவிதோறும் அழிவின்றி ஒருங்கு சேரலானும், அவர் சென்றுழியெல்லாம் அவர்க்கும் பிறர்க்கும் சிறப்பு செய்யலானும், பிறர்க்குக் கொடுக்குந்தோறும் கொடுக்குந்தோறும் ஒரு காலைக்கொருகால் ஓங்கிவளர்தலினாலும் இன்ன பிறவாற்றானும் பொருட்செல்வத்தினும் கல்விச் செல்வமேமிகவும் மேம்பாடுடைத்தாம்,

இக்கருத்துப்பற்றியே,

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்றை யவை. எனவும்,
யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு. எனவும்,
ஒருமைக் கண்தான் கற்றகல்வி யொருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து. எனவும்,

தொலாநாவின் மேலோராகிய பொய்யாமொழிப் புலவர் கூறியதூஉம் என்க.

இன்னும் இக்கல்வியின் பெருமையை சிறப்புவகையான் கூறின் மோக்ஷத்திற்கு மிக்கசாதனமாயுள்ளது இதுவே யாம் என்பதனை,

"கற்றல் கேட்டல் உடையார் பெரியார்கழல் கைதொழுதேத்த"
எனவும்,
"கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்" எனவும்,
"கற்றிலேன் கலைகள் ஞானம் கற்றவர் தங்களோடும்
உற்றிலேன் ஆதலாலே உணர்விற்குஞ் சேயனானேன்"
எனவும்,
"கல்லாத புல்லறிவிற் கடைப் பட்டநாயேனை"
எனவும்,
"கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை
மற்றவரறியாமாணிக்க மலையை" எனவும்

வரும் மெய்ஞ்ஞானிகளது திருவாக்குகளான் தெற்றென வறிக.

இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய விக்கல்வியை மக்கட்பிறப்பினர் யாவரும் எத்துணைச் சிரமப்பட்டுங்கற்று இம்மையின்பத்திக் கேதுவாகிய பொருட்செல்வத்தோடு என்று மழியா வியல்பினதாகிய மோக்ஷப்பொருளாகிய பேரானந்தப் பெருவாழ்வையும் பெறுதற்கு ஒவ்வொருகணமும் முயலல் வேண்டுமென்பது சொல்லாமலே யமையக்கிடத்தலின், இதனை இவ்வளவில் நிறுத்தி யப்பாற் செல்லுகின்றேன்.

இன்னும்வரும்
W. T. கோவிந்தராஜ முதலியார்.

உ

சிவமயம்.

திருசிற்றம்பலம்.

# தியாநாநந்தந் திகழுமிடமெது?

தியாநமாவது கடவுளுடைய அநந்த கல்யாணகுண விசிஷ்டங்களையும், சர்வகாரண சர்வஜ்ஞத்துவங்களையும் மெய்யறிவானே தெளிந்து, மனதை அப்பெருமானுடைய திருவடிகளிலே நிறுத்துதல். மனதை நிறுத்திவழிபடுவோர் அகக்கண்ணாகிய ஞானக் கண்ணினாலே ஈஸ்வரஸ்வரூபத்தைத் தரிசித்து ஆநந்தமடைகின்றனர். ஊனக் கண்கொண்டு காண்டல்முடியாத தொன்றேயன்றி, இறைவனருள் காட்டு மியற்கைபூண்ட இம்மாநுஷ்யதேகபலமும் வியர்த்தமாகும். ஆகலின், மனிததேக மகத்துவத்தை யறிந்து அறிவினை விகஸிக்கச் செய்தால், அவ்வறிவின் பேரொளியாகிய பதியை அறிந்து கதியடைதல் கூடும்.

"ஊனக்கண்பாச முணரா துயிர்க்குயிரை
ஞானக்கண் ணாலுண்ணாடு."

சத்த, ஸ்பரிஸ, ரூப, ரஸ கந்தங்களாகிய தன்மாத்திரைகளின் வழியே மனஸை நிறுத்தாது வழிபட்டாலன்றிப் பரப்பிரமத்தையறிதல் கூடாது. இதனாலேதான் மேதாவியர்களின் மனம் கடவுளிடத்தன்றிப் பிறிதொரு பொருளிடத்துஞ் செல்லாது அடக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது. தியானஞ் செய்பவன் ஆன்மா, தியானஞ் செயப்படுவோர் கடவுளாகிய பதி, தியானத்தினாலே அடையும்பேறு ஆநந்தம். இவ்வுயர் நிலையை யடைதற்கு இப்பிறவியிலே இலகுவாகச் செய்யும் புறவழிபாட்டையும், அதுவே நெறியாக அகவழிபாட்டையும் இவற்றின் முதிர்ப்பானே சீவன் சிவனாதலையும் முறையே அறிக,

ஹிருதயஸ்தானத்திலே தீபவொளி யென்னவிளங்கும் சாத்துவிகஸ்படிகனாகிய ஆன்மாவைத் தத்துவங்களினின்றும் (நேதிகளைந்து) வேறு பிரித்து, சிவபெருமானுடைய திருவருளாகிய சத்தியினாலே ஞானத்தைப் பெருக்கி, அந்த ஞானவொளியினுள்ளே பிரகா

சிக்கும் சுத்த சிவவொளியை மலினமின்றித் துலங்கச்செய்து அந்த ஞானவொளி முதல்வராகிய சிவபெருமானின் றிவ்விய திருவடிப்பேறே ஞானத்தாலடையும் பெரும்பேறுகும்.

"விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவ லு மாமே."

இவ்வரிய பாசுரத்திலே "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்பதன் பொருள்தொனித் தலையும் அறிஞர்கள் சிந்திப்பார்களாக.

நிற்க, உபாஸகனாகிய ஆன்மா உள்பொருளா இல்பொருளா என்னில், ஆத்மா எப்பொழுது முள்ளதேயாமெனக. ஆனால் ஜீவாத்ம குணத்துள் எதையாவது தாம் பின்பற்றாது, தம்மையே இவ்வாத்மா சேர்ந்து உய்வடைந்து ஈடேறும்படி செய்பவரே கடவுள். அக்கடவுளையே பரமாத்மா என்று கூறப்படுகின்றது. பரமாத்மா என்ற நாமோச்சாரணமே ஜீவாத்மாவின் குறைவுபாட்டை வெளிப்படுத்துகின்றது. ஜீவாத்மா தேகத்தைவிட்டால் ஈசனையடைதல் கூடாது. ஆகலின், தேகத்தின் கட்படுத்தி வினைகளைச்செய்து வினைப்பயனின் மேம்பாடுபெற்றி அறிவின் றெளிவுகொண்ட இம் மானுஷ்ய சட்டையைப் பெறும்பொருட்டு, ஆன்மாவுக்கு அருட்சத்தியை அநட்டித்து நின்று ஆஜ்ஞைகொடுத்தருளியவர் பரமகருணாகரக்கடவுளே. அவரை மானுஷ்யர்கள் மனதினாலே சிந்தித்தலும், வாக்கினாலே வந்தித்தலும், காயத்தினாலே வணங்குதலும் என்ற இவைகளை ஏற்றபடி நாடோறுந் தவறாது செய்துவந்தால் மேற்கூறிய தியானாநந்தநிலை சுலபமாகக்கிட்டும். அந்நிலையே அரனிலையாகும். அதாவது இடா பிங்கலா நாடிகளை அடைத்துப் பிராணவாயுவைச் சுழுமுனா நாடியின் வழியே நிறுத்தவேண்டும். இப்படிச் சூரிய கலையோடு சந்திர கலையையும் அடக்கின்ற அவசரமே அநந்த வுயர்வுபெற்ற இடமாகும். இதனையே திராவிட நூலுள் "இராப்பக லற்றவிடத்தே யிருக்கை யெளிதல்லவே" என்று கூறப்பெற்றுள்ளமை காண்க.

வடமொழி நூலுள்ளும்,

நதிவெபூஜயெத்தேவம் ராத்ரௌநைவசநைவச
ஸப்ததம்பூஜயெத்தேவம் திவாராத்ரௌசவர்ஜயேத்.



இதன் கருத்து: சிவபெருமானைப் பகலினும் இரவினும் பூசை செய்யற்க. பகல் இரவு ஒழித்துச் சிவபெருமானை எப்பொழுதும் பூஜிக்க என்பதாம். இதுவே உண்மை நூல்களின் றுணிபு. சிவாகம வுணர்ச்சி யுடையார்க்கும் இது புலப்படும். (நீலகண்டபாஷியம் பார்க்க.)

இன்னும், மாசற்ற நெஞ்சர்களாகி மகா தொண்டர்களுடைய ஹிருதய கமலத்தினிடத்தே சுத்தமாகப் பிரகாசிக்கும் மேலான ஸ்தாணுவாகிய ஜோதிஸ்வரூபராகும் சிவபெருமானுக்கு உதயாஸ்தமயனங்களின்மையினாலே பகல் இரவு என்ற பேதத்தை உண்டாகக் காணாது நித்தமுஞ்செயற் பாலனவாய விரதாதிகளையும் விட்டுச் சதாநந்த பரிதர்களான விஞ்சையர்கள் பலருளர். இந்தப் பெருமையே பெருமை. இந்த உயர்ச்சியே உயர்ச்சி. தபத்தையாண்டு அவத்தையொழித்து நடப்பதற்கான பஞ்சாக்ஷர மஹாமந்திரப் பொருளாகிய இறைவனை இப்படியே உபாசித்து அடைவதே அறிவின் முறைமை. இந்தத்தேகமே சிவஸ்வரூபமாகும். ஒரு மானுஷ்யனைப் பார்த்தால் மேற்கதியே அவனிடத்துள்ளது. வடிவம் பிரணவமே. இவைகளைப் பிர்ம்மஞ்ஞானியேயறிவார். வாக்குமனாதீதமானபொருள் ஏடணை வழியானே யுழலும் ஏழைகளுக்கு அரியதேயாம். மோஹமற்றதே மோக்ஷம்.

"கரவி லுள்ளமாம் விசும்பிடைக்காசற விளக்கும்
பரசிலாச்சுடர்க் குதயமீறின்மை யாற்பகலு
மிரவுநேர்படக் கண்டிலரியன்று செய்நித்த
விரதமாதிநோன் பிழந்துறைவிஞ்சையர் பலரால்."

(திருவிளை: வாதவூரடிகள் உபதேசம், ௫௫.)

"அகலமா மாகாயத்தி னமர்ந்ததோர் ஞானதித்தன், விகலமா யுதியானத்த மேவிடான் சந்திதன்னை, பகலற வியற்றுமாற தெங்ஙனமென் றெண்றெண்ணி, முகில்சொரி நீத்தமின்றி முடித்தநீ சந்தியெல்லாம்" (தசகாரியம்)

எனைநா னென்பதறியேன் பகலிரவா வதுமறியேன், மனவாசகங்கடந்தா னெனைமத்தோன் மத்தனாக்கிச், சினமால் விடையுடையான் மன்னுதிருப் பெருந்துறையுறையும், பனவ னெனைச் செய்த படிறறியேன் பராஞ்சுடரே. (திருவாசகம்)

இனி, நித்திரையுற்றான் கைப்பொருளென்ன இயமநியமங்களொழியவேண்டும். நான் என்னும் அகங்காரத்தினால் நிரயப்பேறுண்டாகும். விரதாதிகளை அநுட்டித்து, நீங்கும் ஞான்றுஉணராது தானே நீங்கவிடுவது ஞானிகளிலக்ஷணம். இதனையே, "விரதமெலாம்மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்" என்றுதெய்வத் திருநெறித் தமிழ் வேத முடையாருந் திருவாய்மலர்ந்தருளினார். வாதாடும் வன்கண்ணர்க்கு வளர்மதியூட்டல் வள்ளலாகிய தியாகராஜப்பெருமான் றிருவருளின்பா லமைந்ததாகும்.

(உபசங்காரம்)

அன்பர்களே! இதுவரையினும் கூறிப்போந்தவற்றானே தியாகமாவது இது என்பதூஉம், தியாகிக்கப்படுபவர் இவர் என்பதூஉம், தியாகிப்போன் இவன் என்பதூஉம், தியாகப்பேறு ஆநந்தமே யென்பதூஉம், ஆநந்தத்தின்மேலே யாதுமின் றென்பதூஉம், இந்தவுண்மைகளை யுணர்ந்து சிவஞானசாதகமான தியாகத்தை வழுவறப் புரிந்து மோக்ஷம்பெறவேண்டி, வேண்டியன வேண்டுவோர்க்கீயும் விமலனையுபாசிக்கவேண்டும் என்பதூஉம், அங்ஙனம் உபாஸிப்பார்க்குங் கழுமுனாநாடி ஸ்தானமே உன்னத ஸ்தானமாகும் என்பதூஉம், இவற்றையேயாவரும் பெறப் பிரார்த்தித்தலாவஸியகமாகும் என்பதூஉம், சரியாபாதம் கிரியாபாதங்களிலுள்ள செயல்களைத் தவறாது செய்து வருதல்வேண்டும் என்பதூஉம் பிறவும் சுருக்கிவிளக்கப்பெற்றவாறுணர்க. அன்றி, தியாகாநந்தந் திகழுமிடம் எது என்பதற்கு இராப்பகலற்றவிடம் என்பது மறுமொழியாகச் சம்பூர்ணமடைதலையும் நோக்குக.

யாழ்ப்பாணம்: வ. மு. இரத்திநேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர் ஞானப்பிரகாச சபை,
புதுவாயல், இந்தியா.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவவழிபாடு.

ஐயினான் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடு
மையனார்க் காளாகி யன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள் பாதங்
கையினாற் றொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

சிவவழிபாடு—சிவனுக்குச் செய்யும் வழிபாடு என விரியும். சிவம்—நிரதிசய இன்பமாகிய மங்கலம். வழிபாடு—வணக்கம். அந்நிரதிசய இன்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பவனே சிவன் என்னும் பதிப்பொருள். நிரதிசய இன்ப மென்பதுவே மோக்ஷமாதலின் சிவன் எனற்கு மோக்ஷதாதா எனப்பொருள் கூறுவது மொன்று.

இனி இத்தகைய சிவனது தன்மைகள் யாவை? வழிபடற்பாலார் யாவர்? அவனுக்குச் செய்யும் வழிபாடுகள் யாவை? வழிபாட்டினால் அடையும் பலன் யாது? என ஆராய்வாம்.

சிவனது தன்மைகள்:—(1) ஏனைத்தேவராதியர் யாரும் பிறந்திறக்கு மியல்பினராதல் போல சிவபிரான் பிறத்தலும் இறத்தலுமில்லாத அநாதி நித்தியப் பொருளாதல். (2) எல்லாத்தேவருந் தன்னை வணங்கி வேண்டிய வேண்டியாங் கெய்தத் திருவருள் செய்து தான் வேறொருவரை வணங்கி நில்லாமை. (3) எல்லாத்தேவர் வலிமையும் தன்னுள்ளடங்குமாறு தான் வரம்பிலாற்றல் கொண்டமை. (4) தானே மோக்ஷதாதாவாதல். (5) பஞ்சகிருத்திய சுதந்தரமுடைமை என இவை முதற்பலவாம்.

(1) வேதாகம புராணேதிகாச வாயிலாக ஆராயுமிடத்துச் சகல தேவர்களும் பிறரும் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்தலும்

கேட்கப்படுகின்றன. சிவபிரான் அங்ஙனம் பிறந்ததாகவேனும் இறந்ததாக வேனும் யாண்டுங் கேட்கப் படவில்லை. இதனை

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ் சொல்லாற் றெளிந்தோஞ் சோமேசர்—இல்லிற் பிறந்தகதை யுங்கேளோம் பெருலகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங்கேட்டிலோம்" என்பதனானுமறிக.

(2) சகல தேவர்களும் ஒவ்வொரு வரங்களை வேண்டிக் காலந்தோறும் சிவபிரானைப் பூஜித்து அருள் பெற்றதாகக் கூறுஞ் சரிதங்கள் பலவுள்ளன. யாண்டாவது எக்காலத்தேனும் சிவபிரான் வேறொருவரைப் பூஜித்ததாக எந்த நூலுங் கூறக் கேட்டிலம். இக்கருத்தை

"இன்னுமுயர் பரசிவனை யிருதிணையி லுயிரனைத்து, மன்னும் வழி பாடியற்றி வயங்கியவைக் கறிகுறியா, யின்னுபல தலம்பொலியு மன்றி மினி ரனையபிரா, னுன்னியொருவரைப் பூசையு ஞற்றியது முண்டுகொலோ"

என்பதாற்காண்க.

(3) சிவபிரான் சர்வவியாபகம் சத்தியுறுதலும், ஏனையதேவர்கள் வலிமையெல்லாம் சிவபிரானுக்கு உரியனவாகக் கூறும் வேதங்கள், சிவன் என்னும் திருநாமத்தை சிவபிரான் ஒருவருக்கேயன்றி வேறு எத்தேவர்க்கேனும் கூறாமல் விட்டது இக்கருத்தை விளக்கியே

"சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான், அவனெனை யாட்கொண்டளித்திடு மாகி லவன்றனை யான், பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தா, லிவனெனைப் பன்னாளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"

எனத் தமிழ்வேதங் கூறுதலுணர்க. அன்றியும், வேதங்களின் மத்தியில் உயிர்நிலையாக விளங்குவதும் சிவ நாமமே யாம். அதாவது:—இருக்கு யசுர் சாமம் என வேதங்கள் மூன்று. அவற்றுள் நடுவாயது யசுர்வேதம். அது ஏழுகாண்டங்களையுடையது. அவற்றுள் நடுவில் சிவபிரான் திருநாமம் விளங்குவதாக அடியில்வரும் செய்யுளானறியலாம்.

மும்மறையி னடுமறையின் முனிவிலெழு காண்டத்திற், செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில், அம்மநடுச் சங்கிதையினடுவி னெழுத்தைப் பொம்மலுற வமர்மநுவின் பொருளா வானெவன் மைந்த.

(இன்னும்வரும்)

இந்துசாதனம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமய அருட்சி.

தொடர்ச்சி - பகுதி-௧. பக்கம் - ௨0.

இவர்களெல்லாம் இந்துக்களாகிய நாம் சமய வாயிலாகவன்றி லௌகிகத்திற்றானும் விருத்தியுறுவது கூடாதென்பதைச் சிந்திக்கின்றாரில்லை. ஏனையதேசங்கள் எல்லாம் லௌகிக நாடுகளேயாதலின் அங்குள்ளார் சமயசிந்தனையின்றி லௌகிகத்தின் விருத்தியுறுவது ஒருவாறு கூடும். புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே வந்து ஜென்மிக்கும் பாக்கியம் படைத்தவர்கள் சமயத்துறையாலன்றி யாதொரு விருத்தியும் பெறுவது ஒரு சிறிதும் கூடாது. மானுடர் மாத்திரமல்ல, விலங்கினங்கள் தாமும் தத்தமது இயற்கை முறையையனுசரித்தே விருத்தியுறுதல் வேண்டும். பரதகண்ட வாசிகளாகிய இந்துக்களது இயற்கைத் தருமமே சமய நாட்டமுடையதாய் இருக்கும்போது, அந்நாட்டத்தைப்புறந்தந்து இவர்கள் விருத்தியுறமாறு சிறிதும் வாய்க்கமாட்டாதென்னும் இந்த உண்மையைக் காணவொட்டாது நமது நாட்டாருட்பலரை மேலைத்தேசாபிமானம் கிரகணித்துவிட்டது. ஆன்மார்த்தத்திலே கருத்தில்லாமல், லௌகிகத்திற்றானே தமது கருத்து முழுவதையும் செலுத்துவதுண்டெனில், மேலைத்தேசவாசிகள் தாமும் அவலமுற்றழிய வேண்டிவரும் என்பது இப்போது அத்தேசத்திலே நிகழும் "பாரத" யுத்தத்திலிருந்து நாம்தெளிவுற விளங்கிக் கொள்ளலாம். எமது பரதகண்டத்திலே துவாபரயுகத்தில் நடந்த யுத்தத்தைப் பாரதயுத்தமென்பார். அது பாரை அதஞ்செய்ததில்லை. இப்போது நிகழும் யுத்தமே பாரை அதம் செய்வதாகலின் இதனையே "பாரத" யுத்தமெனத் தகும். மேலைத்தேசத்திலே

கடவுட் பத்தியும் சமய சிந்தனையும் இல்லாமைபற்றியே இந்த யுத்தம் நிகழ்வதாயிற்றென்பது மானுடதர்மத்தை நுணுகி ஆராய்வார்க்கெல்லாம் இனிது புலப்படும். இதுவே மேலைத்தேசத்தின் லௌகிகவிருத்தியால்விளைந்தவிளைவு. இந்த விளைவையே பரதகண்டவாசிகள் தாமும் பெறுதல்வேண்டுமென்று பெருமோகங்கொண்டு, தமக்குப் பிதிரார்ச்சிதமாகக் கிடைத்த சமய நாட்டத்தைப் பரித்தியாகஞ் செய்துவிடப் பார்க்கிறார்கள். எவ்வெவரும் உத்தமமது சமயத்தின் வழி ஒழுகிக் கடவுட்பத்தி செய்தாலன்றி, அவர்கள் லௌகிகங்களிற்றானும் உண்மையான விருத்தியுறுதல் கூடாதென்பதையும், ஏனைத் தேசத்தவர்கள் அவ்விருத்தியை ஒருசிறிது படைத்தாலும்; புண்ணியபூமியாகிய இப் பரதகண்டவாசிகள் சமயபத்தி யுடையராய்ச் சமயாசாரத்தைப் பாதுகாத்தன்றி ஒரு சற்றும் விருத்தியுறுவது கூடாதென்பதையும், இவர்கள்எல்லாம் சமயப்பற்றை இழந்து லௌகிகத்திற்றமது கருத்து முழுதையும் செலுத்தினதுபற்றியே முன்னொருகாலத்தில் தமது மேன்மைகளை எல்லாம் இழக்கும்குடியாயிற் றென்பதையும் நம்மவர்கள் ஒருபோதும் மறக்கலாகாது. இந்த உண்மையை நமது தேசத்திலே எல்லாச்சனங்களதுமனதிலும் அழுத்தமுறுமாறு செய்யவேண்டியது. சமயவிஷயத்திற் சிரத்தைகொண்டிருக்கும் இந்த மகாசமாஜத்தார் அனைவர்க்கும் பொருத்தகடனும்.

இங்ஙனம்,

S. சபாரத்தின முதலியார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1916
MADRAS.

உ

சிவமயம்.

திருசிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916ஆு மார்ச்சுமீ [பகுதி ௩.

## தைத்திரீயோபநிஷத்து.

### சீக்ஷாவல்லி

முதலத்தியாயம், முதலநுவாகம்.

எங்களுக்கு மித்திரனும் (சூரியன்) வருணனும், அரியமாவும் (சூரியன்) இந்திரனும், பிரகஸ்பதியும் மகத்தான பாதங்களையுடைய விஷ்ணுவும் எங்கட்குச் சுகத்தைக் கொடுக்கட்டும். *

உ, பிரமத்திற்கு நமஸ்காரம், வாயுவேயுமக்கு நமஸ்காரம், நீரே பிரத்தியக்ஷமான பிரமமென்று சொல்லுவேன், தர்மத்தைச்சொல்லு

* பிராண விருத்திக்கும் பகலுக்கு மபிமானதேவதையாகிய மித்திரனையும், அபானவிருத்திக்கு மிரவுக்கு மபிமானதேவதையாகிய வருணனையும், சட்சுவுக்கும் சூரியமண்டலத்திற்கு மபிமானதேவதையாகிய அர்யமாவையும், பலாபிமானியான இந்திரனையும், வாக்குக்கும் புத்திக்கு மபிமானியான பிரகஸ்பதியையும், பாதங்கட்கு அபிமான தேவதையாகிய விஷ்ணுவையும் சிஷ்யனொருவன் தனக்கும் தனதுகுருவிற்கும் சுகங்கொடுக்கும்படி பிரார்த்திக்கொண்ட ஆத்தியாத்மிகதேவர்கள் வணக்கம்.

வேன், சத்தியத்தைச் சொல்லுவேன், அஃதென்னை யிரட்சிக்கட்டும், அது வக்தாவை யிரட்சிக்கட்டும்.†

## உ-வது அநுவாகம்.

எழுத்து, சுவரம், மாத்திரை, பலம், சமதை, சேர்க்கை (இவை யறிய வேண்டும்.‡

## ௩-வது அநுவாகம்.

யசஸ்ஸானது குரு சிஷ்யர்களான வெங்கட் குண்டாவதாக, பிரம்மதேஜஸ் எங்கட்குண்டாவதாக.

லோகம், ஜோதிஸ், வித்தை, பிரஜை, சரீரம் இவ்வைந்தும் மகா சம்மிதா உபாசனைகள். லோகம் பூர்வவர்ணம், சுவர்க்கம் உத்தரவர்ணம், ஆகாயம் சந்தி, வாயுசேர்க்குங்கருவி இது பிருதிவியுபாசனை. ஜோதிபூர்வரூபம், சூரியன் உத்திரரூபம், ஜலம் சந்தி, மின்னல் சேர்க்குங்கருவி இது ஜோதியுபாசனை, குரு உத்திரரூபம், சிஷ்யன் பூர்வரூபம், வித்தைசந்தி, பிரச்னோத்ரபாஷனை சேர்க்குங்கருவி இது வித்தையுபாசனை, தாயார் பூர்வரூபம், பிதாஉத்ரரூபம், சந்தானம் சந்தி, பிரஜைகளை உற்பத்தி செய்தல் சேர்க்குங்கருவி. இது பிரஜையுபாசனை. கீழ் முகவாய்க்கட்டை பூர்வரூபம், மேல் முகவாய்க்கட்டை உத்தரரூபம், வாக்குசந்தி, நாக்குசேர்க்குங்கருவி இது சரீரவுபாசனை.

எவனிந்த மகாசம்மிதைகளை அறிகிறானோ (அவன்) பிரஜையுடனும், பசுக்களுடனும் பிரம்மவர்ச்சஸுடனும், சுவர்க்கலோகத்துடனும் சேருகிறான்.

## ௪-வது அநுவாகம்

## ஜபப்பிரார்த்தனை.

வேதங்களுக்குள் சிரேஷ்டமாகவும், சர்வரூபமாகவு மிருக்கிற எந்தப்பிரணவம் அமிருதங்களான வேதங்களினின்றும், உண்டா

---

† வாயு (பிராணன்) பிரமமாகவிட்டாலும், சரீரத்திற்கு இன்றியமையாததாகப்பிராணனிருத்தலின் அவ்வாயுவைப் பிரம்மமாகவுபசரித்துக் கூறப்பட்டது.

‡ உபாசகன் பிரம்மத்தைத் தோத்தரிக்கும்போது உச்சாரலட்சணம் தெரியவேண்டுவது அவசியமாகலின் இவையறியவேண்டுவதாயிற்று.



யிற்றோ, அந்தப்பிரணவ வாச்சியமான இந்திரன் (பரமேஸ்வரன்) ஞானத்தால் சந்தோஷத்தைக் கொடுக்கட்டும், தேவனே! அமுர்தத்தை (மோட்சத்தை) தரிக்கிறவனாக வாகிவிடுகிறேன்.

## சரீரப்பிரார்த்தனை.

என்னுடைய சரீரமானது சாமர்த்தியமுள்ளதாகுக, என்னுடைய நாக்கானது அமுர்தமாகுக, இரண்டுகாதுகள் மிகவும் கேட்பதாகுக, (பிரணவமே) பிரமத்திற்குக்கோசமாக (ஸ்நானமாக) விருக்கிறாய், இலௌகிகர்களுடைய யுத்தியால் மூடப்பட்டவனாக விருக்கிறாய், என்னுடைய சிரவணத்தாலுண்டானதைக் காப்பாற்றுக.

## தனத்துக்காகப்பிரார்த்தனை.

பிரணவசொரூப பரமேஸ்வரனே! பிரஞ்ஞையைக் கொடுத்த பிறகு எனக்கு வஸ்திரங்களையும், பசுக்களையும், அன்னபானங்களையும், எப்போதும் கொடுத்துக்கொண்டும், விர்த்தி செய்துகொண்டும் வித்தியார்த்தியான வெனக்கு வெகுகாலம், நாசத்தை யடையாமலிருக்கும்படி செய்துகொண்டும், ஆடு முதலியவைகளுடன் ஐசுவரியத்தை எனக்கு நான்குதிசையினின்றும் கொண்டு வாரும் சுவாஹா.

## சிஷ்யர்களையடைய பிரார்த்தனை.

பிரம்ம பக்தர்கள் என்னை யுத்தேசித்து வரட்டும் சுவாஹா.

## கீர்த்திகளையடைய பிரார்த்தனை.

ஜனங்களுக்குள் யசஸையுடையவனாக வாகிறேன், சுவாஹா, மிகவும் செல்வவந்தர்களுக்குள் சிரேஷ்டனாக வாகிறேன்.

## ஈசுவரபிரார்த்தனை.

பகவ (பிரணவமே) அந்தப்பிரம்மத்திற்குக் கோசமானவுன்னிற் பிரவேசிக்கிறேன், சுவாமியே என்னிற்பிரவேசியும், நான் ஆயிரம் பேதமுள்ள உம்மிடத்தில் பாபகாரியங்களைப் பரிசுத்தம் செய்கிறேன்.

## அநேக சிஷ்யர்களுக்காகப் பிரார்த்தனை.

எங்ஙனம் நீரானது பள்ளமான பிரதேசத்தை நோக்கிப்போகின்றதோ, எங்ஙனம் மாதங்கள் வருடங்களை யடைகின்றனவோ, அந்

தப்பிரகாரம் பிரணவமே! சர்வதிக்குகளினின்றும் (வித்தியார்த்திகள்) என்னை யடையட்டும் சுவாஹா.

### தேஜசுக்கும் சாந்திக்கும் பிரார்த்தனை.

சமீபகிரகமாயிருக்கிறீர், என்னைக் குறித்து உம்முடையசொரூபத்தைப் பிரகாசம் செய்யும், என்னை உம்மையடையும்படி செய்யும்.

### ரு-வது அநுவாகம்.

### மூன்றுவியாஹிருதிகள்.

பூ:, புவா:, சுவா: எனும் பிரசித்தமான இந்த மூன்று வியாஹிருதிகள் உள, †

மஹா: என்பது நான்காவது வியாஹிருதி, இது மஹா சமஸியின் புத்திரன் சொன்னான், இது பிரம்மசொரூபம், இப்பிரம்மதிற்கு இதரவியாஹிருதி தேவதைகள் அங்கங்கள்.

### வியாகிருதிகளை லோங்களாகத் தியானித்தல்.

பூ: என்பது பிரசித்தமான இந்தலோகம், புவா: என்பது அந்தரிட்சலோகம், சுவா: என்பது சுவர்கலோகம், மஹா: என்பது சூரியன். சமஸ்தமான பிரசித்தலோகங்கள் சூரியனால் சிலாக்கியமாகின்றன.

### வியாகிருதிகளைத் தேவதைகளாகத் தியானித்தல்.

பூ: வன்பது அக்கினி, புவா: என்பது வாயு, சுவா:என்பது சூரியன், மகா: என்பது சந்திரன். சந்திரனலெல்லா ஜோதிகளும் மகிமையையடைகின்றன.

### வியாகிருதிகளை வேதங்களாகத் தியானித்தல்

பூ: என்பதுருக்வேதம், புவா: சாமவேதம், சுவா: என்பதுயஜுர்வேதம், மகா: பிரணவம் பிரணவத்தினல் சர்வவேதங்களு மகிமையடைகின்றன.

### வியாகிருதிகளைப் பிராணன்களாகத் தியானித்தல்.

பூ: என்பது பிராணவாயு, புவா: அபானவாயு, சுவா: வியானவாயு

† வியாஹரணமென்றால் உச்சாரணம், அக்கினிகோத்திரம் முதலியகர்மங்களில் இம்மந்திரங்கள் உச்சரிக்கப்படுவதினல் அவைவியாஹிருதி என்று சொல்லப்படும்.



மகா: என்பது அன்னம். அன்னத்திலே சகலபிராணிகளும் மகிமையையடைகின்றன.

இவையே நங்நான்கு வியாஹ்ருதிகள், இவைகளை யறிந்தவன் பிரமத்தை யறிந்தவன், சுவராச்சியத்தை யறிந்தவன், இத்தகைமை வாய்ந்தவனுக்குத் தேவர்கள் பலிகப்பம் கொண்டுவந்து படைப்பர்.

### சு-வது அநுவாகம்.

### இருதயத்தில் உபாசனை.

இருதயமத்தியில் பிரசித்தமான எந்தவாகாசமோ அதில் மனதைப் பிரதானமாகவுடையவனாய் மரணமற்றும் பிரகாசமாயுமிருக்கிற ஜோதிமயமான புருஷனிருக்கிறான்.

### பிரமத்தையடையுமார்க்கம்.

இம்மாமிச பிண்டம் உள்வாய்க்கு மத்தியில், கன்றுக்குட்டியின் முலைக்காம்புபோலத் தொகுங்கிற விடத்தில், இக்கேச மூலமானது இருக்கிறது இந்திரனுடைய வுற்பத்திஸ்தானம்.

### உபாசனையின் பலன்,

பூ: என்கிற அக்கினியிலும், புவா: என்கிற வாயுவிலும், சுவா: என்கிற சூரியனிலும், மஹா: என்கிற பிரம்மத்திலுமிருக்கிறான். தானேயரசனென்கிற பாவத்தையடைகிறான், மனதின் பதியையடைகிறான், வாக்குக்கும், நேத்திரத்திற்கும், சுரோத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் பிரபு ஆகின்றான். ஆகாசத்தைச் சரீரமாகவுடைய சத்தியரூபமான பிராணனையும் மனதையும் சந்தோஷமாகவுடைய சாந்தியுடன் விசேஷமாகக் கூடியும் மரணமற்று மிருக்கிற பிரம்மமாகிறான்.

### பிரம்மோபாசனை விதி

இவ்விதமாகப் பிராசீன யோக்கியனே உபாசிப்பாயாக

(இன்னுவரும்,)

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# செல்வம்.

தொகுதி 4. பக்கம் 37. தொடர்ச்சி.

இனியருட் செல்வமாவது மரமும் காட்பும், மணியும் ஒளியும் போலச்சிவபெருமானோடு அபேதமாயிருக்கும் ஞானமேயாம். அதுவே அருள் என்றும் சத்தியென்றுங் கூறப்படும். அதனை "அருளது சத்தியாகும், சத்தி தன்வடிவேது என்னில் தடையிலா ஞானமாகும்" என்பதனால் உணர்க. இந்த அருட்செல்வம் மேலேகூறிய செல்வங்கள்போல இலகுவாய்ப் பெறக்கூடிய தன்று. இது அநேக கோடி ஜென்மங்களில் செய்து வந்த சரியை, கிரியையாதிய சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே சிவபெருமான் திருவருள் உபகரிக்கும் மெய்யன்பு வாயிலாக அடையப்படுவதொரு அரும்பெரும் விசேட அழியாச் செல்வமேயாம். திருஞானசம்பந்தப் பிள்ளையார் முதலிய சைவ சமயகுரவர்கள் நால்வரும் முறையே மூன்றும் வயது முதலிய பருவங்களில் அவ்வருளை இம்மைக்கண் காலவேறுபாட்டால் பெற்றமையும் பிறவிதோறும் செய்த சிவபுண்ணிய மேலீட்டின் படிமுறையாற் பெற்றமையை விளக்குதற்குப் போதிய சான்றும். இன்னும் சிவஞான போதத்து எட்டாஞ்சூத்திரத்து முதலதிகரணத்தில் "ஆளுடைய பிள்ளையார் முதலிய நாயன்மார்க்கு தவம் இன்றியும் ஞானம் நிகழ்ந்ததாலோ என்னும் ஆசங்கையை நீக்குதற்கும், படிமுறையின் அன்றி இவ்வொருபிறப்பிற் செய்த தவம் தானேயமையாதென்பதனை யுணர்த்துதற்கும், முற்செய்தவம் எனவிசேடித்தார்," என்று கூறியிருப்பதூஉம் யாம்கூறிய படிமுறை உண்மையை இனிது வலியுறுத்தும். இன்னும் திருத்தொண்டர் புராணத்துக் கூறப்படும் ஏனை அடியவர்கள் சரித்திரங்களாலும் அது நன்குவிளங்கும். இத்தனை அரிதிற் பெறற்பாலதாகிய அச்சிவபெருமான் திருவருட் செல்வமொன்றே, "அருள்வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி" யென குமரகுரு



பர சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் உலகர்க்கும் சத்தினிபாதர்க்கும் பயன்படுதற்கண் முறையே பொதுவும் சிறப்புமெனப் பெயர்பெற்று அவத்தைவேறுபாட்டால் இரண்டெனப்படினும் அத்திருவருட் செல்வமொன்றே ஆன்மாக்களுக்கு மும்மலங்களையுந் தொழிற்படுத்திபாகம்வருவித்தற்பொருட்டுத்திரோதானசத்தியெனப் பெயர்பெற்று நிற்றல்போல ஒன்றேயாம். அவ்விருதிறப் பகுப்பையும் நாமெல்லாம் செவ்விதின் உணர்ந்து உண்மைக் கடைப்பிடித்து உய்வதற்கன்றே முதல்நூல்களும் பொதுவும் சிறப்புமென அவ்வாறு வேறு இருவகைத்தாய் இரண்டு அருளினாலும் இயற்றப்பட்டனவென்க. இத்திருவருளே எவ்வகைத் துன்பங்களையும் ஒழிப்பதும், மனிதப்பிறப்பால் அடையவேண்டிய பெரும்பேற்றினை அளிப்பதும், பிறப்பை அறவே ஒழிப்பதும், நித்தியானந்தப் பெருவாழ்வைக் கொடுப்பதுமாம். நமது சமயஞானசாரியர்கள் அனுபவித்ததும் அனுபவிக்கின்றதும் இச்செல்வமே. மற்றை நாயன்மார்கள் அனுபவித்ததும் அனுபவிக்கின்றதும் இச்செல்வமே, ஞானதானவள்ளல்களாகிய மெய்கண்டசிவம் முதலிய சந்தானகுரவர்கள் அனுபவித்ததும் அனுபவிக்கின்றதும் இச்செல்வமே, தவராஜ சிங்கமாகிய பட்டினத்தடிகள் அனுபவித்ததும் அனுபவிக்கின்றதும் இச்செல்வமே. இங்ஙனமிருத்தலான் இச்செல்வத்தின் பெருமை யார்தாம் சொல்ல வல்லுநர். ஆகலான் இப்பெருஞ்செல்வத்தைநோக்க முற்கூறிய விரு செல்வங்களும் இதனைப்பெறுதற்கு காரணமாதல் மாத்திரையினால் ஒருபிரகாரம் ஒன்றற்கொன்று சிறந்து உபகாரப்படும் அத்துணையேயன்றி அவ்வருட்செல்வம்போல முக்கிய பொருள்களாகமாட்டா, எவ்வாறெனின்.

"இன்னல்தரும் பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே—யன்னது
அழிந்தாலும் துன்பமே அந்தோ பிறர்பால்
இழந்தாலும் துன்பமே யாம்.—என்றபடி யிவ்வேதுக்களால்

துன்பம் தருதலானும், தாயத்தார், பகைவர், கள்வர் என்றின்னோரால் கவரப்பட்டும், வெள்ளத்தானும் அக்கினியினானும் அள்ளப்பட்டும் உண்ணப்பட்டும் அழிந்து போதலினாலும், பிறர்க்குக் கொடுக்குந்தோறும் குறைந்து போதலினாலும், "காதற்றவூசியும் வாராது காண் கடைவழிக்கே" என்றபடி கடைமுறையில் நம்மோடு தொடர்ந்து வாராமையானும், "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர், நடை

மெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்" என்றும் "ஆறிடு மேடு மடுவும் போலாம் செல்வம்" எனவும் ஆன்றோர் கூறியிருத்தலினாலும், "ஆசைக்கோ ரளவில்லை அகிலமெலாம்கட்டி யாளினும் கடல் மீதிலே தமதாணை செலவே நினைவார்" என்றபடி குபேரனைப் போலும் பெருஞ் சம்பத்துப் பெறினும் அவா அடங்கப்பெறாது மேலுமேலும் அவாவை யுண்டாக்கி பெருந்துன்பத்திற்கு இடஞ் செய்தலானும், அக்கருத்துப் பற்றியே

"புள்ளிய தோலாடை புனைந்து அரவப்பூணணிந்த
வெள்ளிய செங்கண் விடையான் அடிக்கமலம்
உள்ளிய மெய்யன்பர் அறுவறுத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினாய் என்செய்தாய்"

என முனிபுங்கவராகிய துர்வாச முனிவர் அருளிச் செய்தமையானும், கல்வியை நோக்கப் பொருட்செல்வம் மிகவும் தாழ்ந்தது என்பது பெற்றாம். இக்கருத்தினாலேயே

மன்னனும் மாசறக்கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்
மன்னனுக்குத் தன்தேசமில்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

என்று ஆன்றோர் அருளிச் செய்தார்.

இனி, கல்விச்செல்வமோ, "வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த வித்தையென் முத்திதருமோ" எனத்தாயுமானப் பெருஞ் செல்வர் கூறியவண்ணம் கல்வியிருதிறப்பட்டுக் கிடத்தல் காணப்படுதலால் அவற்றுள் ஒன்றாகிய உலகரை மயக்குதற்கு ஏதுவாகியகல்வி ஒருசிறிதும் பயனில்லை என்பது சொல்லாமே யமையும். அதுபற்றியே "மருட்டிவிட வகைவந்த வித்தையென் முத்திருமோ" என்னும் செய்யுள் முதலில் "கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றுமறிவில்லாத என்கர்மத்தை என்சொல்லுகேன்" என்றற்றொடக்கத்தனவாகச் சுவாமிகள் அருளிச்செய்ததூஉம் என்க.

(இன்னும்வரும்)

W. T. கோவிந்தராஜ முதலியார்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# மெய்ம்மொழிவிளக்கம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அஃகறிவாய பசுபாச வறிவினைத்து நிகழ்தற்குரிய வாயிலாய மனவாக்குகளான் முறையேயுணர்தற்கும், உரைத்தற்குமுரிய குணங்குறிகளின்றி அனுபூதி யறிவொன்றான் அறிதற்குரிய சிவசத்தாயுள்ளவன், குறைந்தகலையை யுடையதிங்களையும், நிறைந்த நீரையுடைய கங்கையையுந் தரித்தருளிய திருவேணியுடையவன், ஒருழியன்றி யெங்கும் வியாபகமாதற் கேதுவாய சத்தியுடையவன், திருவம்பலத்துள் நின்றாடியருளுவோன், இவ்வியல்புடைய முதல்வனது செங்கமலமலர் போல விரிந்துவிளங்கிய சிலம்பணிந்த திருவடிகளை யாம் வாழ்த்தி வணங்குவாம் என்றவாறு.

இது வணங்கி வாழ்த்தி மதிப்பரும்பொருளை வணங்கி வாழ்த்தி மதித்தவாறு.

அநாதிபோத வறிவுருவாய பரம்பொருள், யாதினும் விரவாது தன்னியல்பின் நிற்குங்கால், சிவமெனும் பெயர்த்தென்பது தோற்றியருளுவார், உலகெலாமுணர்ந் தோதற்கரியவன் எனவும், பின் அநாதி பாசவறிவுருவாய அவையே தானாய பொதுவியல்பின் நிற்குங்கால் தாதான்மிய சத்தியென்னும் பெயர்த்தென்பது தோற்றியருளுவார் அலகில் சோதிய னெனவும், அதன்பின் அவைதா மைந்தொழிலுற்று

நிகழுங்கால், அவற்றை நடாத்தற்கண் தலைவனென்னும் பெயர்த்தென்பது தேற்றியருளுவார், நிலவுலாவிய நீர்மலிவேணியன் அம்பலத்தாடுவா னெனவும், அம்முறையாற் பகுத்துவைத் துபதேசித்தருளினார்.

இதனானே மனவாக்குகளானேதி யுணரப்படாத அதீதநிலையனாயினும், அவற்றின்மேல் நின் றுணரமாட்டாவாய் அவற்றைச் சார்ந்து நின்றவுயிர் அவற்றானுந் தெளிந்தறிந்து எளிதின்வழிபட்டுய்தற்குரிய உருவடியுடையனா யருளும்பெருங்கருணை யுடையனாய வம்முதல்வனை யாமுயலு மிந்நூல் முற்று மாற்றான் முற்று மாறுவேண்டுங் கோண்முறை பற்றிவேண்டிக் கோடலென்கடனும், அதனை யவ்வாறு முற்றுமாற்றான் முற்றுமாறு செய்தலவன்கடனு மென்பதூஉம் போந்தவாறு காண்க.

உலகென்பது பலபொருளொரு சொல்லாகலின் ஈண்டு இரட்டுறமொழிந்துகொண் டுரைக்கப்பட்டது. பசுவறிவு, பாசவறிவு இரண்டுந் தம்முளொன் றனை யொன்று இன்றியமையாவென்பது பற்றி இங்ஙனம் அவற்றிற்குப் பொதுவாய் நின்றதொரு சொல்லான் வைத்தோதியருளினர். அங்ஙன முடைமையின் உயிர்த்தொழிலே முன் வைத்தருளினரென்பது. உணர்ந் தோதற் கரியவ னென்புழி உணர்ந்து ஓதற்கென்னுஞ் செய்தெ னெச்சமிரண்டும், பயந்து காத்தழிக்குமென்றாற்போல நின்றன. உணர்த்தற்கு மோதற்குமுரிய கருவிகள் ஆவாய் நிலையான் வந்தன.

ஈண்டு அருமை இன்மை குறித்துத் தழுவப்படும் பொருண்மேல் நின்றது, எலாமென எழுத்தஃகு சொல்லான் வைத்தோதியது அவைகுறையறிவின் பாலவென்பது சொன்னிலை யானுந்தேற்றற்குப் போலும், பாசவறிவென வொன்றாய்க் காட்சி, கருதல் உரையென மூன்றாய் நாதமீறாய் பலவேறாய் விரியுமெவையுமடங்க எல்லாமென் வைத்தோதப்பட்டது. உயிருணர்வொன்றாயினும் பலவேறாய் நிகழ்தல் பலவேறு வகைப்பட்ட வியஞ்சக வேற்றுமை பற்றியாகலின், அதனையவற்றிற்காதாரமாய வதன்பின்வைத்தோதப்பட்டது. காணப்படாத முதல்வ னுண்மையு முணர்த்துமாறு நோக்கிக் காணப்பட்ட உலகசத்தம் முன்னெடுத்துக் கொள்ளப்பட்டது. அரியவனென்பது உணர்தல் ஓதல் இரண்டனோடுந்தனித்தனி சென்றியையும். குறைமதி நிறைமதியாய் நீண்டதென்பது சொல்லியல் பானுந்தேற்றியருளுவார்



உலாவியவென நீட்டல் விகாரம் படவோதினார். உலவுதல், குறைதல், கலை யென்பது கூறுமேயமையும், உலவிய நிலவெனவியையும், பிறைமதியென் றவாறு. மலி நீரென்பதுமது, அஃதீண்டன்மொழித்தொகையாய்க் கங்கையை யுணர்த்திநின்றது, அலகிலென் றுங் குறிப்பெச்சவீறுகெட்டு நின்றது. நிகழ்தல், தரித்தல், அணிதல் மூன்றுஞ்சொல்லெச்சம். மலரடி யென்புழி யுவமையுருபு தொக்கு நின்றது. இனியடிமலரென வுருவகமாக வைத்துரைப்பினு மமையும். அடியென்பதனோடு மலர்சிலம்பிரண்டுந் தனித்தனி சென்றியையும்.

அற்றேலுணர்ந்தோதற் குரிய பொருளா னெமக்கு ஆகக்கடவது ஒன்றின்று போலுமென வழிபாட்டின் மனவெழிச்சிசெல்லாது மடங்குவாரை நோக்கி, அங்ஙனமடங்காது மனவெழுச்சி செல்வித்தற்பொருட்டு அங்ஙனமாயினும் உயிர் படி முறையின் வைத்து எளிதின் வழிபட்டுய்தற்கேற்ற வுருவடிவுடையனாயும் வைகுகின்றனனென்பது தேற்றியருளுதற்கு வேணியனென வடையாளங்காட்டி யதனடுக்க வைத்தோதினார். ஓதினாராயினும் பொருண்முறைக்கேற்ப அரியவன் சோதியன் வேணியன் ஆடுவானென்பதே ஆசிரியர் கருத்தென் றுணரற்பாற்று. முறையே சிறிதும் பெறிதும் புலனாகாமையின் அருவ அருவுருவங்களை யோதாராய் புலனாதற்குரிய உருவொன்றனையே யோதினார் எவருமெளிதினேன்று கோடற்பயனோக்கி. இனியுருக்கூறவே பொருளான் வேறுபடாத வேனையவும் பெறப்படும்.

உலகின்கட்டலையாய வியல்புடையராயினர் குறைகூறுவார்க்கும் முறைகூறுவார்க்கும் எளியசெவ்வியராய் வைகிப்பாலித்தற் கடமையுடையராக வேண்டுமென்பது, தான்வைகிக் காட்டாக்கால் காண்பாரின்மையின் அவ்வாறு வைகிக்காட்டும் பேரிறைவனென்பது தேற்றியருளுவார் அங்ஙனம் விசேடித்தாரென்பது திரோதசத்தியோடியைந்து நின்றுணர்த்தற்கண் ணிகழும் அதிருக்குமவைந்தொழில் ஒருவன் தானதனுட்கரந்து பிறரொருவன் வேடங்கொண்டு ஆடுமாறு போறலின் ஆடலெனப்பட்டது. இதற்கிதுவே சிறந்தபொருளென்

பது அந்தமிலா, வளவில் சோதியாய் ஞானமூர்த்தியாய் ஆடுமெனவும் இறைவனோங்கொளியாய் ஞானமூர்த்தியாய் நிருத்தஞ்செய்யுமெனவும் நூலாசிரியரிருவரும் வழிபடுங்காலிதனையே வழிமொழிந்து கொண்டு வழிபட்டமையானுமறிக.

இனி யுலகெலா முணர்ந்தோதற் கரியவனென்பதனைக் காட்டியுபகரித்தற்கட்படு மியல்புபற்றி யோதியதெனக்கொண்டு உயிர்கள் தாமறிய வேண்டுவன வனைத்தையுந் தன்னுணர்ந்து நின்றும் அவ்வாறுணர்த்தி யுபகரிக்குந்தன்மை யுணர்தலரியனாய்க்கடந்து நிற்பனென வுரைத்தலுமொன்று. இப்பொருட்கு எல்லாவற்றையு மென்னுஞ்சாரியையுருபு உம்மைகளும் உணர்ந்துமென்னு மும்மையும் ஓர்தலென்புழி ரகரமெய்யும் விகாரத்தாற் றொக்கன.

இந்தனத்தி லெரிபோலத் தோன்றாது நிற்றல்பற்றி யோர்தற் கரிய னென்றார். எனவே அஃதோரவல்ல குரவர்க்கு எளியனாகலான். அவனருளானுக்குமிந்நூல் அருள்நூலாமென்பது.

இங்ஙனமன்றி யுரைப்பன வெல்லாம் போலியென்பது மொழிதற்குமுறையானும் ஆகமாந்தப் பொருளொருமை போதித்தற்கெழுந்தநூல் முதலியவற்றானு மறிந்துகொள்க பிறவுமன்ன.

வி. குஞ்சிதபாதம் பிள்ளை,
வீரசோழகன்
சிவஞானத்திருத்தளி
ஸ்ரீ சிதம்பரம்

## நீ. கி. அ.

"தம்முடைய கைப்பொருளைச் செலவிட்டாவது அயலாருக்கு ஓர் பெரிதான லாபத்தை வரச்செய்யும் குணமுள்ளவர்கள் தான் உத்தம புருஷர்கள்; தம்முடைய பொருளுக்கு ஒரு கெடுதலும் வாராமல் அயலாருக்கு லாபம்வரச் செய்கிறவர்கள் சாதாரணமானவர்கள்; தம்முடைய திரவியத்தை விருத்திசெய்வதற்காக அயலாருக்கு வரும் ஓர் லாபத்தைக் கெடுக்கிறவர்கள்தான் மனிதராகப் பிறந்த ராக்ஷதராவார்கள்; ஆனால், அகாரணமாகவும், நிஷ்பிரயோஜனமாகவும், அயலாருக்குக் கெடுதி செய்கிறவர்களை இன்னவிதமான மனிதரென்று நமக்குச் சொல்லத் தெரியவில்லை."

உ
சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதிபுண்ணியம்.

நம் சைவசித்தாந்தமானது எவ்வாறு, பதி, பசு பாசம் என மூன்று விதமாக விளங்குவதோ அதுபோலவே இப்புண்ணியமும் மூவகைத்தாக உளது. அம்மூவகையாவன பதிபுண்ணியம் பசு புண்ணியம், பாசபுண்ணியம் என்பனவாம். இவை முறையே உத்தமம், மத்திபம் அதமம் என்று செல்லப்படும்.

முதலாவது கடைசியாகிய பாசபுண்ணியத்தைச் சிறிது புகலுவோம். மனைவி, புத்திரர், உடன் பிறந்தார் இன்னம் மற்றுமுண்டான சுற்றத்தாரைக் குறித்துத் திரிகரணங்களாலும் அருத்தத்தாலும் செய்யும்படியான விஷயங்களைத்தும் பாசபுண்ணியமென்று சொல்லப்படும்.

இவை மூவகையாகச் செய்யப்படும், அவையாவன, மனைவி முதலானவர்களுக்கு மேலும் மேலும் ஆகவேண்டிய நற்காரியங்களை நினைத்தலும், அவர்களுக்கு எவ்விடத்திலும் துக்கம் வாராவண்ணம் யோசித்தலே மனத்தின் காரியமாம்.

அவர்களிடத்தில் இனிய சொற்கூறல தன்னாலாகாத காரியங்களையும் பிறரிடம் சொல்லி அவருக்கு முடிப்பித்தல் முதலான விஷயங்கலெல்லாம் வாக்கின் காரியமாம்.

அவர் சொல்லைவேதவாக்கியம் போற்கொண்டு எவ்வளவு தூரமாயினும் தேகசிரமம் கருதாது போதலும் அவருடன் கலந்து அளவளாவி யிருந்தலும், காயத்தின் காரியமாம்.

அவர்களுக்கு வேண்டிய வஸ்திரம் பூஷணம், ஆகாரம் முதலானவைகளைக் குறித்துச் செலவழிக்கும் விஷயங்களெல்லாம் பொருட்காரியம்.

ஆனால் இவர்களைக் குறித்து இவ்வளவு சிரமப் பட்டுச் செய்வதனாலுண்டாகிய பலன்யாதென்று யோசித்தால், இம்மனைவி புத்திரர்

முதலானவர்களெல்லாம் நம்மிடத்தில் அவர் முன் பிறப்பில் கொடுத்த கடனை வாங்கிக்கொண்டு போக வந்தவர்களே. அவர்களால் நாம் மேற்சொன்ன சுகங்களனுபவிப்பதுள தென்றால் அவர் நமக்கு கடன்காரராக இருக்கவேண்டும்.

“பரணமாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங்கையிற்றந்த விரணமானவை கொண்டு மற்றிவரை விட்டியம் பிடாதிவனொரு மரணவாதனை யாவராலறியலாமயங்கி யைம்புலனந்தக், கரணம் யாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பார்” என்றதனாற் காண்க.

இப்பாச புண்ணியமானது மேலும் மேலும் ஜென்மத்தையுண்டாக்கி அந்தந்தப் பிறப்பினும் ஜீவர்கள் முன்னிலையில் சுகதுக்க போகங்களை அனுபவிப்பதற்கு ஏதுவான பலனைக் கொடுக்கிறது ஆனதாற்றானிதை கடைசியாகச் சொல்லப்பட்டது.

இரண்டாவது இடையாகிய பசு புண்ணியத்தைச் சிறிது சொல்லுவோம். மேற் சொல்லிய வண்ணமே தரும சிந்தையுடையவனாயிருத்தல், தருமங்களைப் பிறர்கேட்கப் போதித்தல், தீர்த்தமாடல், யாகாதி கிர்த்தியம் செய்தல், தானதர்மம் செய்தல் முதலானவைகளாம். ஆனால் இதற்குப் பலன் யாதென்றால் இச்சரீராந்தியத்தில் எமதூதர்கள் பூதசாரதேகமென்று சொல்லும் சரீரத்தில் இந்தச் சீவனைப் பிரவேசிக்கச் செய்வார்கள். உடனே தேவகணங்கள் ஓர் திவ்ய விமானத்திலேற்றிப் பொன்னாட்டுக்குக் கொண்டுபோய் அந்நாட்டுக் கிறைவனாகிய தேவேந்திரனுடனிருந்து பஞ்சதருக்கள் அப்சரஸ்ரீ அமிர்தாதி போகங்களை யனுபவித்தலேயாம்.

ஆனாலிதைவிட மேலானதாகிய சுகம்யாதுளதென்று நினைக்கக்கூடும். இந்த வுலகமானது அழிந்து போகக் கூடியதாயும் இந்த உலகத்துக்குத் தலைவனாகிய இந்திரனும் தேவர்களும் பொன்றக்கூடியவர்களாயும் இவர்கள் திதிகாலத்தில் அனுபவிக்கும் போகங்களுக்கும் இடையிடையே விபத்து அதிகமுண்டாகிப் பெருந்துக்கம் மனுபவிக்கிறபடியாலும் இங்குத் தர்மங்களைச் செய்து அங்குச் சுவர்க்கத்தை அனுபவிப்பவர்களுக்கு இங்குச்செய்த தர்மமூலமாக விருக்குமிவன் பெயர் இங்கு மறையுமானால் அப்பொன்னாட்டார் இவனை



பழையபடியே பூலோகத்தில் அனுப்புவர்கள் என்பதும் மீண்டும் இந்த உலகத்தில் பிறந்திறந்து துக்கத்தை யனுபவிப்பதும் திண்ணம்.

“தருவிழலும் கல்லமிர்துந் தண்டாத மங்கையரும்
வருமென்று வேள்விசெயு மத்திமர்காள்-தருபரமே
யமிர்தம் பசுவின்பா லாயிழையார் வேசியென
வுமைபங்கனாகம மோதும்” எனவும்,

“ஆனவர் நல்குநதியாயிரஞ் சென்றாடுகிலென்
றானப்பதினாலுந் தாஞ்செயினெ-ஞானங்க
ளஞ்சுடையான் சோணகிரி யண்ணறனை யெண்ணாத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று” எனவும்,

“காடுபோந்தனனிந்திரன் பொன்னகர் கரிந்து
பாடுசேர்ந்தது சயந்தனுஞ் சிறையிடைப்பட்டான்
நாடில்விண்பதச் செய்கையீ தெம்பிரானல்கும்
வீடதேயலாற்றுன் பறுமாக்கம் வேறுண்டோ” எனவும்,

“அண்டர் பொய்வாழ்வையு மயன்பொய் வாழ்வையும்
விண்டுவின் வாழ்வையும் வெஃகிலேனியான்
றண்றடகளணிந்த நின்சரணத்தன்மையே
கொண்டிட வேண்டுவனென்று கூறினான்” எனவும் வருவன

வற்றாற் காண்க,

எனமேலோர்கள் கூறியுள்ளாராகையினாலும் இப்போகம் ஒருகணத்தில் மாறிப்பிறப்பைக் கொடுக்கக் கூடியதாகையால் இதனை மத்திமமென்று சொல்லப்பட்டது.

மூன்றாவது தலையாகிய பதி புண்ணியத்தைச் சொல்லுவாம்.

சிவபத்தி, அடியார் பணி, ஞானசாஸ்திரம ஓதல், ஓதுவித்தல் மெய்யன்பர் சேவை முதலானவைகளாம். சிவபத்தியானது மனோவாக்குக் காயங்களினால் செய்தல் வேண்டும். தான் கட்டியிருக்கும் வேட்டியில் அழுக்கேறுவதுபோல் இவ்வுலகத்துத் துர்வாசனையால அவை மூன்றுக்கும் அழுக்குண்டாகிறது. ஆடையிலுள்ள அழுக்கைச் சுத்தஜலத்தைக் கொண்டு போக்குவது போல அவை மூன்றுக்குண்டான வழுக்கைத்தியான தோத்திர அருச்சனை. யென்னும் ஜலத்தைக் கொண்டு போக்கவேண்டும்.

முதலாவது மனத்துக்கு, அழுக்கு, பொறாமை, ஆசை கோபம், இரண்டாவது வாக்குக்குப் பொய் புறங்கூறல், தீச்சொல், மூன்றாவது காயத்துக்குப் பிறரையடித்தல், பர ஸ்ரீ கமனம்பண்ணல், கூத்துப் பார்த்தல் முதலாயின.

மனத்தால் இறைவனது திருநாமமாகிய ஐவகைப் பஞ்சாக்கரத்தைத் தியானித்தல் தேவாரதிருவாசகம் முதலாகிய திருமுறை கடம் பாராயணம் செய்தல் காயத்தால் பத்திரபுட்பங்களைக்கொண்டு சிவபெருமானைப் பூசித்தல், சிவாலயம் வலம்வருதல் முதலானவைகளைச் செய்தல்.

“திருக்குறுமழுக் காறவாவொடு வெகுளி செற்றமாகிய மனவழுக்கைத் தியானமென்புனலால் பொய்புறங்கூறல் தீச்சொலென், இன்றவாய யாக்கை, யருட்கிளர்நினது துதியெனும் புனலாலயத்தொழிலொன்று மெய்யயாக்கை யருச்சனையெனும் புனலினாற் கழுவா வகத்தனேனுய்யு நாளுளதோ, விருப்பொடு வெறுப்பிங்கிலாதவனென்னவெண்மதியோடு வெண்டலையு விரைவழி புகுந்து வண்டினம் பசுந்தேன் விருந்தனுங்கொன்றை மேல்மலரோடெருக்கையு மணிந்து மின்றெளி கடந்த விர்ஞ்சடைப்பரந்தனுனுடைய விட்ட நன்குதவி யென்கரத்திருக்கும் ஈசனே மாசிலாமணியே” என்றதாற் காண்க.

அல்லாமலும் இப்படி சொல்லப்பட்ட புண்ணியத்திலும் ஒன்றுக்கொன்று மேலாகவும் சொல்லப்பட்டுள்ளது. அறமானது உலகத்தில் மேலானதென்றும், அதைக்காட்டிலும் சிவாலயம் கட்டுவித்தல் முதலான சிவபுண்ணியம் மேலானதென்றும், அதனினும் சிவாலயத்து அபிடேகாதிகள் அர்ச்சனை முதலானது செய்வித்தல் மேலானதென்றும், அதனினும் அடியவர் பூசையதிகமென்றும் சுருதிகளிற் சொல்லப்பட்டுள்ளது.

“அதிகநல்லற நிற்பதென்றறிந்தனை யறத்துள்
அதிகமாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனையவற்று
ளதிகமாஞ் சிவபூசையுளடியவர் பூசை
யதிகமென்றறிந் தன்பரையருச் சனைபுரிவாய்” என்றதனாற் காண்க.

(இன்னும்வரும்)

கா. வேதாசல முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவவழிபாடு.

## தொகுதி 4. பக்கம் 45. தொடர்ச்சி.

வேதம் பலவிடங்களில் சிவபிரானைப்பிரமம் எனக்கூறுகின்றது. பிரமசப்தத்தை எல்லாச் சமயத்தாரும் தத்தம் கடவுளுக்கேற்றிக் கூறுநிற்பர். அங்ஙனம் கூறினும் பிரமசப்தம் சிவபிரானுக்கே யுரித்தாதல் விளக்குதும். கேனோபநிடதத்தில் இந்திரன் அக்கினி வாயு முதலியோர் அசுரர்களைப் போரில் வெற்றி கொண்ட ஜயசீலர் யாம் யாம் என்று செருக்குற அதனையறிந்த பரமசிவன், அவர்கள் முன்னிலையில், ஒரு இயக்க வேடந்தாங்கிச்சென்று, ஒரு துரும்பை யெடுத்துக் கீழே நட்டு, இதனிடத்து உங்கள் வலிமையைக் காட்டுங்களென்று கூறினரெனவும், அக்கினியும் வாயுவும் தம் ஆற்றல் சிறிதுஞ் செல்லாமைகண்டு நாணமுற்று நிற்க, பின் இந்திரன் வந்தவுடன் இயக்க வேடந் தாங்கிவந்து நின்ற சிவபிரான் மறைந்தருளினர் எனவும், அப்பொழுது இமோற்பர்வத புத்திரியாகிய உமாதேவியார் விசும்பிற் றோன்றினரெனவும், அவ்வம்மையாரை நோக்கி அம்மே! இவ்வியக்கன் யாவன்? என்று இந்திரன் கேட்ப “இவன் பிரமம்” என்று அம்மையார் கூறியருளினரெனவும், கேட்கப்படுதல் பிரத்தியக்ஷமாம்.

இவ்வுபநிடதக்கூற்றால் இயக்க வுருவமாக வந்தது “பிரமம்” எனக் காணப்படினும், அவ்வுருவம் சிவபிரானென்பது எதனாற் பெறப்படுமெனில் “தாயுடன் சென்று பின்றாதையைக்கூடி” என்ற முறைப்படி உமாதேவியாராகிய சிவசத்தியாற் காட்டப்பட்டமையால் அந்தப் பிரமம் பரமசிவனே யென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப் பெறும். வாயு சங்கிதை இக்கதையை நன்கு விரித்துக் கூறும், அன்றியும்;

தோலாவலைவ நாப்ப ணடைந்து துரும்புநட்டு
மாலாதி விண்ணோர் வலிமுற்றவு மாற்றவல்லோ
னாலால முண்டோ னவனேயகி லங்களுக்கு
மேலாய வேத வெனவிண்டது சாமவேதம்.

என்னும் காஞ்சிப் புராணத்திருப்பாசுரத்தா னுமுணர்க.

(4) அல்லதூஉம், யஜுர்வேத சமக மந்திரங்கள் அர் அயன் இந்திரன் முதலியோரை அன்னுதிகளுடன் சேர்த்து ஈயப்படும் பொருளாகக் கூறுகின்றமையும், சிவபிரான் ஈயுந்தாதாவாதலின் அப் பெருமானை அங்ஙனங் கூறாமையும், (ஒரு பிரபுவினிடம் யாசிப்பவர் அப்பிரபுவின் உடைமைப் பொருள்களில் எதையும் இரத்தல் போல அப்பிரபுவை நோக்கி உன்னைக் கொடு எனக்கேட்டலின்மை ஊகிக் கத் தக்கது) “பிறரால் சாதிக்க முடியாத முப்புரங்களையும் நீறாக்கி யுலகங்களைக் காத்தமையால் பசுபதி நீயே, யாமெல்லாம் பசுக்கள் என்று அங்கீகரித்தனர் தேவர்கள்” என்பது முதலிய சுருதிகளுண் மையும் சிவபிரானே மோக்ஷதாதா என்பதை வலியுறுத்து வன வாகும்.

(5) ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற்காரணமான மாயையினின்றுந் தநுவாதிகளைத் தோற்றுவித்த லாகிய சிருட்டியும், நிலைபெறச் செய்தலாகிய திதியும், இளைப்பொழித் தற்பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலாகிய சங்காரமும், இரு வினை யொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலாகிய திரோபவ மும், பந்தம் விடுவித்தலாகிய அநுக்கிரகமும் என்று கூறப்பட்ட பஞ்சகிருத்தியங்கட்கும் சிவபிரான் தலைவராவர். பிரம விட்டுணுக் களுக்கன்றோ படைத்தல் காத்தல் உரியன வெனின், அவர்கள் அவற்றைச் செய்தலில் அரசனது ஆணைப்படி நடத்தும் மந்திரி முதலியோரைப் போன்று சிவபிரானது ஆணைப்படி நடத்தப்பட்ட வர்களே யல்லது சுதந்தரத்துவம் பெற்றவரல்லர். மன்மதனை நீறாக் கிய காலத்து அவன் றந்தையாகிய திருமால் தானே காத்தற்றொழி லின் முழுச்சுதந்தரம் பெற்றிருப்பின் தன் மகன் நீறுபடாது காத்தி ருக்கலாம். பிரமன் படைத்தற் றொழிலின் முழுசுதந்தர முடைய னாயின் சிவபிரானாற் கொய்யப்பட்ட தனது தலையை மீளப்படைத் திருக்கலாம். அங்ஙனஞ் செய்யாமையானே அவர்க்கு அத்தொழில்



கள் சுதந்திரமுடையன வல்லவாதல் பெறப்படுதலுடன் சிவபிரானே பஞ்சகிருத்தியத் தலைவராதலும் பெறப்படும். இதனை,

“உலகமளித்தல் சுதந்திரமன் றுவண முயர்த்தோற் கெனவவன்சே யிலகு முருவம் பொடித்தவன்பா லெழுந்துபடைப்புஞ் சுதந்திரமன் றலர்மெல் லணையாற் கெனவவனை யரங்கத் திசைமா முகனுக்கிப் பலரும் வெருவப்பொழி செய்த்தோர்பயிக்கம் புகுந்தோன் பதம்பணி வாம்” என்னும் திருவானைக்காப்புராணச் செய்யுளாலறிக.

இங்ஙனமாகச் சிவ பிரானது முழுமுதற்றன்மைகள் பலவாம். ஆதலின் “ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும், கேட் பான்புகெனளவில்லை” என்றார் பெரியார். ஆயினும இத்தகைய இரு பத்துமூன்று காரணங்களைக் காட்டிச்சிவபிரானே பரம் பொருளென விளக்கி மாதவச் சிவஞான யோகிகள் கட்டளை யிட்டருளிய சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பி லோரகவலைமட்டும் கூறிமேற் செல்வாம்.

உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணகன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனுது விழியுட னோராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடல்விட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்செயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருகலி
னாழ்கடல் வரைப்பி னன்றோ ரநேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி

ணிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

இனி வழிபடற் பாலர் யர்வர்? என ஆராய்வாம்.

எல்லா ஆன்ம கோடிகளுக்கும் வழிபடற் குரியனவே. அவற்றுள் ஐயறிவும் நிறையப்பெற்று நல்வினை தீவினை சுவர்க்க நரகமாதிகளை நூலறிவாற் பகுத்தறியும் விசேட வறிவையும் பெற்றுள்ள தேவர் முனிவர் முதலியவர்களும் மனிதரும் வழிபாடியற்ற வேண்டியவர்களேயாம். ஆயினும் மனிதவர்க்கத்தாரே இவ்வழிபாட்டிற்குப் பெரிதும் பாத்தியமுடையவராவர். தேவர்களும் தமது நல்வினைக்கீடாகச் சுவர்க்கபோகம் புசித்துத் தீர்ந்தபின்னர் பூமியில் மானிடராகப் பிறந்து சிவவழிபாடியற்றியே உயர்பதமுறுவர். ஆதலால் பெறுதற்கரியது மானுடப்பிறவியேயாகும்.

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காகவன்றோ
மானிடத் தலரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்ப
ரீனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் ஈண்டுக்கவனிக்கற் குரியு தாம். அன்றியும்,

(இன்னும்வரும்)

வியாசத்திரட்டு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இவை நமக்குத் துணையாகுமா?

இங்கே இனிமையாகக்கொள்ளும் பொருட்களையே இவையென்று குறிக்கப்பட்டது. நமக்கு என்றது ஆன்மாக்களுக்கு என்னும்பான்மைத்து. அஃது தேகத்துடன் ஆன்மாக் கூடியிருக்கும்போது கூறப்படும் பதம் நானென்பதும் வழக்கு. மானுஷ்யஜென்மத் தேகமாகிய எங்களுக்கு இவ்வுலகின்கணுள்ள பொருள்களும், இன்பமும் ஆன்மாவுக்குத் துணையாகா என்பதே முகாமக்கருத்தாகும்.

இவ்வுலகம் காரியம். காரியத்திற்குக்காரணம் வேண்டும். எதனாற் காரியம் என்னில் தோற்ற ஒடுக்கக்கேடுகளினாலேயாம். தோற்ற ஒடுக்கமின்றி ஒரேபெற்றித்தாயபொருளே காரணமாகும். காரணமாவது காரியத்திற்கு முந்தியிருப்பது, அஃது பதி, பிரமம், கடவுள் என்று கூறத்தக்க சின்மாத்ரமூர்த்தியாக விளங்குவதாம். இதனாலே உலகமும். அதிலேயுள்ள பலவித விசித்திர மஹாஜாலப் பொருள்களும் அழியும் என்றும், அவைகளுக்குமேலான சிவமஹாஞானமே அழியாப்பொருளான பதியைக்கூட்டி மேலாங்கதிகாட்டும் என்றும் உணர்ந்து அன்பையும் ஆசையையும் பற்றையும் நீக்கிப் பக்தியைப் பற்றல்வேண்டும், இங்நிலையை யோகிகள் அடைவார்கள்.

"அஜரூபம் பசும் ஹத்வா ஞானசாஸ்திரேண யோஹவித்!
பக்ஷயே தஜஸ்யாமிஷம் பதுவக்காபஹாரகம்!!"

இதன் கருத்து: "ஆட்டுருபமாகிய பசுவைச் சிவஞானமாகிய அஸ்திரத்தினாலே வெட்டிச் சிவயோகியானவன் ஜனனத்தை நீக்குதலாகிய ஆட்டு மாம்சத்தைப் புசிக்க" என்பதாம்.

வேதங்களிலே கூறப்படும் ஆடு சிவாகமத்திலே தெரிவுறுத்தப்பெறும் பசுவாம் என்றும், இங்கே ஆட்டை வெட்டி என்றது சிவஞானப்பியாசத்தாலே ஆன்மாவின் பிறவியை அறுத்தலாம் என்றும்

ஆட்டு மாம்சத்தை உண்ணுதலாவது பிறவிக்கேதுவாகிய தற்போதம் என்னப்படும் பசுபோதத்தை மேலே எழவொட்டாது சிவஞான முகிழ்ப்பானே அடக்கிவிடுதலாம் என்றும் செம்பொருள் புலப்படுதல் காண்க.

இவ்வுண்மைப்பொருளை நோக்குமிடத்து ஆன்மாவின் றன்மையும், அதற்காகச் செயற்பாலனவும், செய்தாற் பெறுங் கதியும் ஒருவாறு அறிஞர்க்குத் தெளிவாகும். ஆகவே லௌகிக சம்பந்தம் பெறுங் கெடுதியை யுண்டாக்கி ஆன்மலாபத்தைத் தடுத்து அருநரகத்தை ஆட்சியாக அவ்வான்மாவுக்குக் கொடுக்கும் என்பது நிதர்சனமாம்.

உலகத்திலே விரும்பும் பொருட்கள் பலவாய் விரியினும் ஆன்றோர் சுருக்கி விளக்கியிருக்கின்றார்கள். உலகவேடணை; உலகமே நமது சாஸ்வதமான இடம் என்றும், அதிலுள்ள மாடு கன்று காணி வீடு முதலியவைகள் நம்முடையவைகளென்றும் செல்லும் பிராந்தி. இரண்டாவது அர்த்தவேடணை; பொருளே பெரிதென்றும் பொருளினாலே செய்த ஆபரணங்களே அலங்கரிப்பன என்றும் பொன்னைத் திரட்டியுருட்டி "பூர்ண பவ்வி" ஒழித்தெனக்காக்கும் கசட்டு அறிவுடைமை. மூன்றாவது புத்ரவேடணை; புத்திரனே நம்மைக் கரையேற்றும் புகழும் வலியும் அமைந்தோன் என்று செல்லும் பற்று. ஈஷணை என்னும் வடமொழி ஏடணை என்றாயிற்று.

நாம் முன்னே எத்தனையோ ஜன்மங்களை எடுத்து எடுத்து எய்த்து இளைத்து மூர்ச்சித்து வருந்துந் தருணத்திலே கருணாநிதியாகிய சிவபெருமான் சிறிது திருக்கடைக் கணோக்கஞ் செய்தருளினார். அஃதாவது விஷத்தினாலே யாதுமுணராது மயக்கமுற்றானொருவனை மாந்திரீகன் கருடபாவனையினாலே நீக்கி அறிவுவரச்செய்து உய்விக்குமாறுபோலச் சிவபெருமானார் மாயாசம்பந்தமுடைய ஆன்மாக்களை இதனிடத்தினின்றும் நீக்கிக்காக்கவேண்டி அருட்சத்தியை அதிட்டித்து நின்று, கர்மம் சாபேக்ஷ நிலைநாடித் தேகங்களைக் கொடுத்தருளினார். அத்தேகங்களுள்ளே அறிவுடைய மானுஷ்ய தேகமே விழுப்பமுடையதாயிற்று. ஆதலினாலே தான் மானுஷ்ய ஜன்மம் உத்கிருஷ்ட முடையதென்று மேலோர் வகுத்தனர். (உத்கிருஷ்டம் உயர்வு)



இதனாலே என்ன, நன்றாக ஸ்நானம் பண்ணினோம், கடவுளைப் பிரார்த்தித்தோம். இனி என்னசெய்வது என்று ஆலோசித்தாலோ? நமக்குச் சொந்தமும் நிந்தமும் எவை? இன்னுஞ் செயற்பாலன யாவை? என்றற்றொடக்கத்த இவைகளைச் சிந்திக்கவேண்டிவரும். செய்யவேண்டியவை இறைவானுக்கிரஹ பாத்யதையான சற்கருமங்கள். இக்கருமங்களைச் செய்யவொட்டாது மாயாசத்தி கெடுக்கும்.

அம்மாயாசத்தியை அச்சமின்றி நீக்கவல்லது அறிவாகிய மெய்ச்சத்தியேயாம். அறிவு உதயமானவுடன் ஆநந்தஸ்வரூப சிவம் இனிது விகவிக்கும். சடலை ஞானம் பெற்றுக் கடவுளையடைய முடியாது. ஆதலினாலே என்றும் உள்ளது சத் என்றும் வேதாகம உபநிஷத உபப்பிருங்கணாதிகள் உத்கோஷிக்கும் பரமசிவ பரம்பொருளைத் திரிகரணங்களினாலேயும் வழிபட்டு, ஆசையாகிய மாசையொழித்தலே முறையாகும். மனசு இச்சையுடையது; அவ்விச்சை அவிச்சையேயாம். ஆன்மாவுடன் நமது வீடு வருமா? நமது பெண்டீர்வருவாளா? நமது உடுதுணிவருமா? நமது கை வருமா? பிறிதான இனியபொருட்கள் யாதும் வருமா? இறக்கும்போது இவை யொன்றும் வாராவன்றோ! அன்பீர்! "காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே" ஆ! இவ்விதமான வாக்குக்களை அறியாமையினாலே தெரியாத்தனமுடையர்களைச்சேர்ந்து தெரியாத்தினத்து என்செய்வோம்! என்ன துணையாகும்? ஒன்றுந் துணையாகாவன்றோ! பின்னை நன்னேயத்தை எங்கே வைக்கவேண்டும்? வெளிப்பெட்டியிலன்று! ஹிர்தயமாகிய உட்பெட்டியிலுள்ள நன்மணியிடத்திலே நமதுமனஞ் செல்லல்வேண்டும். இன்பநெறிக்கெல்லாம் மேலான இன்பநெறி காட்டுவது அப்பெரும்பரம்பொருளிடத்து அமைந்த கருணையாகும். இவைகளைப் பத்திய ரூபமாகவே அடியார்கள் அநுபூதியிற்கண்டு தெளிந்து மகிழ்ந்து அருளிச் செய்தார்கள்.

அடியாருறவு நின்பூசை நேசமுமன்பு மன்றிப்
படிமீதில் வேறுபயனுளதோ பங்கயன் வகுத்த
குடியான சுற்றமூர் வாரமும்வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்குமென் றினஞ் சார்திலரே.

என்று பட்டினத்தடிகளும்,

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன்றன் னடைந்தார்க் கிடைமருதனே.

என்று திருநாவுக்கரசு நாயனாரும் அருளிச்செய்தார்கள். இவைமாத்திரமா?

குசேலோபாக்கியானத்தும்,

சாருறு தந்தையாருந் தாயரு மனந்தஞ் சன்ம, வூருமோ ரனந்தம் வாய்த்த வுறவுமோ ரனந்தம் பெற்ற, பேருமோ ரனந்தங் கன்மப் பெருக்கமு மனந்தங்கொண்ட, சீருமோ ரனந்த மின்னுஞ் சேர்வது மனந்தமாமால்.

என்று கூறப்பெற்றதுங் காண்க.

### திரட்டுரை.

இதுவரையுஞ் சுருக்கி எழுதப் பெற்றவைகளானே இவ்வுலகத்துப் பொருட்களினும், மனை, புத்திராதியோர்களினும், மனதைச் செலுத்தாது மனோசங்கற்பத்தில் இவைகளைக் கனாப்போல நினைந்து ஒதுக்கிவிட்டு, நிலையான பொருளாய கடவுளிடத்தும் மெய்யடியாரிடத்தும் சத்கதா காலக்ஷேப, மஹோபந்யாச, புராண சிரவணாதிகளிடத்தும் மனதைச் செலுத்தியும் நமது வாணாளைக் கழித்தல்வேண்டும் என்பதாம். என் அங்ஙனஞ் செய்யவேண்டுமென்றால் "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணியபாவமுமே" ஆதலினென்க. குரு வாழ்க.

முத்தாந்தவீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்தவீதிவருந் தேவே பராபரமே.

இங்ஙனம்,
வ. மு. இரத்திநேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர்.

OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK COMPANIES
REGISTERED
19 MAY 1916
MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1916௵ ஏப்ரல்௴ [பகுதி ௪.

## வேதாந்தம்.

வேதமானது ஈஸ்வரன் உலகத்தைச் சிருஷ்டிக்கச் சங்கற்பித்த பிரதி சிருஷ்டியிலும் முதலிலுண்டாக்கப்பட்ட புருஷனுக்கு உபதேசிக்கப்பட்டது. அவ்வாதி புருஷன் தனக்குப் பிந்திச் சிருஷ்டியானவர்களுக்கு உபதேசக்கிரமத்தில் இது வழங்கிவருவதாயிற்று. இவ்வேதம் அநாதியாகிய ஈஸ்வரனால் வெளிப்பட்டமையின் அது அநாதியெனவும் கூறுவதாயிற்று. இவ்வேதம் இன்னகாலத்தில் முதலில் வெளிப்படுத்தப்பட்டதெனத் தெரியாமையால், அநாதியெனினுமொக்கும். ஒரு அரசன் தன்தேசத்துக்குட்பட்ட மனிதர்களை யாளும் விஷயத்தில் தமது ஆஞ்ஞையை அறிந்துகொள்ளும் பொருட்டு அவனால் ஏற்படுத்தும் சட்டம்போல, சகல உலகங்கட்கும் அரசனாகிய ஈஸ்வரன் தன்னால் ஆளப்படும் சர்வமனிதர்களும் தமது ஆஞ்ஞையை யறிந்துநடந்துகொள்ள அவராலேற்படுத்திய சட்டமாம். இவ்வேதம்

இவ்வளவென அளவிடுதற் கரிதாய் விஸ்தாரமாக விருந்தது. அது காலக்கிரமத்தில் வேதாத்தியனம் குறைவுபட்டுப் போயிற்று, வியாச முனிவர் தமது காலத்தில் எவ்வளவு வழங்கியதோ அவற்றை அம் முனிவர் இருக்கு எஜுஸ் ஸாமம் அதர்வண மென்பதாகப் பிரித்துத் தமது சீடர்களுக்குபதேசித்தனர். இவ்வேதங்களில் அனேக சாகைகளுண்டு. ஒவ்வொரு சாகையில் முந்தியபாகம் யக்ஞயாகாதி நித்தியநைமித்திக கருமங்களையும், அவைகளை யனுஷ்டிக்க வேண்டிய விதங்களையும், செய்யத் தக்க அதிகாரிகளையும், செய்விக்கிறவர்களின் யோக்கியதையும், ஆராதிக்க வேண்டிய தேவதைகளையும், அத்தேவதைகளைப் பற்றிய மந்திரங்களையும், அந்தந்தக் கருமங்களின் பயன்களையும், பின் அக்கரும சம்பந்தமான பலவிஷயங்களையும் சொல்லுகிறது. அதனால் இது பூர்வகாண்டம் அல்லது கன்மகாண்டமெனப் பெயர்பெறும். பிந்திய பாகமானது ஈஸ்வரனை யுபாசிக்கும் மார்க்கமாகிய சாங்கியயோகம், நிஷ்காம கருமயோகம், தபசு, சகுண நிர்க்குணப் பிரம்மோபாசனுவிதி, ஆத்மலட்சணம், கருமசந்நியாசம், பக்தி, வைராக்கியம் முதலியவற்றைப் போதிக்கின்றமையின், இப் பாகம் உத்தரகாண்டம் அல்லது ஞானகாண்டமெனப் பெயர்பெறும். இதுவே வேதாந்தம், வேதத்தின் முடிவு.

இவ்வேதாந்தத்தில் ஆன்மாக்களினுடைய கன்மானுசாரமாக அவரவர்கள் புத்தி யுக்தி சக்தி குணம் மனவுறுதி காலம் தேசம் முதலியவைகட்குத் தக்கதாக எவ்வெவர்க்கு எஃதெதில் பக்தி விசுவாசம் நம்பிக்கை பற்றுத லுண்டாகிறதோ அந்தந்த வகையைப், பின்பற்றி அவரவர்கள் மனத்திற்குத் தக்கபடி யொவ்வொரு பலப்பிராப்தியை யடையும்படி பற்பல தேவதாந்தரங்களை கூறியிருக்கினும், பரிபக்குவ மடைந்த உத்தமர்கள் வழிபட்டு ஞானமடைவதற்கேதுவாகிய பரமேஸ்வர னொன்றேயென வச்சிரலேபமாகத் தாபிக்கப்பட்டிருக்கிறது. அவ்வுண்மை அவ்வேதாந்தத்தின் உபக்கிரம உபசம்ஹார அப்பியாச வாக்கியங்களால் அறிந்து கொள்ளவேண்டும். அதுவருமாறு:—வேதாந்த மென்பது நூற்றெட்டு உபநிஷத்துக்களாம். நூற்றெட்டேயென ஸ்ரீ இராமச்சந்திரர் கபிகுல சிரேஷ்டராகிய அனுமாருக்குச் சொன்ன யஜுர்வேத முக்திகோப நிஷத்தும், மகாவாக்கிய இரத்தினவளியும் நிஷ்கரிஷை செய்துவிட்டன. உபநிஷத்து நூற்றெட்டினுள் முதலிலுள்ள ஈசாவாஸ்ய மென்னும் உபக்கிரமோப நிஷத்து "ஈசாவாஸ்யமிதம்ஸர்வம்" என்று சிவபெருமானுக்குரிய "ஈச" சப்தத்தில் உபக்கிரமஞ் செய்யப்பட்டிருக்கிறது. "சம்புரீச: பசுபதி:" எனும் அமரஸிம்ஹத்தால், "ஈச" சப்தம் சிவபெருமானுக்கே ரூடி நாமமாம். அன்றியும். "ஈஸாவாஸ்யாதி மந்த்ராந்யோஜபேத் நித்யம் மமாக்ரதா, மத்ஸாயுஜ்யமவாப் னோதிமம லோகேமஹீயதே" (ஈசா வாஸ்யம் முதலிய மந்திரங்களை எவனெனக்கெதிரிலிருந்து தினந்தோறும் ஜபிக்கின்றானோ, அவனெனதுலகில் பெருமை பெறுவானுந்தவிர எனது சாயுஜ்யத்தை யடைகிறான்) எனச் சிவபெருமான் இராமருக்குப் போதித்ததாகச் சிவகீதை பதினைந்தாவது அத்தியாயத்திற் காணப்படுகிறது. "ஈச" சப்தம் சங்கராச்சாரியர் கூறும் ஆன்மாவுக்கேனும், இராமாநுஜரும் மத்துவரும்கூறும் நாராயணருக்கேனும் செல்லாது. உபநிஷத்துக்களில் பரமான்மாவை ஆன்மாவெனக் கூறலின், சங்கராச்சாரியர் "ஈச" சப்தத்திற்கு ஆன்மாவென்றது பொருந்து மெனின், அது பொருந்தாது. எங்ஙனமெனின்? "ஆத்மந்யே வாத்மாநம் பஶ்யத்" (ஆன்மாவிலே ஆன்மாவைக்காண்க) எனச் சாந்தோக்யோப நிஷத்தும் மற்றும்பல உபநிஷத்துக்களும் உபயான்மாவைக் குறிக்கின்றன. ஈண்டு ஆன்மாவிலே யென்றது ஜீவான்மாவை, ஆன்மாவை யென்றது பரமான்வை. உபநிஷதங்களில் பரமான்மாவை ஒவ்வோரிடங்களில் ஆன்மாவென்றது ஆங்காங்கிலட்சணை. இங்ஙனமாக, சங்கராசாரியருக்கு உபயான்மா உடன்பாடன்று, அவர்மதம் ஏகான்மவாதம். இவர் குறிக்கும் ஆன்மா இவர் கொள்கையின்படி இருபத்து நான்குதத்துவங்களைக் கடந்தது. பரமான்மா முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து அங்காங்கி லட்சணையாற் கூறப்படும் ஆன்மாவாதலெங்ஙனம்? அன்றியும். "வாசுதேவோ பாராப்ரகிருதி" "ஜகத்விஷ்ணு" ப்ரகிருதி பரமோ விஷ்ணு" 'யோநிஜநார்தநா' "விஸ்வம் நாராயண" என்ற சுருதிகளின்படி நாராயணர் பிரகிருதி தத்துவத் தலைவராகலினானும், "ப்ரம்ம விஷ்ணுருத்ரேந்த்ராஸ்தேஸம் ப்ரஸூயந்தேஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர் நகாரணஞ்த்யர் தாகாரணந்துத்யேயஸ்ஸர்வைச்வர்ய ஸம் பந்நஸ்ஸர்வேச்வரச் சம்புராகாசமத்யே" (பிரமன் விஷ்ணுருத்திரன் இந்திரனாகிய இவரெல்லாம் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்களோடு படைக்கப்படுகின்றன. ஆகலின் அவர்களும் அவைகளும் காரணமில்லை. தியாதாவாகிய அவர்களாலேதியானிக்கப்படும் தியேயனெனும் சருவைச்சுவரிய சம்பன்னனும் சருவேச்வர

னும் ஶம்புசத்தவாச்சியனும் பரமாகாச மத்தியத்திலிருப்பவனுமான சிவனே காரணன்)என அதர்வசிகோபநிஷத்து அறைதலினாலும் "ஈச" சப்தத்திற்கு நாராயணனைக் குறிப்பதற்கு மிடமில்லை, பாஞ்சராத்திரிகள் தங்கள் மூர்த்தியையும் ஈசுவரனெனச் சொல்லிக்கொள்ளுகிறார்களேயெனின், அவர்கள் தங்கள் கோயிலைஈஸ்வரன் கோயிலென அழைக்கக் கூசுவதென்னை? தாங்கள் ஈசுவர ஐயங்கார் எனப் பெயர்வைத்தழைத்துக் கொள்ளச் சம்மதியாத தென்னை? எனக்கடாவி மறுக்க. ஆகவே உபநிஷத்துக்களின் உபக்கிரமம் சிவபரமாகவே முடிந்தது.

இனி, முக்திகோபநிஷத்தென்னும் உபசம்ஹாரோபநிஷத்து "சதுர்விதா சயாமுக்திர் மதுபாஸநயாபவேத்" என்றும், "கைவல்ய முக்திரேகைவபாரமார்த்திக ரூபிணீ" என்றும், அதஸ்ஸர்வேஷாம் கைவல்ய முக்திர்ஜ்ஞாநமார்க்கேண" என்றுங்கூறி, இறுதியத்தியாயத்தில் "ஊர்த்வபூர்ணமத: பூர்ணம் மத்யபூர்ணம் சிவாத்மகம்" என்பதனாலும், அந்த கைவல்ய முக்தி சிவோபாஸகரடையுஞ் சாயுச்சியமென்று கைவல்லியோபநிஷத்து முதலியவற்றில் பெறப்படுதலானும் உபநிஷத்துக்களின் உபசம்ஹாரம் சிவபரமாகவே முடிந்தது.

இனி, அப்பியாசமாவது இடையே நிகழும் வாக்கியம். இதே வாக்கியம் மற்றும் பல இடங்களி லெடுத்தாளப் படவேண்டும். அங்ஙனம் ஆளப்பட்டிருந்தால் தான் அப்பியாசம் நிலைபெறும். அது வருமாறு:—கைவல்ய முக்தியானது எந்த உபாயத்தினால் கிடைக்கிறதென்றாலோ முமூட்சுகளுக்கு முத்தியின் பொருட்டு மாண்டூக்கியோபநிஷத்து ஒன்றே போதும் எனவும், இம்மாண்டூக்யோபநிஷத்து நூற்றெட்டு உபநிஷத்தினுஞ் சிறந்ததெனவும் முத்திகோபநிஷத்தில் முடிவு செய்திருக்கிறது. இத்தகைய பிரதான மாண்டூக்யோபநிஷத்தின் இருதயத்தில் "ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்த மந்யந்தே" எனும் வாக்கியம் விளங்குகிறது. இதே வாக்கியத்தை நிருஸிம்ஹபூர்வதாபிநி, உத்தரதாபிநி, நாரதபரிவிராஜகோபம், ராமோத்ரதாபிநி முதலிய உபநிஷத்துக்களில் எடுத்தாளப்



பட்டிருக்கின்றது. நான்காவது(துரிய)தெய்வத்தைவிளக்கு நிமித்தம் "சதுர்த்தம்" என்னும் வாக்கியத்தோடு வெளிப்படும் இவ்வசனங்கடோறுமிருக்கும் தெய்வம், "சிவம்"என்பதன்றிவேறு தெய்வப்பெயர்களி லொன்று மெடுத்தாளப்படவில்லை. இராமாநுஜர் ஈண்டுக் குறித்த "சிவம்" என்பதற்கு மங்கள சொரூபனெக்கூறி அப்பெயரை நாராயணன்மே லேற்றியும் சதுர்த்த மென்பதற்குச் சங்கர்ஷண, பிரத்யும்ந, அநிருத்தரெனு மூவர்க்கும் லயஸ்தானமான வாசுதேவனென்றும் பொருள் கொண்டனர். "அத்வைதம் சதுர்த்தம் பிரஹ்ம விஷ்ணு ருத்ராநீ மேகமாசாஸ்யம் பகவந்தக்சிவம்" (அந்நான்காந் தெய்வம் பிரமன் விஷ்ணு உருத்திரனென்னும் மூவரின்மேன்பட்டசிவம்)எனப்பஸ்மஜாபாலவசனம் இனிது விளக்கினமையின், இராமாநுஜர் அர்த்தம் அனர்த்தமாம். அன்றியும், "நஜாயதேம்ரியயதே" (ஜீவனுக்குஉற்பத்தி நாசங்களில்லை)என்ற வேதவசனத்திற்கு முரணாக வாசுதேவனிடத்திலிருந்து சங்கர்ஷணன் உண்டாயினனென்றும், அவர்ஜீவனென்றும், ப்ரத்யும்நன் மனசென்றும், அநிருத்தன் அகங்காரனென்றும் பாஞ்சராத்திரம் கூறலின், இவர்களை மும்மூர்த்தி ஸ்தானத்தில் வைத்த இராமாநுஜர் கொள்கை அஸமஞ்ஜஸமாம். ஆகவே உபநிஷத்துக்களின் அப்பியாச வாக்கியங்களும் சிவபரமாகவே முடிந்தது.

இவைமுதலிய பலிஷ்ட பிரமாணங்களால் உபநிஷத்துக்களின் உபக்கிரம, உபசம்ஹார அப்பியாச நியாயப்படி நூற்றெட்டு உபநிஷத்துக்களாகிய வேதாந்தத்தில் உள்ள பொருள் சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவர்கள் கொண்டாடும் சிவபெருமானே யென்பது ஸர்வஸம்பிரதிபந்நமாம்.

மணவழகு.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# செல்வம்.

தொகுதி 4. பக்கம் 56. தொடர்ச்சி.

இனி முத்திக்குரிய மற்றொன்றாகிய கல்விச் செல்வந்தானும், "மனமடங்கக்கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே" என்றவாறு மனதை யடங்கச் செய்யாதவழி பயனிலதாகலானும், "கற்றதனாலாயபயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்" என்றபடி வாலறிவன் தாளைத்தொழச் செய்யாதவழி பயனிலதாகலானும், முத்திக்குச் சாதனமான வழியும் சாத்தியமாகிய முத்தி சித்தித்த வழி சாதனமாகிய கல்வி வேண்டாம் என்னும் கருத்தால்,

"உற்றாரையான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின்மனம் போலக்கசிந்து உருகவேண்டுவனே"

என்று சாத்தியமாகிய திருவடிஞானமாம் அருட்செல்வத்தை முடிவாக இறுகப்பற்றி "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுகபற்றுவிடற்கு" என்றவாறு அருட்செல்வத்தையேகொண்டு மாணிக்கவாசகசுவாமிகள் கல்விச்செல்வத்தை நீத்து விட்டமையானும், அருட்செல்வத்தை நோக்கப் பிறப்பின் உயர்வு தாழ்வை மாற்றவல்லதும் உயிரினும் ஓம்பப்படுவதாகிய ஒழுக்கத்தைத் தருவதும் முதலிய மேம்பாடுடைய கல்விச்செல்வமும் தாழ்ந்ததேயாம். ஆகவே அருட்செல்வம்தலையாய தென்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற் புலப்படக் கிடந்தவாறு காண்க. இவ்வருட்செல்வத்தை யடைந்தமையினாலன்றோ நமது தாயுமான சுவாமிகள், "அல்லார்ந்த மேனியொடு குண்டுகண் பிறை எயிற்று ஆபாசவடிவான அந்தகா, நீயொரு பொருட்டாற் பகட்டுவது அடாதடா காசுநம்பால் செல்லாதடா என்று பேசவாய் தந்தசெல்வமே" என்றும், முருகக்கடவுளின் திருவருள்முற்றும் பெற்ற அருணகிரிநாதர் "ஞானச்சுடர்



வாள் கண்டாயடா அந்தகா, வந்து பாரடா சற்று என்கைக் கெட்டவே" எனவும் யமனை யொருபொருட்படுத்தாது இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியதூஉம் என்க. மெய்ஞ்ஞானிகளெல்லாம் செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வமாய், அழியாவியல் பினதாய், பேரானந்தப் பெற்றியதாய், சிவத்தோடு அத்துவிதமாய்அணையச் செய்வதாயுள்ள இவ்வருட் செல்வமே "எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவி தான் யாதினும் அரிது அரிதுகாண்" என்றபிரகாரம் அரியமானுடப் பிறவியை யெடுத்த மக்கட் கெல்லாம் முடிவாய் வேண்டப் படும்சீரிய செல்வமென்று அறிவுறுத்திப் போந்தமையான் நாம் எல்லாம் அதனை விரைந்து பெறுதற்குரிய மார்க்கங்களை தேடல் வேண்டுமென்பது யாவர்க்கும் விளங்கக் கிடந்தமையால், அம்மார்க்கங்களை என்புல்லறிவுக்கு எட்டிய வண்ணம் இங்கு ஒருவாறு சிறிது கூறுகின்றேன். அம்மார்க்கங்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சிவபுண்ணியங்களேயாம் என்பது முன்னர்க்கூறியுள்ளாம்.

அவற்றுள் சரியையாவது:—திருநந்தனவனம் வைத்தல், அவற்றிலுள்ள புஷ்பங்களைப் பறித்து மாலை தொடுத்துச் சிவபெருமானுக்குச் சாத்தல், சிவாலயத்தில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கேற்றல், சிவனடியார்க்கு வேண்டிய தொண்டு செய்தல் முதலியனவாம்.

கிரியையாவது:—வாசனைத்திரவியங்கள், தூபதீபம், திருமஞ்சனம், திருமாலை முதலிய பூசோபகரணங்கள் கொண்டு நற்குணம் மருவிப் பஞ்சசுத்திசெய்து சிவாசன மூர்த்தி மூலங்களினாலே முறையே ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவித்து ஆவாகனஞ் செய்து நிருமலமாகிய மெய்யன்பினால் அருச்சனை செய்து விருப்பத்தோடு தோத்திரம் பண்ணி வழிபட்டு நித்தியாக்கினி காரியம் செய்து முடிப்பதாம்.

யோகமாவது:—உச்சுவாசம் நிச்சுவாசம் இரண்டையும் அடக்கி சுழுமுனை மார்க்கத்திலே பிராணவாயுவைச்சலனமற நிறுத்தி இந்திரியங்களின் வழி மனதைச் செல்ல விடாது மீட்டு மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களையும் உணர்ந்து அவற்றின் அதிதேவதைகளைத்தியானித்து, விநாயகர் முதலிய தேவதைகளைப் பொருந்திப் பிரமரந்திரம் வரையில் சென்று அணைந்து அப்பிரமரந்திரத்தின் கண்ணதாகியதாமரைமுகையை அலர்வித்து அதன் கேசாக்கிரத்திலுள்ள சந்

திரமண்டலத்தை மூலாக்கினியினால் இளகப்பண்ணி அதன்வழியாக வொழுகும் அமிர்தத்தைத் தேகமுழுதும் நிரப்பிப் பூரணப் பிரகாசத்தைத் தியானித்தல் முதலியனவாம்.

ஞானமாவது:—எல்லாக் கலைஞானங்களும், புராணங்களும் வேதசிவாகமங்களிலுள்ள கர்மகாண்டங்களும், ஏனைநூல்களும், மற்றச்சமய சாஸ்திரங்கள் பலவும் ஆராய்ந்து பலவழிப் படுகின்ற பொருள்கள் முழுதும் கீழெனக்கண்டு கழித்து, மேலானபதி, பசு, பாசம் என்னும் முப்பொருளையும் தடக்கலக்கணத்தில் வைத்து வகுத்துணர்த்தி, அம்மூன்றனுள் பதிப்பொருள் ஏனை பாச பசுக்களுக்கு மேலாதல் இனிது விளங்க சொரூபலக்கணத்தில் வைத்து உணர்தலாகிய நல்வழிக்கு ஏதுவான ஞானகாண்டத்தை ஓதல், கேட்டலுடன் சிந்தித்தல், புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழில் மாத்திரையானே அகண்டகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவத்தினிடத்துச்செய்யும்வழிபாடாம். இருந்தவாற்றான், "ஞானநூல்தனை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல், நன்றாஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை" என சிவஞானசித்தி கூறியதூஉம் என்க. ஆகலான் இறைவனடியாகிய திருவருட் செல்வத்தையடைதற்கு முக்கிய ஏது வாகிய இஞ்ஞானபூசை உலகத்து மக்கள் உயிர்கட்கெல்லாம் இன்றியமை யாததாய், உயிரினும் சிறந்ததாய், ஓம்பப்படல் வேண்டுமென்று காதலா மலகம்போல் விளங்கிக் கிடத்தலின், அவ்வாறாகிய வுபகாரத்தை உயிர்கட்குச் செய்தலினும் மிக்க பேர் அறம் இவ்வுலகத்து எக்காலத்தும் யாண்டும் இல்லை யென்பது முக்காலத்தும் ஆன்றோரால் அங்கீகரிக்கப்படுவதொன்றேயாம். இவ்வுண்மை நோக்கியன்றோ இச்சமாசத்தார் பல தமிழ் நாடுகளினுஞ் சென்று வருடந்தோறும் ஞானநூல்களைக் கேட்டல், கேட்பித்தல் ஆதியனவாகிய திருவருட் செல்வத்தை யெய்துவிக்கும் அப்பேறத்தை அறிந்து உஜ்ஜீவிக்கும்படி போதித்து வருகின்றார்கள். இத்தகைய திருப்பணியைச் செய்தற்கும், தத்தம் சத்திக்கிசையச் செய்பவர் கட்கும் உதவிசெய்து தூண்டிவிடுதற்கும் மிக்க உரிமையுடையவர்கள் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து மகாசந்நிதானம், ஷை பரம்பரை தருமபுர ஆதீனத்து மகாசந்



நிதான முதலிய மடாதிபதிகள் அன்றோ? அப்பெரியாராகிய குருமூர்த்திகளின் சந்நிதானத்தில் நாமெல்லாம் ஒருங்குதிரண்டு சென்று நம்முடைய உண்மைக் கருத்தை விண்ணப்பம் செய்து கொண்டால் அக்காருண்ய மூர்த்திகள் நமது சமாசத்தின் கருத்து அதிவிரைவில் முற்றுப்பெற்று உலகத்திற்குப் பெரும் பயன் சித்திக்குமாறு வேண்டிய வுதவிபுரிந்து ஊக்கிவிடுவார்கள் அன்றோ? அவ்வணம் செய்யாது இதுகாறும் யாம்தாமதத்திலிருந்தது நம்முடையகுறையேயன்றிபிறிதன்று.

அன்பர்காள்:—செல்வமாவது பொருட்செல்வம், கல்விச்செல்வம், அருட்செல்வமென மூவகைப்படும் என்பதூஉம், பொருட்செல்வத்திலும் கல்விச்செல்வம் உயர்ந்தது என்பதூஉம், அவ்வருட்செல்வமே உயிர்கட்கு மிக்கப்பேறாய் உள்ளது என்பதூஉம், அதனையடையும் மார்க்கம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதூஉம், அந்த ஞானத்தையே இச்சபையார் வருடந்தோறும் யாவர்க்கும் போதித்து வருகிறார்கள் என்பதூஉம், அதற்கு உரிமை பூண்டுள்ளார் மடாதிபதிகளே என்பதூஉம், அத்தகைய பெரியோரையடுத்து அவர் உதவி பெற்று நாம் இதனை விர்த்திசெய்யக் கருதலே அதிசீக்கிரம் நம்முடைய கருத்து முற்றுப் பெறுதற்கு ஏது என்பதூஉம், அதனை விரைந்து செய்தல் வேண்டுமென்பதுஉம் கருத்து.

W. T. கோவிந்தராஜ முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவவழிபாடு.

தொடர்ச்சி 4 பக்கம் 65· தொகுதி.

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப் பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவ்கள்
அண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை"

என்னும் பிரமோத்தரகாண்டச் செய்யுளால் மனிதர்க்குக் கண், கால், தலை, கை, நா, செவி, நெஞ்சு முதலாய வுறுப்புகள் யாவும் சிவவழிபாட்டிற்காகவே அமைக்கப்பட்டன வென்பதும், அவனுக்குச் செய்யும் அடிமையே அடிமைப்பயன் றரத்தக்கதென்பதும் தெள்ளிது புலனும். "வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவன்" "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், றாளை வணங்காத் தலை" என்பன முதலாகப் பெரியார் பணித்தருளுவன பலவுள, ஆதலால் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் தன்மை வாய்ந்த நாம் அனைவரும் சிவ வழிபாட்டிற்கு உரிமை உடையோம். பன்னாள் வழிபட்டும் சிவபிரான் வெளிப்பட்டருளவில்லையே யென்று மலையாது நமது கடமை வழிபடுதல் ஒன்றே யென்பதைத் திடமாகக் கொள்வோமாயின், நமக்கு அருள் செய்து உய்யக்கொள்வது அவன் கடமையே யாகும்.



"நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பத் திருத்துறைக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே" என்பது சுருதி.

இனி அவனுக்குச்செய்யும் வழிபாடுகள்யாவை? என்பதையாராய்வாம்.

சிவவழிபாடு விதிமார்க்கம் பத்திமார்க்கம் என இருவகைப்படும். விதிமார்க்கமாவது:—பல நூல்களைக் கற்று அறிவு முதிரப்பெற்று எல்லாப் பொருள்களின் நிலையாமையையும் இறைவனது நித்தியத்துவத்தையும் உள்ளவாறுணர்ந்து உலகப் பொருள்களிடத்தே உவர்ப்புக்கொண்டு தத்தம் ஜாதிமுறைகடவாது நின்று நல்லாசிரியனை யடைந்து சமய முதலிய தீக்ஷைகளைப் பெற்றுச்சரியையாகிய சிவபணிவிடைகளையும் கிரியையாகிய சிவபூஜைகளையும் மனத்தைப் புறம்போகவிடாது சாஸ்திர விதிப்படி செய்துவருதல். இவற்றுள் சரியையாவது ஆலயங்களிலே உருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்படும் புறத்தொழிலாகிய திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், மலர்மாலைசாத்தல், தீபமேற்றல் முதலியனவாம். இது தாசமார்க்கமெனவும் பெயர் பெறும். கிரியையாவது புறத்தொழில் அகத்தொழில் என்னுமிரண்டானும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்வதாகிய வழிபாடு. இது புது மலர் முதலிய பூஜோபகரணங்களைத் தொகுத்து ஐவகைச் சுத்திசெய்து சிவாசன மூர்த்தி மூலங்களாலே முறையே ஆசனமிட்டு மூர்த்தியை யெழுந்தருளச் செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்து மெய்யன்பினால் அருச்சித்துத் துதித்து வழிபடுதலாம். இது புத்திரமார்க்கமெனவும் பெயர் பெறும். இன்னும் இவற்றின் விரிமுறையை ஆசாரியர் உபதேசத்தாலறிக.

அகத்தொழில் மாத்திரையானே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு இயமமுதல் சமாதி யீறாகச் சொல்லப்படும் எட்டு வகைப்பட்டு விரிந்துள்ள யோகமாம். இது சகமார்க்கமெனவும் பெயர் பெறும். இந்த மூவகை வழிபாடுகளும் ஞானத்தை யுதிப்பித்தற்கு ஏதுக்களாம். இவற்றானே தான் ஞானம் பிறக்குமென்பர். இது சன்மார்க்கமெனப் பெறும். இனி இவற்றுள் ஒவ்வொன்றும் நன்னான்காய்ச் சரியையிற் சரியை முதல் ஞானத்தில் ஞானம் ஈறாகப் பதினாறு வகையென்று சொல்லப் பெறும். சிவஞான

சித்தியார் முதலிய நூல்களில் இவற்றின் விரிவைக் காண்க. ஞானத்தைப்பற்றி வேறு தனியாக விரித்துக் கூறுதும். சிவவழிபாடு செய்யும்போதும் ஜாதிமுறைகடவாது நடத்தல் வேண்டுமோ எனில் கூறுதும். திருநாளைப்போவார் நாயனார் முற்பிறப்பிற் செய்த புண்ணிய மிகுதியினாலே சிவபிரானிடத்து மெய்யன்புடையராகி யிருந்தும் தாம்புலையர் குலத்திற் பிறந்திருத்தலால் தம் ஜாதிமுறை கடவாது நின்றே பத்தி செய்யவேண்டு மென்பது கருதிச் சிவாலயங்கள் தோறும் சென்று பேரிகை மிருதங்கம் யாழ் முதலிய கருவிகட்குத் தோலும் வாரும் நரம்புங் கொடுத்தும், கோரோசனை கொடுத்தும், ஆலயங்களின் திருவாயிற் புறத்தே நின்று ஆடிப்பாடிக் கும்பிட்டு வணங்கி வந்தனர். சிதம்பரத்துக்குச் சென்றபோது நாயனார் தம் இழிகுலப் பிறப்பால் உள்ளே செல்லக்கூடாமைக்கு விசனித்து நகர்ப்புறத்தே வலஞ்செய்து கவலையுடன் துயில்போது சிவபிரானெழுந்தருளி நாளை அக்கினியில் மூழ்கிப் புனிதனாகி உள்ளே வந்து நம்மைத் தரிசிப்பாயாக வெனக்கட்டளையிட்டருள அவ்வாறே செய்து தரிசனை பெற்றுய்ந்தாரென்று பெரிய புராணங் கூறுமாற்றாற்காண்க.

எத்துணைப் பெரிதான சிவவழிபாட்டைச் செய்யினும் மனம் வேறொன்றிற் செல்லாவாறு அழுந்திய நிலையிலிருந்து செய்தாலன்றிப் பயனில்லை. சிந்தை வேறுபட்ட செயல் தீங்கே பயக்கும். இதனை,

கொந்தலர் கொய்யும் போது கூர்விழிமையலாலே
பைந்தொடி மடவார் தம்மைப் பார்த்தலாற் கைலைவெற்பிற்
சுந்தரன் பட்ட காதை யறிதிரோ துணர்மென் போதால்
அந்தணர்க் கீழ்க ளாவார் கீழ்களந் தணர்க ளாவார்,

என்னும் புட்பவிதிச் செய்யுளாலும், நக்கீரதேவர் சரவணப் பொய்கைக் கரையிலிருந்து சிவபூசை செய்துகொண்டிருக்கும்போது காற்றால் விழுந்த ஓர் ஆலிலையானது பாதிநீரிலும் பாதிகரையினுமாகப் பட்டு நீரில் பட்டபாதி மீன் வடிவாகிப் புனற்குள்ளிழுப்பக் கரையிற் பட்ட பாதி பக்ஷிவடிவாகி மேலேயிழுப்பக்கிடப்ப, சிவபூசை செய்துகொண்டிருந்த நக்கீரதேவர் அந்த ஆச்சரியத்திலே மனஞ் செலுத்தினர்.

(இன்னும்வரும்)

வியாசத்திரட்டு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதிபுண்ணியம்.

தொகுதி 4- பக்கம் 61. தொடர்ச்சி.

---

பசுதர்மமானது தலையானடந்து மோட்சமடைதல் போலும், சிவசரிதம் கேட்டு முத்தியடைதல் காலால் நடந்தடைதல் போலும், சிவபூசையால் வீடடைதல் பறந்து போதலை யொக்கும், மெய்யடியார்கட்கு அமுதுபடைத்தல் முதலான பூசையாலடைதல் பிரசண்டவாயு வேகத்தைப் போலும், ஞானத்தால் வீடடைதல் மனோவேகமென்றும் கூறப்பட்டுள்ளது.

"தலையால் நடந்துமுத்தி நிலஞ்சார்தலொக்கும் பசுதர்மம், கலையார் கரத்தார் சிவசரிதை காலால் நடத்தல் பறந்தடைதற், றலையே யொக்குஞ் சிவபூஜை தொண்டர் பூசையாலடைதல் மலையாவாயு வேகத்தால் மனோவேகத்தால் ஞானநிலை" என்றதனாற் காண்க.

ஆகையால் இப்பாவினங்களாற் சிவபூசை சிவதரிசனம் இவைகளினும் அன்பர்பணிசெய்தல் அமுதளித்தல் அவர்களைத்தரிசித்தல் முதலானவை மேலென விளங்குகின்றது.

ஆனால் சிவனடியார்களென்று போலியாகத்தானே விபூதி ருத்ராக்கங்களை மேல்தரித்து உள்ளத்தின்கண் காமக்குரோத முடையராய்ப் பஞ்சமாபாதகங்களைச் செய்தொழுகும் வஞ்சகரை யெப்படி அடியவரென்று சொல்லப்படும். ஆனால் அவர்கள் பெரியவர்கள் தரித்தற்குரிய விபூதி,ருத்ராக்கம், காவி முதலானவைத்தரித்திருந்தாலும், பசுவானது புலித்தோலைப் போர்த்து வஞ்சகமாக பயிரை மேய்தலொக்கும்.

"வலியினிலமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று" என்றதாலறிக.

பெரியவர்களுக்குரிய சின்னம்தரித்துப்பெரியவரைப்போல் பார்வைக்கு விளங்கினும் அவர்நடைகுணம் அவருக்கு வாராது.

"கற்பூரம் போலக்கடலுப் பிறந்தாலுங்
கற்பூரமாமோ கடலுப்பு-பொற்பூரும்
புண்ணியரைப் போலவிருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியராவாரோ புகல்" என்றதனாற் காண்க.

ஆகையால் திரிகரண சுத்தியுடைய மெய்யன்பர் பணியை மேற்கொண்டே சொல்லப்படுவது. இங்கு இவ்வுலகத்து மானிட சரீரமெடுத்தவர்கள் சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தல் அவர் திருவுருவத்தைத் தரிசித்தலே அவரடையும் பயனென்பது சத்தியமென நூல்கள் கூறியுள்ளன.

"மண்ணினிற் பிறந்தார் பெருப்பயன் மதிசூடு
மண்ணலாரடியார் தமையமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்த
லுண்மையா மெனினுலகர்முன் வருகெனவுரைப்பார்."
என்றதனாற் காண்க.

அல்லாமலும் ஆயிரம் அக்கிராரம் கட்டிப் பிராமணர்களுக்குத் தானஞ் செய்வதும் ஆயிரக்கணக்கான சிகரங்களையுடைய கோயில் முதலானவைகளைக் கட்டுவதும், உச்சிகாலத்து ஒரு சிவஞானிக்குப் பிச்சைபண்ணுவிக்கும் பகலூணுக்கு நிகர் ஆகாது.

"அகரமாயிரம் மந்தணர்க் கீயிலென்
சிகரமாயிரஞ் செய்துமுடிக்கிலென்
பகருஞானி பகலூண்பலத்திற்கு
நிகரிலையென்பது நிச்சயந்தானே" எனலாற் காண்க.

சிவாலயத்தில் சிவபெருமானுக்கு நைவேத்யமாயின் அடியார்கட்குத் திருப்தியாகாது. அடியார்க்கு மாகேஸ்வரபூசை நடத்தில் அது சிவபெருமானுக்குத் திருப்தியாகும்.

"படமாடக்கோயில் பரமற்கொன்றீயில்
நடமாடக்கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடக்கோயில் நம்பர்க்கொன்றீயிற்
படமாடக்கோயில் பரமர்க்கங்காமே" எனலாலறிக.

சிவஞானமிக்க பெரியவர்களுக்கு அவர் வேண்டிய பொருளை சிறிதளவு கொடுத்தவர்களுக்கு அப்புண்ணியமானது நிலத்தைப்



போலப்பரவியும் மலையைப்போலுயர்ந்தும், பிறவியாகிய சமுத்திரத் தழுந்தாவண்ணமெடுத்து மேலாகிய போகத்தைக் கொடுத்து மீண்டும் பாசத்தை யொழிக்க இந்த வுலகத்து உயர் குலத்துதித்துச் சரியை முதலிய மூன்று படியுங்கடந்து அற்புதமாகிய உண்மை ஞானத்தை யடைந்து சிவபெருமானுடனிரண்டறக் கலத்தலாகிய சாயுச்சிய பதவியைக் கொடுக்கும்.

"சிவஞானச் செயலுடையோர் கையிற்றானந்
திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயகடலினழுந் தாதவகை யெடுத்துப்
பரபோகந்துய்ப் பித்துப்பாசத்தை யறுக்க"

"தவமாரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணிச்
சரியைகிரியா யோகந்தன்னினுஞ் சாராமே
நவமாகுந் தத்துவ ஞானத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ளணைவிக்குந் தானே."

"தாளாற்றித் தந்தபொரு ளெல்லாந்தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு"

"உறக்குந் துணையதோ ராலம் வித்தீண்டி
யிறப்பநிழற் பயந்தாங் கறப்பயனுந்
தாஞ்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்துவிடும்."

இதுவரையில் மெய்யன்பருக்கு அமுதுபடைத்தல் அவருக்கு வேண்டியதைக்கொடுத்தல் சொல்லப்பட்டது. இதன்மேல்பெரியோர்கள் தரிசனையின்பலன் சொல்லுவாம்.

ஓர்காலத்தில் நாரதமுனிவர் தமது ஆசாரியராகிய சனற்குமார முனிவரிடம்சென்று அவரது பாததாமரைகளில் விழுந்து நமஸ்கரித்து நின்று, சுவாமி பெரியோர்கள் தரிசனைக்குப்பலன்யாதெனக் கேட்க, அவர் அதற்கு அதோசெல்லும் நரியைப்போய்க் கேளென்று சொல்ல, அவர்சீக்கிரமாகத்தானே நரியிடம்சென்று ஓ சம்புவே! பெரியோர்கள் தரிசனைக்குப் பலன்யாதென்று வினவ உடனே அந்நரி தொட்டென விழுந்து பொட்டென விறந்துபோயிற்று.

அதைக்கண்ணுற்ற முனிவர் மனக்கிலேச முடையவராய் ஆசாரியர்சமுகம் செல்லாது, திரிலோக சஞ்சாரியாய்ச்சிறிதுகாலங்கழித்து மீண்டும் குருசமுகம் வந்து முன்பிரசனையைக்கேட்க, அதோசெல்லும் மானிடஞ்சென்று கேளென, அவரதனிடஞ்சென்று ஓ சாரங்கமே! பெரியவர் தரிசனைக்குப் பலன்யாதென்று வினவிய மாத்திரத்தில், சாரங்கம் விழுந்து வேறங்கத்தில் புகுந்தது.

இதைக்கண்ணுற்ற முனிவர் கவலைமிக்குளராய்க் காலவரையறை சிறிது கழித்து இறைவனிடம் வந்துவணங்கிச் சுவாமி பெரியவர் தரிசனைபலன் அருள்செய்யவேண்டுமென, அதற்குத் குருசுவாமி அப்பா அதோ தெரியும் பதியில் ஓர் கிருகத்தில் ஓர் பசு கன்றுபோடப் போகிறது அக்கன்றைக் கேளது சொல்லுமென, உடனே அவர் அவ்வூருக்குப்போய் அவ்வீட்டை யடைந்து அப்போது பிரசவித்த அவ்விளங் கன்றைக் கண்ணுற்று ஆவின் கன்றே! ஆரணடியார் தரிசனைக்குப்பலனறையென அட்சணமே தட்சணம்சேர்ந்தது. அதுகண்ணுற்ற முனிவர் கவலையுந்துக்கமு மிக்குள்ளவராய், குருசமுகம் வந்து பாதத்தில் விழுந்து நமஸ்கரித்துச்சுவாமி! அடியேன் பெரியவர்கள் தரிசனைக்குப்பலன் கேட்டகாலத்துச் சம்பு மான் ஆன்கன்று முதலான மூன்றையும் கேட்கும்படி கட்டளையிட்டவண்ணம் யான்கேட்டமாத்திரத்திலவைகளிறந்து போயின. எனது சங்கை நிவாரணமாக வில்லையென, குரு ஆனால் இந்தப் பட்டினத்தரசனுக்குப் புத்திரனில்லை அவனுக்கு விபூதி கொடுத்துத் தம்பதிகளை ஆசிர்வதித்து வா அவனுக்குப் புத்திரன் பிறக்கும் அப்பிள்ளையைக் கேளது சொல்லுமென உடனேநாரதர் அரசனிடஞ்செல்ல அரசன் முனிவரைக்கண்டு வணங்கித் தங்குறைகூறத்தம்பதிகளுக்குவிபூதி கொடுத் தாசீர்வதிக்கமுனிவரருளால்கருவுற்று, மதியம்பத்துஞ்சென்றுமைந்தனைப் பெறுந்தருவாயில் அங்குநாரதர் எழுந்தருளி அக்குழந்தையைப் பூசம்பந்தப்படாமல் பொற்றும்பாளத்தில் ஏந்தச்செய்து நடுவேநிரையிடுவித்து அரசன்முதலானோர் தன்னைச்சூழ்ந்திருக்க முனிவர். மன்னவன்மைந்த! மகான்கள்தரிசனைக்குப்பலன்யாதென, உடனே அக்குழந்தையானது மகாமுனிவரே, நான்தாழ்வாகிய நரிசன்மத்தில்தேவரீரைத்தெரிசித்த பலன் சிறிதுஉயர்வாகிய மான்ஜென்மம்வந்தது, மீண்டுமப்போதுதரிசித்தபலன், மிருகங்களுக்கும் உத்தமாகிய பசுஜென்மம்வந்தது.



சுவாமிகளை அப்போது தரிசித்தபலன் அனேக சற்குணங்களும் நிறைந்து உலகமெல்லாமொருகுடையில் அரசாளும்அரசன் மகனாய்ப்பிறந்தேன். இன்னும் பெரியவர்கள் தரிசனைக்குப்பலன் யாது சொல்லப் போகிறேனென்று சொல்லி அக்குழந்தை வாயை மூடிக்கொண்டது. நாரதமுனிவர் கிலேசந்தீர்ந்து பேருவகையுற்றனர்.

ஆகையால் முன்சொன்னஇரண்டு புண்ணியத்திலும் இப்பதிபுண்ணியமே சிவஞானத்தையளித்துச் சிவபெருமான் பாததாமரையிரண்டறக் கலப்பிக்கச் செய்வது ஆகையா லிப்புண்ணியத்தையே சைவசமயப் பற்றுள்ள நாமெல்லாம் கடைப்பிடித் தொழுகல்வேண்டும்.

பாசபுண்ணியமானது மனைவிபுத்திரர் முதலியோரைக்குறித்துச் செய்வது. அப்படி செய்தலாலடையும்பயன் யாதென்றால் ஜென்மங்கள்தோறும் மாறிமாறிப்பிறந்து துக்கங்களை யனுபவித்தலேயாகும்.

பசுபுண்ணியமானது யாகாதிகிருத்தியஞ்செய்தல். தானதருமஞ்செய்தல் அதற்குப்பலனாவது சரீராந்தியத்தில் சுவர்க்கமனுபவித்தலேயாம். அந்தச் சுவர்க்கலோகமும் அங்குற்ற தேவர்கள் வாழ்வும் போகமும் அநித்தியம்.

அப்படி சுவர்க்கத்தை யடைந்தவன் இவ்வுலகத்து எவ்வளவு காலம் உடல் உளதோ அவ்வளவுதான் அங்கீகரிக்கக்கூடும். மீண்டும் மண்ணுலகம் வந்து பிறக்கிறதே பலனாகும்.

பதிபுண்ணியம் சிவபெருமானைக் குறித்தும் அவனடியார்களைக் குறித்தும் செய்வது. ஆனால் சிவபெருமானைக் குறித்துச் செய்யும் புண்ணியத்தினும் அடியவர்களைக்குறித்துச் செய்யும் புண்ணியமதிகம். இதற்குப்பலன் சிவஞானத்தை யடைந்து சிவபெருமானுடனிரண்டறக் கலத்தலாகிய சிவசாயுச்சியத்தை யடைதலேயாம்.

கா. வேதாசல முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உயிர்.

## உயிருண்மைக்குப் பிரமாணம்.

௧. உயிரென்பது சூன்யமென்றாலென்னையெனில், அவ்வாறு இல்லை யென்கின்ற அறிவுடனே சொல்வதொன்றுளதாய் நிற்றலால், அதுசூனியமன்றென்க.

௨. உடம்பே உயிரென்றாலென்னை யென்னில், உடம்பினிடத்தே நின்று, யானென்றும் எனதென்றுஞ் சொல்லப்படுஞ் செருக்கைப்பொருந்துதலால், உடம்பு உயிரன்று, உடம்பின் வேறுயுயிரென்பதொன்றுண்டென்க.

உடம்பின் வேறுயுயிருண்டென்பானேன்? இந்த உடம்பு தானே அறியுமென்றாலென்னையெனில், அவயவங்களிலொலே யொன்றுங்குறைவின்றிப் பிணமாகக் கிடக்கும்போது அவ்வுடம்பிலே அறிவில்லை ஆதலால் உடம்பு உயிரன்றென்க.

பிணமாகக் கிடக்கும்போது இவ்வுடம்பினுள்ளே பிராணவாயு நீங்கினபடியால் அறிவுநிகழாதென்பாயாயின், நீயுயிரெனக்கொண்டவுடம்பிற்குக் காரணமாயிருக்கின்ற பூதங்களின் கூட்டங்களிலே ஒன்றாயினுங் குறைவின்றிக் கிடக்கு முறக்கத்திலும் பிராணவாயு நிகழ்ந்திருந்தும் அறிவில்லை யாதலால், உடம்பு உயிரன்றென்க.

௩. மெய், வாய், கண், மூக்கு, செவிகளினிடமாயிருக்கின்ற ஐம்பொறிகளே உயிரென்றாலென்னையெனில், இவைகள் ஞானேந்திரியமாதலின் ஞானமாத்திரை யன்றி, ஞானங் கிரியை யிச்சையாகிய மூன்றையுமுடைமையால், ஐம்பொறிகளுயிரல்லவென்க.

பிணமாகுங்காலத்திற் கெடுவதாகிய ஐம்பொறிகளே இவ்வுடம்பினின்று நனவிலே யறியும் உறக்கத்திலே அறிதலின்றி யொடுங்



கிற்கு மென்றாலென்னையெனில், நனவிலே அவ்வைம்பொறிகளறிவதும் ஒவ்வொரு பொறியாக அறிவதன்றி அவைகளொருங்கே யறியமாட்டாவென்க. ஒன்றொன்றாக வறிவதே அவ்வைம்பொறிகளியல்பென்பாயாயின், அவ்வாறாயினும் அவ்வைம்பொறிகளிலே ஒருபொறியறிந்ததை மற்றொரு பொறி யறியமாட்டாது, ஆதலால் அவ்வைம்பொறிகளாலும் ஐம்புலன்களையு மறியத்தக்கதொன்றுண்டு அதுவே உயிரென்க.

௪. மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்னு நான்காகிய அந்தக்கரணங்களே அறிவு முயிரென்றாலென்னையெனில், இவ்வந்தக் கரணங்களுமுற்கூறிய ஐம்பொறிகளைப் போலவே ஒன்றையொன்றுணரமாட்டா ஆதலால் உயிரானது இவற்றின் வேறாகி யானெனதென்னுஞ் செருக்கு அதற்கேதுவாகிய *ஆணவமலத்துடனியைந்து நிற்குமாகலால், அவ்வந்தக் கரணங்களாலாகிய நான்கு தொழிலையும் அவற்றோடு கூடியறிந்து, அவற்றையடக்கவேண்டும்போது சொப்பன முதலிய அவத்தைகளிற் செலுத்தி †உட்கருவியாக்கி, அவற்றையாக்க வேண்டும்போது சாக்கிராவத்தையிற் செலுத்திப் ‡புறக்கருவிகளிற் போக்கி வேறு வேறு அவத்தையுற்று நிற்கும். ஆதலால் உயிர் அவ்வந்தக்கரணங்களின் வேறென்க. இனி இவ்வந்தக்கரண நான்கும் ஒரு விஷயத்தை யறிதற்குக்கருவியாகப் பொருந்தி உயிரோடொற்றித்து நின்று நிகழ்வனவாம். இவைகள் கண்ணுக்குவிளக்குப் போல உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பனவென்றறிந்து நீங்கிநின்று இவற்றைக்கொண்டறியுங் கருத்தாவாகிய உயிருண்மையை யுணர்ந்தவரே ஆன்மசொரூபத்தையுணர்ந்தோராவர். இங்ஙன மறியுமறிவே பசுஞானமென்க. இதனைத்தருவது சிவஞானம். அது பின்னர் வரும்.

இவ்வந்தக்கரணங்கள் நான்குடன் புருடதத்துவமொன்று கூட்டி ஆகவைந்தினையும் ஆங்காரம், புத்தி, மனம், சித்தம், ¶உள்

---

*ஆணவமலம் இன்னது என்பது சிவஞானசித்தியாரிலிரண்டாஞ் சூத்திரத்தாற் காண்க.

† உட்கருவி
‡ புறக்கருவி | சிவ—இரண்டாஞ்சூத்திரத்திற் காண்க.

¶ உள்ளம்—புருடதத்துவம்.

ளம் என்றிம் முறையே வைத்து, இவற்றினைச்செலுத்தும் அக்கரங்கள் முறையே அகரமும், உகரமும், மகரமும், விந்துவும், நாதமுமென *ஐந்தாகக்கூறி, இவ்வைந்தக்கரங்களையுஞ் செலுத்தும் அதிதேவதைகள் அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன் ஐவரெனக்கூறி, இம்முத்திறத்தைந்துடன் ஆன்மா இயைந்தவழி அறிதற்பயனுறுமென்றும், இயையாதவழிச் சடம்போல அறிவில்லாததோடொக்குமென்றும், இவ்வியல்பெல்லாம் இருவகைச்சுவாசமுமடக்கிச் செய்யும் யோகப்பயிற்சியினிது விளங்குமென்றுங் கூறினர். சிவஞான சித்தியாரிற் காண்க.

௫. முற்கூறிய கருவி கரணங்கள் முதலிய அனைத்துங் கூடிய கூட்டமாகிய சமுதாயமே உயிர் என்றுலென்னையெனில், அவையெல்லாநீங்கிய நிலையாகிய துரியாதீதத்திலே உளதாதலால் சமுதாயம் உயிரன்றெனக. துரியாதீதத்திலே யுயிருண்டென்பது விழித்த பின்னர்ச் சுகமாகத் துயின்றேன் என அறிவு நிகழ்தல்பற்றித் தெளிந்துகொள்க. இவ்வாறன்றி முற்கூறிய கரணங்கள் அக்கரங்கள், அதிதெய்வங்களாகிய பலபொருட்கூட்டமே உயிர்வடிவமென்பாயாயின், ஆராய்வார்க்குக் கூட்டமென்றொரு பொருளில்லையாகி அப்பலபொருளே உண்மையாகத் தோன்றுதலால் அக்கூட்ட மென்பது உயிரன்றென்க.

கூடுதலாகிய அவை பதினைந்துமே உயிர் என்பாயாயின், அறிவோரெல்லார்க்கும் அப்பதினைந்தும் அறிபவனாகிய ஆன்மா வேறாகவும் அறியப்படும் பொருளாகிய அப்பதினைந்தும் வேறாகவும் விளங்குதலால் அவை உயிரன்றென்க.

௬. சூக்குமவுடம்பே உயிரென்றுலென்னையெனில், அச்சூக்குமவுடம்பு கனவுடம்பெனக் கூறலாற், கனவின் மாத்திரமறியவேண்டும். அவ்வாறன்றிக் கனவிலே அறிந்தவிடயத்தைச் சாக்கிரமாயனவிலேயறிந்து நிற்பதாற் சூக்குமவுடம்பு உயிரன்றென்க. சூக்குமவுடம்பாவது மனதிதன்மாத்திரைகளாம். (சிவ - இரண்டாஞ் சூத்திரத்திற் காண்க.)

௭. பிராணவாயுவே உயிரென்று லென்னையெனின், கருவிகளொடுங்கின விடத்தே பிராணவாயு இயங்கி நிற்பதால் அப்போது அனுபவியாது, கருவிகளொடுங்காது விழித்தபோது இன்பத்துன்

* இவ்வைந்தக்கரமுஞ்சமட்டியிற்பிரணவமாம்.



பங்களை யனுபவித்து நிற்றலாற், பிராணவாயு உயிரன்றென்க. பிராணவாயு அடங்குதலும் விடுதலுஞ்செய்தாலே அறிவு நிகழக் காண்பதனால், அப்பிராணவாயுவே முற்கூறிய ஐம்பொறியையுங் கொண்டறிவதாகியவுயிர் என்பது பொருந்தும். உடம்பிலே உறக்கத்தில் அப்பிராணவாயு இயங்கினும் அங்கே கருவிகளில்லாமையால் அறிவில்லையாகி அறியாதாயிற்று என்பாயாயின், அது பொருந்தாது, அறியப்படுங் கருவிகளையுடைய கர்த்தா அப்பிராணவாயுவானால் அப்பிராணவாயுவாகிய கர்த்தா இருக்கும்போது அக்கருவிகள் அக்கர்த்தாவைவிட்டு நீங்குதல் கூடா. ஆதலால், அக்கருவிகளை யடக்குதலும் விடுதலுஞ்செய்து அப்பிராணவாயுவையுங் கொண்டு அறிவதாகியவுயிர் வேறுண்டென்க.

௮. பிரமமே உயிரென்றுலென்னையெனில், அறிந்தாங்கறிதலின்றி ஐந்தவத்தைப் பட்டறிதலானும், அறிவிக்கவறிதலானும், பிரமமுயிரன்றென்க.

## இனி ஆன்மவிலக்கணம்.

௧. சீவான்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணாமமாய்த் தோன்றி, அறிவிச்சைசெயல்களையடைந்து தீயுஞ் சூடும்போலப் பேதாபேதமாகிய குணகுணித்தன்மையுற்றுப் பலவேறுவகைப்பட்டு நிற்குமென்றுலென்னையெனில், அவ்வாறாகிய சீவான்மாக்களுக்குப் பொறிகரணமுதலிய கருவிகளைப்பொருத்தினாலன்றி அறியமாட்டாமைக்குக்காரணம் யாது? அதனால் அது பொருந்தாதென்க.

(இன்னும் வரும்.)

வியாசத்திரட்டு.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

## முகவுரை.

உலகத்தில் ஒவ்வொரு சமயத்தவருந் தங்கள் சமயமிதுவெனவும், அதற்குரிய கடவுள் இவரெனவும், அவரை ஆன்மாக்கள் வழிபடுமுறைமை யிதுவெனவும், அறிந்து அறிந்தபடி ஒழுகிவருகின்றார்கள். சைவர்கள் மாத்திரம் "சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழ்பெறலரிது" என்ற சுருதிப்படி அநேகபிறவிகளிற்செய்த தவவலியால் எல்லாச்சமயங்களையும் தன்னகத்தடக்கி அவைகளுக்கு மேம்பட்டு விளங்கும் சைவசமயத்தை அடையும்படியான ஊழைப்பெற்றும், அச்சமயம் இன்னது, அச்சமயக்கடவுள் இத்தன்மையர், அச்சமயாசிரியர் இன்னார், எனத் தெரிந்துகொள்ளாது மயங்குகின்றனர். சிலர், உயிர்ப்பலியேற்கின்ற காடன் மாடன் முதலிய பிசாசுகளைத் தெய்வங்களாகவும் கொண்டாடுகின்றனர். சிலர், சைவவேடங்களைப் பூண்டு வேதாந்திகளெனத்திரியும் வஞ்சப்பேய்கள் கையிற் சிக்குண்டு, தப்பவழி தெரியாமல் திகைக்கின்றனர். சிலர், மாயாவாதமென்னும் சுழல்காற்றினால் தாக்குண்டு கரைதெரியாமல் தத்தளிக்கின்றனர். சிலர், சைவசமயத்தின் உண்மைகளையுணர்ந்து, தாம் அனுசரிக்கும் வழக்கங்கள் தப்பென்று அறிந்திருந்தும், இவற்றைக் கைவிடுதற்கு வேண்டியதிடஞானம் இல்லாதவராய்ப் பயந்து தம்பழையதப்பான வழிகளிலேயே சென்று வருந்துகின்றனர். அந்தோ! பெறுதற்கரிய மானிடப்பிறவியைப்பெற்றும், மிகமேலாகிய சைவசமய மரபிலே பிறந்தும், இவ்வாறு அறிவின மென்னும் அந்தகார இருளில் நம் சைவசமயிகள் அழுந்திக்கிடப்பது யாவராலும் மிகவும் பரிதபிக்க தக்கதாம். ஆதலின் சைவசமயத்தின் உண்மைகளை ஆராய்ந்தறிந்து அவற்றைச்சைவசமயிகள் யாவருக்கும் பரவச்செய்வது முதற்கண் சைவமடாதிபதி



களையும், பின்னர்ச் சைவப்பிரபுக்களையும் பொறுத்த (முக்கிய) முதற் கடமையாகும். இவ்விஷயத்தில் நம்சைவசமயிகள் ஒவ்வொருவருமே தங்களாலியன்றவரை சிரத்தையெடுக்கக் கடமைப்பட்டுள்ளாராதலின், அவ்விதம் யாவர்களையும் தூண்டும்பொருட்டு இச்சிறு வியாசம் எம்மாலியன்ற கடமையாக வெளியிடப்பட்டது. இதில் சொந்தமென்பது வெகுசொற்பம், சைவசமயத்தையும் சைவசாஸ்திரங்களையும் ஆராய்ச்சிசெய்வதில் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்துப் புகழ்படைத்த பெரியோரிடமிருந்து எடுத்தெழுதப்பட்டதே மிகுதியாகக் காணப்படும்.

## சமயங்களின் பொது இயல்பு.

சமயங்களெல்லாம் கடவுள் ஒருவர் உண்டென்றும், அவருக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தம் இன்னதென்றும் காட்டப்புகும். கடவுள் ஒருவர் உண்டென்று ஒப்புக்கொள்ளாத சமயங் கிடையாது. கடவுள் இல்லையென்று சொல்லும் சமயங்களெல்லாம் சமயமெனப் பெயர் பெறா. மதம் என்னும் பெயரே அவைகளுக்குத் தகுந்த பெயராகும். ஒவ்வொருசமயமும அததற்குரிய கடவுள் எத்தன்மையர், அவருக்கும் ஆன்மாக்களுக்குமுள்ள சம்பந்தம் எவ்விதம், அவரை ஆன்மாக்கள் வழிபடுமுறைமை யெதுஎன்ற விஷயங்களைப் பற்றித் தங்கள் தங்கள் சமயத்துக்குரிய கொள்கைகளையே நிலைநிறுத்திமற்றச் சமயங்களின் கொள்கைகளைக் கண்டித்துப் பேசும் வித்தியாசமிருந்தால் மாத்திரம் சமயங்கள் வெவ்வேறாகப் பேசவேண்டுமேதவிர, கடவுளின் பெயரைமாற்றியழைப்பதினால் சமயபேதம் உண்டாகமாட்டாது. அவ்விதம் யோசிக்குமளவில் சைவசமயத்திற்கும் வைஷ்ணவ சமயத்திற்கும் அதிக வித்தியாசமில்லை.* ஆனால் சங்கராச்சாரியரை குருவாகக்கொண்டொழுகும் ஸ்மார்த்தருடைய மதத்திற்கும் மேற்சொன்ன சமயங்களுக்கும் நிரம்ப வித்தியாச முண்டு. இதுநிற்க.

## சைவசமயத்தின் சிறப்பு இயல்பு.

இனிச் சைவசமயத்தின் கொள்கைகள் என்னவென்பதைப் பற்றிச்சற்று ஆராய்வாம். சைவசமயமானது அதன்கடவுளாகிய "சிவம் அன்பின் வடிவம் சிவமும், அன்பும் ஒன்றே". என்னும் துணிபுடையதாம்.

*வைணவர்கள் சைவர்களைப்போலத் தம்மையுடைப் பொருளெனக் கொள்ளினும், உடைப்பொருளாகிய தமக்கு அணுப்பரிணாமமும், உடையானுக்குப்பரிணாமமும், உடையானல்லாதானை உடையானெனவும் மயங்கும் வித்தியாசமேயுண்டு, ப-ர்.

"அன்பும் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே" திருமந்திரம்.

ஆரியர் எழுதிய புராணக்கதைகளில் கலந்தமையால் சிவமென்னும் சொல்லின் இந்த அருமையான பொருள் சாமானிய சனங்களுக்குத் தெரியாவிட்டாலும் தமிழ்ப் பாஷையிலுள்ள சமயநூல்களில் காப்பாற்றிவைக்கப்பட்டிருக்கிறது. சிவம் அன்பின் வடிவாதலால் தாயுமானவர் என்று பெயர். நாமெல்லோரும் அவருடைய நேர்பிள்ளைகள். கடவுளுக்கு நேர்பிள்ளைகளாம் உரிமையையும் இந்தத் தெய்விக சம்பந்தத்தையும் குறிக்கவேவேளாளரின் பொதுப்பெயராகியபிள்ளையென்னும் பட்டம் எழுந்தது. ஞானப்பால்குடித்த பிள்ளையாகிய ஞானசம்பந்தப்பிள்ளையாரும் இந்தப் பட்டத்தையே தாங்கினின்றார். திராவிட வைஷ்ணவாசாரியர்களும் இப்பட்டத்தையே கௌரவமெனக்கொண்டொழுகினர். பெரியவாச்சான் பிள்ளையென வருவனவற்றைக்காண்க. இதுநிற்க.

## தமிழ்வேத சிவாகமங்களின் வரலாறு.

இனிச் சைவசமயத்திற்கு ஆதாரமாயுள்ள தமிழ்வேதத்தின் வரலாற்றைப் பற்றிச் சற்று விசாரிப்பாம். ஆதியில் அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமான் சர்வ ஆன்மாக்களும் தன்னையறிந்து உய்யும்பொருட்டு ஞானமயமாகிய வேதத்தைத் தமிழில் வகுத்தருளி அதனைத் தமது பிள்ளையாகிய முருகக்கடவுளுக்கு அநுக்கிரகித்தருளினார். அவர் தமது மாணாக்கராகிய அகத்தியர் முதலிய நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது முனிவர்களுக்கு அத்தமிழ் வேதத்தை உபதேசித்து அதற்கு அங்கமாயுள்ள முத்தமிழ் இலக்கண நூல்களையும் அவர்களுக்குப் போதித்துத் தமிழ்மொழியைப் பரிபாலித்து வந்தனர். பின்னர் அகத்தியர் தமது மாணாக்கராகிய தொல்காப்பியர் முதலாக நானூற்று நாற்பத்தொன்பது புலவர்களுக்குத் தமிழ் வேதத்தையும் அதற்கங்கமாய தம்மாலியற்றப்பட்ட அகத்தியமென்னும் இலக்கணநூலையும் போதித்து அவர்களால் அளவில்லாத பல அரிய நூல்களையும் இயற்றுவித்துத் தமிழ்மொழியை வளர்த்துப் பாதுகாத்து வந்தனர். இன்னும் வரும்.

C. சங்கரராயர் B. A.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916ஞு மேமீ [பகுதி ரு.

## யோகம்.

——:)o(:——

யோகமெனினும் சமாதியெனினு மொக்கும், யோகமெனின் சேர்தலென்று பொருள்படும். அதாவது ஜீவான்மா பரமான்மாவினுடன் ஒன்றுபடுதலாம். யோகாப்பியாசத்திற்கு மூன்றுநிலைமை பிரதி கூலமாகவும், இரண்டு நிலைமை அநுகூலமாகவுமுள்ளன. பிரதி கூலநிலைமைகளாவன:— சஞ்சலமான நிலைமை, ஒன்றுமறியாத நிலைமை, சொற்பகாலம் சஞ்சலமின்மையும் வெகு காலஞ் சஞ்சல முண்மையுமான நிலைமை. இவை முறையே க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம் எனப்படுவன. அநுகூலமான நிலைமைகளாவன:—ஓரேவஸ்துவை அவலம்பித்திருக்கிற நிலைமை, விருத்திபீஜமாகிய சம்ஸ்காரமாத்திரமேயன்றி விருத்தி சூந்நியமான நிலைமை. இவை முறையே ஏகாக்கிரம், நிருத்தம் எனப்படுவன. சித்த விருத்திகளை நிரோதம் செய்தலேயோகமாம். ஏகாக்கிரம், நிருத்தமிரண்டுமே யோகப்பயற்சிக்குமிக்க சாதனங்களாகும். யோகம் ஸம்பிரஞ்ஞாதயோகம் (ஸபீஜம்) எனவும், அஸம்பிரஞ்ஞாதயோகம் (நிர்பீஜம்)எனவும் இரண்டுவகைப்படும். ஓரேவஸ்துவை அவலம்பித்திருக்கின்ற நிலைமைஸம்பிரஞ்ஞாதயோகம். விரு

த்திபீஜமாகிய சமஸ்காரமாத்திரமேயன்றி விருத்தி சூந்நியமான நிலைமை அஸம்பிரஞ்ஞாதயோகம். இவற்றுள் முதலாவதே உத்தம யோகமாம், இவ்வியோகவப்பியாசத்திற்கு விபரியயம், விகற்பம், நித்திரை, ஸ்மிருதி இவற்றை நிரோதம் செய்யவேண்டும். விபரியயமாவது ஒரு வஸ்துவிற்குரிய சொரூபம் தோன்றாமல் பொய்யாகவேறொரு சொரூபம் தோன்றலாம். விகற்பமாவது வஸ்து உண்மையிலின்றி வார்த்தைமாத்திரம் அநுசரித்து உண்டாகு மனோவிர்த்தியாம். நித்திரையாவது வெளிவிஷய பிரஞ்ஞையின்றி அவித்தை சம்பந்தமான மனோவிர்த்தியாம். ஸ்மிருதியாவது அனுபவித்த விஷயம் மனத்தைவிட்டு நழுவாமலிருத்தலாம். இவற்றை நிரோதம் செய்யவேண்டுமாயின் அப்பியாசம், வைராக்கியம் என்ற உபாயங்களை அனுசரிக்கவேண்டும். அப்பியாசமாவது மனதைஸ்திரமாக நிறுத்தலின் முயற்சி. வைராக்கியமாவது பிரத்தியட்ச அப்பிரத்தியட்ச விஷயங்களில் அவாவின்றி அவைகளை ஸ்வாதந்தர்யம் செய்யுந்தகைமை. வைராக்கியத்திற்கு யதமானம், வியதிரேகம், ஏகேந்திரியம், வசீகாரம் என நான்கு சோபானங்களுண்டு. யதமானமாவது மனம் இந்திரிய விஷயங்களில் செல்லாமல் தடுக்குமுயற்சி, வியதிரேகமாவது நம்மால் வெறுக்கப்பட்ட விஷயங்கள் ஒரோவழி மேலிடுமேல் அவற்றில் வெறுப்புண்டாகை. ஏகேந்திரியமாவது இந்திரியங்கள் சலிக்காமலிருக்க மனத்தொழில் மாத்திரம் நடக்கை. வசீகாரமாவது விஷயங்களின் வசமாகாமல் அவைகளை நம்வசமாக்கல். அன்றியும் இந்த ஸம்பிரஞ்ஞாத யோகமானது விதர்க்கம், விசாரம், ஆனந்தம், அஸ்மிதை எனும் நால்வகைரூபத்தை அனுசரித்து நடக்கும். விதர்க்கமாவது ஸ்தூலவிஷயங்களிலொன்றை லட்சியஞ்செய்து தியானஞ்செய்வது. விசாரமாவது சூட்சுமமான விஷயங்களில் யேதேனுமொன்றை லட்சியம்செய்து தியானஞ்செய்வது. ஆனந்தமாவது ஸ்தூல சூட்சும விஷயங்களில்லாமல் இந்திரியங்களை அதனதன் ஸ்தானத்தில் நிறுத்தி அந்நிலையில் தியானஞ்செய்வது. அஸ்மிதையாவது இந்திரியங்களையும் விட்டு நான்என்ற பாவந் தனித்திருத்தல். இம்முறையில் மனதிற்கு யாதேனுமொரு ஆலம்பனம் (பிடிப்பு) உள்ளது. அதனாலிந்தயோகத்திற்கு ஸம்பிரஞ்ஞாத யோகமெனப் பெயர். மனத்தின் ஏகாக்கிர நிலையில் ஸம்பிரஞ்ஞாத சமாதியேற்படக்கூடியது. மனத்தின் நிருத்திநிலையில் அஸம்பிரஞ்ஞாதயோக மேற்படக்கூடியது, அதனால் அஸம்பிரஞ்ஞாதயோகம் நிரோகதயோகமெனப் பெயர்பெறும். அஸம்பிரஞ்ஞாதயோகம் பவப்பிரத்தியயம், உபாயப்பிரத்தியயமென விரண்டுவகையாம். பவப்பிரத்தியயமாவ்து அவித்தையைக் காரணமாகவுடையது. உபாயப்பிரத்தி



யயமாவது புருஷ ஸாட்சாத்காரத்தை யுண்டுபண்ணுவது. இதனால் மனமேனோக்கிப் புருஷதரிசனம் பெறும். இதுவே கைவல்லியநிலை, இந்நிலைக்குச் சிரத்தை, வீரியம், ஸ்மிருதி, ஸமாதி இவைகள் மூலம். சிரத்தையாவது மனத்தெளிவு, வீரியமாவது மனவுத்ஸாகம், ஸ்மிருதியாவது மனமிடையறாது தியானித்தல், ஸமாதியாவது மனச்சலனமின்மை. இவற்றுள்ளும் சிறந்தஉபாயமாவது இறைவனிடம் அன்பின்மிகுதியால் யோக (சமாதி) லாபம் பெறலாம். அதாவது வேறு வியாபாரமின்றிப் பத்தியினால் மாத்திரம் இந்தயோகம் (சமாதி) சித்திக்கும். இதுமனம், மொழி, மெய்களானிகழ்வது. ஈஸ்வரனைத் தியானம் செய்வதால் அல்லது ஈஸ்வரனுக்குத் தன்னை யர்ப்பணஞ் செய்வதால் யோக (சமாதி) சித்தியேற்படும். யோகத்தியானம் பலப்பட வேண்டுமானால், குறித்தஇடம், நியமித்தமுறை இவை மாறாமல் தினந்தினம் ஒழுங்குபெறச் செய்தல் வேண்டும். ஒரு நாள் ஒரு இடத்திலும், ஒருகாலத்திலும், ஒருமுறையாகவும், மறுநாள் இவைகளை மாற்றுதலும் அல்லது தியான்ம் செய்யாமலிருத்தலும், வேறொருநாள் சாவகாச மதிகமுளதென வெண்ணி அதிககாலந் தியானித்தலும் பயன்படாவாம். ஆனால் தியானம் நிகழும் காலத்தைச் சிறுகச் சிறுக அதிகப்படுத்திக்கொண்டு போத னலந்தரும். முதலில் ஈஸ்வரனைப் பலவாபரணங்கள் உள்ளவராகத் தியானிக்கவேண்டும். அந்தத்தியானம் ஸ்திரப்பட அவைகளி லொன்றொன்றாய் விட்டு அவரைத் தியானிக்கவேண்டும். பின்பு எல்லாவற்றையும் முற்றும் விட்டு அவரைத்தியானிக்கவும். பின்பு அவருடைய பல அங்கங்களைத் தியானிக்கவும், பின்பு அவரும் தியானிக்கிறவனும் ஒருவரெனத் தியானிக்கவும். அதாவது "ஸிவோஹம்" என்றவிதமாய் "அவரேநாம்" "நாமேஅவர்" என்பதாகத் தியானிக்கவேண்டும், பின்பு இந்தவித துவைத நஷ்டமுமற்று, "நான்" என்ற பிரஞ்ஞை மாத்திரம் நிகழு நிலைமை வரையில் தியானம் பெறுவதாகும். இதுவே யோகசமாதியாம். "சிவமேநானெனத் தேறின்காண்க" "சிவமானவாபாடி தெள்ளேனங்கொட்டாமோ" என்ற திருவாக்குக்களின் நிலைமையு மிதுவேயாம்.

நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே. திருமந்திரம்.

## மணவழகு.

OFFICE OF THE REGISTRAR ... 1915 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

அதன் பின்னர் நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பது புலவர்கள் மதுரையிலிருந்து தமிழ் ஆராய்ந்து அநேக அரிய நூல்களை இயற்றித் தமிழ் மொழியைப் பரிபாலித்து வந்தனர். இதன்மத்தியில் அந்நியதேசத்தவ ராகிய ஆரியர்களும், பௌத்தர் சமணர்முதலிய அந்நியமதத்தினர்களும் வந்து இத்தமிழ்நாடெங்கும் பரவி, தமிழ்மறையாகிய திராவிடவேதத்தை யும், அதற்கங்கமாயுள்ள இயலிசை நாடகமென்னும் முத்தமிழ் இலக்கண நூல்களையும் பயின்று, அவற்றுள் அருமையாயுள்ளன வற்றையெல்லாம் தங்கள் பாஷைகளில் மொழிபெயர்த்துக்கொண்டு அதன் முதனூலாகிய தமிழ்வேதத்தையுமழித்து, தங்கள் பொய்ம்மதங்களைப் போதிக்கும் அநேக தமிழ்நூல்களையும் அநேக ஆரிய நூல்களையுமியற்றி அவற்றால் நம் தமிழ் நாட்டரசர்களையும் நம் தமிழ்மக்களையும் மயக்கித்தங்கள் மதத்தினராக்கி நம்தமிழ் வேதத்தையும் சைவசமயத்தையும் மங்கும்படிசெய்து வந்தனர். அஃதுணர்ந்த கருணாநிதியாகிய சிவபெருமான் நம்மேற்கிருபை கூர்ந்து ஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர் நால்வர்களையும் மெய்கண்ட சிவாசாரியர் முதலிய சந்தானாசாரியர் நால்வர்களையும் நம் தமிழ்நாட்டில் அவதரிக்கும்படி செய்து அவர்களால் தமது திருவாக்காகிய திராவிடவேதத்தை மறுபடியும் வெளிப்படுத்தி, அத்திராவிட வேதத்தால் பௌத்தர்களையும் சமணர்களையும் வென்று அம்மதங்களின் கொள்கைகளைப் பூர்வபட்சஞ்செய்து தமிழ்வேதத்தின் முடிபாகிய சைவசமயத்தை ஸ்தாபித்தருளினர். மேற்கூறியவற்றால் பிற்காலத்தெழுந் தேவாரதிருவாசகங்களுக்கு முன்னும் தமிழ்வேதங்கள் இருந்தனவென உணர்க. இதனை

"சதாசிவந் தத்துவ முத்தமிழ் வேத
மிதாசனியா திருந்தேன் நின்றகாலம் .



161395

மிதாசனியா திருந்தேன் மனநீங்கி
யுதாசனியா துடனே யுணர்ந்தேமால்" எனச் சைவத் திருமுறைகளிலொன்றாகிய திருமந்திரத்தின்கண் திருமூலர்வாக்கானு மறிக.

அநாதியாய் ஞானமயமாயுள்ள இத்தமிழ்வேதத்தின் கருத்துக்களை விரித்துணர்த்தும் நூல்கள் சிவாகமங்கள் எனப்படும். இச்சிவாகமங்கள் ஆதியில் தமிழில் மட்டுமேயிருந்தன. இதன் உண்மை "ஏனைய வேளாளரும் ஆகமங்களாலும் அப்பொருளைக்கூறிய தமிழாலும் உணர்க" எனப்பண்டை நூலாசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்தமையாலும் நன்குஅறியப்படும். அவை பிற்காலத்தில் தென்தேசத்துட் புகுந்து சைவசமயத்தைத் தழுவி அங்குக் குடியேறியிருந்த சில ஆரியர்கள் பொருட்டு ஆரியத்திலும் எழுதப்பட்டன. ஆதலின் ஆகமங்களைப்பற்றி கூறுமிடத்து மட்டிலும், திருமூலர் "தமிழ்சொல் வடசொல்லெனு மிவ்விரண்டும் உணர்த்துமவனை யுணரலுமாமே" என்றனர் தமிழ்வேதம் சிவாகமம் இவ்விரண்டு முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட முதல்நூல்கள். பின்னர் சிவபெருமானை வழிபட்டுப் பதஞ்சலி கபிலர் உபமந்யூ கிருஷ்ணன் முதலிய பலமுனிவர்கள் அநேக வழிநூல்களும் சார்புநூல்களும் செய்தனர். அவை உபநிடதம் பகவத்கீதை முதலியனவாம்.

இனிப்பிற்காலத்து அவதரித்த சைவசமயாசாரியர்களெனப்படும். 1 ஞானசம்பந்தர் 2 அப்பர் 3 சுந்தரர் 4 மாணிக்கவாசகர் முதலியோர் தமிழ்வேதத்தின் உண்மைப் பொருளை உலகம் எளிதில் தெரிந்து உய்யும்படி தோத்திரரூபமாக வெளியிட்டனர். அவை தேவாரம் திருவாசகம் திருக்கோவையார் திருமந்திரம் முதலிய பன்னிரண்டு திருமுறைகளெனப்படும். திருக்கயிலாச பரம்பரையில் வந்த சந்தானாசாரியர்களாகிய மெய்கண்ட சிவாசாரியர் அருணந்தி சிவாசாரியர் மறைஞானசம்பந்த சிவாசாரியர் உமாபதி சிவாசாரியர் என்ற நால்வரும் தமிழ்வேதத்தின் ஞானபாதப்பொருளைச் சாஸ்திரரூபமாக வெளியிட்டனர். அவை சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாச முதலிய பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களாம்.

## தமிழ்வேதமும் சித்தாந்தமும்:—

தமிழ்வேதத்தின்முடிவே சித்தாந்த மெனப்படும். சிவபெருமானருளிய ஆகமங்களின் முடிவும் இச்சித்தாந்த மாதலால் இதற்கு ஆகமாந்தமென்று பெயர். சைவமுனிவர்களால் ஆரியரிஷிகளுக்கு உபதேசிக்கப்பட்ட மொழிகள் தாம் உபநிடதங்கள். உபநிடதங்களியாவும் சைவமுனிவர்களால்

R673 M924 N12
N12-5

ஆக்கப்பட்டன வென்பது அந்த நூல்கள் பலவிடத்தும் சிவநாமத்தையே எடுத்துத்துதித்தலால் நன்கு அறியப்படும். இவ்வுபநிடதங்களையே ஆரியர் வேதாந்த மென்று கூறுவர். பலபடக்கிடந்த உபநிடதங்களைச் சுருக்கி வியாசர் இயற்றிய சூத்திரம் வேதாந்தசூத்திரமெனப்படும். வேதாந்தமும் சித்தாந்தமும் பதி, பசு, பாசம் என்னும் திரிபதார்தத்தின் இலக்ஷணங்களையே கூறப்புகுந்தவையாயினும், வேதாந்தமாயாவாதிகள் பலருக்கும் அவரவர் கன்மானுகுணமாகக் கிடைத்த அறிவிற்குத்தகுந்தபடி விபரீதப் பொருள்படக்கிடக்கும். சித்தாந்தமோ அவ்வாறாகாது ஆகமவிதிப்படி ஓதியுணர்ந்தார் எவர்க்கும் உண்மைப்பொருள் தெரிய உணர்த்தும். சமயம், விசேடம், நிர்வாணம் என்ற மூன்று தீக்கைகளையும் செய்யப்பெற்றுச் சைவாகமத்தின் முறைப்படி ஓதியுணர்ந்தார்க்கன்றி, வேதத்தின் உண்மைப் பொருள் ஒருவாற்றானும் தெரிந்துகொள்ளுதல் முடியாது. ஜனகர் முதலிய முனீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள் வரை ஓதியும் ஞானம் நிலைபெறுதவராய்ப் பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானநிலை பெற்றனரென்று ஸ்காந்தத்தில் சங்கர சங்கிதையில் கூறியவாற்றால் இவ்வுண்மை தெளிக. இவ்வுண்மைப்பொருள் தெரிக்கும் சைவசித்தாந்தத்தையே "வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலை" எனத்தாயுமானவரும் "வேதாந்தத்தெளிவாம் சைவசித்தாந்தம்" எனப்பிறசான்றோரும் குறிப்பித்திருக்கின்றனர். வியாசர் இயற்றிய வேதாந்த சூத்திரத்திற்கும் தமிழ்வேத சிவாகமங்களின் உண்மைப் பொருள் நன்குணர்ந்த நீலகண்ட சிவாசாரியர் சைவசமயபரமாக முதன் முதல் ஓர் பாஷ்யம் செய்தனர். பின்னர், சங்கராச்சாரியர், இராமானுஜாசாரியர், மாத்துவாசாரியர்மூவரும் முறையே மாயாவாத, வைணவ, மாத்துவசமயபரமாக மூன்று பாஷ்யங்கள் செய்தனர். சைவர்களால் ஒப்புக்கொள்ளப்படுவது நீலகண்டபாஷ்யம். இதனையே சுத்தாத்துவிதம்* யென்பர்.

ஸ்மார்த்தர்களால் ஒப்புக்கொள்ளப்படுவது சங்கரபாஷ்யம். இதனை கேவலாத்துவிதம் அல்லது மாயாவாதமென்பர். வைஷ்ணவர்களால் கொள்ளப்படுவது இராமானுஜபாஷ்யம். இதனை விசிட்டாத்துவிதம்† என்பர். மாத்துவர்களால் கொள்ளப்படுவது மாத்துவபாஷ்யம். இதனைப்பேதத்துவிதமென்பர்.

* சுத்தாத்துவித மன்று அறுவகைச் சமயத்துளொன்றாகிய சிவாத்துவிதமாம் ப-ர்.

† விசிஷ்டாத்துவித பிரயோகம் நூற்றெட்டு உபநிடதங்களிலுமில்லை. இப்பிரயோகம் பாஞ்சராத்திரிகள் கற்பித்தது. ப-ர்.



துவிதம் என்றால் இரண்டெனப் பொருள் படும். அத்துவிதம் என்ற சொற்கு இரண்டல்லாதது என்பது பொருள். சித்தாந்தத்தில் அத்துவித நிலையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒன்று பட்டுநிற்றல். பிரமமும் ஆன்மாவும் எனப்பொருள் இரண்டில்லை ஒன்றேயெனக்கூறுவர் மயாவாதிகள். பிரமும் ஆன்மாவும் வெவ்வேறு பொருளெனவும் அவ்விருபொருளே இரண்டென வேற்றுமைப்படாது அது இதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றலும் உண்டு. அந்நிலைதான் அத்துவித நிலையெனக்கூறுவர் சைவசித்தாந்திகள். அத்துவிதம் என்ற சொற்கு "இரண்டு இல்லை" எனப் பொருள் கொள்வர் மாயாவாதிகள். "இரண்டல்ல" (இரண்டு அல்லாத நிலை) எனப்பொருள் கொள்வர் சைவசித்தாந்திகள். கடவுளும் ஆன்மாவும் ஒன்றே. அகம்பிரமம், நான்தான் கடவுள் என அகங்கரித்து வாதிப்பது மாயாவாதம் போலி வேதாந்தம். வேதாந்தத்தின் மெய்ப்பொருள் நீலகண்ட சிவாசாரியார் பாஷ்யத்தால் மட்டும் நன்கு விளங்கும். மற்றையோர் உரைத்த பாஷ்யங்களும், அவர் வேதாந்தமெனப் பெயரிட்டியற்றிய நூல்களும் சிவபெருமான் அருளிய ஆகமங்களுக்கு விரோதமான (அந்நியசமயக்) கொள்கைகளையுடையன வாதலால் அவற்றை மெய்யெனக்கொண்டு மயங்காதொழிக.

சைவசமயமானது ஆன்மாக்களுக்கு வேறாய்க்கடவுள் ஒருவர் உண்டென்றும், ஆன்மாக்கள் கடவுளைச் சரீரமாகிய ஆலயத்தில் பூஜிக்கவேண்டுமென்றும் அவ்விதம் பூஜிக்கு முறை எக்காலத்தும் யாவரிடத்தும் உண்மை பேசுதலும் மனதைப்பற்றும் அழுக்குகளையெல்லாம் நீக்கி எல்லாஜீவரிடத்தும் இரக்கமும் அன்புஞ் செலுத்தி, தனதென்று ஒன்றையும் பாராட்டாது தன்னை முற்றிலும் கடவுளுக்கே ஒப்புவித்து, பரோபகாரத்திற்குப் பாடுபடுதலாமென்றும், அங்ஙனம் செய்தல் கடவுளின் அருளைப் பெற்று முத்தியடைதற்கு வழியென்றும் சொல்லும்.

மாயாவாதமானது ஆன்மாவே கடவுளென்றும், தாமே கடவுளாதலால், வழிபடுமுறை யாதொன்றும் வேண்டப்படுவதில்லை யென்றும், அவித்தையினின்று நீங்கித் தன்னைக் கடவுளென்று அறிதலே முத்தியென்றும் அவ்விதம் அறிதலே மாயையைநீக்கி முத்தியையடைதற்கு வழியென்றும் கூறும். சைவசமயமானது கடவுளிடத்தில் சகலதிவ்விய குணங்களும் பூரணமாய் நிரம்பியிருத்தலால், ஒரு ஸ்திரீ தன்நாயகனை அனுபவித்

தல்போல, முத்தியில் ஆன்மாவானது சிவனை எல்லாத் தன்மையிலும் அநுபவிக்குமெனக் கூறுகின்றது. மாயாவாதமோ, ஆன்மாக் கடவுளேயாதலால் முத்தியில் ஆன்மா கடவுளுடன் சேர்ந்து ஒழிந்துபோகின்றதென்று சொல்லுகின்றது. சைவசமயம் ஜீவஹிம்சை முற்றிலுங்கூடாதென்று மறுக்கின்றது. மாயாவாதத்திலோ சிரார்த்தம் யாகம்முதலிய காரியங்களுக்கு மாமிசம்வேணுமென்று வற்புறுத்துகின்றது, சைவநூல்களில் சைவசமயத்தை நோக்கிச் சமயங்களெல்லாம் (புறச்சமயம் அகச்சமயம்) அந்நிய சமயம், இனச்சமயம் என இருவகைப்படுத்தப்பட்டு அப்புறச்சமயம், அகச்சமயம் ஒவ்வொன்றும் தனித்தனி தம்முள் வேறுபாடு நோக்கி அறுவகைச் சமயங்களாகப் பிரிக்கப்படும். புறச்சமயங்களாகிய உலோகாயதம் பௌத்தம், சமணம் முதலிய சமயங்களைப்போலச் சங்கராசாரியர் மதமாகிய மாயாவாதமும் இவ்வறுவகை அந்நிய சமயங்களில் ஒன்றும். இவ்வந்நிய சமயங்களையும், ஏகதேசம் சைவசமயத்தோடு இயைபுபட்டு நிற்கும் இனச் சமயங்களையும் கடந்து மேல் நின்றது சித்தாந்த சைவம். ஆகவே சைவ சமயத்திற்குப் புறம்பாகவுள்ள சங்கராசாரியரும் அவரது சிஷ்யராகிய ஸ்மார்த்தர்களும், சிவதீக்ஷைபெற்றுச் சைவராக்கிக் கொள்ளாதிருக்கும் வரை சைவசமயிகளெனப் படுவதற்காவது சைவசமயிகளால் தொடுதற்காவது அருகரல்லர். உண்மை இங்ஙனமாகவும் தற்காலத்துச் சைவசமயிகளுட்பலர் அந்நியசமயத்துள் ஒன்றாகிய மாயாவாதத்திற்குரிய ஆசாரியரை வேட ஒற்றுமைபற்றித் தமது ஆசாரியரென மயங்கிவழிபடுதலும் மாயாவாதத்திற் குரிய நூல்களைத் தமது சமய நூல்களெனப் பாராட்டுதலும் என்ன அறியாமை! எவ்வளவு பேதமை! இவ்வுண்மைகளை நமது சமய சந்தான ஆசாரியருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரியரும்

"புறச்சமய நெறி நின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவ
திறத்தடைவரிதிற் சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என விளக்கிக்கூறியுள்ளாரதலின் அந்நிய சமயத்தினுள் ஒன்றெனக் கருதப்படும் மாயாவாதி குருவாகிய சங்கராசாரியரும் அவரது சிஷ்யர்களாகிய ஸ்மார்த்தர்களும் சுத்தசைவ சிலர்களுக்கு எவ்வளவு தாழ்ந்த பதத்திலுள்ளவர்களென்பதைச் சைவ சமயிகள் ஒவ்வொருவரும் உய்த்துணரக்கடவர். உணர்ந்து அவர்களது வேஷ ஆடம்பரங்களினால் ஏமாந்துபோகாது தமது சமயப்பெருமையை அவர்களுக்கு உபதேசிக்கக் கடவர்.

இன்னுவரும்,
**C. சங்கரராயர் B. A.**

OFFICE OF THE ... ISTRAR OF ...
22 JUN 1916
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவவழிபாடு.

தொகுதி-ரு பக்கம் 82. தொடர்ச்சி.

சிவ பூஜாகாலத்து வேறொன்றில் மனஞ்செலுத்தியதனால் உடனே அவண் ஒருபூதம் வந்து அவரைத் தூக்கிச் சென்று மலைக்குகையுள் முன்னமே தன்னாலிங்ஙனம் வைக்கப்பட்ட தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மருடன் சேர்த்து வைத்ததும், தேவர் முருகக்கடவுள் மீது திருமுருகாற்றுப் படைபாடி அப்பூதத்தை வென்று மீண்டதுமாகிய பிரசித்த சரித்திரத்தாலும் நன்குதெளிக. கைலாசவாசியாகிய ஆலாலசுந்தரரும் மெய்யடியாராகிய நக்கீரதேவருமே சிவவழிபாடு செய்யுங்கால் சிந்தனை சற்றே புறம்பான குற்றத்திற்காக இப்பாடுபடுவார்களாயின் ஏனையர் விஷயத்தில் சொல்ல வேண்டுவதின்றே! இங்ஙனம் வேதாகமாதிகளில் கூறப்பட்ட விதி வழுவாது சிவபணிசெய்வது விதிமார்க்கம் எனக்கொள்க.

பக்திமார்க்கமாவது:—முற்பிறவிகளிலே விதிமார்க்கந் தவறாது சிவவழிபாடு செய்து சிவனிடத்தே செலுத்தி வந்த மெய்ப்பத்தி முதிர்ச்சியாலே செய்யத்தகுவதின்னது செய்யத் தகாததின்னது என்ற பாகுபாடு கருதாது பரவசப்பட்டுச் சிவபிரானுக்குப் பணிச்செய்தலாம். கண்ணப்ப நாயனார் இந்தப் பக்திமார்க்கத்தே செல்லப்பெற்றவராதலின் விதிநிஷேதமாக இவர் செய்த மாமிசநிவேதனாதி எல்லாச்செயல்களும் சிவபிரானுக்கு இனியவாயின. மனமானது தன்னைமறந்து தலைவன் வசப்பட்டு நிற்கும்பொழுது செயல்கள் தான் பத்திமார்க்க மெனப்படுமாதலின் இந்நிலையில் நின்றோர்செயலை ஏனையர் பின்பற்றி யொழுகல் கூடாது.

"வெள்ளமிகுத் தேரிநடு வுடைத்தோடி னதுகலிங்கா விடுகிலாரப்
பள்ளமடைத் திருபுறத்துங் கரையடைவிடுவ ருலகோரப் பரிசுபோல
வுள்ளமிகுத் தறிவெழலாற் பத்திமிகுத் தமையானொன் றொருவர் செய்யிற்
றெள்ளுணர்வோ ரதனைவிதி யென்றுபின்னும் புரிகுவரோ தெளிவி லோ
யே"

என்னும் செய்யுளும் இக்கருத்தையே வலியுறுத்துமாறுணர்க. இங்ஙனமாக இருவகை மார்க்கத்துள் எந்த மார்க்கத்தைப்பற்றி நின்று வழிபாடு செய்யினும் அது நமது கடமை யென்பதுமட்டுங் கருதிச் செய்ய வேண்டுமேயன்றி யாதொரு பலனையும் இச்சித்துச்செய்தல் கூடாது. அதுதான் உத்தம சிவவழிபாட்டின் முக்கிய இலக்கணம். இறைவன் ஆண்டான், நாம் அடிமை, ஆதலால் அவனுக்கு நாம் எக்காலத்தும் வழிபாடு செய்யும் கடமையுடையோம் என்ற எண்ணத்துடனே பணிசெய்ய வேண்டும். இங்ஙனமே வழிபாடு செய்யவேண்டு மென்பதை

"கேடு மார்க்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடுமன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."

என்னும் பெரியபுராணத் திருப்பாசுரத்தானுங் காண்க.

**இனி வழிபாட்டால் அடையும் பயன் என்ன?** என்பதை யாராய்வாம்.

அவரவர் செய்த வழிபாட்டின் தகுதிக்கேற்ப இம்மையில் அரசனாதலும், மறுமையில் இந்திரபதவி, பிரமபதவி, விட்டுணுபதவி முதலியவைகளை யெய்தலும் சிவவழிபாட்டினாலேயாம். "வேண்டுவார் வேண்டுவதே யீவான்கண்டாய்" எனலால் எவ்வெவர் எதனை விரும்பினார்களோ அவ்வவர்க்கு அதனைக் கொடுத்தருளுவர்.

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாச் செய்தனையே.

"வண்டுளருந் தண்டுளாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்"

என்பன வாதிய திருப்பாசுரங்களால் பூதலவரசனாகவும், இந்திரனாகவும், பிரமனாகவும், விட்டுணுவாகவும் செய்விப்பது சிவவழிபாடா மென்பது காண்க. தேவ தேவனாகிய சிவபிரானை வணங்கிய பின்பு அச்சிவபிரான் யாது செய்வரெனில் தன்னைத்தொழுத தொண்டர்களை, முன்னர் அவராற் றொழப்பெற்ற மற்றத் தேவர்களெல்லாம் வணங்கத்தக்க உயர்பதவியிலிருத்தியருளுவர்.



"முழுத்தழன் மேனித் தவளப் பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பாஞ் சோதியை யெங்கள் பிரானை யிகழ்திர் கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படுவானை தொழுத பின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மாற்றொழு விக்குந்தந் தொண்டரையே."

என்ற தமிழ்வேதவாக்கு மிகப்பாராட்டற் குரியதாம். இவைகளெல்லாம் காலாந்தரத்தில் மாறத்தக்க பதமுத்திகளே யாதலின் இவற்றிற்குமேலாயதும், இரும்புண்டநீரும், சமுத்திரத்தையடுத்த நீரும் திரும்ப வாரதது போல மீளாவண்ணம் அப்புஅணைந்த உப்புப்போல ஆன்மா இறைவனைச் சார்ந்து கால் × தலை-காறலை, தாள் × தலை-தாடலை என்றபோது றகர டகரங்கள் ஓரெழுத்தென்றும் ஈரெழுத்தென்றும் சொல்லமுடியாமல் இருப்பதுபோல் அத்துவிதமாகின்ற முத்தியின்பமும் தரவல்லது இச்சிவ வழிபாடேயாம். சரியைத்தொண்டருக்குச் சிவசாலோகமும், கிரியைத்தொண்டருக்குச் சிவசாமீபமும், யோகருக்குச் சிவசாரூபமும், ஞானத்தவர்க்குச் சிவசாயுச்சியமும் முறையேயென்பர்.

சிவபிரான் தன்னடியார்களது உடல்பொருளாவிகளை ஏன்றுகொண்டு அவர்களைத் தன்மயமாக்கி யருளுவதை

"அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாங்
குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ வதற்கு நாயகமே."

என்னும் மணிவாசகப்பெருமான் திருவாக்காலறிக. இங்ஙனம் உடல் பொருளாவிகளை இறைவன் ஏன்று கொள்ளினும் அவற்றால் இறைவற்கோர் பயனுமில்லை யெனவும், இறைவனைப்பெற்ற நான் அளவற்ற நிரதிசய இன்பமெய்துகின்றேன் எனவும் அந்த மணிவாசகப் பெருமானே வியந்து பாராட்டிக்கூறும் அருமையை

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர், அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாதுநீபெற்ற தொன்றென்பால், சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே, யெந்தையே யீசாவுடலிடங் கொண்டா யானிதற் கிலனோர்கைம்மாறே."

என்னுந் திருப்பாசுரமே யினிதுவிளங்கும்.

(இன்னும் வரும்.)

வியாசத்திரட்டு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# தெய்வச்சேக்கிழார்

# திருவாக்குண்மை.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்."

நன்னெறிப் பேற்றிற்கேதுவாகிய முற்றவ விசேட முடையரும் பருவமுதிர்ச்சி யுடையருமாகலான் அவர்தாம் தமது ஞானசத்தி அன்னிய மின்றித்தமக் காதாரமாய் உடனின்றறிவித்து உபகரிப்பதாய முதல்வனது ஞானசத்தியேயாய் நிற்றலின் தன்னறிவென வேறாய் அறியுமாறின்றி அதனறிவேயா யறிவதாய தமது ஞானசத்தியதியல்பும், இனியவர் தமது இச்சாசத்தி மேலோதியவாறு நின்று இச்சித்துபகரிப்பதாய முதல்வனது இச்சாசத்தியேயாய் நிற்றலின் தமது இச்சையென வேறாயிச்சித்தலின்றி அதனிச்சையேயாய் இச்சிப்பதாய தமதிச்சாசத்தியதியல்பும், இனியவர் தமது கிரியாசத்தியும் அவ்வாறே நிற்றலின்தமது செயலென வேறாய் செய்யும் செயலின்றி அதன்செயலேயாய்ச் செய்வதாயதமது கிரியா சத்தியதியல்பும், இனி அசத்தானறிவு விளங்கும்வழி தனக்காதாரமாகாது வேறாய்நின்றுபகரிப்பதாய ஆகமமென்னும் அபரஞானமும் அசத்தைஉணர் தற்குரிமை யில்லாதாய மேலதற்கு மறுதலையாய் நின்று உபகரிப்பதாய பரஞானமும் ஆகியஇவற்றை இந்நிலையில் தன்னறிவு அச்சிவனடியுளடங்கி அறிவிறந்தறிந்தனர் அந்நிலைபோல. (எ-று.)

முதல்தவத்தர் சம்பந்தர் தாம் சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் ஓங்கிய இனின் பாங்குஞானம் பவமதனை யறமாற்று ஞானம் அந்நிலையின் உணர்ந்தார் எனக்கூட்டுக.

சிவனடி-சிவசத்தி. அறிவிக்கு முபகாரமாத்திரையே ஆண்டு அறியு முபகாரம் உளதென்பதியை பில்லை யென்பதனையும் பசுகரணம் சிவகரண நின்றறியு மென்பதே இயையுமென்பதனையும் நீக்குதலின் ஏகாரம் இயை



பின்மை நீக்குதற்கும் பிறிதினியையு நீக்குதற்கும் பொதுவாய்நின்ற பிரி நிலை. தேற்றமெனினும் அமையும். சிந்தித்தல்—எவற்றையு மொருங்கே பொதுவாயறிதல் போலாது சிறப்பாயறிதல்.

பாச வறிவின் நீக்குதற்குத் திருவெனவும், மலத்தடைதீர்ந்துஏகதேச விடுதியுடைத்தென்ப துணர்த்தற்குப் பெருகும் எனவும் விசேடிக்கப்பட் டன. சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு என்றது மாற்றுதல், பாங்கு என்பவற்றோடுங் கூட்டியுரைக்கப்பட்டது. கிரியாஞானத்தை ஞானமென் றது தலைக்குறை. ஆண்டுசிந்தித்தல் என்பது "எத்திறம் ஞானமுள்ள தத்திறமிச்சை செய்தி" என்பவாகலின் பிள்ளையாரதிச்சை கிரியைகட் கேற்ப இச்சித்தல் செய்தல் எனக் கொண்டுரைக்கப்பட்டது: சிவனடி யென்பது பொதுச்சொல். முன் வரும் ஞானம் என்பதும் அது. சிவ ஞானம்—சிற்சத்தி. அவை முறையே அப்பொருளாமாறு "சிவசத்து என்பது சித்துச்சத்து என்னும் பொருட்டு" எனவும் ஞானம் சத்திக்குப் பரியாயப்பெயரெனவும் உரைத்தருளிய உரையோத்துடையார் திருவாக் கானுமறிக. மும்மலவறுதிகாட்சிப் புலனாதல் செல்லாமையின், காட்சிப் புலனாயெளிதினறியப்படுவதாய பிறவியறுதியையே ஈண்டோதினார். படி முறையின் வைத்துணர்த்துதல் மரபாகலின் பற்றறக்கழித்தொழிப்பதென் பார் மாற்றுமென் றொழியாது அறமாற்று என வைத்தோதினார். அது பகுதிப் பொருள்விகுதி. பாங்கு—இச்சை. அது இச்சைக் குரியாரை பாங் கன் பாங்கி எனவழங்கு மாற்றானுமறிக. இன்ப இன்பம் எனற்பாலது இனின் எனத்திரிந்து நின்றது. இன்பு இன்பம்—இன்பத்துளின்பு. அதா வது ஏனை இன்பெல்லாம் துன்பாமாறு நிகழும் இன்பு. ஓங்குதல்—மீது ருதல். ஓங்கிய இனின்பாங்கு ஞானம் என இயையும். அத்துவித வுரிமை யறியுந்தோறும் அறியுந்தோறும் அப்பொருட்கட் செல்லுமிச்சை அடங் காது மீதூருமாகலின் அவ்வழி அவ்விச்சையேதானாக விளங்கித்தோன்றும் பேரானந்தம் என்பது தேற்ற ஓங்கிய இன்ப இன்ப பாங்கு ஞானம்எனப் பட்டது. ஞானம் என்பது மாற்றுதல், பாங்கு என்பவற்றோடு தனித் தனி சென்றியையும். அறிவு இச்சை செயல்கள் மூன்றுமொருங்கே உட னாய் நிகழுமிடத்தின்கண் என்றவாறுரைப்பினு மமையுமாகலின், அதுபற்றி ஈண்டுச் செயலிச்சை யென வைக்கப்பட்டது. சிவனது இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சி சிவனது இச்சாஞானக் கிரியைகளின் நிகழ்ச்சியை யின்றியமையாமையின் இவ்வாறு வைத்தோதப்பட்டது. அது "விரும்பு மாவிரும்பே" "பணியுமாபணியே" "கருதுமா கருதே" என்னும் அநுபவ முடைய ஆசிரியர் திருவாக்கானுமறிக. "அடிக்கீழ் நாமிருப்பமே" எனப்

பிள்ளையார்க்கு முன் நிகழும் அநுபவ நிகழ்ச்சி பற்றியும் அது அங்ஙனமா
தல் தெற்றென அறியப்படும். "உறவுகோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக் கடைய" என்றதும் அது. உவமையிலா எனவே உயிர்விலா
என்பதூஉம் பெறப்படும். அது செய்பவனியல்பு செயப்படு பொருள்மேல்
வைத்து உபசரிக்கப்பட்ட உபசாரம். தம்முள் வியாப்பியமாய ஏனைக்கலை
களின் நீக்குதற்கு அவ்வாறு விசேடிக்கப்பட்டதென்பது உணர்தற்குச்
செயப்படுபொருள் அவாய்நிலையான் வந்தது. அருமை ஈண்டு உரிமையின்
மையை உணர்த்தி நின்றது. இனி யுணர்த்தற்குரிய மெய்ஞ்ஞானத்தின்
நீக்குதற்கு உணர்வரிய என விசேடிக்கப்பட்டது. எனினும், தலையாய
அபரஞான உணர்ச்சி நிகழின் பரஞானம் நிகழும் அல்லுழி நிகழாது எனி
னும் அமையும். இப்பொருட்கு அருமை இன்றியமையாமை. உணர்தற்
குரிய மெய்ஞ்ஞானமாவது — பசுஞானம். ஞானங்களின் முன்னையவை
ஆகுபெயராய்ப் பிள்ளையாரது இச்சாஞானக்கிரியைகளை உணர்த்திநின்றன.
பின்னையவை சிவஞானமாய அபரஞான பரஞானங்களின் மேலான தவ
முதல்வர் என்பது முதற்றவத்தர் என விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது.
முதன்மையாகிய தவவிசேட முடையரெனினு மமையும். அது உண்மை
ஞானத்துச் சரியை கிரியாயோகமென்னும் இவைமுதல் இல் தவமாவன
உபாயச்சரியை முதலியன என்க. சம்பந்தம் — இயைபு. இல்லாத என்
னும் பெயரெச்சத்தகரமும் லகரமெய்யுங் கெட்டுநின்றன. திரிபு, ஐயம்,
தெளிவென்னும் மூவகைக்காட்சியும் முறையே நிகழ்ந்து தன்னியல்புஇடை
யிட்டுணரும் ஏனையர்போலாது அவையிடையீடின்றி அப்பொழுதே ஒரு
ங்கு நிகழ்ந்து முற்றுப்பெறும் அதிபரிபக்குவ முடையரென்பது தேற்ற
சம்பந்தர் என்றோதப்பட்டது. ஆகலான் என்பது சொல்லெச்சம். தாம்
என்பது உயர்த்தற்கண்வந்த அநுவாதம் "உளதாய் நிற்பது ஞானசொரூ
பம்" என்னுஞ்சுருதிபற்றி புதிதன்றென்பதுதேற்ற அடைந்தார் என்றது
உணர்ந்தாரென்றார்.

அந்நிலையில் என முன்வருதலின் ஈண்டு இந்நிலை யென்பது தானே
பெறப்பட்டது. இல் — உவம உருபு. இனி அந்நிலையின் என்பது பாடமா
யின் அதுவுமது அநுபவமுடையராய எமது குரவர் பிள்ளையார் கலைஞா
னம் மெய்ஞ்ஞானங்களை உணர்ந்தனரென முன்ஓதுகின்றாராகலின் முறை
யே உணர்வருமை, உவமையின்மையினவாய அவைதாம், தம்மை யுணர்தற்
குரிய கருவியுள் வழியன்றி நிகழாமையின் அதற்குரிய இயைபு என்னுஞ்
சிறப்பு உபகாரம் முன் உணர்த்துவாராய் சிவனடியே சிந்திக்கும் சிற்சத்தி,
சிவனடியே செய்யுங் கிரியாசத்தி, சிவனடியே இச்சிக்கும் இச்சாசத்தி



யென வைத்தோதினார். என்னை? தன்னை யறிந்தன்றித் தலைவனையறிய
மாட்டாதாய உயிர் சிவனை யறிதற்குச் சிவஞானமின்றி யமையாதவாறு
போல, அறிவித்தாலன்றி யறியலாகாத தன்னையறிதல் சிவனருளாய சிவ
னடி வேறற நின்று சிறப்புவகையான் அறிவிப்ப அறியுமியல்பிற்றென
அறிவதூஉம் தனது வியாபகமெங்கும் அறிவுவிளங்கப் பெறுவதூஉமாய
இந்நிலையில் நிகழ்ந்த தன்னறிவு நிகழ்ச்சியதியல்பு இதுவென முன்னறிந்து
கோடல் இன்றியமையாது வேண்டப்பட்டுமை[illegible]மையான். இதனானே ஈண்
டோதிய ஞானசத்தமெல்லாம் சத்த ஒப்புமைபற்றி நான்கு மூன்று இர
ண்டு ஈரிரண்டாம் போலுமென இப்பொருள் காணமாட்டா துரைப்பார்
உரைப்பனவெல்லாம் போலியா யொழியுமாறும் மனக்கோட்டம் விட்டு
நுண்ணுணர்வும் நடுவு நிலைமையு முடையராய் நோக்குவார் யார்க்கும்
இனிது விளங்கும். "கண்டொல்லை காணுநெறிகண்ணுயிர் நாப்பணொளி
யுண்டில்லை யல்லாதொளி" "புன்செயலினோடும் புலன் செயல்போல் நின்
செயலை மன் செயலதாகமதி" ஓராதே யென்றைய முற்றுன்னாதே நீ முந்
திப்பாராதே பார்த்ததனைப்பார்" என்றெழும் திருவாக்குகளும் அது.

உயிர் அறியுமாறறிவிப்பதாய சிற்சத்தி யெனப்படும் சிவனடியே
மெய்ஞ்ஞானமாகலானும், அச்சிவனடி வேறற நின்றறியும் ஆன்மசிற்சத்
தியே மெய்ஞ்ஞானமாவதன்றி வேறன்மையானும், முன்வரும் மெய்ஞ்
ஞானத்தின் பரியாயப் பெயராய்நின்ற சிவனடியே உணருமாற்றை சிவ
னடியே சிந்திக்கும் சிற்சத்தி யெனவும், கிரியாசத்தி இச்சாசத்திக ளென
வும், சிவனது சத்திகளாக முன்னும் வைத்தோதிய தென்னையோவென
மலையற்க. உயிர் தன்னை யறியுங்கால் உடன் நிகழ்வது தலைவனையறித
லென்னும் இடையீடின்மை யுணர்த்தற்கும் அறிவேயாதலும் வேறாதலும்
உடனாதலுமாய முத்திறமுந் தன்கட்டோன்ற நின்ற சுத்தாத்துவித இயல்
புணர்த்தற்கும் அவ்வாறு உரைத்தாராகலின் ஏனையவும் இவ்வாறோர்ந்
துணர்ந்துகொள்க.

திருப்பெருகு என்பது இடைப்பிறவரல் இஃதென் சொல்லியவாறோ
வெனின் பாலினெய்போல வேறாயும் தமக்கு முதலாயும் இதுகாறும் முன்
னின்றுணர்த்தி வந்த பரம்பொருளே பருவமறிந்து அந்நிலைமாறி ஆண்டுத்
தயிரின் நெய்போலவிளங்கிச் சுத்த சைதன்னியமே சொரூபமாய், குரு
உருவாய் அறிவுறுத்துநின்ற ஏதுவானே, பிள்ளையார் மேற்சரியை முதலிய
மூன்றும் முற்றிய பின்னர் இம்முற்றுதலானே மலபரிபாகம் சத்திநிபாதமும்
நிகழ்ந்து தத்துவஞானத்தின் அவாவுதலுடைய ராகலானும், அப்பேறு
பெறுதற்குரிய பருவமுதிர்ச்சியுடைய உத்தமத்திலுத்தம அதிகாரமுடைய

ராகலானும் முதல்வனையின்றி அமையாராய அப்பிள்ளையார் ஆண்டு விடயத்தை அறியுங்கால் அம்முதல்வனது சிற்சத்தி பிள்ளையாரது சிற்சத்தியெனத்தானென வேறின்றியுடையனாய் விரவிநிற்ப முதல்வனும் அவ்வாறு விரவிநின்று பிள்ளையார்க்கறிவித்த தொன்றனைப் பிள்ளையார் அறிந்தனரென்றும் அவரை அதிட்டித்துநின்ற தானறிந்தானென்றும் பகுத்தறியவாராது அவர் ஞானசத்தி இவன் ஞானசத்தியாய இருவகை யறிவும் என்றனையொன்று விடாது அத்துவிதமாய் ஒருங்கு நிகழுமாறு செய்துவரும் இவ்வுபகாரநிகழ்ச்சி ஆண்டுப்பிள்ளையார்க்கு இனிது விளங்கி யுண்மையின் பிள்ளையார் அம்முதல்வனோடு உடனாய் நின்றறியினும் தமது அறிவென வேறு காணப்படாதவாறு அவனோடொற்றுமைப்பட்டுத் தன்செய்திக்கு முதல்வன்செய்தியை யின்றி யமையாமையின், அவனருளின்வழி நிற்பாராய்அம்முதல்வன் அங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்து வருமுண்மையை மறவாதறிவதாகிய பாச அறிவிச்சை செயல்களல்லாத முழுதும் வெளிப்பட்டுத் தோன்றும் இச்சாஞானக்கிரியை என்னு மூன்றனுள் அறிவு அறியுந்தோறும் அறியுந்தோறும் அப்பொருட்கே செல்லும் இச்சை அடங்காது மீதூருமாகலின் அவ்வழி அவ்விச்சையே தானுக்த்தோன்றும் பேரானந்தத்தை அனுபவித்தனரென அப்பிள்ளையாரது அறிவிச்சை செயல்கள் மூன்றுங்கண்டு விடயிக்குமாறுணர்த்தி அவர்க்கு நிகழ்ந்த அதீத நிலையதியல்பு கூறுமுகத்தானே அவர் பேறு கூறியவாறாயிற்று.

இனி, இதனுள் ஓதப்படும் அறுவகைப் பெயரெச்சங்களானும் பிள்ளையார்மாட்டு பதியப்பட்ட அறுவகைக் குணங்களும் ஓதப்பட்டன என்றுரைத்துக் கோடலுமொன்று. அஃதெங்ஙனமெனிற் காட்டுதும். சிவனடியே சிந்திக்கும் என்பதனால் வரம்பிலின்பமும், திருப்பெருகும் என்பதனால் அளவிலாற்றலும், பவமதனை யறமாற்றும் என்பதனால் பேரருளுடைமையும், பாங்கினில் லோங்கிய என்பதனால் தன்வயமுடைமையும், தூய வுடம்பினனாதலும் ஈண்டேயடங்கும். உவமையிலா என்பதனால் முற்றறிவுடைமையும், உணர்வரிய என்பதனால் இயற்கை யுணர்வுஉடைமையும், இயல்பாகவே பாசங்களினீங்குதலும் ஈண்டேயடங்கு மெனக் கொள்ளப்படும்.

**சிவஞான பரமாசாரியப் பரம்பொருளின் திருவடிவெல்க.**

**வி. குஞ்சிதபாதம் பிள்ளை.**

சி. வீரசோழகன்
ஸ்ரீ சிவஞானத்திருத்தளி
ஸ்ரீ சிதம்பரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மூர்த்திதலம் தீர்த்தமும் குருலிங்க சங்கமும்.

ஸ்ரீகயிலையின்கண் மாதாளும் பாகத்தனாய் வீற்றிருக்கும் இறைவன் செய்யும்செயல்கள் யாவையெனின் ஆன்மாக்களும் பந்தசாதனமும், பந்தநிவிர்த்தியும் உண்டாதற்கும், முத்திசாதனமும் முத்திப்பேறும் அடைதற்குமான செயல்கள் எவையோ அவையே யாம். இச்செயல்களுள் நிக்கிரகமுமுள்ளன.

பந்தசாதனமாவது—சுராசுரர்களுக்கும் ஏனையோர்க்கும் வேண்டிய வேண்டியாங்கு போகங்களைக் கொடுத்தல். பந்தநிவிர்த்தியாவது—அசுரர்களுக்குப் போகத்தைக் கொடுத்து அவர்களால் தேவர்களுடைய போகானுபவங்களுக்கு இடையூற்றை விளைவித்தல். இவற்றுள்—சுராசுரர்கள் செய்யும் தவத்துக்கீடாய் வேற்றுமையின்றி வேண்டிய வேண்டியாங்கு கொடுத்தல்—அனுக்ரகம். அசுரர்களைச்சங்கரித்தலும், தேவர்களுக்கு இடையூற்றை விளைவித்தலும் நிக்கிரகம். ஏனைய ஆன்மாக்களுக்கும் இம்முறையானே நிக்கிரகா நிக்கிரகமுமாமென வறிக.

முத்திசாதனமாவது—நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகமுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிஷட்க சம்பத்து, முமுக்ஷுத்வம். என்னும் நான்கு சாதனங்களும் வரப்பெற்றுப் பந்தப்பற்றற்று. முத்திப்பற்றுக்குப் பற்றவேண்டிய பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்கான சரியைகிரியா யோகமென்னும் மூன்றுமேயாம். இச்சரியை யாதிமூன்றும் கைகூடுவதற்கு மூர்த்தி தலம் தீர்த்த மென்னும் மூவடிவாயிருந்து வழிபாடுகளையேற்று அவ்வழிபாட்டான் பந்தநிவிர்த்தி யுண்டாக்குவதே நிக்கிரம்.

முத்திப்பேறாவது—சரியையாதிமூன்றால் ஞானம் எய்தப்பெறுதலும், அதுவன்றி அவாந்தரப் பயனாகிய சாலோகாதிபதங்களும், ஞானத்தால்

எய்தற்பாலதாகிய சிவானுபவமேயாம். பதமுத்தியும் பரமுத்தியாகிய சிவானுபவமும் அடைதற்கான குருலிங்கசங்கம வடிவமாயிருப்பதே அநுக்கிரகம்.

பந்தசாதனத்துக்கும் பந்த நிவர்த்திக்கும் உரியார் பெத்தான்மாக்களெனவும், முத்திசாதனத்துக்கும் முத்திப்பேறுக்கும் உரியார் முத்தான்மாக்களெனவும் சொல்லப்படும்.

இதனால் உமாநாதனாகிய இறைவன் பெத்ததிசையில் செய்யும் நிக்கிரகம் இத்தன்மைத் தென்பதும், முத்திதிசையில்செய்யும் நிக்கிரகாநிக்ரகம் இத்தன்மைத் தென்பதும், அவ்வத்திசையுடையாரே பெத்தான்மாக்கள் முத்தான்மாக்களென வழங்கப் படுவரென்பதும் முத்திசாதனத்துக்கு மூர்த்திதலம் தீர்த்தம் என்னு மூன்றும் இன்றியமையாதெனவும், முத்திப்பேறுக்கு குருலிங்கசங்கமமென்னு மூன்றும் இன்றியமையாதெனவும் வெளிப்பட்டது.

இனி, முத்தான்மாக்களால் விருப்பப்படும் ஞானத்திற்குச்சாதனமாய் நிற்கும் மூர்த்திதலம் தீர்த்தமென்னு மூன்றின்வழிபாடே பெத்தான்மாக்களால் விரும்பப்படும் போகத்துக்கும் இன்றியமையாததாகும். ஞானத்துக்குச் சாதனமாயுள்ளது போகத்துக்குச் சாதனமாதல் எங்ஙனமெனின்! போகமோக்ஷப் பிரதாயகனாயுள்ளவன் "எல்லாருஞ் சிவனென்ன நின்றாய் போற்றி" என்றபடி சிவனொருவனே யாதல்போல் சாதனமும் ஒன்றேயாயிற்று. கடவுளர் பலரிருக்கச் சிவனொருவனே போகமோக்ஷப்பிரதாயகனாதல் யாங்ஙனமெனின்! "போகியாயிருந் துயிர்க்குப்போகத்தைப் புரிதலோரார்-யோகியா யோகமுத்தி யுதவுதலதுவு மோரார்—வேகியானாற் போற்செய்த வினையினை யீட்டலோரார் மூகியாமூடரெல்லாம் உம்பரினொருவரென்பர். இந்தப் பிரமாணத்தால் சிவனொருவனே யென்றலமையும். வேறு சிலரைக் கூறுவது அறிவின் விசாலமற்றவர்கள் கூற்றாமெனவொழுக.

இவ்வுண்மையைக் காட்சிப் பிரமாணத்தானும் அறியவே மூர்த்திதலம் தீர்த்தமென்னு மூன்றும் போககாமியர்களாலும் மோக்ஷகாமிகளாலும் வழிபடப்பட்டு அவ்வவர் பெயர்களால் வழங்கிவருகின்றன. இக்



காட்சிப்பிரமாணத்தான் கருதக்கிடக்கின்றதொன்று அது கருத்து செயல் என இருவகை. பெத்தான்மாக்கள் போகத்தைக் கருதிமூர்த்திமுதலிய மூன்றிடத்தும் செய்யும் வழிபாட்டைக் காமியமாகச் செய்கின்றபடியால் அது போகசாதனமாயும், முத்தான்மாக்கள் மோக்ஷத்தைக்கருதி அம்மூவிடத்துச் செய்யும் வழிபாட்டை நிஷ்காமியமாகச் செய்கின்றபடியால் அது முத்திசாதளமாயும்ஆயிற்று. ஆகவே, செயல்ஒன்று கருத்துஇரண்டு. இனி முத்திப்பேற்றில் கூறிய குருலிங்க சங்கமமென்றது என்னை! இதற்கும் மூர்த்திதலம் தீர்த்தமென்ற அதற்குமுள்ள வேறுபாடென்னை என்றாராயின், இவ்விரண்டிடத்தும் வழிபட்டு அன்புபூண்டுள்ளோர் சங்கமர். சிவலிங்கந்தான் மூர்த்தி அம்மூர்த்தி எழுந்தருளியிருக்குமிடமே தலம், ஸ்நானாதி நித்தியகர்மங்களுக்கு உரித்தாய் சலரூபமாயிருப்பது தீர்த்தம்.

க்ஷேத்திரவாசத்தால் ஆகாமிய நிவிர்த்தியும், தீர்த்தபரிசத்தால் கன்ம நிவிர்த்தியும், மூர்த்திசேவையால் சஞ்சிதநிவிர்த்தியும் உண்டாம். குருசேவையால் ஞானப்பிரகாசமும், அந்த ஞானப்பிரகாசத்தைக் கொண்டு செய்யும் சிவலிங்கார்ச்சனையால் ஆன்மப்பிரகாசமும், அந்த ஆன்மப்பிரகாசத்தால் அன்பரையறிந்து அவரைவழிபடுவதால் சிவானந்தவிளைவும் உண்டாம்.

மூர்த்தி முதலிய மூன்றின் விசேடம் பெத்தான்மாக்களுக்கு முத்திசாதனம் வரும் பரிபாகத்தை யுண்டுபண்ணும் குருலிங்க சங்கம மூன்றும் முத்தான்மாக்களை முத்திப்பேறெய்துவிக்கும். இதுவே இரண்டிற்குமுள்ள வேற்றுமை.

இதனால் முத்திக்குச் சாதனமாயுள்ள மூர்த்திதலம் தீர்த்தம் என்பவைகளே போகத்துக்கும் சாதனமாகுமென்பதும், அதற்குச் சான்று மூர்த்திதலம் தீர்த்தமென்னும் அம்மூன்றும் பெத்தான்மாக்களாலும் முத்தான்மாக்களாலும் வழிபடப்பட்டு அவ்வவர்பெயர் கொண்டிருப்பதேபிரத்தியக்ஷம் பிரமாணம் என்றும், சாதனமாயிருக்கும் ஒரு செயல் போகம் ஞானம் என்னும் இரண்டையுங் கொடுத்தல் கருத்துவகையாலென்பதும், அக்கருத்து காமியம் நிஷ்காமியமென்பதும், கருத்துவகையான் இருவகைப்பட்ட பிரயோசனத்தை ஒருசெயலே கொடுப்பது சிவன்போல் என்பதும் சிவனென்னும் ஒருகருத்தாவே போகமோக்ஷங்களைக் கொடுக்கும் சுதந்தர

ஆற்றலுடையனென்பதும், ஏனையகடவுளர் போகமோக்ஷங்களைச் சுதந்தரமாய்க் கொடுக்கும் ஆற்றலுடையரன்றென்பதும், பெத்தான்மாக்கள் முத்தான்மாக்களாகும் பரிபாகத்தை வரச்செய்தல் மூர்த்திதலம் தீர்த்தங்களென்பதும், முத்தான்மாக்களாய் முத்திசாதனங் கைவந்தபின்னர் அவர்களை முத்திப்பேறெய்வித்தல்ஞானப்பிரகாசமும், ஆன்மப்பிரகாசமும்,சிவானந்தவிளைவுமேயாகலான் அவையுண்டாம் வண்ணம் செய்தல் குரு உபதேசமும் சிவலிங்கார்ச்சனையும் அன்பர்வழிபாடும் என்பதும் விளக்கியவாறு காண்க.

இனி மூர்த்திதலம் தீர்த்தம் என்பதும், குருலிங்கசங்கமமென்பதும் தனித்தனி விசேடமுடைத்தோ, ஒன்றினால் ஒன்று விசேடமுடைத்தோ என்றாராயின் மூர்த்தியினாலேயே தலத்துக்கும் தீர்த்தத்துக்கு விசேடமும், இலிங்கத்தினாலேயே குருவுக்கும் சங்கமத்துக்கும் விசேடமும் உண்டாம். எங்ஙனமெனின் இது அரசன் மாளிகை என்று ஒன்றைச்சுட்டிச் சொல்லுங்கால் அரசனால் மாளிகைக்குச் சிறப்போ மாளிகையினால் அரசனுக்குச் சிறப்போ என்னுமிடத்து அரசனாலென்பதே தேற்றம் அதுபோலென்க. தீர்த்தவிசேடமும் அப்படியே.

மூர்த்தி என்பதும் இலிங்கம் என்பதும் ஒன்றே. ஒன்றேயாயினும் மூர்த்தி என்னுங்கால் வடிவத்தையும், இலிங்கம் என்னுங்கால் ஓர் அடையாளத்தையுங் குறிப்பதாகும். ஆகவே இலிங்கவடிவத்தினிடத்தில் ஓங்கொளியாய் அருண்ஞான சொரூமாயிருக்கும்.

இன்னும் வரும்.

கா. ஆலாலசுந்தரம் பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உயிர்.

தொகுதி 5 பக்கம் 90. தொடர்ச்சி.

## இனி ஆன்ம விலக்கணம்.

க. சீவான்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணாமமாய்த் தோன்றி, அறிவிச்சை செயல்களை யடைந்து தீயுஞ்சூடும்போலப் பேதாபேதமாகிய குணமணித் தன்மையுற்றுப் பல வேறுவகைப்பட்டு நிற்குமென்றாலென்னையெனில், அவ்வாறாகிய சீவான்மாக்களுக்குப் பொறிகரண முதலிய கருவிகளைப் பொருத்தினாலன்றி அறியமாட்டாமைக்குக் காரணம் யாது? அதனால் அது பொருந்தாதென்க.

உ. இனிக் குணகுணித் தன்மையின்றிக் கேவலம் அறிவு மாத்திரையாய் நிற்றல் உயிரியல்பென்றாலென்னையெனில், உடலின் கண்ணே அறிவிச்சை செயல்கள் நிகழா, ஆதலாலது பொருந்தாதென்க. உயிரின் சந்நிதியிலே உடலின்கட் கரணங்கள் தொழிற்படுதல் பற்றி அறிவிச்சை செயல்கள் நிகழுமென்பாயாயின், உயிரின் சந்நிதியிலெப்பொழுதும் அறிவிச்சை செயல்கள் நிகழவேண்டும். அங்ஙனமின்றிப் பிணத்தும் உறக்கத்தும் அவை நிகழ்தலில்லையாம். அதனாலது பொருந்தாதென்க. பிணத்தும் உறக்கத்துங் கரணமொடுங்கினமையால் அறிவிச்சை செயல்கள் நிகழ்தலில்லையென்பாயாயின், பிணத்தும் உறக்கத்தும் உயிரின் சந்நிதிக்குக் கேடில்லையே, அங்ஙனமாகவும் அவ்வறிவிச்சை செயல்கள் நிகழாமையால் உயிரின் சந்நிதிமாத்திரையால் அறிவிச்சை செயல்கள் நிகழும் என நீ கூறியதொழிந்ததென்க. சந்நிதிதான் எதுபோலவென்றால், வியாபகமாய் நிற்கப் பெறுதன்மாத்திரையே சந்நிதியன்று. காந்தமுன் இரும்புபோல உயிர்முன் உடம்பு தொழிற்படுதற் கேதுவாயதொரு குணவிசேடமே சந்நிதி எனக் கொண்டோமாகலின் மேற்கூறிய குற்றம் ஈண்டுப்பொருந்தாதென்பாயாயின், அங்ஙனமாயினும் ஒரு குணமுள்ளதாகிய காந்தம் இரும்பை யிழுத்தலாகிய ஒரு தொழிலன்றி அகற்றலாகிய மாறுபட்ட தொழில் செய்ததில்லை ஆதலால் நினைத்தல் மறத்தல், ஓடல், இருத்தல்,

கிடத்தல், நிற்றல் முதலிய மாறுபட்டதொழில்களை ஆன்மாச் செய்யுமாறு எவ்விடத்து என மறுக்க. உயிர் உருவப்பொருளென்று லென்னையெனில், இவ்வுடம்பினுள்ளே வேறொருவடிவங் காணவேண்டும். அங்ஙனமன்றி உருவப்பொருளாய் வருவது காட்சிப் புலனாய்ப் பரிணமித்து அழிவெய்தும் பூதத்தோடொன்றுதல் வேண்டும். உருவடிவாயிருப்பினுங் கட்புலனாகா தென்பாயாயின், நீ யுருவமெனக் கூறுதலொழிந்து அருவமெனக் கூறுதலமையுமென்க.

பூதம்போலக் காட்சிப் புலனாதற்குரிய தூலவுருவாதலின்றிச் சூக்கும வுருவாய் நிற்பது உயிர் என்று லெல்லையெனில், அஃது தூலவுருவைத் தோற்றுவிக்கின்ற சடமாகிய மனாதிகாரணங்கள் தன்மாத்திரைகளாலாக்கப்பட்ட புரியட்டகவுடம்பே ஆகலானும்; அப்புரியட்டகத்தினுள்ளே அதிசூக்கும வுருவாய் நிற்பது உயிர்என்பாயாயின், அது காலதத்துவமுதலாகப் பிருதிவிதத்துவ மீறாகவுள்ள பரவுடம்பே ஆகலானும், அவ்வுருவங்களனைத்தும் அசித்தாதலும் அசத்தாதலும் ஒரு தலையாகலானும் அவ்வியல்பில்லாத உயிர் உருவப்பொருளாமாறு யாண்டையதென்க.

இனி அருவுருவப்பொருள் உயிர் என்று லென்னையெனில், அருவந்தானே உருவாவதில்லை, உருவந்தானே அருவாவதில்லை ஆகலானும், மாறுதலைப்பட்ட இரண்டுதன்மை ஒரு பொருட்குண்டாவதில்லை ஆகலானும், காட்டமும் அக்கினியும்போல அருவுருவப் பொருள் என்பாயாயின், நீ கூறிய அவ்விரண்டுந் தம்முள் வேறாகி உருவமாய்க் காணப்பட்டுண்மையொழிந்துபோம். ஆதலின் ஈண்டுக்கூறிய உவமை பொருந்தாமையானும் அது பொருந்தாதென்க.

உயிர்க்கு வடிவம் அருவுருவம் என்று லென்னையெனில், அது வெளிப்பட்டு நங்கண்ணிற்குப் புலப்படும் வடிவுளதாதல்வேண்டும். தலையுவாவில் அருவமாய் நின்றே பின் முறை முறையால் வளர்ந்து பூரணையிலே தூலவுருவாய் விளங்குதல் சந்திரனிடத்துக் காண்கின்றோம். அதுபோலவே உயிரும் அருவமாய் நின்றே கருவுட்பதிந்து முறை முறையால் வளர்ந்து இவ்வுடம்புருவமாய்த் தோன்றுமாற்றால் அருவுருவம் எனக்கூற அமையும் என்பாயாயின், சித்தாய் நித்தியமாய்ப் பந்தத்திற்பட்டு நீங்குவதாகிய வுயிர் அசித்தாய்ப் பூதகாரியமாய்ப் பந்தமாவதாகிய வுடம்புருவமா மாறு யாண்டையதென்க.



சடப்பொருள் சித்தாகாது சித்துப்பொருள் சடமாகாது ஆதலால், உயிர்தான் அறிவில்லாத சடம், அது பின்னர் மனத்தோடு சித்தாய் அறியுமென்பாயாயினும், அக்கொள்கையும் உயிர் சித்த சித்து என்பாயாயினும் அக்கொள்கையும், ஒன்றிலே மாறுபட்ட இரண்டு தன்மை யொருங்கு நில்லாமையாற் பொருந்துமாறில்லை. கருவிகளைப் பொருந்தாத சித்தே உயிர் என்பாயாயின், அக்கொள்கையும் அசித்தாகிய கருவிகளை யடைந்தன்றி யறிதல் கூடாமையால் பொருந்தாதென்க.

இனி உடம்பகத்திலே பரமாணு வளவிற்றாய் நிற்பது உயிர் என்பாயாயின், அது அணுவடிவாகிற் பல துவாரங்களிலே யொரு துவாரத்தாலோடிப்போவதாகும், அன்றி அவ்வுடம்பிற் பொருந்தக் கட்டுண்டற்கு முடம்படாது, பாரந்தாங்கிச் செல்லுதற்கு முடம்படாது, அழிவெய்துஞ் சடமாகிப் பூதபரமாணுக்களோடொன்றுகும், அணுக்களுக்கு அவயவப் பகுப்புண்மையால் அவ்வணுவுருவ மழிவெய்துமென்க.

இனி உயிரானது உடம்பகத்துப் புன்னுனித் துளிபோல் ஏகதேசமாய் இதயத்தானத்தினிற்ப அவ்வுயிரினறிவு விளக்கின் குணமாகியவொளிபோல யாங்கணும் வியாபிக்கும் என்றுலென்னையெனில், உயிர் ஏகதேசமாயின் முன்னே உயிர் உருவம் எனக்கூறியதற்கு உரைத்த குற்றமெல்லாம் பொருந்தி யழிவெய்தும், குணங்குணியளவின்றி எவ்விடத்தும் வியாபித்தறிதல் செல்லாது. இன்னும் விளக்கினொளியானது விளக்கினது சூக்கும வடிவேயன்றிக் குணமன்று. ஆகலான் அஃதீண்டைக் குவமையாகாது. உவமையாமெனவே கொள்வாயாயினும், விளக்கின் சுடர் தொடினன்றிச் சுடாதாகையால், இருந்தவிடத்திலே யறிந்து மற்றுள்ளவிடத்துப் பரிசத்தானும் அறியமாட்டாது. உயிர் பரிசித்தவிடமெங்கும் அறிதலுளதாம். விளக்கு ஓரிடத்திருந்து மற்றுள்ள விடங்களையும் விளக்குதல் போல உயிரினறிவு ஐம்புலனிடத்து மொருங்கே நிகழவேண்டு மென்க.

இனி உடம்பளவிலே நிறைந்து நின்று அங்கே புணர்வது உயிர் என்றுலென்னையெனில், உறக்கமுறாது ஐம்பொறியினு மொருங்கே யறிவு நிகழ்தல்வேண்டும். பெரியவுடல் சிறியவுடல்களாகிய அவ்வவ் வுடம்பளவிற்குத்தக்க வறிவாதல் வேண்டும். உடம்பினுறுப்பினைக் குறைப்பக் கூடத்தானுங் குறைந்து பின்மாய்தல்வேண்டு மென்க.

இனி முதல்வன்போல் எங்கணும் வியாபியாய் நின்றறியும் இவ்வுயிர் என்றுலென்னையெனின், அவத்தைகளிற் றங்குதலும் போக்குவரவுகளுறுதலும், எங்ஙனங் கூடும். ஐம்புலனுமொருங்கே யறியாமையு மெங்ஙனங்

கூடும். இங்ஙனமெல்லாமாய் வியாபித்தலொழிந்தாலுங் உடம்பிறுளேக தேசமாய் நிற்றலும் எங்ஙனங்கூடும். இவற்றைக்கூறுவாயாக. எங்கணும் வியாபகமாய் நின்றறிவதாய சுத்தமாகிய உயிரினறிவை மாயாகாரியந்தடைசெய்து நிற்றலின் உறக்கமுதலியனவுற்று ஏகதேசப்படுவதாயிற்று எனப்பரியாயங் கூறுவாயாயின், அதுபொருந்தாது உடலினகத்துப் புறக்கரண வகக்கரணங்களின் வழியால் அறிவு விளங்குவதாகவும் அஃது இன்றாய்ப் போதலானும், வீடுபெற்ற வழியும் மலமுறும் என்பட்டு முத்தியென்பதில்லையாய் முடியுமாகலானும் என்க. வீடுபெற்றபின் உருதென்பாயாயின், அநாதிநிலையோடு இதனிடை வேற்றுமையின்மையான், அநாதி பந்த முறுதலின்றி முத்தனாய் விளங்குதல் வேண்டுமென்க.

இதுவரையும் ஆணவமலத்துண்மைகொள்ளாத சமயிகள் தத்தமதத்துக்கேற்பக் கூறுமுயிரிலக்கணங்களும் அவை பொருந்தாமையுங் காட்டப்பட்டன. மற்றென்னையோ வுயிருக்கிலக்கணமாவ தெனின், பின்னர்க் கூறுமாறறிந்துகொள்க.

இவ்வுயிர், அசித்தாதலில்லாத வியாபகப்பொருள்போல வியாபகமாதலும், அதுபற்றி அதிருக்கும சித்தாதலுமின்றி, அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாகு நெறியுடையதாய், அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு இச்சாஞானக்கிரியைகளை யுடையதாய்ப்பசுவெனப்படுந் தூலசித்தாகி நிற்குமென்றறிக. இதுவே உயிர்க்கு அநாதி நிலையாகிய தன்னுண்மை யெனக்கொள்க.

அங்ஙனம் பசுத்துவமாத்திரையாற் கேவலப்பட்டு நின்றஉயிர் அதன்பின் அசுத்தமாயையில் அனந்த தேவராற் கலக்குண்ட பாகமாகிய காரண சரீரத்தைப்பொருந்தி அறிவிச்சை செயல்கள் பொதுவகையாற் சமட்டிரூபமாய் விளங்கப்பெறும். அதன்பின் அம்மாயா தத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதிகளாகிய கஞ்சுக சரீரத்தைப்பொருந்தி அவ்வறி விச்சை செயல்கள் வியட்டிரூபமாய்ப் பிரிந்து தோன்றிச் சிறப்புவகையால் விளங்கப்பெறும். அதன்பின் அந்தக்கரணமுதலியவற்றைத் தம்முளடக்கி நிற்கு முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி அறிவிச்சை செயல்கள் பின்னர்க் கூறப்படும் இருவகைச் சரீரங்களிடமாகவரும் விடயங்களின் வியாபரிக்கப் பெறுமென்றறிக.

இன்னும் வரும்.

**இராமசாமிக்கவிராயர்.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 - JUL 1916
MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1916ளூ ஜூன்மீ [பகுதி ௬.

## தைத்திரீயோபநிஷத்து.

பூமி, ஆகாயம், நட்சத்ராதிமண்டலம், அஷ்டதிக்குள் (இவ்வைந்தும் உலகபஞ்சகம்) அக்கினி, வாயு, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் (இவ்வைந்தும் தேவதாபஞ்சகம்) ஜலம், ஔஷதிகள், விருட்சங்கள், ஆகாயம், ஆத்துமா (இவ்வைந்துந் திரவியபஞ்சகம்) இம்மூன்று வகுப்பும் அதிபூதம் (பூதசம்பந்தம்)

### ஆதியாத்மக வகுப்பு.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் (இவ்வைந்தும் வாயுபஞ்சகம்) க்ஷேத்திரம், மனது, வாக்கு, துவக்கு (இவ்வைந்தும் இந்திரியபஞ்சகம்) தோல், ஊன், ஜலம், எலும்பு, மச்சை (இவ்வைந்தும் தாதுபஞ்சகம்) இம்மூன்றுவகுப்பும் ஆத்தியாத்மிகம்(ஆன்மசம்பந்தம்) [illegible] தலைய பஞ்சகங்களைத்தினும் பிரமவியாபகத்தை யறிகிறவனே உபாசகன்.

### பிரணவவுபாசனை.

ஓம்என்பது பிரமம், *சப்தத்தினெந்தளுப்பும் ஓங்காரத்தால் வியாபகம், ஓம் அனுக்கிருதி (அங்கீகரித்தற்குவிடை) ஓமெனச் சாமங்களைகானஞ்

* கேவலம் சப்தசொரூபமான ஓங்காரம் பிரம்மமாதல் எங்ஙனமெனின்? பிரம்மத்தை யடையவேண்டுமென இச்சிக்கிறவன் பிரணவத்தை

செய்கிறார்கள், ஓம் சோம் என்பதாய்ப் பிரார்த்தனை செய்கிறார்கள், (யஞ்ஞத்தில்) அதர்வர்யு (யஜுர்வேதியரன ரித்விக்கு) உச்சரிக்கிறான். பிரம்மா (வாத்தியார்) ஓம் எனக்காரியத்தைச் செய்கிறான், ஓம் என்பதாக அக்னிஹோத்திரத்திற்கு அனுஞ்ஞை கொடுக்கிறான். ஓம் என அத்தியயனஞ் சொல்ல விச்சிக்கிறான். ஓங்காரத்தால் பிரம்மத்தை யடைவேனென விச்சிக்கப் பிரமத்தையடைகிறான்.

## ௯-வது அனுவாகம்.

### உபாசகனது கருமம்.

தர்மம், வேதாத்தியயனம், பிரயஞ்ஞம், சத்தியம், தபசு, இந்திரிய நிக்கிரகம், மனோநிக்கிரகம், அக்கினிகாரியம், அக்கினிஹோத்திரம், அதிதி பூஜை, வியாகாதிவியவகாரம், புத்திரோர்ப்பத்திவம்ச விருத்தி இவை முதலிய கவனிக்கத்தக்கது.

## ௰-வது அனுவாகம்.

### ஞானோதயம்.

நான் சம்சார விருட்சத்திற்குப் பிரேரணைச் செய்கிறவனாக விருக்கிறேன், (என்னுடைய) கீர்த்தியானது பர்வதத்தின் சிகரம்போலிருக்கிறது, மேலானவனால் சுத்தம் செய்யப்பட்டவனாய், சூரியனிடத்தில் இருக்கிற

---

யுச்சரித்துக்கொண்டு அதனர்த்தமாகிற பிரமத்தை யுபாசித்தற்கு ஓம் சப்தம் ஏதுவாகவிருத்தலின் அங்ஙனம் கூறுவதாயிற்று. அன்றியும் ஈண்டு பிரமம் என்றது ஈஶ்வரனை. எங்ஙனமெனின்? நிவர்த்தியாதி பஞ்சகலைகளுக்கும் மேற்பட்டபூர்ண வியாபகத் தன்மையையுடைய பெரியன் ஈஶ்வரனேயாகலின், பெரிய என்னும் பொருளைப் பயப்பிக்கும் பிரம்மசப்தத்தால் கூறினர். மற்றைய தேவர்கள் பஞ்சகலைகளுக் குட்பட்டவராகலின், அவர்கட்குப் பிரம்மசப்தம் பொருந்தாது. 'எவன் பிரமமோ அப்பகவான் ருத்திரன்' எனும் பொருளைத்தரத்தக்க "ருத்ரஸ்ஸ பகவாந்யச்சம்ரஹ்ம" எனும் அதர்வசிரோபத்தா லுண்மையறிக. "அகாரம் ப்ரஹ்மாணம்" "உகாரம விஷ்ணும்" "மகாரம் ருத்ரம்" "ஓங்காரம் ஸர்வேச்வரம்" எனும் நிருஸிஹ்மோத்தரதாபிந் யுபநிஷத்தால், ஈஶ்வரனின் சமஷ்டி வியாபகத்தையும் மற்றையதேவரின் வியஷ்டி வியாபகத்தையும் காண்க. இது போன்றபற்பல சுருதிகள் உபநிடதங்களின் பிரணவ சப்தத்திற்குரியார் ஈஶ்வரனே யென முழங்குகிறது.



வன்போல அமிருதமாகவிருக்கிறேன், பிரகாசமான தனமாகவும், புத்தியுள்ளவனாகவும், மரணமில்லாதவனாகவுமிருக்கிறேன் இது "திரிசங்கு" ஞான போதம்.

## ௧௧-வது அனுவாகம்.

### அனுசாஸனம்.

ஆசாரியர் வேதத்தை அத்தியயனம் செய்வித்துச் சிஷ்யனுக்குஉபதே சிக்கிறார். நிஜத்தைச்சொல், தர்மத்தையனுசரி, ஆசாரியருக்கு விருப்பமான தனத்தைக் கொடுத்து விடைபெற்றபின் கிரகஸ்தாசிரமத்திற் பிரவேசி சத்தியத்தினின்றும், தர்மத்தினின்றும், க்ஷேமத்தினின்றும், ஐசுவரியத்தி னின்றும், வேதகாரியம், பிதுர்காரியங்களினின்றும் தவறுதல் கூடாது

தாயாரையும், தந்தையையும், குருவையும், அதிதியையும் பூசிப்பா யாக. நிந்திக்கப்படாத கர்மங்களெவைகளோ அவைகளை அனுசரி, மற்ற வற்றை விலக்கு, எங்கட்கு ஏவை நல்லகர்மங்களோ அவைகளே உன்னால் செய்யத்தக்கவை.

எவர்கள் சிரேஷ்டர்களான பிராமணர்களோ, அவர்களுக்குச் சம்பத்துடனும், லஜ்ஜையுடனும், பயத்துடனும், சிநேகத்துடனும் கொடு.

உனக்குக் கர்மத்திலாவது, ஆசாரத்திலாவது சந்தேகம் வரின் அக் காலத்தில் அத்தேசத்தில் சமர்த்தர்களாகவும், அனுஷ்டான பரார்களாகவும், சாஸ்திரயாராய்ச்சி யுடையர்களாகவும், கரேமில்லாதவர்களாகவும், தரும விச்சையுள்ளவர்களாகவுமுள்ள பிராமணர்கள் எவ்வாறு நடப்பரோ அப் படி நட.

இது விதி, இது உபதேசம், இது வேதரகசியம், இது ஆஞ்ஞை, இங் ஙனம் உபாசிக்கவேண்டுவது.

## ௧௨-வது அனுவாகம்.

உம்மையேபிரத்தியட்சமான பிரம்மமாகச் சொன்னேன், புத்தியைச் சொன்னேன், சத்தியத்தைச் சொன்னேன், அது என்னை யிரட்சித்தது. அது வக்தாவையிரட்சித்தது.

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

தொகுதி-டு பக்கம் 100. தொடர்ச்சி.

## தமிழ்வேதத்தின் சிறப்பு.

தமிழ்வேதமானது ஆரியவேதத்தைப்போல தோற்றம், இடையீடு முடிவு என்பனவின்றி அநாதியாய் இறைவன் அருள்வெளித் தோற்றமாய்த் தெய்வமொழியாய் என்றைக்குமுள்ளது.

இது இறையனார் முருகவேள் முதலிய கடவுளராலும், அகத்தியர் முதலிய பிரமரிஷிகளாலும் முதல் இடை கடை என்றமூன்று சங்கத்தினராலும் ஆராயப்பட்டுள்ளது. அன்றியும் இத்தமிழ்வேதம் சிவபெருமானது திருக்கரங்களால் எழுதப்பட்டதும் அழகிய திருச்சிற்றம்பல முடையாரெனக் கையொப்பமிடப் பெற்றதுமாம். இத்துணைப் பெருமைவாய்ந்த நம் தமிழ்வேதங்கள் சைவசமயத்தில் எவ்வளவு பெருமையோடு போற்றிக் கொண்டாடத்தக்கன. சிவாலயங்களில் எத்துணைப் பயபக்தியோடு பூஜிக்கப்படவேண்டு மென்பதை சைவசமயிகள் நுணுகி ஆராயவேண்டும்.

உலகமுய்யும்படி தமது பெருங்கருணையினால் இவற்றையருளிச்செய்த நம் தமிழ் முனிவர்கள் "நம் செயலற்று நாமற்று அறிந்தவர்" ஆகலின் அவர்களருளிய தமிழ் வேதங்களும் சித்தாந்தங்களும் பதிவாக்கெனவே துணியப்படும். இவ்வுண்மையை உலகன்னையாகிய ஔவையும்

"தேவர் குறளுந் திருநாண் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென் றுணர்." என விளக்கிக்கூறியுள்ளனர். ஈண்டு

முனி என்றது வாதவூர் முனிவர் முனிமொழி என்றது வியாசர்செய்த



வேதாந்த சூத்திரமென *மயக்கப்பொருள் கொண்டால், திருநான்முறை முடிவு என்றது கூறியதுகூறல் என்னும் குற்றத்தின்கண் படும்.

திருநான்மறை முடிவு என்றது தமிழ்வேதத்திலுள்ள நான்மறையின் முடிவை. அன்றியும் இச்செய்யுளின்கண் குறித்த நூல்களியாவும் தமிழ் நூலென அருத்தா பத்தியாலுணர்க. தேவாரம், திருவாசகம், இந்நூல்களின் கண்ணுள்ள ஒருமைப்பட்ட பொருள்களும், ஒற்றுமையான கருத்துக்களுமே ஈண்டுக் குறிக்கப்பட்ட நூல்களாம்.

தென்கலையும் திராவிடவேதமும் அநாதியாய் இறைவன் அருள்வழித் தோன்றியவை யாதலால், இவைக்கு மற்றேனைய வேதங்கள் ஒருசிறிதும் நிகராகமாட்டா.

இத்துணை மகிமை வாய்ந்த நம் தமிழ்வேதத்தை சைவர்கள் சிவாலயங்களில் ஓதிவருகின்றனர். அன்றியும் ஆரியவேதங்கள் இந்தியாவினுள் தலைக்காட்டுதற்கு முன் னுள்ளதும் திராவிடர் சிவாலயங்களில் ஆதிகால முதல் சொன்றுதொட்டுப்பூஜிக்கப்பட்டு வந்ததும் இத்தமிழ்வேதங்களே. இவ்வுண்மைகளை நன்குணர்ந்த திருமுறைகண்ட சோழர் முதலிய தமிழ் நாட்டரசர்களும் நமது முன்னோர்களும் நம் தமிழ்வேதத்தையும் தமிழ் சித்தாந்தத்தையும் படித்தற்கும் பரவச்செய்தற்கும் அநேக கல்விசாலைகளும் மடங்களும் ஏற்படுத்தி அவற்றைப்போற்றிப் பரிபாலித்து வந்தனர். அம்மடங்கள் தாம் இப்பொழுது நம்திராவிட வேதத்தையும் சித்தாந்தத்தையும் எவ்வளவு தூரம் பாதுகாத்துப் பரவச்செய்துவருகின்றன வென்பதூஉம், தமிழ்வேதத்தையும் வைதிக நிலையையும் மறந்து லௌகிக இன்பங்களுள் எவ்வளவு திடமாய் மூழ்கிவருகின்றன வென்பதும் யோசித்துப் பார்த்தால் பரிதபியாதவர் யாவர்? அஃது அங்ஙனம் நிற்க, தற்காலம் நம் தமிழ்மக்களும் மிக்கசெல்வமும் சிறப்பும் படைத்துச் சைவசமயத்தில் நிறைந்தபற்றும், சிவபுண்ணியங்களைத் தேடுவதில் நிறைந்தபற்றும், சிவபுண்ணியங்களைத் தேடுவதில் மிகுந்த ஆர்வமுடைய நாட்டுக்கோட்டையர் முதலிய திராவிட பிரபுக்கள் ஆதரிப்பாரின்றி கைவிடப்பட்ட நம் தமிழ் வேதத்தையும் சைவசாஸ்திரங்களையும் ஆதரியாது, தங்களுக்கு யாதொரு பயனும் சம்பந்தமுமில்லாத அந்நியபாஷைகளுக்கும் அந்நிய வேதங்களுக்கும் பாடசாலை முதலியன ஏற்படுத்துதல் தமிழ் மக்களியாவராலும் பெரிதும் விசனிக்கத்தக்கதாம், சைவசமயத்திற்கு ஆதாரமாயும் அடிப்படையாயுமுள்ளது தமிழ்வேத சிவாகமங்கள். அவ்வாகமங்களின்றிச் சிவாலயங்களில் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் நித்திய பூஜை முதலிய யாதொரு கிரியைகளும் செய்தல்முடியாது.

---

*இச்சூத்திரத்தை மாயாவாத நூலெனச் சர்வாத்ம சம்புசிவாசாரியரும், மாதவச்சிவஞான யோகிகளும் தீர்மானித்துள்ளார்.

ஆதலின் சிவாகமப் பாடசாலைகள் ஒவ்வொரு தேவஸ்தானங்களிலும் ஸ்தாபிக்கப்படவேண்டும். பட்டர் குருக்கள் முதலிய சைவாசாரியர்களுடைய பிள்ளைகளுக்கு உணவு முதலியன கொடுத்து ஆகமங்கள் சைவசாஸ்திரங்கள் முறையாய்க் கற்பிக்கப்படவேண்டும். தேவஸ்தானங்களின் நன்னிலைக்கும் பாதுகாப்புக்கும் ஏற்படுத்தப்பட்ட சிவமதக் கமிட்டியார்களும் பஞ்சாயத்தார்களும் இவ்விஷயத்தின் முக்கியத்தையும் உணர்ந்துஅக்குறைவை நிவர்த்திக்கும்படிக்கு வேண்டப்படவேண்டும். சைவசாஸ்திர ஆராய்ச்சிமடங்களும், ஆகமப்பாடசாலைகளும் தமிழ்வேத பாராயணசாலைகளும், ஏற்படுத்தல், கோயில்களின் மதில்கள் கோபுரங்களையும் எடுத்துப் புதுப்பித்தல், கும்பாபிஷேகம் பிராமணபோஜனம் செய்தலையும் விட எவ்வளவு ஆவசிகமும் அருமையுமான தருமமென்பதை திராவிடப் பிரபுக்கள் கருதவேண்டும். இனியேனும் சிவதருமங்களைத் தலைமேற்கொண்ட மடாதிபதிகளும் திராவிட பிரபுக்களும் இவற்றைச் சிந்தித்து வேண்டியவற்றைச் செய்வார்களாக.

## சிவாகமங்களினியல்பு.

சிவபெருமானால் ஸ்தாபிக்கப்பட்டது சைவம். அச்சைவ சமயத்திற்கு ஆதாரமாயுள்ளது சிவபெருமானருளிய ஆகமங்கள். ஆகமம் என்றால் உறுதிப்பத்திரம் என்பது பொருள். எப்படி உண்மைப்பிரமாணமென கிருஸ்தவர்கள் அவர்கள் விவிலிய நூலையும், மகம்மதியர்கள் அவர்கள் கொரானையும் ஒப்புக்கொள்கிறார்களோ அதுபோலச் சைவசமயிகளால் உண்மைப் பிரமாணமாகக் கொள்ளப்படுவது இச்சிவாகமங்கள் காமிக முதல் வாதுளமிறுதியாக இருபத்தெட்டாம். இவைஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் எனத்தனித்தனி நான்குபாதங்களையுடையனவாயிருக்கும். ஆதலின்நான்மறை எனப்பழைய தமிழ்நூல்களில் கூறப்பட்டது. இவற்றுள் ஞானபாதம் இறைவனது சொரூபம் அவன் அருள்சக்தி ஆன்மாக்களின் லட்சணம் ஆன்மாக்கள் இறைவனை யடையும் வழி இவற்றைப்பற்றிக் கூறும். யோகபாதம் முப்பத்தாறு தத்துவங்கள் ஜகத்துக்குக் காரணமானமாயை, மாமாயை இவைகளைக் காணுமுறைமை, இயமம் நியமம் முதலிய யோகசாதனங்கள், மூலாதாரம் முதலிய ஆறுதாரங்கள் இவற்றைப்பற்றிக்கூறும். கிரியாபாதம் மந்திரங்கள், அவற்றின் உச்சாரணம். சந்தியாவந்தனம், சிவபூஜை முதலியனவும் புத்தி முத்திக்கு உபாயமான தீக்ஷை ஜெபம் முதலியவற்றைப் பற்றிக்கூறும். சரியாபாதம் சிரார்த்தம் முதலிய கிரியைகள், இல்லறத்தில் ஒழுகவேண்டிய ஆசாரம் தருமம் இவற்றின் விதிகள் ஆகிய இவைகளைப் பற்றிக்கூறும்.



சைவசமயிகள் அனுசரிக்கும் சகலவிதமான கருமங்களையும் அனுஷ்டானங்களையும் விதிக்கும் நூல்கள் இச்சிவாகமங்களே. இன்னும் தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரம் முதலிய சகல சிவாலயங்களிலும் செய்யப்படும் நித்தியபூஜை, நைமித்தியபூஜை உற்சவம் முதலிய கிரியைகள் யாவும் இச்சிவாகமங்களில் விதித்தபிரகாரமே இன்றைக்கும் நடைபெறுகின்றன. அன்றியும் அகத்தியர், கபிலர், பதஞ்சலி, உபமன்யு முதலிய இம்முனிவர்கள் பால் இராமர், கிருஷ்ணர், அருச்சுனர், முதலியோரும் இச்சிவாகமங்களில் விதித்தவாறே சிவதீக்ஷை முதலியன செய்யப்பெற்று முத்தியடைந்தாரென மகாபாரதம் பாத்மபுராணம் கூர்மபுராணம் முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. இச்சிவாகமங்களில் கூறப்பட்ட ஞானமே ஞானமென்றும் சொல்லப்படும். உபநிஷதம் பகவத்கீதை முதலிய நூல்களெல்லாம் சிவாகமத்திற் கூறப்பட்ட ஞானப்பொருளைச் சிரசில்தாங்கி யிருப்பதால் விசேஷமாக உபசரிக்கப்பட்டன. இச்சிவாகமங்கள் தாம், உண்மைப் பொருளை (தெரிந்துகொள்ளாது மயங்கிநின்ற) முனிவர்களுக்கு தெளிவுபடுத்தற் பொருட்டுச் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட முதனூல்கள். ஆதலின் வேதம் உபநிடதம் முதலிய சகலசாஸ்திரங்களும் சிவாகமத்திற்கு விரோதமில்லாத வழியே பிரமாணமாகக் கொள்ளப்படும். இச்சிவாகமங்களை உண்மைப்பிரமாணமெனக்கொண்டு அவற்றின் வழிநிற்பவர்களே சைவசமயிகளெனப்படுவர். அவற்றின் வழி நில்லாதவர்களும் அவற்றையே பிரமாணமென ஒப்புக்கொள்ளாதவர்களும் சைவர்கள் ஆகமாட்டார்கள். அங்ஙனமாகவும் தற்காலம் பல அந்நியமதஸ்தர்களும், அசைவர்களும் சைவர்கள்போல் பாவனை செய்தலும் சைவர்களுக்குமுள்ள உரிமைகளைப் பெறமுயலுதலும் எவ்வளவு மோசமும் வஞ்சகமுமான செயலென்பதைச் சைவமயிகள்அனைவரும் தம்மனத்தில் ஊன்றஆலோசிக்கக்கடவர்.

இச்சிவவாக்கிய சிவாகமங்களை ஸ்மார்த்தர்களும் அவர்கள் குலகுருவாகிய சங்கராசாரியரும் உண்மைப் பிரமாணமல்லவெனமறுக்கின்றனர். இவர்கள் உண்மையில் சைவர்களல்லர். வைஷ்ணவசமயத்தைச் சம்பந்தித்த மாயாவாதிகளாவர். இவ்வுண்மை, இவர்கள் மிகுதியாய்க் குடியேறியுள்ள ஊர்களிலும் இவர்களிருக்கும் கிராமங்களின் மத்தியிலும் விஷ்ணு கோவில் ஸ்தாபித்திருத்தலாலும், இவர்கள் வீடுகளில் சாலிக்கிராமத்தையும் துளசியையும் வைத்துப் பூஜித்தலாலும், சந்தியாவந்தனகாலங்களில் சிவநாமத்தைச் சொல்லாது விஷ்ணு நாமத்தையே துதித்தலாலும் நன்கு உணரப்படும். அன்றியும் இவர்கள்தமது சாதி ஆசாரவொழுக்கங்கள் ஒவ்வொன்

றிலும், சைவசமயர்களைப்போல ஆகமத்தை யனுசரியாது, ஸ்மிருதிகளையே தழுவி நடக்கின்றனர். ஆதலின் ஸ்மார்த்த ரெனப்பட்டனர். சாதி வேற்றுமைகளையும் மாமிச பக்ஷணத்தையும் அநுமதிக்கும் ஸ்மிருதிகள் ஆகமிகளாகிய சைவர்களுக்குச் சிறிதும் உடன்பாடல்ல. சிவாகமத்தை உண்மைப் பிரமாண நூலென ஒப்புக்கொள்ளாதவர்களும், தழுவி நடவாதவர்களும் தங்களைச் சிவமதஸ்தரெனச் சொல்லிக் கொள்வதற்குக் கிஞ்சித்தும் நியாயமில்லை. அவர்களும் சிவசம்பந்தமுடையவர்போல் சைவ வேஷங்களைப் பூண்டு கொள்ளுதல் கழுதைகள் சாம்பலில் புரளுவதுபோலன்றி உண்மையிற் சைவராக முடியாது. மகமதுவாக்கியத்தை ஒப்புக்கொள்ளாதவன் மகமதிய னாகமாட்டான். கிருஸ்துவ வாக்கியத்தை ஒப்புக்கொள்ளாதன் கிருஸ்துவ னாகமாட்டான். அதுபோலச் சிவவாக்கியமாகிய சிவாகமத்தை ஒப்புக்கொள்ளாதவன் சைவ னாகமாட்டான். முற்றறிவுடைய சிவபெருமானருளிய ஆகமங்கள், சாதிக்கு ஒரு நீதி வகுக்கும் ஸ்மிருதியைப் போலல்லாது, எல்லாமனிதர்க்கும் எல்லாவருணத்தார்க்கும் ஒரே தருமங்களும் ஒரேவிதமான ஆசிரமங்களும் விதிக்கும் இச் சைவநூல்கள். (முண்டகோபநிஷத்) "சண்டாளனெனும் சிவனெனுமொழியைச் செப்புவானாகில் அவனோடு பேசுக, அவனோடு வசிக்க, அவனோடு உண்ணுக" என விதிக்கப்பட்டிருக்கிறது இக்கட்டளையைப் பின்பற்றி இன்றைக்கும் சந்நியாசி என்று யார் வந்தாலும் சைவசமயிகள் அவர்கள் சாதி குலம் இன்னவென்பதை விசாரியாது உபசரிப்பார்கள். நமது சித்தாந்த சைவத்திற்கு இலக்கியமாய் அவதரித்துச் சைவசமயத்தை ஸ்தாபித்த அறுபத்துமூன்று நாயன்மார்களும் பற்பல சாதிகளிற்றோன்றி சாதிவித்தியாசம் இனிதும் பாராட்டாது சிவனடியாரிடத்தெல்லாம் பேரன்பு பூண்டொழுகினர்.

இறைவன் அருளிய இந்தச் சுத்தசைவாகமங்கள் எல்லார்க்கும் கொடுக்கத்தக்கனவுமல்ல விளக்கத்தக்கனவுமல்ல. இவை உண்மையில் நிலையுடையோனாய், சிவபக்திமானாய், தீக்ஷை பெற்றவனாயுள்ளவனுக்கே விளக்கத்தக்கன. ஆதலின் சிவதீக்ஷை பெற்றே சிவாகமங்களை யோதவேண்டும். சிவதீக்ஷையின் உயர்வைப்பற்றி வாயுசங்கிதை முதலியநூல் பின் வருமாறு கூறுகின்றனன்.

(இன்னும் வரும்.)

C. சங்கரராயர் B. A.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கோபம்.

இவ்வுலகத்தி லக்கினியானது சரீரத்தைமாத்திரம் தகிக்கக்கூடியது. கோபாக்கினியானது உள்ளத்தையும் உயிரையும் சரீரத்தையுந் தகிக்கக்கூடியது. அறிவிற்சிறந்த விவேகிகளுக்கும் கோபமெழுந்த காலத்துத் தங்கள் நிலைதடுமாறி மனமும் குடரும் கரிந்து உலகெலாம் நடுங்கும்படி தாமொருவழி தமது ஆடை ஒருவழி போகவும் அவர்பெருந்தன்மையாவையும் குறையும்படி செய்கிறது.

அல்லாமலும் தீபம்போற் பிரகாசிக்கும் தபோதனரிடத்துக் கோபம் பிரவேசித்து அயலோர் பதைபதைத்து உயிர்போம்படியான சாபத்தைக் கொடுத்து அவர்செய்த அரியதவங்களையும் ஒழியும்படிசெய்கிறது.

விஸ்வாமித்திரன் வசிட்டமகாமுனிவரிடம் கொண்ட குரோதத்தால் சத்தியசீலனாகிய அரிச்சந்திரமகாராஜனுக்கும் கற்பிற்சிறந்தமாதுசிரோமணியாகிய சந்திரமதியாருக்கும் செய்யத்தகாத கொடுமைகளைச் செய்து தன்றவத்தையிழந்தனன்.

"கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுடனுங் கோல மாறினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே."

இதுவல்லாமலும் தக்கனென்பவன் பிரமபுத்திரனாயும் தவசிரேட்டனாயும், அம்பிகையே மகளா யவன்பால வதாரஞ்செய்தும் சிவபெருமானையே மருமகனாகப் பெற்றிருந்தும் அக்கைலாயபதியானவர் தன்னைமாமனாரென் றுமதித்து உபசரணை முதலியவுஞ் செய்யவில்லையென அப்பெருமானை யவமதித்துக் கோபங்கொண்டு சிவபெருமானுக்கு யாகாவிர்ப்பாகங் கொடுப்பதில்லை யென்றுகூறி அவரை நீக்கியோர் யாகஞ்செய்ய வீரபத்திரரால் தலையிழந்தான்.

"தாவு சினத்தாற் றலையிழந்தான் றக்கனுமா
தேவி மகளாயுஞ் சிவசிவா — வாவன்மிகுந்
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்."

இக்காலத்திலும் மன்னர் மன்னர்களெல்லாம் கோபத்தினாலேயே நாடுநகரங்கள், செல்வங்கள், அனுபவிக்கும் போகங்கள் சேனைசைன்யம் முதலானவைகளையிழப்பதும் அன்றித் தங்களாருயிரையுந் துறக்கின்றனர். இதையுங்காண்கிறோம். இவ்வுலகத்தில் மனிதர்களுக்குக் கோபமுண்டாவதற்குப் பலமுகாந்திரங்களுண்டு. தாங்களெத்தனித்த காரியத்துக் கிடையூறு செய்தவர்மீதும் மனைவிபுத்திரர் முதலான உயிர்ச்சார்புக்குக் கெடுதி செய்தவர்மீதும் தன்னைவைதவர்மீதும் அடித்தவர்மீது மின்னஞ்சிலமுகாந்தரங்களாலும் கோபமுண்டாகிறது.

"கோபமே பாபங்களுக்கெலாந் தாய்தந்தைகோபமே குடிகெடுக்கும்
கோபமே யொன்றையுங் கூடிவரவொட்டாது கோபமேதுயர்கொடுக்கு
கோபமே பொல்லாது கோபமேசீர்கேடு கோபமே யுறவறுக்கும் [ம்
கோபமே பழிசெயுங் கோபமேபகையாளி கோபமே கருணைபோக்கும்
கோபமே யீனமாங் கோபமேயெவரையுங் கூடாம லொருவனுக்கும்
கோபமே மறலிமுன் கொண்டுபோய் தீயநரகக் குழியினிற்றள்ளுமால்"

கோபத்தா லிருமையிலும் யிவ்வுலகத்தும் மனிதர்கள் பெருங்கேடடைவரென்பது நிச்சயம். ஆனதால் கோபத்தின்வழியே தான்செல்லுதல் குணமல்ல. கோபத்தையடக்கிப் பொறுமையோடிருத்தலே மேலான குணம்.

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க — வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு."

தன்னினும் தாழ்ந்தவரை ஒருவன்கண்டனை தண்டனை செய்யச்செல்லும்போது தன்னினுமேற்பட்டவரிடத் தஞ்சி நிற்குந் தனது நிலைமையை யோசிக்கவேண்டும்.

"வலியார் முற்றன்னை நினைக்கத்தான் றன்னின்
மெலியார் மேற்செல்லு மிடத்து."



அல்லாமலும் பெரியோர் சமுகத்துச் செல்லும் நம் கோபமானது எப்படியாகுமென்றால், ஒரு சிறுகோலெடுத்துக் கொண்டு பெரியமலையைத் தள்ளநினைப்பதை யொக்கும். அல்லது தன்னை யொத்தவரிடத்துச் செல்லும் கோபமானது தானெவ்வளவு கெடுதியவர்க்குச் செய்கின்றனனோ அவ்வளவுகெடுதி யவராலடைவன். தன்னினுந் தாழ்ந்தவரிடத்துக் கோபத்தைச் செலுத்துவானாயின், இம்மையில் பழியும் மறுமையில் நரகத்தையுமடைவான் ஆனதால் யாவரிடத்தும் கோபமில்லாதிருத்தல் நல்லது.

பெரியவர்தம்மைக் காய்ந்தால் பிறங்கல்கல்லிய கோலொப்பன்
புரிவனபுரியப்பட்டுப் புலம்புவ னொத்தார் காய்ந்தால்
எரிநரகதனில் வீழ்வனெளியரைக் காய்ந்தா னென்றால்
ஒருவர்த மிடத்துஞ் சீற்றமுறாமையே நன்றுமாதோ.

நாம் பிறர்க்கு ஒருவிதத்திலும் தீங்கு செய்யாதிருக்க அவர் நம்மை அநீதியாகவைதால் நாமெவ்வாறு பொறுத்திருப்பது என்றால், கீழ்மக்கள் அறிவிற்சிறந்த பெரியோர்களைப் புன்மொழிகளால் வைவாராயின் மீட்டுமவ்விழிவான சொற்களைக் கொண்டவரைவையார். எதுபோலெனில், இவ்வுலகத்தில் கீழான நாயானது ஒருவரைக் கடித்தால் அந்நாயைத் திருப்பிக்கடிப்போரில்லை.

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவின ரீங்கில்லை — நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு."

அல்லாமலும் குற்றம் பொருந்திய நாவுடையார் தகாதவார்த்தை சொன்னாலவரோடு பேசாதிருத்தலே யறிவுடையார்க்குப் பெருந்தன்மை. இதுவல்லாமலும் பெரியோர்கள் தம்மையிகழ்ந்து பேசியவர்களைப் பார்த்துத்தாம் பொறுப்பதுமன்றி ஐயோ யெம்மையிகழ்ந்த தீவினைப்பயனால் இவன் மறுமையில் நரகத்தை யடையப்போகிறானென்று இரக்கமுங்கொள்வார்கள்.

"தம்மை யிகழ்ந்தமைத்தாம் பொறுப்பதன்றிமற்
றெம்மையிகழ்ந்த வினைப்பயத்தா — லும்மை
யெரிவாய் நிரையத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்."

இதுவல்லாமலும் ஒருவர் சொல்லும் கடுமொழியும், நம்மெதிரில் வந்து நின்றுகொண்டு நமக்குத் தீங்குசெய்கிறதா. அல்லாமலும் அன்னியபாஷையில் ஒருவன் நம்மைவைதால் அப்பாஷை நமக்குத் தெரியாததால், நாம் கோபங்கொள்ளாது சத்தமாத்திரங் கேட்கிறோம். பட்சிசாதிகளின் சத்தம்போலக் கொள்ளலாமென்று மேற்படுகிறது. இதுவரையிலுமோர் முகாந்தரமின்றித் தம்மையொருவர் வைதகாலத்தும் தாமவரை மீண்டும் வையப்படாதத்தோடு அவர்தம்மை வைததைப்பற்றி மறுமையில் நரகத்தை யடைவரென அறிவுடையோர்க ளிரங்குவரென்பதும் அல்லாமலும் பிறர்சொல்லும் கடுமொழியை அன்னியபாஷையின் வார்த்தைபோலும் காக்கை குருவியின் சத்தம்போலும் கொள்ளவேண்டுமென்று மவ்வார்த்தையான்து நம்மெதிரில் வந்துநின்று நமக்குத் தீங்கு செய்யவில்லையென்று மேற்பட்டது. ஆனால் பிறர்சொல்லும் கடுமொழிகளைப் பொறுத்துக்கொள்வதினால் நமக்கிம்மை மறுமைகளிற் பலனுளதோவெனில் உண்டு. யாதெனில் நல்வழியைக் கடந்தார் வாயிலுண்டாகும் கடுமொழிகளைப் பொறுப்போர் மூவாசையு முற்றத் துறந்த மகான்களைக்காட்டிலு மிம்மையில் பரிசுத்த குணமுடையராவர்.

“துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொன் னோற்கிற் பவர்.

அல்லாமலும் சாந்திராயணவிரதம், சோமவாரவிரதம், சஷ்டிவிரதம், கிரிச்சரம் முதலான பலவிரதங்களையு மனுட்டித்து அதனாலாகாரம் நித்திரை முதலானவைகளை யொழித்துத் தேகத்தை யிளைக்கச்செய்யு மறிவுடையார் பெரியோர். அவர் மறுமையிலடையும்பலனும் விசேடம். ஆனாலிவரைக் காட்டிலும் மேலானவர்களும் பெரும்பலனடையக் கூடியவர்களு முளர்யாரெனில் பிறர்கடுமொழிகளை பொறுப்போர்.

“உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச் சொன்னோற் பாரிற்பின்.”

ஆனாலிவ்வரிய பாவினங்களினாலேயே பொறுமை யுடையார்க்கு இருமையிலும் பெரும்பலனுளதென் றேற்படுகிறது. ஆனா லிதுவரையிலும் சொன்னதில் பிறர் கடுமொழிகளைப் பொறுத்துக்கொள்ளுவோமதிற் றடையில்லை. ஆனால் பிறர் நமக்குத் தேகாந்திரியம் வரையில் தீங்கான காரியங்களையேசெய்தால் நாமதுவிஷயமாய்க்கோபங்கொண்டு அவர்க்குத்தீங்கான காரியத்தைச் செய்யாதிருக்கவுங் கூடுமோவெனிற் கூடும். அறிவுடையோர்



கள் தமக்கெப்போதுந் தீங்குசெய்வோர்க்கும் உபகாரமேசெய்து காப்பாற்றுவார். எதுபோலெனில், ஒருமரத்தின்கிளையையொருவன் ஒருபால்வெட்டுந்தோறும் அம்மரத்தின் வேறொருகிளை வெட்டப்பட்டவனுக்கே நிழலைத் தருகிறது.

“சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்——மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.”

“கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.”

“உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ணபகார மாற்றுச் செயினு—முபகாரந்
தாஞ்செய்வ தல்லா தவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந் தார்க்கில்.”

ஆனாலிப்படி தங்கட்குத் தீங்குசெய்த விடத்தும் உபகாரமேசெய்யு மகான்கள் உலகத்திலுண்டோவெனிலுண்டு. அதைச்சொல்லுவோம். நம் திருநாவுக்கரசு சுவாமிகளைச் சமண்சமையத்துட்புகுத்த பல்லவர்கோனென்னுமரசன் சமணர்களது துற்போதனையைக் கேட்டுப் பழிபாவத்துக் கஞ்சாமல் சுவாமிகளை நீற்றறையிலிட்டும், விடங்கலந்தபாலைக்கொடுத்தும், தனது யானையைக்கொலைசெய்யும்படி யேவியும், கடைசியாகக் கல்லிற்பிணித்துக்கடு சமுத்திரத்திற்றள்ளியும் நம் வீரட்டானேச்சுரனது திருவருளினால் இவ்விபத்துக்களெல்லா வற்றினும் நின்று நீங்கிக் கரையேறியகாலத்து அதைக் கண்ட பல்லவர்கோனென்னு மரசன் மிகப்பயத்தையடைந்து அப்பெரியாரது பாதத்தில் விழுந்துபணிந்து சுவாமிகாள் சமணர்களது துற்போதனையால் தேவரீர்பெருமையறியாது அடாத காரியஞ்செய்தேன், அடிமையின் குற்றமெலாம் பொறுத்துத் தங்கட்கடிமையாக்கிக் கொள்ளல்வேண்டுமெனச்சுவாமிகள் சிறிதுமவன் குற்றத்தைக்கவனியாது விபூதி ருத்ராக்ஷதாரணஞ் செய்து பஞ்சாக்கரவுபதேசமுஞ் செய்வித்துப் பழையபடியே அவனைச் சமையத்தனாக்கினார்.

“பல்லவர்கோன் வந்துபணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
இணைரெரிதோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.”

இதுவல்லாமலும் மெய்ப்பொருள் நாயனாருடன் பலதரமும் யுத்தஞ்செய்து தோற்றுப்போன முத்தநாதனென்பவன் அவரை வஞ்சகத்தால் வெல்லக்கருதிப் பசுவானது புலித்தோலைப் போர்த்துப் பயிரை மேய்வதுபோல் சிவனடியார் வேடம்பூண்டு இராஜவரண்மனையில் பலகாவலையுங் கடந்து அரசனும் அரசியும் சயனித்திருக்கு மறைக்குட் செல்ல, உடனே தேவியார் அரசனை யெழுப்ப மன்னனும் வந்தபெரியாரை வணங்கிநிற்க அதற்கவ னுங்கள் நாயகனாருரைத்த வாகமநூ லிதுவரையில் வெளிவராததொன்றுனக் குபதேசிக்கக் கொண்டுவந்தேன் அது ஏகாந்தமாயிருந்து நான் சொல்ல நீ கேட்கவேண்டுமென அவ்வாறேமன்னவன் பத்தினியை அந்தப்புர மனுப்பிவிட்டு அவனை உயர்வாகிய ஆசனத்திருத்தித் தான் கீழே நின்று வணங்கிக்கேட்க, அப்பாதகன் புத்தக மவிழ்ப்பான்போலப் பத்திரம் வாங்கித்தான் முன்நினைந்த வப்பரிசேசெய்ய மெய்த்தவவேடமே மெய்ப்பொருளெனத் தொழுதுவீழ்ந்தார். அதைக்கண்ணுற்றதத்தன் அப்பாதகனைத் தன்வாளாயுதத்தா லோரேவெட்டாக வெட்டப்போனான், அப்போது நாயனார் தத்தா! நம்தமரெனத்தடுக்க அரசனுத்தரவின்மீது அப்பாதகனுக் கோரிடையூறுஞ் செய்யாமல் நகர்க்கு வெளியே கொண்டுபோய்விட்டு அச்செய்தி அரசனுக்குவந்துசொல்லப் பிறகு பார்த்திபனும் பரசிவப்பிரபுவின் றிருவடிநிழலைச்சேர்ந்தார்.

“ஒட்டலன் செய்தீமைக் கொருதுநம ரென்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா—முட்ட
ஒருத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.”

இப்பெரியோர்களது திவ்ய சரிதத்தால் பிறர்தமக்குத் தீங்கு செயினும் தாமவர்க்குத் தீங்குசெய்தல் கூடாதெனச் செவ்வனே தெரிகின்றது. இதுவல்லாமலும் பிறரால் நமக்கு நன்மை தீமைவருதற் கேதுவான சில அருமையான காரணங்களைக் கூறுவாம், இதைத்தான் மிகவும் கவனித்தல் வேண்டும். இவ்வுலகத்தில் நாமுற் பிறப்பில் செய்த நல்வினைதீவினைக்கீடாக இப்பிறப்பில் சிவபெருமானனவர் பஞ்சகிர்த்தியங்களை, அவன் அவள், அது, என்னும் ஜீவர்கள் முன்னிலையில் நமக்கு நல்வினைவருங்கால் நல்லதையும் தீவினைவருங்கால் தீமைகளையும் நடத்துவிக்கிறார். அது அரியாமலேயெய்தவனிருக்கவம்பை நோதல்போல நமக்கு நன்மை செய்தவரி



டத்து வெறுப்புக்கொள்ளுகிறோம், இங்ஙனமெண்ணுதல் மேலும் மேலும் நமக்குப் பிறவியை யுண்டு பண்ணுதற் கேதுவான அறியாமையேயாம்.

அறிவிற்சிறந்த பெரியோர்கள் நல்வினை தீவினைவருங்காலத்துச் சீவச்செயலை நாடாது சிவச்செயலை நாடி மகிழ்ச்சி வாட்டமின்றி யிருப்பார்கள்.

அல்லாமலும் இந்தவினையானது, இன்னவூரிலே, இன்னகாலத்திலே இன்னவிதமாக, இன்ன முன்னிலையில் வருமென்றறிந்து அவ்வினையை யவ்வூரில் அக்காலத்து அவ்விதமாக அதன்முன்னிலையில் சிறிதுமாறுபாடின்றி இறைவன் நடத்துவிக்கிறார்.

இன்னவினை யின்னதலத் தின்னபொழு தின்னபடி
யின்னதனா லெய்து மெனவறிந்தே—யன்னவினை
யன்னதலத் தன்னபொழு தன்னபடி யன்னதனாற்
பின்னமறக் கூட்டும் பிரான்.

சும்மா தனுவருமோ சும்மாபிணி வருமோ
சும்மா வருமோ சுகதுக்கம்—நம்மான்முன்
செய்தவினைக் கீடாச்சிவனருள் செய்விப்ப தென்றா
லெய்தவனை நாடியிரு.

பேராயிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாராவமுதை யறியாமல்—வாராது
தீதுநலமுந் தெரியுங்கா னெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு.

ஜீவர்கள் முன்செய்த கர்மத்துக்கீடாக பரமசிவம் காலதேசம் முதலானவைகளறிந்து ஓர் முன்னிலையாக நடத்துவிக்கிறபடியால் சீவச்செயலை நாடாது சிவச்செயலை நாடவேணுமென் றேற்படுகிறது. இதுவல்லாமலும் ஒருவருக்குத் தீவினைவருங்காலத்துத் தாய்முலைப்பாலே பகையாய் உயிரைப்போக்குகின்றது. நல்வினை வருங்காலத்து விடமுமமிர்தமாகின்றது. தாய்ப்பாலே தலைக்கேறிப் பிள்ளையிறப்பதும், விடமுண்டுபிழைப்பதும் உலகத்தில் பார்த்திருக்கிறோம்.

ஊழ்வினை யுறுத்தகாலத் துறுதவத்தீன்ற நற்றாய்
வீழ்முலை சுரந்தபாலு முண்டபின் வெய்யநஞ்சா

மாழ்கடற் பிறந்தநஞ்சு முண்டபின் னமிர்தமென்றால்
வாழிய மாந்தரெல்லா மிருவினை வயத்தர் மன்னோ.

ஆனால் மேற்சொன்ன பாவினத்தால் ஒருவருக்கு தீவினை வருங்காலத்து வேண்டியவர் செய்யும் நன்மையும் கெடுதியாகவே முடிகிறதென்றும், நல்வினை வருங்காலத்துப் பகைவர்செய்யுங் கெடுதியும் நன்மையாகவே முடிகிறதென்று மேற்படுகிறது.

ஆனாலிவ்வுலகத்தில் சிலர் தங்களுக்கொருவர் தீங்குசெய்தகாலத்தும் வைதகாலத்தும் அப்போதத்தற்குச்சிறிதேனுங் கோபியாமலும் தீங்குசெய்யாமலும் அவரைக் கண்டபோதெல்லாம் தாமரை மலர்ந்ததுபோன்ற முகமும் அவருடன்பேசும் வார்த்தையெல்லாம் சந்தனம்போலுங் குளிர்ச்சியுடையதாயுமிருக்கிறது. ஆனால் சமையம் வாய்த்தபோது அவர் பகையை வஞ்சகமாக வுள்வைத்துக் கத்தரிக்கோல்போலவர்க்கு மிகக்கெடுதி முதலானவை செய்கிறார்கள். அதனால் முதலில் அவர் தீங்கு செய்தகாலத்துப் பொறுத்தது பொறுமை யாகாதோவெனில் ஆகாது அவர்கள் பாபிகள் வஞ்சக முடையவர்கள் அவர்கட்கிம்மூன்று குணங்களெப்போதுந் தங்கியுள்ளது.

செங்கமலப் போதலர்ந்த செவ்விபோலும் வதனந்
தங்குமொழி சந்தனம் போலும்—பங்கியெறி
கத்தரியைப் போலுமிளங் காரிகையே வஞ்சமனங்
குத்திரர் பால் மூன்று குணம்.

ஆனால் விவகார முன்னிலையில் கோபமானது உலகத்திலெல்லாருக்கும் வரக்கூடியதுதான். அதில் உத்தமர் கோபமானது பிறர்க்குத்தீங்கின்றி யக்கணமே மாறிவிடும். மத்திமர்கோபம் சிறிதுகாலத்துக்குள் ளொருவர் முன்னிலையில் மாறும். அதமர்கோபம் கற்பிளவுபோலு மாயுள்பரியந்தம் மாறாது.

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.



இதுவரையிலும் பிறர் தமக்குத் தீங்கு முதலானவை செய்தகாலத்து அப்போது பொறுமை யுடையார்போ லிருந்து சமயம் வாய்த்தபோது அவர்க்குக் கெடுதிசெய்வோர் வஞ்சகமுடைய வரென்றும், கோபமானது விவகாரமுன்னிலையில் வந்தாலும் அதனால் தீங்கின்றி உத்தமர் கோபம் உடனே மாறுமென்றும், மத்திமர் கோபம் சிறிதுகாலத்துக்குள் மாறுமென்றும், அதமர்கோபமாயுள்பரியந்த மாறாதென் மேற்பட்டது. ஆனால் பிறர்செய்த தீமை முதலானவைகளைப் பொறுப்பதனால் பலனுளதோவெனில் உண்டு. தம்மை வைதவனை வாழ்த்தினவனெனவும் தமக்குத் தீங்குசெய்தவனை நன்மை செய்தவனெனக் கொள்ளும் மகானுக்கள் பேரின்பமாகிய முத்தியையடைந்தவர். இதுதிண்ணம். அப்படிக் கொள்ளாதவன் பொய்தவனாகி யுலகத்தில் பிறந்திறந் துழல்வனென்று ஆன்றோர் வாக்கியங்கள் கூறியுள்ளது.

வைதவன் றன்னை நன்றுவாழ்த்தின னெனவுந்தீய
செய்தவன் றன்னை நல்லசெய்தவனெனவுங் கொள்வோன்
கைதவமகன்ற முத்திகண்டவ னவ்வாறன்னான்
பொய்தவ னென்பதென்று புகன்றனர் புலவரன்றே.

மேற்சொன்ன பாவினத்தால் பிறர்செய்த தீமைகளைத்தமக்கு நன்மையாகவும் அவர் வைதவைகளை வாழ்த்தினதாகவும் கொள்ளுங் குணமுடையோரே மோட்சத்தையடையும் மகானுக்களென் றேற்பட்டது.

சர்வபந்த மொழித்த மகானுக்களை மேற்சொன்னவாறு நடத்தல் கூடும் இதுபற்றியே நாயனாரும் "இன்னாசெய்தாரை யொறுத்தலவர்நாண, நன்னயஞ் செய்துவிடல்." தமக்கு கெடுதிசெய்தவரை மகான்கள் தண்டித்தல் அவர் நாணும்படி அவர்க்கு யினிமையைச் செய்தலாம்.

இவைகளெல்லாம் அறிவிற்சிறந்த பெரியாருக்கே தகும்' நம்மைப் போல் குடும்பத்தில் பந்தப்பட்டிருப்போர்க்கு மேற்சொன்ன விஷயங்களெல்லாம் அசாத்தியமாயிருக்குமென்று தோற்றுகிறது. ஏனெனில் நமக்கடங்கிய ஆளடிமை மனைவி மைந்தர் முதலானவர்கள் பார்க்கும் விவகாரங்களில் தவறு வந்தவிடத்தும் அவர்கள் தகாத காரியஞ் செய்த விடத்தும் கண்டன தண்டனம் அவசியம் வேண்டியதாயிருக்கிறதே. குடும்பத்தலைவனாயுள்ளவன் அப்படி செய்யாவிட்டால் காரியம் நடவாதே ஆகையாலிந்த விஷயத்திலெப்படி நடந்துகொள்ளவேண்டுமெனில் சொல்லுவாம். எப்படியெனில் நம் வீட்டிலிருக்கும் சிறுகுழந்தைகளிடத்து நாம் மிகப்பிரிய

முடையவர்களாயிருக்கிறோம். அதற்கு அன்னம், பால், பழம், பலகாரம் முதலானவைம் பிரியத்துடன் கொடுத்து அதை வளர்க்கிறோம். இது அறக்கருணை. ஆனாலதே குழந்தைக்கு இசிவு முதலான நோய்வந்த காலத்து அதற்குக்கடுமையான மருந்துகளைக்கொடுக்கிறோம். இவ்விசுவு நீங்குதற்குச் சூடுபோட வேணுமென்று பரிகாரி சொன்னால் ஊசியை நெருப்பிற் காய்ச்சியதற்குச் சூடும் போடுகிறோம். ஏனெனி லக்குழந்தைக்கு நோய் நீங்கிச் சுகமடைவதற்காக அதனிடம் வைத்த பிரீதியால் செய்கிறோம். இது மறக்கருணை. அக்குழந்தையின் சுகத்தைக் கருதியே இவை யிரண்டும் செய்கிறோம். இது பற்றியே தன்பகைவர் சொல்லு மின்சொல்லினும் காதலாற்சொல்லும் கடுஞ்சொல் மேலானது. "காதலார் சொல்லுங் கடுஞ்சொல்லுவந்துரைக்கு, மேதிலாரின் சொலிற்றீதாமோ-போதெலா, மாதர் வண்டார்க்கு மலிகடற்றண்சேர்ப்ப, வாவதறிவார்ப் பெறின்."

ஆனால் நமக்காக வேண்டிய காரியங்களில் நமக்கெதிராயுள்ளவர்கள் தகாத காரியஞ் செய்தால் நாமுமவ்வாறே நடத்தலன்றோ நங்காரியம் முடிவு பெறு மென்று சங்கைகொள்ளலாம். இவ்வுலகத்தில் கடுமொழி நயமொழியை வெல்லாது. எது போலெனில், யானையைத் துளைத்துச் செல்லுமம்பானது பஞ்சுப்பொதியிற் பாயாது கடுமையான இருப்பாணிக்குப் பிளவுபடாத கற்பாரையானது பசுமரத்தின் வேருக்குப் பல பிளவாய்ப் பிளந்து விடும்.

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங்கோல் பஞ்சிற்பாயாது — நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாவப் பாரைபசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

இப்பாவினத்திலேயே இவ்வுலகத்தில் நயத்தாலாகுங் காரியம் கடுமையாலாகாதென்றேற் படுகிறது.

ஆனாலிவ்வுலகத்தில் குடும்ப விஷயமாக உள்ளத்தில் கோபத்தை நெடுங்காலம் வைத்துப் பிறகு கடுத்தீங்கு செய்யாது உள்ளக்கருணையோடு மேலுக்குமாத்திரம் கோபத்தைச் செலுத்துவானாயின் கெடுதியில்லை. மனமொழி மெய்களால் பிறருக்குத் தீங்கு செய்யாது நடப்போமாயின் இம்மையில் பெரும் புகழும் மறுமையில் சோபானமாகப் பேரின்பமாகிய முத்தியையு மடைதல் திண்ணம்.

**கா-வேதாசலமுதலியார்.**



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உயிர்.

## இனி ஆன்மவிலக்கணம்.

தொகுதி 5 பக்கம் 120. தொடர்ச்சி.

இங்ஙனம் பரசரீரமூன்றையுமுறையா னெய்தியவுயிர் பின்னர்ச் சூக்குமதேகத்தைப்பொருந்தி எவ்விடத்திலும் போக்குவரவுகள் செய்து சூக்குமமாகிய இருவினைப்பயன்களை ஈட்டியுநுகர்ந்தும், பின்னர்த் தூலசரீரத்தைப்பொருந்தி எவ்விடத்திலும் போக்குவரவுகள் செய்து தூலரூபமாகிய இருவினைப்பயன்களை யீட்டியுநுகர்ந்தும், இவ்வாறு அதீதமுதலாகச் சாக்கிர மீறாயுள்ள ஐந்தவத்தைப்பட்டு நிற்கு மென்றறிக.

மேற்கூறிய காரணசரீரமுதலிய அவ்வைந்தும் அவ்வாறு முதற்காரணமாகிய மாயையினின்றுந் தோன்றி ஆன்மாவுக்கு வடிவமாய், முறையே ஆனந்தமயகோசமும், விஞ்ஞானமயகோசமும், மனோமயகோசமும், பிராணமயகோசமும், அன்னமயகோசமும் ஆகிய ஐவகைப்பெயர்பெற்று, அன்னமயமுதலாகக்கொண்டு ஒன்றற் கொன்று சூக்குமமாய் நிற்கக் கேவலத்திலொன்றுமின்றி ஆணவமலமாத்திரையாய் நின்ற ஆன்மா இவ்வைங்கோசங்களில் அதுவதுவாய் வசிப்புண்டு ஏகதேசியாய் அவைகளிற் போக்குவரவு செய்து நிற்குமெனவறிக, கேவலத்திலொன்று மின்றி நின்ற ஆன்மா மாயையிலங்ஙனங் கலக்குண்டபாகத்தை முதற்கட்பொருந்தி அறிவிச்சை செயல்கள் பொதுவகையால் அவ்வளவு விளங்கப் பெற்ற மாத்திரையே அம்மயக்கவறிவால் ஓரானந்த முண்டாகப் பெறுதலின், அஃதானந்த மயகோச மெனப்பட்டது. ஏனையவுங்காரணக்குறியாமாறுய்த்துணர்ந்து கொள்க. ஆன்மா இத்தன்மையின் கீழ் மேலுங்கொள்ளி வட்டமெனவுங் கறங்கெனவுமிடத்தின்கட் சுழலும்படி கொண்டுதிரிதல் பற்றி இவ்வைங்கோசங்களை ஐந்து பறவையாக்கவும், அவற்று ளொரோவொன்றை ஐவகைப்படுத்து முகமுதலிய வுறுப்புக்களாவும் வேதத்துள்ளுருவகஞ் செய்துணர்த்தியவாறு காண்க என்பவர் சிவஞானசித்தியாருரையில்.

ஆன்மாவினுண்மையுணர்தற்கு இவ்வைங் கோசங்களை இங்ஙனம் பகுத்தறிதலு மொருசாதன மெனக்கொள்க.

இன்னும் ஆன்மாச் சார்ந்ததின் வண்ணமாய் வசித்திடவருமாற்றிற்குச் சருவஞானோத்திரமாகிய ஆகமத்திலே அவ்வச்சார்புவிசேடம் பற்றிப் பூதான்மாமுதலறுவகைப்படுத்துத் தொகுத்தும் விரித்து மோதியவாறுய்த்துணர்க வென்பர். இதனை அத்துவிதவாக்கியத்தெளிவுரையிற் காண்க.

இனி இங்ஙனம் பந்திக்கப்பட்ட அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் ஆகிய ஐந்திலும் ஆன்மாவேற்றுமையின்றி நின்றுசெலுத்துமாறு யாங்ஙனமெனில், முறையேதேரைப் பாரிற்செலுத்துவோர் தன்மையும், மரப்பாவையினை யியக்குவோர் தன்மையும், தோற் பாவையினையாட்டுவோர் தன்மையும், பரகாயப்பிரவேசஞ் செயவோர் தன்மையும், வேதியர் வேடர் முதலிய பலவேடங்காட்டி ஆடுவோர் தன்மையும் ஒக்குமெனவறிக. இவையைந்தும் முறையே ஒன்றற்கொன்று அந்தரங்கமாய் அவ்வைங்கோசங்களினும் ஆன்மாநின்று செய்யுமாற்றிற்குவமையாமாறு அறிவுடையார்பாற்றெரிந்துனர்க.

இனி என்மனை என்பதி என்று அபேதமாய் வழங்கிவந்தனவெல்லாம் உனக்குவேறுதல் கண்டாற்போல உனதன்றாகிய உடல்பொறி பிராணன் கரணங்களைத் தனித்தனியெனதென்றும், அங்ஙனமுணர்ந்த பசவுணர்வை என்னுணர்வென்றும், அபேதமாகக் கூறிக்கொண்டு நீ அவைகளின்வேறாய் நிற்கின்ற முறைகாண்பாயாக. மனைமுதலிய புறப்பொருள்கள் என்னின் வேறுதல் கூடும், உடல் பொறிமுதலியவை என்னைவிட்டு நீங்கமாட்டா வென்பாயாயின் உன்னுடையனவாகி அபேதமாய் எனதென்று வழங்கப்பட்டு நகமயிர் முதலிய சிலநீங்குதலுங் காணப்படுதலால், இதனானும் ஆன்மா அவற்றிற்கு வேறென்ப தறிந்துகொள்க.

அற்றேல், உடல்பொறிமுதலியவற்றை எனதென்பது, தன்மனை முதலியவற்றை எனதென்றதுபோலன்றி இராகுவினது தலையென்றாற்போல் அபேதம்பற்றிக்கூறுங் கருத்தேயாகலின், உரைப்போர் குறிப்பொடு சார்த்திக்காணுங்கால் அவ்விருவகை வழக்கிற்குந் தம்முளொக்குமாறு யாங்ஙனமென்பாயாயின், ஆபரணம் ஆடைமாலை முதலிய புறப்பொருள்களை யணிந்தபோது என்னணியாமென்று அபேதம்பற்றிய காலத்



தால் நினைத்திருந்த நீ நின்னாலணியப்பட்ட அப்புறப்பொருள்களாகிய அணிகலமுதலாயின நீங்கியபோது உனக்கு அந்நியமாய் நீயல்லவாயினாற் போல, உடல் பொறிமுதலிய அனைத்தும் நின்னின்றுமயலாகு மாகலான், உன்னுண்மை யறிந்து நீ இவற்றை நீங்கிநின்றறிவாயாக.

இனி ஆன்மாவை என்னுடைய ஆன்மாவென்றபொழுது யான்வேறு ஆன்மாவேறன்றாகவும் எனதென்றல் யாங்ஙனமெனில், உயிரைவேறாகக் காணுங்கருத்தின்றி இராகுவினது தலையென்றாற்போல ஒருசாரார் கூறுஞ் சிறுபான்மை வழக்காதலின் அஃது அபேதம்பற்றிய வழக்கெனவேயமையுமென்றறிக. விஞ்ஞானமயகோசம் ஆனந்த மயகோசங்கள் யானல்லேனாகிய முறைமையாதெனில், இவ்விருவகைக் கோசங்களை யெனதென்றல் ஏனைகோசங்கள்போல வேறாகக்காணுங் கருத்தால் எல்லாராலும் வழங்கப்படும் பெரும்பான்மை வழக்காதலின, அஃது அதுபோல அபேதம்பற்றிய வழக்கெனவமையாமையின் அவ்விருவகைக் கோசங்களும் ஏனையவுடல் முதலியனபோலவுயிரின் வேறேயாமென் றறிக. புத்தியை மனமென்றும், மனத்தைப் புத்தியென்றும், சித்தத்தை ஆன்மாவென்றும், ஆன்மாவைச் சித்தமென்றும், காரணங்கட்கெல்லாம் பரமகரணமாகிய சிவபிரானை ஆன்மாவென்றும், ஆன்மாவைச் சிவபிரானென்றும் இங்ஙனம் ஒவ்வோரவதரங்களின் உபசாரமாகக் கூறப்படும். உள்ளவாறு நோக்குவார்க்கு என்ற ஆன்மாவென்னும் வழக்கில் ஆன்மாவென்றது தன்னோட்டியையுடைய பிறிதொன்றின்மேல் ஆகுபெயராய் நிற்கும் ஆகலான், அவ்வழக்குப்பற்றி நின் கருத்து நிரம்புமாறில்லை யென்றறிக. ஏனைமூவகைக் கோசங்களையும் வேறாகக்கொண்டு விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோச மிரண்டும் முறையே சீவான்மாவும் பரமான்வுமாமென்பர் மதத்தை மறுத்தற்பொருட்டு அவற்றை வேறுவிதந் தோதியவாறெனவறிக.

இனி ஆன்மாவின் வேறாகிய அவ்வைங்கோசங்களை ஆன்மா பொருந்தல்பற்றி ஆன்மா என உபநிடதங்களிற் கூறியதென்பர். அதுவும் விளக்கிருக்கின்ற தகழியை விளக்கென்றாற்போலத் தானியாகுபெயராதற்குரிய இயைபு பற்றியன்றிப் பிறிதில்லையாகலான், பொறி புலன் கரணமுதலியவெல்லாவற்றின்கண்ணும் அறியப்படும் பேதமாய்ப் பிரிதலின்றி யறிவதாகிய ஆன்மா அறியப்படு மப்பொருள்கட்கு வேறெனவறிக.

இன்னும், அன்னமயகோச முதலிய நான்கினையும் ஒரோவொன்றாக விட்டுவிட்டு ஐந்தவத்தைப்பட்டு விழித்தபின் அவை கூடிநின் றறிக்கக் காணப்பட்ட கனவைச் சொல்லியுஞ் சுழுத்தியினைக் கருதியும் அவைகட்கு

வேறுபுண்டு வினைகளின்றிக் கிடந்துயிர்த்த துரிய துரியாதீதங்களை உண்டு வினைகளுறுதலாகிய மறுதலையின் வைத்தும் அங்ஙன மவத்தைப் பட்ட வற்றை அறியா நிற்குமாகலால், இதனானுங் கண்டறியப்பட்ட வுயிர் அவற்றின் வேறெனத் தெளிக.

இனி ஆன்மா முதல்வன்போலச் சுத்தசித்தே யென்பாயாயில் மாயா காரியங்களைப்பற்றி நின்றறிதல் வேண்டா, அவ்வாறன்றி அமைச்சரும் அரசும்போல அவற்றுடனின்று அம்மாயா கருவிகளைப்பற்றி அறிதலுண் மையால், அநாதியே ஆணவமலத்தின் மறைந்து அருவனாய்நிற்றல் பெறப் படுமென்றறிக.

இதுவரையும் பாமதங்களை பரிகரித்து உயிர்க் கிலக்கணங் கூறியது. காண்க.

இனி ஆன்மா வெவ்வேறு அவத்தை யணையுமியல்பு.

ஆன்மா மேற்கூறிய மாயா காரியங்களோடு அமைச்சரும் அரசும் போறலின், அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாப் போந்த அரசன்மீள மாளிகையுட்புகும்போது வாயில்கடோறும் அவரவர் க்கு விடைகொடுத்து நிறுத்திக் காவலும் வைத்துப் பின்னர் அந்தப்புரத் தின்கண்ணே தனியே செல்லுமாறுபோல, உடம்பின்கண் முறையே அக் கருவிகளி னீங்கிப் பிராணவாயுவைக் காவலாக நிறுத்தி ஐவகையவத்தை யுறுமென்க.

ஆன்மா, அரசன்போல விட்டுவிட்டுச் செல்லுதற்கண் இலாடத்தா னத்திற் சாக்கிராவத்தையுறும்வழி முப்பத்தைந்து கருவிகளும், கண்டத் தானத்திற் சொப்பனாவத்தையுறும்வழி யிருபத்தைந்து கருவிகளும், இரு தயத்தானத்திற் சுழுத்தி யவத்தையுறும்வழி மூன்று கருவிகளும், நாபித்தா னத்திற் றுரியாவத்தையுறும் வழி இரண்டு கருவிகளும், மூலதானத்திலே துரியாதீதாவத்தையுறும் வழி ஒரு கருவியுமாமென்க. இக்கருவிகளின் வகை யைச் சிவஞானசித்தியாரிற் காண்க.

மேற்கூறிப்போந்த சாக்கிரமுதலிய அவத்தைகள் ஐந்துங் கீழ்நோக் கிச் சென்றொடுங்கு முறையும் மேனோக்கித் தோன்று முறைமையும்பற்றி இருவகைப்படும். அவற்றுளொன்றாகிய ஒடுங்குமுறையாகியது கன்மார்ச் சிப்புக்கேதுவாய்ப் பிறவிக்கு வித்தாம். மற்றொன்றாகிய தோன்றுமுறை யாகியது கன்மநுகர்ச்சிக் கேதுவாகலாற் பரம்பரையிற் பிறவியறுத்தற் குக் காரணமாகி யேற்படும், இனி இதயமுதற் றுவாதசாந்த மீறாகிய தான



ங்களிற் புறக்கரண முட்கரணங்களைப் பற்றியும் பற்றாதும் பிரத்தியாகார முதல் ஐவகைப்பட்டு நிகழும் யோகாவத்தையும் அதுபோல ஒடுங்கியும் பின்னர்த் தோன்றியும் அவ்வாறே பயன் றருவதன்றிப் பிறிதன்று. ஆத லால் இந்த யோகாவத்தை ஞானாவத்தை போலுமென மலையாதொழிக. இங்ஙனங்கூறிய மூன்று பேதமும் முறையே சகலத்திற்கேவலம், சகலத் திற்சகலம், சகலத்திற் சுத்தமென்பர்.

சாக்கிராதி யவத்தையென மேற்கூறிப்போந்த ஐந்தனுள், முதலவத் தையாகிய சாக்கிரத்தை யடையப்பெறும் இலாடத்தானத்தின் கண்ணுஞ் சாக்கிரமுதல் ஐந்தவத்தையுளவாம், அவை கருவியான் விடயங்களையறி யுஞ் செய்கைதோறும் அதிநுணுக்கமாய் இடையீடின்றி நிகழுமாறு நுண் ணுணர்வாற் கண்டுகொள்க. இனி இவைகளன்றி ஞானத்தை யடைந்த வரும் பிறப்பு நீங்கி அருண்ஞானத்தால் வீடுபேறடைதற்கு அவ்விலாட தானத்திற் கேவலசகலங்களினீங்கிய சுத்தத்திலும் அவ்வாறே ஐவகை அவத் தையைக் கூடுவரென்க. இதனைச் சிவஞானசித்தியாரி லுண்மையதிகாரத் திற்காண்க.

* மேற்கூறிப் போந்த சாக்கிராதியவத்தைகள் ஐந்தனுட் சாக்கிரத் திலே சுத்தவித்தை, மகேச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னுமைந்து கருவிகளும், கனவிலே மகேச்சுரமுதலாகிய நான்குகருவிகளும், சுழுத்தி யிலே சாதாக்கியமீறாகிய மூன்று கருவிகளும், துரியத்திலே சத்தியீறாகிய இரண்டு கருவிகளும், துரியாதீதத்திலே சிவதத்துவமாகிய ஒருகருவியுங் கலாதிகடொழிற்படு மிடந்தோறுங் கருவியான் விடயங்களை யறியுஞ்செய் கைதோறும் அக்கலாதிகளைச் செலுத்தி நிற்றலை நுண்ணுணர்வானுணர்ந்து கொள்க.

இனி ஆன்மா அவ்வாறு நிகழுங்காரியாவத்தைகளை யுறுதற்குக்காரண மாகக் கேவலஞ் சகலஞ்சுத்தமென மூன்றவத்தையடைவன். இவற்றுட் கேவலமாவது தன்னுடைய இச்சாஞானக்கிரியைகளி னிகழ்ச்சி சிறிதுமின் றித் தான்மாத்திரை யுளனாதலாம். பின்னர்த் தனுகரணாதியோடு முத ல்வன் கூட்டக்கூடி அவையொருபுடை விளங்குமவதரத்திலே சகலனாம். பின்னர்ப்பஞ்சமலங்களு நீங்கிப் பிறவியொழிந்து சிவத்தோடுகூடி அவ் விச்சா ஞானக்கிரியைக ளெங்குமாய் வியாபித்து விளங்குமவதரத்திற் சுத் தமுடையனா மென்க.

மேற்கூறிய மூன்றவத்தை யுறுதற்குரிய ஆன்மா வரக்கடவனாகி ய காரியங்களுள் உம்பு முன்னில்லாதவனும், கலாதியறிவோடு முன்சேர்ந்த

வில்லாதவனும், * புத்திகுணமெட்டினையும் ஏனைப்போக்கிய காண்டக்கருவிகளையும் முன்பொருந்தாதவனும், இச்சை அறிவு தொழிலிவை முன்னில்லாதவனும், தனக்கெனவொரு சுதந்திரமுன்னில்லாத வனும், போகத்தின் முன் கொள்கையில்லாதவனும், தோற்றக்கேடுகண் முன்னில்லாதவனும், ஏகதேசியாதன் முன்னில்லாதவனுமாகிக் கேவலாவத்தையில் ஆணவமலத்தோடு மாத்திரங்கூடிநிற்பன். இது தன்னுண்மை யெனப்படுங்கேவலத்தியல் கூறியவாறென்றறிக.

மேற்கூறிய கேவலத்தையைப் பொருந்திய ஆன்மா உருவினைக்கொண்டும், போககாண்டமாகிய கலாதியோடு செறிந்தும் போக்கியகாண்டமாகிய புத்தியாதியைச்செறிந்தும், இச்சையுற்றும், நால்வகைவாக்குகளாணிகழுமறிவுற்றும், தொழில்களுற்றும், சத்தாதி விடயத்தில் விருப்பஞ்செய்தும், போகநுகர்ந்தும், தோற்றக்கேடுகளிற் புக்குழன்றும், ஏகதேசியாகி, இப்பத்துக் காரியத்தையுமுடையனாய்ச், சகலாவத்தையிற் சீவித்துநிற்பன். இது தனுகரணாதியை முதல்வன் கொடுத்தபோது சகலனுமியல்புகூறியவாறென்றறிக, மேற்கூறிய கேவலத்தின் மறுதலையாய திச்சகலமென்க.

மேற்கூறியபத்தினுள்ளே சத்தமாதியாம் விடயத்தில் விருப்பஞ்செய்தல் கழிதற்கேதுவாகிய இருவினையொப்பின் கண்ணே போகபோக்கியக்கருவிகளின் செறிவு கழிதற்கேதுவாகிய சிவசத்திநிபாதமுறுதலால், உருக்கழிதற்கேதுவாகிய குருவருள்பெற்றும், எல்லாயோநியும் புக்குழலுதல் கழிதற்கேதுவாகிய ஞானசாதனமடைந்தும், சென்று திரிதலாகிய யேகதேசத்தன்மை கழிதற்கேதுவாகிய அநாதிமும்மலநீக்கியும், சத்தமாதியாம் விடயந்தனிலே நுகர்வது கழிதற்கேதுவாகிய பழையவாதனை நீக்கியும், பாசவறிவிச்சைசெயல்கள் கழிதற்கேதுவாகிய ஞானம் பெருக்கியும் முறையே கிடைப்ப அவற்றான் அக்காரியம் பத்துநீங்கப்பெற்றுச் சிவபிரான் றிருவருளைக் கூடுதல் சுத்தவாத்தையின் இலக்கணமென்க. இருவினையொப்புக்கு மூலமாகிய சிவபுண்ணியமுஞ், சத்திநிபாதமென்கின்ற அருள்பதிதற்கு மூலமாகிய மலபரிபாகமுஞ் சிவஞான சித்தியாரிற் காண்க. இது சுத்தமுடையனு மியல்புகூறியவாறென்றறிக. இது இலக்கியவிலக்கணங் கற்றவர்கள் எளிதினுணருமாறு சுப்பிரமணியக்கவிராயர் என்னும் பெயருடைய என்னுடைய நடுவுள்ள பிள்ளை யுதவியால் வரையப்பட்டது.

இங்ஙனம்:
**இராமசாமிக்கவிராயர்.**

---

* புத்திகுணமெட்டாவன — தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதருமம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம், என்பனவாம்.

உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 AUG 1916
MADRAS.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916ஆ ஜூலைமீ [பகுதி எ.

## தைத்திரீயோபநிஷத்து.

### ஆனந்தவல்லி*

முதலநுவாகம்.

சிஷ்யன் குருவாகிய வெங்களிருவரையும் பிரமம் இரட்சிக்கட்டும். வித்தையால் ஏற்படக்கூடிய சாமர்த்தியம் எங்களுக்கு இருக்கட்டும். நாங்கள் துவேஷிக்கும்படியான சந்தர்ப்பம் நேரிடவேண்டாம்.

பிரமம் அறியத்தக்கது. இப்பிரமாண வாக்கியத்தால் சத்தியம் ஞானம் அநந்தம் பிரமமெனரிக்கு வேதம் கூறுகின்றது.

---

*இவ்வானந்த வல்லியைப்பிரம்ம வல்லியெனப் பாஷ்யகாரர்கள் தங்கள் வியாக்கியானங்களில் குறித்திருக்கின்றனர்.

எந்தப் புருஷன் குகையென்னும் சிரேஷ்டமான ஆகாயத்தில் மறைந்திருக்கிறதை யறிகிறானோ அவன் சமஸ்தமான இச்சைகளையும் ஓரேகாலத்தில் ஸர்வஞ்ஞமான பிரமமாகவிருந்து அடைகிறான்.

அந்த ஆத்மாவினின்றும் ஆகாயமும், ஆகாயத்தினின்றும் வாயுவும், வாயுவினின்றும் அக்கினியும், அக்கினியினின்றும் ஜலமும், ஜலத்தினின்றும் பூமியும், பூமியினின்றும் ஔஷதிகளும், ஔஷதிகளினின்றும் அன்னமும், அன்னத்தினின்றும் புருஷனும் உண்டாயின.

அந்தப் பிரசித்தமான இப்புருஷன் (தேகம்) அன்னரசத்தாலுண்டானவன், இதுவேயவனுடைய சிரசு, இது வலது இரக்கை (வலதுகை) இது இடது இரக்கை (இடதுகை), இது ஆத்துமா (மத்தியபாகம்), இது ஆதாரமானவால் (கால்)

## அநுவாகம். உ.

எவை எவை பிருதிவியை ஆசிரயித்திருக்கின்றனவோ அந்தப் பிரஜைகள் அன்னத்தினின்று முண்டாகின்றன, பிறகு அன்னத்தினாலேயே ஜீவிக்கின்றன, பிறகு இதையே முடிவில் அடைகின்றன. அன்னமானதே பிராணிகளுக்கு முன்னமேயுண்டாயிற்று, ஆகலின் சகலத்திற்கும் ஔஷதமாகச் சொல்லப்படுகிறது, எவர்கள் அன்னத்தைப் பிரமமாக வுபாசிக்கிறார்களோ அவர்கள் சமஸ்தமான அன்னத்தையடைகிறார்கள், அன்னமானது பிராணிகளுக்கு முதலிலுண்டானதாக விருக்கிறது, ஆகலின் சகலத்திற்கும் ஔஷதமென்று சொல்லப்படுகிறது. அன்னத்தினின்றும் பிராணிகள் உண்டாகின்றன, உண்டானவைகள் அன்னத்தால் விர்த்தியாகின்றன, அன்னம் பட்சிக்கப்படுகிறது பிராணிகளைப் பட்சிக்கிறது, ஆகலான் அன்னமென்று சொல்லப்படுகின்றது.

அன்னவிகாரமான பிண்டத்தைவிடவேறான துள்ளேயிருக்கிறது.பிராணவிகாரமான ஆத்மா இப்பிராணமய ஆத்மாவால் அன்னமயம் நிறைந்திருக்கிறது.



இந்தப் புருஷாகாரமே அந்தவன்னமயத்தின் புருஷாகாரத்தை அநுசரித்து இவன் புருஷாகாரமாயிருக்கிறான், அவனுக்குப் பிராணனே தலை, வியானன் வலதுகை, அபானன் இடதுகை, ஆகாசம் ஆத்துமா, பிருதிவி வால்.

## அநுவாகம். ௩.

தேவதைகளும் மனிதர்களும் மிருகங்களும் எவர்களோ அவர்கள் பிராணனை யனுசரித்து ஜீவிக்கிறார்கள், பிராணன் பிராணிகள் ஆயுள் நிச்சயம் ஆகையால் சகலத்திற்குமாயுள் சொல்லப்படுகிறது. எவர்கள் பிராணனைப் பிரமமாக உபாசிக்கிறார்களோ அவர்கள் சர்வ ஆயுளையே அடைகிறார்கள், பிராணன் பூதங்களின் ஆயுள் நிச்சயம் ஆகலின் சர்வாயுள் சொல்லப்படுகிறது.

முன்னம் சொன்னதற்கு இவனே சரீரசம்பந்தமுள்ள ஆத்துமா. பிராணனாலுண்டான இதைவிட வேறாயுள்ள மனத்தாலுண்டான ஆத்மாவிருக்கிறான். அவனாலிவனிறைந்திருக்கிறான்.

புருஷாகாரனே அவனுடைய புருஷாகாரத்தை அநுசரித்து இவன் புருஷாகாரமானவன், அவனுக்கு யஜுஸே சிரசு, ரிக்கு வலதுகை, ஸாமம் இடதுகை, விதிவாக்கியம் ஆத்துமா, அதர்வாங்கிகள் வால்ஆதாரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பழஞ்சரித்திரச் சுருக்கம்.

இங்கே பழைமை யென்பது இயன்றவரையில் நாகரீகமான காலத்தைக் குறிப்பதாகும்.

## இடம்.

பூர்வீகமக்கள் முதல்முதல் வெப்பமிகுந்த நாட்டில், மூங்கிலடர்ந்த குறிஞ்சி நிலத்தில்தான் நெடிதுகாலம் வசித்துக்கொண் டிருந்தார்கள். இந்நாடு சூரியனது மையவரிக்கு உட்பட்ட இடமாகும். பிறப்புண்டாவதற்கு வெப்பம் இன்றியமையாதது.

மொழிநூல் பாயிரவியல் 66-ம் பக்கம் குறிஞ்சி பார்க்க.

அக்காலத்தில் மழையும் பனியும் குளிரும் மிகுதியானபடியால், அக்காலவியற்கைக்கு மிகுவெயில் ஓர் செல்வமாயிற்று. சூரியனது காட்சி மற்றோர் செல்வமாயிற்று. குறிஞ்சிநிலம் மேடானதால் இவ்விருவகைச் செல்வமும் அதிலேயே சிறப்புடையன வாகும்.

இக்காரணங்களால் பூர்வீகமக்கள் சூரியனிடத்தில் விருப்பம் வைத்து மரியாதைபாராட்டி வந்தார்கள். இம்மரியாதையிலிருந்து தான் அவனுக்கு வணக்க முண்டாயது.

குறிஞ்சியில் இயல்பாய் மூங்கில் எரிந்து கொண்டிருந்ததனால், மூங்கினெருப்பைத்தான் முதல் முதல் அறிந்தார்கள். சிகிமுகிக்கல் முதலியன பிறகு உண்டாயின. குறிஞ்சியிலிருந்த பூர்வீகமக்கள் கருநிறமுள்ளவர்கள், கோபமிகுந்தவர்கள், மிகநெடியர், சூரர், போரில் விருப்பமுள்ளவர்கள், சுணங்கனென்னும் நாயைத்துணைக் கொண்டவர்கள். விலங்குவகைகளில் மக்களிடத்தில் முதல் முதல் நாய்தான் தானாகவந்து சேர்ந்திருக்கவேண்



டும். நாயேனென்னும் வழக்குத் தென்னாட்டில் தான் இருந்து கொண்டிருக்கின்றது.

## உணவு முதலியன.

பாலே அனுபவ உணவாதலால் முதல் முதல் பாலும் பழமும் பிறகு மூங்கிலரிசியுமே பூர்வீகமக்களுக்கு உணவுப்பொருளாயின. மலைநெல், சோளம், கம்பு, தினை முதலியன பிறகுண்டாய உணவுப் பொருள்களாம். இம்மலைநெல்லே யவம் என்னும் தானியமாகும். மூங்கிற் குழாய்களே எல்லாப்பாத்திரங்களுமாயின. தானிய அளவுக்குரிய முகத்தலளவைதான் முதல் முதலுண்டாயது. முகத்தலளவைக்கருவிகளும் மூங்கிற்குழாய்களே. வீணைமுதலிய வாச்சியங்களும் மூங்கிலால் தான் முதல் முதல் செய்யப்பட்டன. கட்டில் பாய் சிப்பு தெப்பம் தண்ணீர்க்குழாய் முதலியனவும் மூங்கில்களே. மூங்கில் மடல்களைப்பதம் செய்து வருணங்களினால் எழுதிவந்தார்கள் எழுதுதற்கருவி மயிலிறகு.

இங்ஙனம் பூர்வீகமக்களுக்குச் சூரியனும் மூங்கிலுமே சிறந்த செல்வமாயிருந்தன. அவர்கள் நாகரீகமில்லாதகாலத்தில் பேசிக்கொண்டிருந்த இயற்கை யொலிக்குறிமொழியின் வழியாய் உண்டாக்கப்பட்ட வழிமொழிக்கும் சூரியனும் மூங்கிலுமே ஆதாரமாகின்றன. வழிமொழியின் நடையும் அங்ஙனமே அமைந்திருக்கின்றது. மொழிநூற்றிறவுகோல் காண்க.

## வழி.

எங்கும் மூங்கிலடைந்திருந்தபடியாலும், வழி உண்டாக்குவதற்குக் கத்திமுதலிய ஆயுதங்களில்லாத காலமாதலாலும், மூங்கில் இயல்பாய் இருந்து எரிந்து தணிந்துபோன இடமே வழியாகக்கொண்டு பூர்வீகமக்கள் ஓர் குறிஞ்சியிலிருந்து மற்றோர் குறிஞ்சிக்குப் போயிருக்கின்றார்கள். இதுதான் முதல்வழி.

## நெய்தல்.

குறிஞ்சிபோல் மேடானதாய் வெயில்படும்படியான இடமாய்ச் சூரியனது காட்சிக்கு மிகுஅழகியதாய் இருக்கின்றபடியால், பிறகு அவ்வழியாகவே நெய்தனிலத்தில் குடியேறினார்கள். மூங்கிற்புதர் முதலியன உயர்ந்து அடர்ந்திருந்தபடியால் வழியில்லாமையாலும் சூரியனது காட்சி

தெரியாதபடி இருண்டிருந்தபடியாலும் மழைமிகுதியால் எங்கும் கசிவும் ஈரமுமாயிருந்தபடியாலும் குறிஞ்சியிலிருந்தவர்கள் அப்பொழுது முல்லையிலிறங்கிக் குடியேறாமல் போனார்கள். இக்காரணங்களால் நெய்தனிலத்திலேயே நெடிது காலம் வசித்துக் கொண்டுவந்தார்கள்.

குறிஞ்சி நிலமக்கள் இரவில் மூங்கில் எரிவதாலுண்டாய ஒளியால் மகிழ்வதுபோல நெய்தனிலமக்கள் இரவில் சந்திரனொளியால் மகிழ்ந்து கொண்டு வந்தார்கள். நெய்தல் மணல் நிலமாதலால் மூங்கில் இல்லை.

நெய்தல் மணல் நிலமாதலாலும் வேனிற்பருவத்தில் நிலாவெளிச்சத்தில் அதுமிக இனிதாதலாலும் விளையாட்டென்பது முதல் முதல் நெய்தலில் தான் உண்டாயது.

## வர்த்தகம்.

குறிஞ்சியில் மூங்கிலரிசி முதலியன இயற்கைவிளை பொருளாதலாலும், நெய்தலில் உப்பொன்றே இயற்கை விளைபொருளாதலாலும், நெய்தனிலமக்களுக்கு மூங்கிலரிசி முதலியனவும் குறிஞ்சி நிலமக்களுக்கு உப்பும் அவசியம் வேண்டும்படியான காலம் வந்தபடியால், பண்டமாற்றென்னும் வர்த்தகந்தான் முதல் முதலுண்டாயது.

## போர்.

குறிஞ்சி நிலமக்களுக்கும் நெய்தனிலமக்களுக்கும் பண்டமாற்றுக் காரணமாகப் பகையுண்டானபடியால், இவ்விருவர்க்கும் போருண்டாயது. இடமுதலிய வலிவு பெற்றிருந்ததனால் குறிஞ்சி நிலமக்களே வென்றனர்.

## அரசாட்சி.

உயிர்கள் வளர்வதற்கேற்ற வெப்பமுதலியன தென்றிசையில் மிகுந்திருந்தபடியால் அரசாட்சியென்பது முதல் தென்றிசையில் குறிஞ்சிநிலத்தில் தான் உண்டாயது.

கோட்டைமாளிகை சிறைச்சாலை பள்ளிக்கூடம் கோயில் முதலியன குறிஞ்சிநிலத்தில் தான் முதல் முதல் கட்டப்பட்டன. குகையில் தான் மந்திராலோசனை நடந்தது. களஞ்சியமுதலியனவும் அதிலேயேயிருந்தன.

குறிஞ்சி நிலமக்கள் நெய்தனிலமக்களை வென்று அரசுபெற்றபடியால் துறைமுகச் சுதந்தரம் பெற்றுச் சுங்கத்தீர்வை வாங்கிவந்தார்கள். முதல்



முதல்தான் உப்புதான் சுங்கத்தீர்வையாயிருந்தது. நெய்தனில மக்கள்தான் கப்பல் யாத்திரையிற் சிறந்தவரானார்கள். கடல்யாத்திரைதான் முதல் முதலுண்டாயது.

## முல்லை.

சிறிது மழைவளம் குறைந்தபடியாலும், இடமில்லாமையாலும், குறிஞ்சியிலிருந்தவர்களும் நெய்தலில் இருந்தவர்களும் மெல்லமெல்ல முல்லையிலும் குடியேறத்தொடங்கினார்கள். முல்லையிற் குடியேறின பிறகுதான் அங்கே தூம்புகளுண்டாயின. தூம்பு = நுழைவழி நெறிமுதலிய வழிகள். மூங்கிற்காட்டில் மூங்கில் எரிந்ததனாலுண்டாய வழிகளாம். தூம்பு முதலியன மூங்கிலொழிந்த மற்றைய காட்டினுள்ளே உண்டான வழிகளாம். இவ்வழிகளெல்லாம் ஆயுதங்களின்றி இயல்பாயுண்டாயினவாகும்.

## மருதம்.

பிறகு முல்லையின் திருத்தம் மருதமாயிற்று. இது செயற்கை நிலம். அதாவது பிறகு உண்டாக்கப்பட்டது. குறிஞ்சி நெய்தல் முல்லை இம்மூன்றும் இயற்கை நிலம். ஆகநிலம் நான்கு ஆதலால் நானிலமென்பர். இம்மருதநிலம் வரவர உயர்ந்து நாகரீகம் அடையத்தலைப்பட்டது. அரசாட்சியும் உண்டாயது. அக்காலவியற்கைக்குக் கப்பல் வர்த்தகமே ஏற்றதாயிருந்தபடியாலும், மருதநிலத்து அரசனுக்குத் துறைமுகச் சுதந்தரமில்லாதபடியாலும், அது காரணமாக மருதநிலத்து அரசனுக்கும் குறிஞ்சி நிலத்தரசன் நெய்தனிலத்தரசனாகிய இருவர்க்கும் போருண்டாயது.

குறிஞ்சியும் நெய்தலும் உயர்ந்த இடமாதலால் மருதநிலத்தரசன் பல்முறையும் தோல்வியடைந்தான். மருதத்தரசனுக்கு உயர்ந்த இடமில்லாதபடியால் அப்பொழுதுதான் போர் நிமித்தம் தேர் உண்டாக்கப்பட்டது. மருதநிலத்தரசன் தேர்ப்படை முதலியன மிகுதியாக்கவே குறிஞ்சி நிலத்தரசன் யானைப்படை முதலியனவும் மிகுதியாக்கினான். இருபெருவேந்தர்க்கும் படைமிகுதிப்பட்டபடியால் பலமுறையும் போர் நடந்துகொண்டேயிருந்தது. கடைசியிற் சமாதானமாய்ச் சம்பந்தமும் செய்துவரலாயினர். சமாதானமான காலத்தில் குறிஞ்சி நிலத்தரசரும் தம் நிலத்திற்குச் சார்பான மருதத்தை உட்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். இவ்

விரு பெருவேந்தர்க்கும் நெய்தனிலத்தரசன் முதலோர் உட்பட்டவராயி னர்.

ஆயின் வரவரப்பிற்காலத்துச் செயற்கை நிலமாகிய மருதமானது இயற்கை நிலமாகிய குறிஞ்சிநிலத்து உதவியாலும், முல்லை நிலத்து உதவியாலும் பலவகையிலும் உயர்ச்சிப்பெற்று என்றும் கப்பல் வர்த்தக முதலியவற்றாலும் சிறந்திருந்ததென்பது பெறப்படுகின்றது. இம்மருத நிலத்து இருந்தவர்கள்தாம் பிறகு பிரிந்து ஆரியராயினர். இதற்குச் சிறந்த காரணங்களும் மேற்கோள்களும் உள்ளன.

குறிஞ்சி நிலத்து அரசர்களுக்கு யானைப்படையும், மருதநிலத்து அரசர்களுக்குத் தேர்ப்படையும் சிறந்தனவாதலால், நால்வகைப் படைகளைக் கூறுமிடத்துக் குறிஞ்சிநிலத்து அரசர் யானையை முற்கூறுவர். மருத நிலத்து அரசர் தேரினை முற்கூறுவர்.

கசரததுரகபதாதி குறிஞ்சிவழக்கு.
ரதகசதுரகபதாதி மருதவழக்கு.

தேர் போர் நிமித்தம் உண்டாக்கப்பட்டதாதலால் இரதோச்சவம் சங்கீர்த்திய மென்பர்.

ஆரியகுச்சரி யென்பது மருதயாழ்த்திறன் வகையுள் ஒன்றாயிருத்தலால் ஆரியர் பூர்வம் மருதநிலமக்களென்பதே துணிவு.

தமிழ்க்குச்சரி குறிஞ்சியாழ்த்திறன் வகையுள் ஒன்று.

## பாலை.

பாலையென்பது நால்வகை நிலத்துக்கும் பொதுவாய் இருந்தது. கடலொதுக்கமுண்டான பிறகு அதற்கு நிலமுண்டாயிற்று. பாலை நெய்தல்போல மணல் நிலமாதலால் நெய்தலிலிருந்தவர்கள் தாம் பாலையிற் குடியேறினார்கள். பூர்வீகமக்கள் நெய்தலிற் குடியேறிய பிறகும் அம்பு முதலியன உண்டான பிறகும் தான் புலாலுண்ணும் வழக்குண்டாயது. மருத்துவநூலும் தத்துவநூலும் பெருகின பிறகு புலால் மறுப்புண்டாயது.

**மாகறல்-கார்த்திகேய முதலியார்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆன்மாவுக்குச் சிற்றறிவு ஏதனால் அறிவது.

வியாபகமான ஆன்மா ஆணவமலத்தான் மறைக்கப்பட்டு அறிவு விளங்காது இருளிலக்கப்பட்டு விழித்த கண்போல விருக்கும் இந்நிலை கேவலமாம். அதன்பின்பு ஆன்மா முன்செய்த நல்வினை தீவினைக்கேற்ற பயனை அநுபவிக்கும்படி கடவுள் தநுகரணபுவன போகங்களைக் கொடுப்பர் அவற்றோடு கூடியிருக்கும் நிலைக்களம் இந்தச்சகலத்தில் ஆன்மாசீவனாயிருக்கிறான் கடவுள் மாயா தநுகரணங்களைக்கொண்டு ஆன்மாவினது அறிவை ஏகதேசமாக விளக்கி இருவினைப்பயனாகிய சுக துக்கங்களை யூட்டுகின்றார்.

அப்பொழுது பதியாகிய கடவுளுடைய இச்சா ஞானக்கிரியாசத்திகள் பிரம்மா விஷ்ணு ருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் பஞ்சமூர்த்திகளை அதிட்டிக்க, அம்மூர்த்திகளுள்ளே பிரமாவியஷ்டிரூப பஞ்சாக்கரமைந்தில் பிரமன் அகாரத்தைச்செலுத்துவர், விஷ்ணு உகாரத்தைச் செலுத்துவர், உருத்திரன் மகாரத்தைச்செலுத்துவர், மகேசுரன் விந்துவைச்செலுத்துவர், சதாசிவன் நாதத்தைச்செலுத்துவர், இப்படிச்சூக்கும பஞ்சாக்கரங்களாகிய அவற்றை அந்தப் பஞ்சமூர்த்திகள் செலுத்தியபொழுது அந்த எழுத்துகளுள் அகாரம் மனத்தைச் செலுத்தும், உகாரம் புத்தியைச் செலுத்தும், மகாரம் அகங்காரத்தைச் செலுத்தும், விந்து சத்தத்தைச்

செலுத்தும், நாதம் உள்ளத்தைச் செலுத்தும், உள்ளமானது காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும் கூடிய கூட்டமாகிய புருடதத்துவமாம்.

இனி அகார உகார மகார விந்து நாதங்களாகிய அக்கரமைந்தும் மனம் புத்தி அகங்காரம் சித்தம் உள்ளம் என்னும் கரணங்களைந்தனையுஞ் செலுத்தியபோது மனம்புறத்திலே இந்திரியவாயிலாகச்சென்று புறத்துள்ள விஷயங்களைக்கவரும். புறத்துள்ள விஷயங்களாவன சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் ஐந்துமாம். அவற்றைக்கவர்தற்குக் கருவியாயுள்ள இந்திரியங்கள் காது, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐந்துமாம்.

இவற்றுள் காது சத்தத்தை அறியுங்கருவியாயிருக்கும். மெய் பரிசத்தையறியுங் கருவியாயிருக்கும். கண் உருவத்தை அறியுங் கருவியாயிருக்கும், வாய் இரதத்தை அறியுங்கருவியாயிருக்கும். மூக்கு கந்தத்தை அறியுங் கருவியாயிருக்கும். இந்தச்சத்த பரிசரூப ரசகந்தமைந்தும் ஆகாசமுதலிய பூதங்களின் குணங்களாம் அவைகளே விடயங்கள் எனப்படுவன.

அவற்றுள், சத்தம் ஆகாசமுதலிய ஐந்தினும், பரிசம் வாயுமுதலிய நான்கிலும், உருவம் தேயுமுதலிய மூன்றினும் இரதம் நீரினும் பிருதிவியினும், கந்தம் பிருதிவியினுமிருக்கும். இந்தப்பூதகுணமாகிய விடயங்களை இந்திரியவாயிலாக மனம்பற்றும்.

அதாவது, மனம் செவியிந்திரியத்தோடு கூடிநின்று ஆகாசமுதலிய ஐந்தினுமுள்ள சத்தத்தை யறியும், மெய்யிந்திரியத்தோடு கூடிநின்று வாயுமுதலிய நான்கினுமுள்ள பரிசத்தையறியும், கண்ணிந்திரியத்தோடு கூடிநின்று தேயுமுதலிய மூன்றினுமுள்ள உருவத்தை யறியும், வாயிந்திரியத்தோடு கூடிநின்று நீரினும் பிருதிவியினுமுள்ள சுவையையறியும், மூக்கிந்திரியத்தோடு கூடிநின்று பிருதிவியிலுள்ள கந்தத்தையறியும், மனம் இவ்வாறு இந்திரிய வாயிலாகப் பற்றியவிடயங்களைச் சித்தம் சிந்திக்கும். அகங்காரம் கொண்டெழும், உள்ளம் அவற்றையறியும்.



புத்தியின் வாயிலாக உள்ளம் அறியும்போது அவை சுகமும் துக்கமுமாக வேறுபட்டுத் தோன்றும் அவ்வேறுபாட்டுக்குக்காரணம் முக்குணங்களின் செயல்களாம். அதாவது, முக்குணங்களில் சத்துவகுணம் விடயங்களைச் சுகமாக்கிக் காட்டும். தாமதகுணம் விடயங்களைத் துன்பமாக்கிக்காட்டும். புருடன் அக்குணசொரூபியாய் நின்று சுகதுக்கங்களை நுகர்வன், இச்சுகதுக்காநுபவம் வினைவசத்தால் விளைவது, நல்வினைப்பயன் சுகமாகவரும் தீவினைப்பயன் துன்பமாகவரும், விடயங்களில் வேறுபாடில்லை யாயினும் வினைவசத்தால் முக்குணங்கள் அவற்றை வேறுபடுத்திக் காட்டும். வேறுபாடாக அவற்றையுணர்தலே இன்ப துன்பாநுபவமாம் இவ்வறிவு நிகழ்ச்சியே சிற்றறிவின் விளக்கம் இவ்வறிவு ஏகதேசமாக நிகழ்வதால், சிற்றறிவெனப்படும். வினை பக்குவமாகிய அநுபவத்துக்கு வரும் போது கடவுள் தமது சத்தியினால் ஆன்மாவைச் சகலப்படுத்தி உண்பிப்பர் பக்குவவினையில்லாதபோது கேவலப்படுத்துவர். கேவலப்படுதல் உறங்குதலும் சகலப்படுதல் விழித்தலுமாம் இவையிரண்டும் வினைக்கேற்ப நிகழ்வனவாம்.

ஆன்மாவும் தநுகரண புவனபோகங்களும் வேறு வேறுபொருள்களாயினும், ஆன்மா மலமயக்கத்தால் தானும் அவையும் ஒன்றெனவேறுபாடின்றிக் காண்பதால் அவற்றின் குணங்களையெல்லாந் தன்னுடையதாகவும் அவற்றின் விளைவுகளையெல்லாம் தன்விளைவுகளாகவும் கருதும் விபரீதஞானமெனப்படும் இந்த விபரீதஞானத்தை விளைப்பது ஆணவமலமேயாம்.

இதனால் வியாபகத்தையுடைய ஆன்மாக்களுக்குச் சிற்றறிவு ஆணவமலசம்பந்தத்தாலே வந்தது இவ்வாணவ மலமாகிய மூலமலவழுக்கைச் சிவபுண்ணியமாகிய புடத்தால் மெல்லமெல்லக் கழித்துப் பக்குவப்படுத்தி சத்திகெடும்படி செய்யின் பரிபக்குவமடைந்து தமக்கு அம்மலசம்பந்தத்தால் வந்த சிற்றறிவுகெட்டுப் பேரறிவாளனும் பரிபூரணராய சிவபிரான்றிருவருளெய்துவ ரென்பது பெறப்பட்டது.

சைவசூக்குமார்த்த போதினி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அப்பர் தேவாரத்தாற் கொள்ளக்கிடக்கும் கீரனார் யார்?

சேந்தமிழ்

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்"

இது திருநாவுக்கரசர்வாக்கு. திருநாவுக்கரசரும் சம்பந்தரும் ஒரே காலத்தவ ரென்பதும், இருவரும் பெருநட்பின ரென்பதும் யாவருமறிந்த வுண்மை. திருநாவுக்கரசர் இத்திருவாக்கிற் சுட்டியது தருமிக்குப் பொற்கிழியளித்த சரித்திரம். தருமிக்குச் சிவபெருமான் கொடுத்தருளியபாடல் வருமாறு.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇய நட்பின்மயிலியற்
செறியெயிற் றரிவைகூந்தலி
னறியவுமுளவோ நீயறியும்பூவே"

இச்செய்யுளைத் தருமிகொண்டுசென்று சம்பகப்பாண்டியனுக்குக்காட்டியபோது கீரனார் அதிற் குற்றம்பாரித்து அதற்குரிய பொற்கிழியைக் கொடுக்கவிடாது தடுத்தார். அதுகேட்டுச் சிவபெருமான் ஒருபுலவராய் வெளிப்பட்டு அப்பாடலினது தகுதியெடுத்துக் காட்டித் தருமிக்கு அப்பொற்கிழியை வழங்குமாறருளினார்.

தருமிக்குச் சிவபெருமான் பாடல் கொடுத்தருளியதும், அதிலே கீரனார் குற்றம்பாரித்துப் பொற்கிழி வழங்காது தடுத்ததும், அப்போது சிவ



பெருமான் ஒரு புலவராய்ச் சென்று சங்கமேறியதும், அப்பாடலின் தகுதியை நாட்டியதும், பொற்கிழி யுதவுமாறருளியது மாகிய பெருங்கருணைச் செய்திகளைத் திருநாவுக்கரசர் வியந்து தமது தேவாரத்தில் "பின்பாட்டுப் புலவனாய்" என்று எடுத்துப் பாடுவாராயினர்.

அற்றேல், கீரனார் மூன்றாஞ் சங்கமுடிவில் விளங்கியவரன்றோ. அவர் செய்தியை எடுத்துக்கூறிய திருநாவுக்கரசர் மூன்றாஞ் சங்கத்துக்குப் பிற்பட்டவராகற் பாலர். சம்பந்தர் திருநாவுக்கரசர் காலத்தவ ராதலின் அவரும் மூன்றாஞ் சங்கத்துக்குப் பின்னுள்ளவரே யாவர் என்பது சிலர் துணிபு.

இத்துணிபு நன்கு செய்யப்பட்டதாகத் தோன்றவில்லை. தருமி கொண்டுசென்ற பாடலிற் குற்றம் பாரித்தார் மூன்றாஞ் சங்கத்திறுதியிலிருந்த கீரனார் தாமா? அன்றி, அப்பெயருடைய மற்றொருவரா வென்பதும், கீரப்பெயருடையார் ஒருவரா பலராவென்பதும் அவர்தாம் எவ்வெக் காலத்திருந்தவ ரென்பதும் ஆராயப்படுதல் வேண்டும்.

திருவிளையாடற் புராணத்தின்படி, தருமிகொண்டு சென்ற 'கொங்குதேர் வாழ்க்கை' என்னுந் தெய்வப்பாடலிற் குற்றம் பாரித்தவர் கீரனார் என்னுமொரு புலவர். அவரே அகஸ்தியர்பால் இலக்கணங்கேட்டு விபரீதம் நீங்கப்பெற்றவர். அவர் சம்பக பாண்டியன் காலத்தில் விளங்கியவர் அவர்க்குக் கீரனார் என்னும் பெயரே பெருவழக்கு. நக்கீரனா ரென்னும் பெயரும் சிறு வரவினதாய்ப் பிற்காலத்து வழங்கிற்று.

அவர் காலத்துக்குப் பின்னர் கீரனார் என்னும் பெயர் கொண்டார் அநேகர். அவருட் குட்டுவன் கீரனார், தும்பிசேர்கீரனார், பொருந்திலிளங்கீரனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரை நக்கீரனார், மோசிகீரனார் என்போர் சிறந்தோர்.

இவருள்ளே மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் இறையனாரகப் பொருளுக்கு உரைசெய்த விரகர். இவரே திருமுருகாற்றுப்படையும், நெடுநல் வாடையும் பாடியவர். இவர் உக்கிரப்பெருவழுதி காலத்தவர். மூன்றாஞ் சங்கத்திறுதிக் காலத்திருந்தவர்.

நெற்றிக்கண்ணைக் காட்டினாலுங் குற்றங்குற்றமே எனக்கூறி அஞ்சாது வாதாடிய கீரனாரும் வேறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் வேறு. முன்னையவர் இரண்டாஞ் சங்கத்துக்கடைக்கூற்றில் விளங்

கியவர். பின்னையவர் மூன்றாஞ் சங்கத்திறுதிக் காலத்திலே விளங்கியவர். இவரை அவராகவும், அவரை இவராகவுங்கொண்டு மயங்குவார் அநேகர். யானுஞ் சிறிதுகாலத்துக்கு முன் அவ்வாறுகொண்டு மயங்கினேன். ஆராய்ச்சியாற் பின்னர்த் தெளிந்தேன். அது நிற்க,

1. சம்பகபாண்டியன் முதல்

2. பிரதாப சூரியன் 3. வங்கிசத்துவசன் 4. இரிபுமர்த்தனன் 5. சோழவமிசாந்தகன் 6. சேரவமிசாந்தகன் 7. பாண்டிவமிசேசன் 8. வமிசசிரோமணி 9. பாண்டீச்சுரன் 10. குலத்துவசன் 11. வமிசபூடணன் 12. சோமசூடாமணி 13. ராஜசூடாமணி 14. பூபசூடாமணி 15. குலோபாண்டியன் 16. அரிமர்த்தனன், 17. சகநாதபாண்டியன், 18. வீரவாகு, 19. விக்கிரமவாகு, 20. பராக்கிரமவாகு, 21. சுரபிமாறன், 22. குங்கும பாண்டியன், 23. கர்ப்பூர பாண்டியன், 24. காருண்ணிய பாண்டியன், 25. புருடோத்தமன், 26. சத்துருசாதனன், 27. கூன் பாண்டியன் ஈறாக இருபத்தேழு பாண்டியர் வழிவழி யரசுபுரிந்தனர் என்பது திருவிளையாடற்புராணம்.

இறையனாரகப் பொருளுரைப்படி கூன்பாண்டியன் முதல் உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பது பாண்டியருளர்.

உக்கிரப்பெருவழுதி காலத்தில் விளங்கியவராகிய மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்க்கும் முன்னைய கீரனார்க்குமிடையே எழுபத்தைந்து பாண்டியர் அரசு செய்து போயினர் என்பது வெளிப்படையா நின்றது. இறையனாரகப் பொருளுரைப்படி கூன்பாண்டியன் முதல் உக்கிரப்பெருவழுதி யீறாகச் சென்ற காலம் ஆயிரத் தொண்ணூற்றைம்பது வருடம். இக்கணிதப்படி சம்பகபாண்டியன் முதற் கூன்பாண்டியனீறாகச் சென்ற காலம் (900) தொளாயிரம் வருடமாகும். ஆகவே முன்னைய கீரனார் பின்னைய கீரனாருக்கு 2750 வருடங்களுக்கு முன்னர் விளங்கினராகற் பாலர்.

ஆதலால் முன்னைய கீரனாரே அப்பர் தேவாரத்தாற் கொள்ளக் கிடப்பவரென்பது நன்கு துணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்தமும் மாயாவாதமும்

வேதாந்தத்துக்கு மாயாவாதக் கொள்கை இன்றியமையாத தொன்றென்று கீழ்நாட்டிலும் மேனாட்டிலுமுள்ள தத்துவ சாத்திரிகள் கருதுகின்றார்கள். கேவலம் பரம்பொருளாகிய பிரமமே சத்தியமென்றும் மற்றையகண்டப் பொருள்களெல்லாம் மித்தையென்றுங் கூறுங் கேவலாத்துவித சாத்திரமே வேதாந்த சாத்திரமென்று நினைக்கப்பட்டுவருகின்றது. சித்துத் தன்மையோடுங் கூடிய கேவலமுழுமுதற் சத்துப்பொருளொன்றுண்டு. கண்டப்பொருள்களாகிய ஜீவான்மாக்களோடுங் கூடிய இப்பிரத்தியக்ஷானுபவ உலகமோ ஒருமித்தைப்பொருள். மானதக்காட்சிக்கும் புலனுக்கும் விடயங்களெல்லாம், கனவு காண்பானுக்குப் புலப்பட்டு அவன் விழித்தமாத்திரையானே சூன்யமாய் விடும் பொய்த்தோற்றங்கள் போல் உள்ளன. மாயையென்பது கண்டமாகிய உலகத்தின் மித்தைத் தன்மையை உணர்த்துவது. இம்மாயாவாதக் கொள்கையை ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள், கயிறும் அரவும், இந்திரசால வித்தைக்காரனும் சாலவித்தையும், பாலையும் பேய்த்தேரும், துயில்வோனும் கனவும் போன்ற உபமானங்களான் விளக்குகின்றார். இக்காலத்திலறியப்பட்ட வேதாந்தத்தின் முக்கிய கொள்கைகள் 'பிரமமே நித்தியம், பிரபஞ்சம் பொய், ஆத்மனே பிரமம். வேறன்று,' என்ற வாக்கியங்களில் சுருக்கப்பட்டிருக்கின்றன. மாயாவாதக் கொள்கை வேதாந்தத்துக்கு இன்றியமையாத தொன்றென்று இக்காலத்தில் கருதப்படினும், வேதாந்த சாத்திரத்துக்கும் மாயாவாதக் கொள்கைக்கும் உள்ள சம்பந்தத்தைக் குறித்து இந்நாட்டுப்பண்டிதர்கள் பலருக்கு அபிப்பிராயபேத முண்டு. ஸ்ரீமான்,

கௌ, பண்டிதர் கில் டி யூசன், பண்டிதர் பிரபுடட்சாஸ்திரி ஆகிய இவர்கள் வேதாந்தத்தத்துவத்துக்கு மாயாவாதக்கொள்கை உரியதேயென்றறுதியிட்டிருக்கின்றார்கள். இந்தியாவின் ஆதிகாலத்து இருடிகளுக்கு முதல் முதற்றோன்றியது மாயாவாதக் கொள்கையேயென்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். "ஞாதுருஞேயங்களின் துவிதபாவனையும், ஆன்மாக்களின் பன்மையும், அவற்றின் அனுபவாதிப் பொருள்கள் பலவும் அநித்தியமென்றுணர்த்தும் மாயாவாதம், ஆதி இந்தியரின் தத்துவ ஞானத்துக்கு உயிர்போன்றது," என்றார் ஸ்ரீமான். கௌ. (கௌ, 'உபநிடதங்களின் தத்துவம்' பக்கம். 237) ஆனால் மற்றொரு சாராராகிய ஸ்ரீமான். கோல்புருக்கும், பண்டிதர் தீபாவும் மாயாவாதக் கொள்கை பிற்காலத்திலுண்டாக்கப்பட்டு இடையே செருகப்பட்டதென்று நம்புகிறார்கள். "பல்வேறுவகைத்தான இவ்வுலகம் மித்தையென்றும், சாக்கிரத்தில் ஆன்மாவினாலறியப்படும் பலவிடயங்கள் அவனுடைய நினைவுக்குத் தோன்றிய பொய்த்தோற்றங்களென்றும், கட்புலனாகும் பொருளொவ்வொன்றும் அநித்தியமென்றும், மற்றுமெல்லாம் மித்தையென்றுங் கூறுவது வேதாந்த சாத்திரத்தின் கொள்கையாகக் காணப்படவில்லை. அக்கொள்கையைத் தழுவிய விஷயமொன்றைக்கூட வியாசசூத்திரத்திலாவது அல்லது சங்கர பாஷியத்திலாவது யான்குறிப்பிட்டதில்லை. ஆனால் அவ்விஷயம் மற்றைய பாஷியங்களிலும், அஃது ஆதிவேதாந்தின் கொள்கையன்றென்று யான் உறுதியாய்க் கூறுகின்றேன். ஆனால் பின் வந்தார் அதை வேறு சாத்திரத்தினின்றுமெடுத்து வேதாந்த சாத்திரத்துள் நுழைத்து அவ்விரண்டு சாத்திரங்களையும் குழப்பிவிட்டார்கள்," என்று ஸ்ரீமான் கோல்புருக் 182-ம் வருடத்தில் இராயல் ஏஷியாடிக் சங்கத்தில் வாசித்த வேதாந்த வியாசத்திற் கூறியுள்ளார். மாயாவாதக் கொள்கையைத் தழுவிய விஷயம் யாதொன்றும் சங்கரபாஷியத்திற் காணப்படவில்லையென்று ஸ்ரீமான் கோல்புருக் கூறியது தவறானவிஷயம். ஆனால் வேதாந்த நூல்களாகிய வேதங்களும், பழைய உபநிடதங்களும், வேதாந்த சூத்திரமும் மாயாவாதக் கொள்கையைக் கொஞ்சமேனும் குறிப்பாகக் கூறவில்லையென்று அவர் கூறின தன்மையே. மற்று அந்நூல்கள் பிரபஞ்சத்தின் நித்தியத்தையே



உணர்த்துகின்றனவென்று நாம்ஸ்தாபிக்கக்கூடும். பௌத்தசமயவாசனை யேற்றத்தனால் கௌடபாதர் உபதேசங்களையனுசரித்து மாயாவாதக்கொள் கையை வேதாந்தசாத்திரத்துள் நுழைத்தது ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளே பின்தோன்றிய சங்கர வேதாந்தத்துக்கு மாயாவாதக்கொள்கை யின்றி யமையாததொன்று. ஆனால் பழைய சுத்தாத்துவிதக் கொள்கையையுடைய வேதங்களுக்கும் பழைய உபநிடதங்களுக்கும் அக்கொள்கை புறம்பே வேதாந்தத்துக்கும் மாயைக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்தவாதம் இ காலத்துக்கே உரியதன்று. இந்தியநாட்டில் விளங்கிய முற்காலத்து தத்துவஞானிகள் கூட இம்மாயாவாதக் கொள்கை உண்மையோ வென் சந்தேகித்தார்கள். விஞ்ஞானபிக்ஷு என்பவர் மாயாவாதம் பௌத் சமயத்தின் அந்தரங்கக்கொள்கையென்று கூறுமொரு பாகத்தைத் தன குடன்பாடாகப் பத்மபுராணத்திலிருந் தெடுத்துக்காட்டுகிறார். "தேவி வேதவாக்கியங்களுக்குப் பலராலுங் கண்டிக்கப்படும் விபரீதார்த்தங்களை கொடுப்பதும், கிரியாமார்க்கத்தை யொழித்து நிவர்த்தி மார்க்கத்தையே போதிப்பதும், பௌத்தசமயத்தின் அந்தரங்கக்கொள்கையுமாகிய பொய் மாயாவாதக் கொள்கையை, நானே ஓர்பிரமத்தினுருவைத் தாங்கிக் கலியு த்தில் கூறினேன்." என்று பரமேஸ்வரன் தன் மனைவியாராகிய பார்வதி யம்மையாருக்குக் கூறினதாகப் பத்மபுராணங் கூறுகின்றது. (மூயிர் 'சமஸ்கிரதநூல்கள்' வாலம் 3 பக்கம் 202.) இங்ஙனம் ஒருசாரார் வேதா தத்துக்கு மாயாவாதக்கொள்கை இன்றியமையாததொன்றென்றும், ம றொருசாரார் தற்செயலாய் இடையிலே சேர்ந்ததொன்றென்றுங் கருது கிறார்கள். வேதாந்தத்துக்கும் மாயைக்கும் சம்பந்தமென்னை யென்னும் வினாவைவிடுப்பதே இவ்வியாசத்திற் போந்தகருத்து.

வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், பிரமசூத்திரமும், பகவத் கீதையுமே வேதாந்த சாத்திரநூல்களாகும். பின்னிரண்டுநூல்களும் உப நிடதங்களின் சுருக்கங்களாகும் உபநிடதங்களோ வேதங்கள் காரணமா யெழுந்தவை. ஆதலினால் வேதங்களிலும் உபநிடதங்களிலுமுள்ள தத்துவக் கொள்கைகளைச் சுருக்கமாயெடுத்துக்கூறி அவைகள் மாயாவாதக் கொள் கையைக் கொஞ்சமேனுந் தழுவுகின்றனவோ வென்றாராய்வதே நம் முடைய கடமையாகும்.

சாத்திரத்துக்கு மூலம் அதிசயமென்பது பலராலு மாளப்பட்டதோர் வசனம். பல்வகை நிகழ்ச்சிகளோடு கூடிய இவ்வுலகத்தின் விசித்திர அமைப்பு ஆராயுமறிவுடையார் மனதுக்கோர் எழுச்சியை யுண்டாக்குகின்றது. செந்நிறப் பசுவினின்று வெண்ணிறப்பால் எங்ஙனம் வருகின்றது? சூரியன் தன்னிலை வழாமல் எங்ஙனம் நிற்கின்றான்? "தாங்குதலொன்றின்றியும், கட்டின்றியும், தன்னிலையினின்றுந் தாழாமல் அஃதெங்ஙனங்கீழ் நோக்கிச் சுற்றிவருகின்றது." (இருக்குவேதம் IV. 13, 5.) ஸ்ரீமான், ஹேகலின் கொள்கை பிரகாரம், சாத்திரமென்பது பதார்த்தங்களின் விசாரணையே, ஆராய்ச்சியினால் பதார்த்தத்தின் நியாயத்தையும், அதன் சிறப்பிலக்கணங்களையும், அதன் சாதித்தன்மையும், சுருங்கச்சொல்லின், அதன் விவரமெல்லா மறிகின்றோம். பிரதியக்ஷானுபவங்களின் காரணங்களை அறியவேண்டிய ஓர் அவாவினால் வேதசாத்திர முண்டாயிற்று. வாழ்க்கையின் பொதுத்தர்மமாகும் மாறுபாடு பலவற்றிற்கு தோன்றாக் காரணமாயிருக்கும் நித்தியமாய் வொன்றையறியத் தத்துவஞானம் மக்களைத் தூண்டாநின்றது. எப்பொருள்களும் அழிவையடைகின்றன. பின் எஞ்சிநிற்பதெது? யாதேனு மொன்றுண்டோ வில்லையோ? வேதந்தோன்றிய காலத்திலிருந்தோர் இத்தகைய சாத்திரக் கேள்வியை யெழுப்பிக் கொண்டு அதற்கு விடையையும் பகர்ந்தனர். அக்காலத்திலேதான் முதல் முதல் இப்பிரதியக்ஷ வுலகத்தைக் குறித்து விசாரணை உண்டாயிற்று. தமக்குத்தோன்றிய சமயவுணர்ச்சிகளை வெளியிடக் கஷ்டப்பட்ட அறிவுமுதிரா மக்களால் வேதங்கள் உண்டாக்கப்பட்டன வென்பதைநாம் நன்கு அறிய வேண்டும். நமக்கு அவைகள் சாத்திரங்களாகக் காணப்படவில்லை. காரிய வேதுவைக்கொண்டு வேதகிரந்த கர்த்தாக்கள் இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் தேவர்களென்று தீர்மானித்தார்கள். சூரியன் ஏன் ஒவ்வொரு காலையிலுதயமாக வேண்டும்? சந்திரன் ஏன் ஒவ்வொரு மாலையிலுதயமாக வேண்டும்? அவைகளை யியக்கிக்கொண்டிருக்குந் தேவதாசக்திகளன்றி அங்ஙனமுண்டாவதற்குக் காரணம்மற்றென்னை? சோமசூரியதேவர்களுண்டாயினது இங்ஙனமே. பண்டைக்காலத்து ஓந்திரியர்கள் மேகத்திலொரு தேவதை வீற்றிருப்பதைக் கண்டார்கள். வாயுவிலொரு தேவதை பேசு-



வதைக்கேட்டார்கள். இயற்கையுலகம் ஒரு தேவலோகமாயிற்று. 'நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பின்' பூதசக்திகளே சிறு தேவதைகளாயின. இவைகளுக்கதீதமாய் ஓர் பரம்பொருளுண்டென்னுங் குறிப்புகள் வேதங்களிற்காணப்படினும், அந்நூல்களின் பொதுக்கொள்கை கடவுளர் பலரென்பதே. அக்குறிப்புகளு மருகியிருத்தலின், கடவுளர் பலரென்னும் பொய்க் கொள்கையையுடைய மக்களை உயர்த்துவதற்கு அவைகள் போதியவைகளல்லன. உபநிடதங்களெல்லாம், வேதங்கள் குறிப்பாகக் கூறு மத்துவிதத்தையே வற்புறுத்துகின்றன. இவ்விடயத்தை நாம் பின்னர் அறியப்போகின்றோம்.

வேதந் தோன்றிய காலத்து முழுமுதற் பிரபஞ்சம் நித்தியமாகவே கருதப்பட்டது. அக்காலத்துத் தத்துவஞானிகள் அதன் உற்பத்திக்குக் காரணமென்னை யென்பதை மட்டு மாராய்ந்தார்கள். புலப்படாதிருக்கும் முதற்காரணங்களை மற்றவைகளினின்றும் பிரித்தெடுப்பதே அவர்களுக்குச் சாத்திரமாகத் தோன்றிற்று. நித்தியவஸ்துவி னுண்மைத் தத்துவத்தையறிய வேண்டிய அவா, பல்வகைத்தாய பொருள்களுக்குக் கர்த்தாக்கள் பலரென்னுங் கொள்கையை ஸ்தாபிக்க அவர்களைத் தூண்டிற்று. ஆனால் பிரபஞ்சத்தின் மித்யைத்தன்மையை யுணர்த்துங் குறிப்பு யாதொன்றும் வேதங்களிற் காணப்படவில்லை. ஒருவகையாய் இந்த விருடிகள் நித்தியமாயவஸ்து அனுபவாதீதமாய தொன்றென்று கருதாமல், இப்பிரதியக்ஷவுலகமே யென்றறிந்தார்கள்.

(இன்னும் வரும்.)

**எஸ். இராதாகிருஷ்ண ஐயர், எம். ஏ., எல். டி.,**
தத்துவ போதகாசிரியர்
பிரஸிடென்ஸி காலேஜ்
சென்னை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

## தொகுதி 5. பக்கம் 128. தொடர்ச்சி.

"சைவநூல்களில் கூறப்பட்டதும், பாசமூன்றையும் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர வேறுயாதொரு ஆசிரமும் இவ்வுலகத்தில் மாந்தர்க்கு மேன்மையன்று. தீக்ஷையினாற்றான் மோக்ஷம். ஆசிரமங்களினாலும் மோக்ஷமில்லை. மன அழுக்கு நீங்கப்பெற்று அத்துவசுத்தியடைந்தாலொழிய மோக்ஷத்துக்கு வழிகிடையாது. ஆதலின் மனச்சுத்தமுண்டாக்கும் தீக்ஷையின்றி முத்தியடைய விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கவிரும்பிய குருடர்போல்வர். தோணியின்றிக் கடலைக்கடக்கத் தொடங்கியது போலாம்." இச்சிவதீக்ஷையை ஆரியப் பிராமணர் உள்ளிட்ட எவ்வருணத்தார்க்கும் செய்துவைக்க அதிகாரமுடையவர்கள் தற்காலம் ஆதிசைவரென்றும் பட்டரென்றும் அழைக்கப்படும் சைவாரிசயார்களே. இவர்கள் தாம் தமிழ்நாட்டில் பூர்வீகமாயுள்ள திராவிடக் குருக்கள்களே. சிவாலயங்களின் பிரதிஷ்டை உற்சவம், பிராயச்சித்தம், அர்ச்சனை முதலிய எவ்விதக்கிரியைகளும் சிவதீக்ஷை முதலிய உபதேசங்களும் செய்துவைக்க அதிகாரமுடையவரென சிவாகமங்களிற் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாகச்செய்யப்படும் பிரதிஷ்டை, கும்பாபிஷேகம் முதலிய கிரியைகளியாவும் சைவக்கிரியைகள் ஆகமாட்டா. சைவாசாரியர்க்கே யுரித்தாயுள்ள சிவாலயப்பிரதிஷ்டை, அர்ச்சனை, கும்பாபிஷேகம் முதலிய கிரியைகளை அவர் நீங்கலாக, அந்நியசாதியார் செய்யப்புகின் கேட்டை உண்டுபண்ணுமென்பதே சிவாகமங்களின் கருத்தாம். இதனை,



"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமா மென்றே
சீர்கொண்ட நந்திதெளிந் துரைத்தானே." என்ற திருமூலர் திருமந்திரத்தானுமறிக. மேற்சொன்ன சிவாகமங்களின் கருத்தை யனுசரித்தே சிவாலயங்களின் மூலஸ்தானத்துக் கருகில் ஆரியப் பிராமணர் போகக்கூடாதென்ற வழக்கம் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. சிவாலயங்களின் கர்ப்பக்கிரகம் மத்தியமண்டபம் மூலஸ்தானம் இவற்றுள் பிரவேசிக்க ஆதிசைவர் ஒருவருக்கே அதிகாரமுண்டு. ஆதிசைவரைத்தவிர ஆரியப்பிராமணர் முதலிய யாவர் பிரவேசித்தாலும் மற்று ஏனைய கீழ்ச்சாதிகளை யொப்பவே பிராயச்சித்தம் முதலிய பரிகாரங்கள் அக்கோயில்களில் செய்யப்பட வேண்டுமென சிவாகமங்கள் விதிக்கின்றன. தற்காலம் ஸ்மாத்தர்களுட்சிலர் தங்களைத் திராவிடசைவக்குருக்கள்களிலும் உயர்ந்தவரெனச் சொல்லிக்கொள்ளுதல் உண்மையாயிருந்தால் அச்சிவாசாரியரால் பூஜிக்கப்படும் கோயில்களுக்கு இந்த ஸ்மார்த்தர்கள் போதலும், அவர் சிவதரிசனஞ் செய்துவைக்கத் தரிசித்தலும் அவரிடமிருந்து விபூதி பிரசாதம் முதலியன பெறுதலும் கூடாவொழுக்கமன்றோ? அங்ஙனம் சிவாலயங்களின் புறவாயில்களில் காத்திருந்து திராவிடக் குருக்கள்களால் கொடுக்கப்படும் பிரசாதங்களை ஆவலுடன் பெற்றுப் போகும் இந்த ஸ்மார்த்தர்கள் தங்களை அவர்களினும் மேலெனச் சொல்லிக் கொள்ளுதல் எங்ஙனம் பொருந்தும். சிவாலயங்களில் எவ்விதமான கிரியைகளும் நடத்த சைவாசாரியரே உரிமையுடையவராதல்போல், சைவர்கள் கிரகங்களிலும் எவ்விதமான கிரியைகளும் செய்துவைக்க சைவாசாரியர்களே அதிகாரமுடையவர்கள். அவ்வாறாகவும் சிவதீக்ஷை கூட இல்லாத ஸ்மார்த்தர் அநேகர் இக்காலத்தில் விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு சைவ ஆசாரியர்போலப் பாவனைசெய்து திரிகின்றனர். இவர்கள் இச்சைவ வேஷங்களைத் தாங்கிய,வயிறுவளர்க்கவேயன்றி வேறல்ல. இவர்களின் வஞ்சகச்செயல்களை யறியமாட்டாத சாமான்ய ஜனங்கள் இவர்களையே சைவாசாரியரென மயங்குகின்றனர். சிவதீக்ஷைகூட இல்லாத இப்பிராமணர்கள் சைவகிரகங்களில் சைவக்கிரியைகள் செய்யமுயல்வது குருடனுக்குக் குருடன்வழிகாட்டல்போலாம். இவர்களைக்கொண்டு, சைவர்கள் வைதிகக்கிரியைகள்செய்து கொள்வது சிவாகமத்துக்கு முற்றிலும் விரோதமாகையால் அவைகள் ஒருவிதப்பயனையும் தரமாட்டா. கிருஸ்தவர்களையும் மகம்மதியர்களையும்

கொண்டு சிவகிரியைகள் செய்வதையே ஒக்கும். இவ்வுண்மைகளைச் சிறிதும் நோக்காது, தற்காலம் சைவசமயிகளுட்பலர் ஆதிசைவர் முதலிய சைவர்களை அவமதித்துத் தள்ளிவிட்டு, அதீக்ஷிதர்களாய், அசைவர்களாய் சிவாகமதமிழ்வேத நிந்தகர்களாய், அந்நியமதஸ்தர்களாயுள்ள ஸ்மார்த்தர்களை, சிரார்த்தம் விவாகமுதலிய கருமங்களுக்குச் சற்பாத்திரரென மதித்து அவர்களுக்கு அன்னதானம் முதலியன செய்தல் புண்ணியமென மயங்குகின்றனர்.

“வைதிகப்பிராமணர் ஆயிரம்பேருக்கு அன்னதானஞ் செய்தபலனும் சமயதீக்ஷைபெற்ற ஒருசைவருக்கு அன்னதானஞ் செய்தபலனும் ஒக்கும். வைதிகப்பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலனும் விசேடதீக்ஷைபெற்ற ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலனும் ஒக்கும். வைதிகப்பிராமணர் லக்ஷம்பேருக்கு அன்னதானஞ்செய்தபலனும் நிர்வாணதீக்ஷைபெற்ற ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலனும் ஒக்கும். வைதிகப்பிராமணர் கோடிபேருக்கு அன்னதானஞ்செய்த பலனும் சைவாசாரியர் ஒருவருக்கு அன்னதானஞ்செய்த பலனும் ஒக்கும். வேதாந்த மகா வாக்கியத்தையறிந்த கோடி பிராமண சன்னியாசிகள் கூடினும், நிர்வாணதீக்ஷை பெற்று, சித்தாந்த நூல்களாகிய சிவஞானநூல்களையோதி, பதி பசு பாச மென்னும் திரிபதார்த்தத்தின் லட்சணங்களையறிந்த ஒரு சைவருக்குச் சமமாகார்கள்” இது சிவவாக்கிய சிவாகமநூற் றுணிபு. அன்றியும் சிவாகமத்தின்படி ஒழுகி, தமிழ்வேதத்தைத் தென்னாடெங்கும் பரவச்செய்து, சைவசமயத்தை ஸ்சாபித்து, சிவமாந்தன்மைப்பேறும் பெற்றவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள். இவ்வுண்மை, நாயன்மார்களின் சரித்திரஞ்செய்தருளிய தெய்வச் சேக்கிழார் என்ற வேளாளரை அநபாய சோழமகாராஜா, யானைமீதேற்றித் தாமே வெண்சாமரம் வீசி நகர்வலஞ் செய்வித்தபொழுது தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் வேதபாராயணஞ்செய்துகொண்டு வந்தார்களென்று, அத்தில்லைவாழ் அந்தணரில் ஒருவராகிய உமாபதிசிவாசாரியார் தமது சேக்கிழார் புராணத்தில் கூறியிருக்கின்றார். அங்ஙனமாகவும் இக்காலத்தில் ஸ்மார்த்த பிராமணருட்பலர் இவ்வறுபத்துமூன்று நாயன்மார்களை வழிபடக்கூசுகின்றனர். அவர்கள் உற்சவங்களில் வேதபாராயணஞ் செய்யாது மறுக்கின்றனர். அவர்கள் அருமை பெருமைகளைச் சிறிதுஞ்சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றனர். உலகமுய்யும்படி அவர்கள் அருளிய தமிழ்வேதங்களை அவமதிக்கின்றனர். இது எவ்வளவு அதிபாதகம்! விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்துக்



கொண்டு அச்சின்னங்களுக்குரிய சிவபெருமானோடு பசுக்களை (ஆன்மாக்களை) சமமெனக்கூறியும், சிவவாக்கிய சிவாகமங்களை நிந்தித்தும், அச்சிவபெருமானுக்குத் துரோகிகளாய் ஒழுகும் இவர்கள் மற்றெப்பாதகந்தான் செய்யக்கூசுவார்கள்.

ஐயையோ! இச்சிவத்துரோகிகளை நம்சைவசமயிகள் வணங்குதலும் இவர்களிடத்தே புசித்தலும் இவர்களை விவாகம் சிரார்த்த முதலிய தானகருமங்களில் சற்பாத்திரமென வரித்துப் பூஜித்தலும் எவ்வளவு பெருங்கொடும்பாவம். சைவசமயிகளே! நீங்கள் பெறும்சமயம் விசேடம் முதலிய தீக்ஷைகளும் நீங்கள் அனுஷ்டிக்கும் சந்தியாவந்தனம் சிவபூஜை முதலிய கிரியைகளும் உங்களுள் இறந்தவர் பொருட்டுச் செய்யப்படும் அந்தியேஷ்டி முதலிய கிரியைகளும், நீங்கள்சேவிக்கும் தேவாலயங்களில் செய்யப்படும் பிரதிஷ்டை உற்சவம் பிராயச்சித்தம் முதலிய சகலவிஷயமான கிரியைகளும் விதித்தநூல்கள் சிவாகமங்களே. இச்சிவாகமங்களின் உயர்வையும் அவற்றில் விதிக்கப்பட்ட சிவதீக்ஷை சைவானுஷ்டானம் முதலியவற்றின் மேன்மையையும் சிவமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் மகிமையுமே சகல வேதாகம புராணங்களிலும் பேசும்

இவ்வுண்மைகளையுணராது, இச்சிவாகமங்களையும், அவற்றின்படி ஒழுகிச் சிவமாந்தன்மைப் பேறுபெற்ற உண்மைநாயன்மார்களையும், அவர்கள் உலகமுய்யும்படி அருளிய தமிழ் வேதங்களையும் நிந்திக்கும் ஸ்மார்த்தர்களை, அச்சிவாகமங்களை உண்மை நூலெனக்கொண்டு அவற்றின்படி ஒழுகப் புகுந்த நீங்கள் யாவர்களாகக் கருதியொழுகல் வேண்டும்?

உலகத்துட் சாதிபேதம்போல, சற்சமயமாகியசைவசமயத்திலும் சமயநடைபற்றி முதற்சாதி, இரண்டாஞ்சாதி, மூன்றாஞ்சாதி, நான்காஞ்சாதி, நீச்சச்சாதியென ஐந்து சாதிகள் கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்கு பாதமுறைப்படி வழுவாது நடந்து சிவானந்தப் பெரும்பேறு பெற்ற சிவஞானிகளே முதற்சாதி, சிவயோகிகள் இரண்டாஞ்சாதி, சிவகிரியையாளர் மூன்றாஞ்சாதி, சிவசரியையாளர் நான்காஞ்சாதி, இந்நெறிகளிலுள்ளவர்களையும் அவர்கள் சாஸ்திரமுதலியவற்றையும் நிந்திப்பவர்கள் சதாசூதகிகளாகிய பஞ்சமசாதி (தொடுதற் குரிய அருகரல்லாத நீச்சச்சாதியெனப்படுவர்.)

## சமயப்பிரவேசம்.

சைவாசாரியரை அடைந்து, சமயதீக்ஷை பெற்றுச் சமயப்பிரவேசம் செய்துகொண்டாலொழிய ஒருவன் சைவனாக முடியாது. சமய

தீக்ஷைபெறாதவன் எச்சாதியைச் சேர்ந்தவனாயிருந்தாலுஞ் சரி, சமயத்தில் அசைவனாகவே கருதப்படுவான். சூதசங்கிதை முதலிய நூல்களில் சைவர்கள் தமது சமய ஆசாரங்களில் பிறழாமலிருக்கவேண்டுமெனவும், அந்நிய சமயர் ஆசாரங்களை அனுசரிக்கக்கூடாதெனவும், அனுசரிப்பவர்களைத்தொடவுஞ் செய்தல் கூடாதெனவும் கூறியிருக்கிறது. சுத்த சைவ சமயமானது கேடுணாதிருந்த காலத்தே பிளவுபட்டுப்போன வீரசைவர்கள் இன்றைக்கும் ஆரியப்பிராமணர் முதலிய அசைவர்களை மேற்கண்ட விதமே நடத்தி வருகின்றனர். சைவமயத்தை மெய்யெனக் கருதுகின்றவர்கள் சைவாகமங்களை ஆராய்ந்தறிந்து அதன் வழி நின்றாலன்றி அதன் உடையார்களெனப்படுதலும் அதனாற் பெறப்படும்பயனும் இல்லையாம்.

சைவசமயிகளே! நீங்கள் இவ்வுண்மைகள் யாவற்றையும் நன்றாக வாராய்ந்து சிவாகமவிதிப்படி பத்தி செய்து ஒழுகக்கடவீர்கள். இவ்வுண்மைநிலைக்கு மறுதலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டு இரங்கி அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தக் கடவீர்கள்.

இனிச்சிவாலயங்களையும் சிவதருமங்களையும் போற்றும் சுதந்திரமும் உரிமையுமுடையவர் யாவரென்பதைச் சற்று ஆராய்வாம்.

சிவாலயங்களில் "எக்கோயில் எவ்வாகமத்தின் முறைபடி கட்டப்பட்டது அக்கோயில் அவ்வாகமத்தின் முறையே பூசைவிழா நடத்துக, மாறிச் செய்யிற் குற்றமாம்" எனக்கட்டளை யிடப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள சிவாலயங்கள் யாவும் சைவஆகமிகளால் கட்டப்பட்டன. இவ்வாலயங்களிற் கொடிஸ்தம்பம், பலிபீடம், கட்டிடவமைப்பு முதலிய யாவும் சிவாகமங்களில் விதித்த பிரகாரமே நிருமிக்கப்பட்டிருக்கின்றன. இஃதொன்றே இக்கோயில்கள் யாவும் ஆகமிகளாற் கட்டப்பட்டு ஆகமிகளுக்கே சுதந்தரமாயுள்ளதென்பதை எக்காலத்தும் நிலைநிறுத்தும் சாக்ஷியாயுள்ளது. இவ்வாலயங்களில் பூஜை நைமித்தியம் முதலிய நித்தியகிரியைகளும் பிரதிஷ்டை உற்சவம் முதலிய சகலகருமங்களும் சிவாகமங்களில் விதித்தபடியே இன்றைக்கும் நடைபெறுகின்றன.

இன்னும் வரும்

C. சங்கரராயர் B. A.

---

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 23 SEP 1916 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1916௵ ஆகஸ்டு௴ [பகுதி ௮.

## தைத்திரீயோபநிஷத்து.

### ஆனந்தவல்லி.

#### 4-வது அநுவாகம்.

வாக்குகள் மனதுடன் எதினின்று மடையாமல் திரும்பிவிடுகின்றனவோ, அந்தப்பிரம்மத்தில் ஆனந்தத்தை யடைகிறவன் எக்காலத்திலும் பயப்படுகிறதில்லை.

மனோமயத்தைவிட வேறானது உள்ளேயிருக்கிற விஞ்ஞான விகாரமான ஆத்துமா, அதனால் இது பூரணமாயிருக்கிறது.

அவன் புருஷாகாரமே அவன் புருஷாகாரத்தை அனுசரித்து இவன் புருஷாகாரம், அவனுக்குச் சிரத்தையே சிரசு, தருமம் வலது இரக்கை, சத்தியம் இடது இரக்கை, யோகம் ஆத்துமா, மகத்து வால்.

#### 5-வது அநுவாகம்.

வேதாந்தத்தில் நிச்சயமடைந்த புத்தி யக்ஞத்தையும் கர்மத்தையுஞ் செய்கிறது. சகலமான தேவதைகள் விஞ்ஞானத்தை முதலாவதான

பிரம்மமாக உபாசிக்கிறார்கள். விஞ்ஞானத்தைப் பிரமமாக வறிந்து, அதி னின்றும் வழுவாமலிருந்தால் சரீரத்தின் பாபங்களை விட்டுச் சமஸ்தமான இச்சைகளை அடைகிறான்.

அந்த விஞ்ஞானமயத்தைவிட வேறாயு முள்ளேயு மிருக்கிற ஆத்துமா ஆனந்தமயன் அவனாலிவன் பூர்ணமானவன்.

பரமாத்துமா வெகுவாகவேண்டு மென்பதாக விச்சித்தார். அவர் தமது ஞானத்தால் அனைத்தையுஞ் சிருஷ்டித்தார்.

சகலத்தையுஞ் சிருட்டித்து அவற்றிற் பிரவேசித்தார். அவற்றிற் பிர வேசித்து மூர்த்தமாயும் அமூர்த்தமாயும் ஆனார். இத்தகையதெனச் சொல் லவும் சொல்லக் கூடாததுமான ஆதாரமாயும், அனாதாரமாயும், சேதன மாயும், ஜடமாயும், சத்திய அசத்திய சொரூபமாயும், பரமார்த்த சொரூப முமானார்.

பார்க்கப்படுவது எதுவோ அது பரமார்த்த சத்தியம் என்று சொல் வர்.

## 6-வது அநுவாகம்.

ஜகத்து சிருஷ்டிக்கு முன் அசத்தாகவே யிருந்தது. அதினின்றும் சத்துண்டாயிற்று. அது தன்னைத் தானாகவே செய்துகொண்டது. ஆகை யினது சுகிர்த மென்பதாச் சொல்லப்படுகின்றது.

எது சுகிர்தமோ அது ரசம் இவன் ரசத்தை யடைந்து ஆனந்த முடையவனாகிறான்.

இருதயாகாசத்தில் இந்த வானந்தம் இராவிடின் எவன் அபானகர் மத்தையும் பிராணகர்மத்தையும் செய்வான். இவனே யானந்தன்.

எப்பொழுது ஞானவிச்சையுள்ளவன் காணப்படாமலும், அசரீரமா யும் அவாச்சியமாயும் நிராதாரமாயுமிருக்கிற பிரம்மத்தினிடத்தில் பய மற்ற ஸ்திதியை அடைகிறானோ வப்போது பயமற்றவனாகிறான்.

எப்போது ஜிஞ்ஞாசுவானவன் பிரம்மத்தினிடத்தில் ஸ்வல்ப பேதத் தைச் செய்கிறானோ அப்போது அவனுக்குப் பயமானது உண்டாகிறது.

மணவழகு

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# "பாழையென்னுஞ் சொல்வழக்கு."

மொழிநூலில் பாஷையென்னுஞ் சொல்லுக்குப் பாழையென்னுஞ் சொல்லை வழங்கியிருப்பது நன்றாக இல்லையென்றும் அது கூடாதென்றும் கூறுவர் ஒருசாரார்.

பாஷையென்பது வடசொல்லாதலால் தமிழ்ப்பாடையெனின் அது அமங்கலப்பொருளையும் தருதலால் தமிழ்ப்பாஷை தமிழ்ப்பாடையென்னும் இருவகை உச்சரிப்பினும் தமிழ்ப்பாழையென்னும் உச்சரிப்பே நவின்றோர்க் கினிமை பயத்தல் முதலிய அழகு உடையதாகு மென்பர் ஒருசாரார். சிவ ஞானமுனிவர் முதலோர் பாஷையென்பதற்கு மொழியென்று வழங்கி யிருக்கின்றார்கள். அவ்வழக்குப்படி மொழிநூலெனக் கூறப்பட்டுள்ளது.

தமிழ்மொழியெனின் தடை கூறுவார் ஒருவருமிலர். தமிழ்ப்பாழை யெனின் தடை கூறுவார் சிலருளராகின்றனர். அவரும் அச்சொல்லின் காரணமுதலியன உணருவாராயின் அன்பு கூர்ந்து மகிழ் கூர்ந்து இனி துடன் படிவராவர்.

தடை = ஆட்சேபம் தேவாரத்தில் பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், நட்டபாடை, நட்டபாஷையென்னும் பண்கள் வந்திருக்கின்றன.

பழந்தக்கராகம்—௩—பதம்

பழம்பஞ்சுரம்—௨—பதம்

நட்டபாடை—௨—பதம்

பழம் + பஞ்சுரம்

பழம் = இசை

பல்—பள் = இசை, பள்ளர் = உழவர், இசைபாடி உழுவோரென்பது பொருள். பள்—பளம் = இசை, ஒலி

பல்லி பள பளெனச் சொல்லிற்று, பளீரென அடித்தான்.

பளம்—படம்=இசை, படபடெனப் பேசினன்.

"படமலி தமிழிசை பரவ வல்லவர்"

(திருவிடை மருதூர் ச—தே)

படம்—படகம்=ஓர்வாச்சியம். இசைப்பதென்பது பொருள்

"கத்தரிகை துத்தரிகறங்குதுடி தக்கையொடு இடக்கை படகம்" (திருவேதவனம் ச-தே)

தக்கம்—தக்கை=ஓர்வாச்சியம்
பளம்—பழம்=இசை

இப்பழமென்னும் சொல்லுதான் பாழையாயிற்று

பழம்—பாழை=இசை, மொழி,
நட்டபாழை நட்டபாடையாயிற்று,
நட்டபாடை நட்டபாஷையாயிற்று,
நட்டபாஷை யென்பது 'நட்டபாடையாயிற்றெனல் கூடாது.

ஏண்டெப்பாஷை யென்பது பண்ணெண்க. சித்தர்களும் பரிபாழை என்பர். மதுரைக்கலம்பகத்து உரையிலும் ஓரிடத்துப் பாஷையென்னும் சொல் வந்திருக்கின்றது, உள்ளது நாற்பதிலும் உள்ளது.

இனிழகரம் டகரமாதல் இலக்கண முறைமையா? ஷகரம் டகரமாதல் இலக்கண முறைமையா? எனின் ளகரம் டகரமாதலாலும் ழகரம் ளகரத்தி னின்றுண்டானபடியாலும் ளகரம் டகரமாதல் போல் ழகரமும் டகரமா கும்.

உ-ம்

"திகடரு சடைமுடி யடிகள்"
(திருச்சேறை ச-தே)
திகழ்+தரு=திகடரு
"திகடசக்கர"
திகழ்+தசக்கர=திகடசக்கர
ஷகரம் டகரமாகுமா?



ஷகரத்துக்கும் டகரத்துக்கும் சம்பந்தம் உண்டா எனின் ச, ழ, ஸ, ஷ, இவை ஒன்றுக்கொன்று சம்பந்தமான எழுத்தானபடியால் அச்சம்பந் தத்தின்படியே பாஷையென்பது பாசையாகும். பாடையாகமாட்டாது. டகரத்தில் தகரமிருக்கின்றபடியாலும் வித்து விச்சு முதலியன போலத் தகரத்துக்கும் சகரத்துக்கும் சம்பந்தமிருக்கின்றபடியாலும் அதன்படி பாடையென்பது பாஷையாகும்.

† ள்+த=ட

ளகரமும் தகரமும் சேர்வதால் டகரமுண்டாயது, இதனால் சகரமும் டகரமும் ஷகரமாகு மென்பதும், டகரம் ழகரமாகாமைபோல ஷகரம் டகர மாகாதென்பதும், விளங்குமாறு காண்க. ஷகரவுச்சரிப் புடைய சொற்களின் சிதைவெனல் வேண்டும்.

ழகரம் டகரமாகும் டகரம் ழகரமாகாது ஷகரமாகும்.

உ-ம் புழலை—புடலை
வேடம்—வேஷம்

இன்னும் கண்டகம் கந்துகமாகும், பிண்டிபாலம் பிந்திபாலமாகும் கந்துகம் கண்டகமாகாது, பிந்திபாலம் பிண்டிபாலமாகாது. ட, ண, ள, ழ, என்பவை நடுநாக்கானது மேல்வாயின் நடுவைப் பொருந்துதலால் உண்டாதலாலும் ஷகரமும் அவ்விலக்கண முடைமையாலும் டகரம் ஷகர மாகும்.

இவ்வாராய்ச்சியால் பழமென்னும் இசையின் பெயர் பாழையாயிற் றென்றும் பாழை பாடையாயிற்றென்றும் பாடைபாஷையாயிற் றென்றும் கொள்ளவேண்டும்.

இன்னும் ஷகாரமென்னும் எழுத்துச் சத்தசுரங்களுண்டான காலத் துக்குப் பிறகே உண்டாயின தென்பர். அஃதுண்மையே *"சரிகமபதநி"

---

† மொழிநூல் இலக்கணவியல் கஉ-ம் பக்கம் மெய்ச்சந்தி எழுத்துகாண்க.
* மொழிநூல் பாயிரவியல் கூகு-ம்பக்கம் காண்க.

என்னும் சத்தசுரங்களும் சட்சமுதலிய வற்றின் முதலெழுத்தாலாம் இச் சுரங்களுண்டான காலத்தில் சட்டி, சட்டம் என்னும் உச்சரிப்புதான் இருந்ததெனப் புலனாகின்றது.

சட்சம் ஸட்சம் "ஸரிகமபதநி"

ஷட்சம் என்னும் அதாவது ஷகாரவுச்சரிப்பு அக்காலத்திருக்குமானால் ஷட்சமென்பதன் முதலெழுத்து ஷகரமாதலால் "ஷரிகமதநி" என்றிருத்தல் வேண்டும். இனி ஷ, ஸ, யோரபேதமெனினும் சங்கீதப் புலவர்கள் ஒப்பமாட்டாராதலால் அதுவும் பொருந்தாது.

எக்காலத்திலேனும் "ஷரிகமபதநி" என்னும் சுரநடையிருந்ததா? ஆராய்ந்து கூறுக. இதனால் ஷகரமானது சத்தசுரங்களுண்டான காலத்துக்குப் பிறகு ஸகரத்தினின்று உண்டான எழுத்தே யென்பது வலியுறுகின்றது.

ஸ — ஷ

## ஷ ஷ்ரீ, ஷ ஷட்ம் என்பன பிற்காலத்து வழக்கு.

ஷகாரம் டகாரமாவதற்கு இலக்கணமுறைமையில்லை. இனிப்பாழி பாழையாயிற்றெனலும் ஒக்கும் பாழி—குகை குகையிலுண்டயன தென்பது பொருள் இது பொருந்தக் கூறலென்னும் உத்தி இகரம் ஐகாரமாகும் முசலி முதலை மென்பதுபோல, பாழையென்னும்சொல் வந்தகாரண முதலியன அறிந்துகொள்க

பழந்தக்கராகம், பழம்பஞ்சுர மென்பவற்றுள் பழமென்பதற்கு வேறு வெறுபொருள் கூறுவர் அது பொருந்துமாறில்லை.

**மாகறல்-கார்த்திகேய முதலியார்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தேவாரக் குறிப்பு.

கல்லூர்ப் பெருமணம் வேண்டாக் கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம்பரனே.

(இ-ள) நல்லூர் என்னுந்திருத்தலத்தின் கண்ணதாய திருப்பெருமணம் என்னுந்திருத்தளியினையே விரும்பி ஆண்டெழுந்தருளிவைகும் நம்பிரானே, நும்மையே நம்பி நும் அல்லவற்றை நம்பாத நும் திருத்தொண்டர்வாக்கு மனங்களானுணர்ந்து சொல்லப்படாத அவ்வூர்ப்பெருமணமொன்றே மேற்கோட்லுடையரன்றி அவற்றானுணர்ந்து சொல்லுதற்குரிய இவ்வூர்ப்படும் ஆரவாரமாய இம்மணத்தை மேற்கொள்ளாரன்றோ? அற்றேல் அவர் அதனை மேற்கொண்டாற்படும் இழுக்கென்னை யெனின்? ஒருவன் நுமது கழுமலம் முதலிய பலவேறூர்களைத் தொழுமாற்றாற்றொழுமாயின் அதன் அதனானே தன் மலங்கழுவி பெருமணமாய பேரின்பமெய்துமெனவும் "திருமலமுடையார் பெருமணங்கண்டோரும் திருமலரே" எனவும், ஓதும் நூல்கள் மெய்ப்பொருளவாகாது பொய்ப்பொருளவாய் முடியும் ஆகலான். இருந்தவாற்றான் மலைபோலும் பெருந்துன்பு பரவுதற்கு ஏதுவாய்ப் பந்தமுறுக்கும் இம்மணம் எனக்கு வேண்டாம் வேண்டப்படுவது அவ்வூர்ப்பெருமணமே ஆகலான் அதனையே ஈந்தருளும். எ—று.

கல் என்பது—எடுத்துக்காட்டுவமை. ஊர்—முதனிலைத்தொழிற்பெயர். ஊர்தல்—பரத்தல். மிகுதி எனினுமையும். இனி கல்லூர் என்பதற்கு கல்லின் கண்ணே வரன் வரிதால் தொட்டுக்காட்டும் மணக்கிரியையுள் ஒன்றென்பாருமுளர், அஃது அப்பொருள் படாமையானும் அல்லதூஉம் உபலக்கணமாதற் கேலாமையானும் பொருட்சிறப்பின்மையானும் இதனுள் அடங்குதலின் வேறுகூற வேண்டாமையானும், அவ்வுரை ஈண்

டைக்குயாதும் இயைபின்மையறிக. பெருமை = அகந்தை. எல்லாப் பந்தங்கட்கும் மூலகாரணமாய அவிச்சை எல்லார்க்கும் புலனாகாமையின் எல்லார்க்கும் எளிதிற் புலனாதற்குரிய அதன் காரியமாய் அகந்தையே கூறினார். தூலமுணர்த்தியே சூக்குமமுணர்த்தல் முறையாகலான். அகந்தை எனமுன் வருதலின் மேல் ஊர்தல் என்றது அதனது ஊர்தல் என்பது தானே போதரும் என்னுங் கருத்தால் விதவாதோதினார். சொல்லூர்ப் பெருமணம் என்புழி, பெருமை = ஆரவாரம். வேண்டப்படுவதென்பது முதலியன குறிப்பெச்சம். பல் ஊர் = பலவூர். மேற்கழுமலமென நிற்றலின், பல்லூர் = அக்கழுமல முடையார்க்குரிய பல்லூர் என்பது உணரப்படும் என்னுங் கருத்தான் சொற்பல்காமைப் பொருட்டு அதனை யொழித்துக் கொள்ளப்பட்டது. பெருமணப் பாட்டு என்பது மெலிந்து நின்றது. கழுமலம், பல்லூர், கழுமலமும், பல்லூரும், பெருமணக்கழுமலப் பல்லூர்ப்பாட்டு என இயையும். பெருமணமாய பெருமயன் உரிமையுடைத்தாக வைத்துப் பல்லூர் மேற்பாடும் பாட்டெனவும், "நிருமலமுடையார் பெருமணங் கண்டோரும் நிருமலரே" என அவ்வவ்வூர்வாய் நிகழும் மணநூல் எனவும், இரட்டுறமொழிந்து கொண்டுரைக்கப்பட்டது. பால் விளங்காத அஃறிணையியற் பெயராகிய பாட்டு ஆகுபெயர். மெய் = மெய்ப்பொருள். சூடல் = மேற்கோடல். ஆய்த்தில என்பது ஒருமைப்பன்மை மயக்கம். சூடார் என மேற்கோ ளெடுத்தோதி, மெய்யாய்த்தில என்னும் எடுத்துக்காட்டான் வலியுறுத்தருளினார். தொண்டர் சூடலர் என இயையும் சொல்லாவூர்ப் பெருமணத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலை. தேற்றமெனினுமமையும். சொல்லூர் வினைத்தொகை. நல்லூர்ப் பெருமை = நல்லூருடைத்தாய பெருமணம். மேய — விரும்பிய. மேவிய என்பதனின் திரிபு எனினும் இடைக்குறை யெனினுமமையும். நம்பனே என்பது நீட்டும்வழி நீட்டல். ஏகாரம்விளி.

நம்மை எவற்றினும் சிறந்த நன்மை எனப்படும் வீடுபேற்றைத் தப்பாது பயத்தலின் காரணக்குறியாயிற்று என்பது தேற்ற "நல்லூர்" எனவும், பெறும்பயன் பெறுதற்கு ஏதுவாய் நிகழும் இப்பெருமணமாய இதுவே அதற்கு அமையுஞ்சான்று என்பது தேற்ற "பெருமணம்" எனவும், பிறவற்றான் விசேடிக்கப்படும் பிறவூரும் இதனால் விசேடிக்கப்படினும் முன்வாக்கியம் பெய்துரைக்கப்படாத புறவூரும் இதனை யொப்பன அல்லவென்பது தேற்ற இரண்டினுள் ஒன்றைத் தனிநிலையாக்காது "நல்லூர்ப்பெருமணம்" எனவும், இப்பெற்றித்தாய விதனை நீகைவிட விருப்





பின்மை பற்றியாதல், அன்றி நின்னன்பர் விடாது விரும்புதல் பற்றியாதல், நினக்கு இத்திருப்பெயர் எய்திற்றுப்போலும் என்பது தேற்ற "மேய நம்பனே" யெனவும், சதசத்தாய வுயிர் தம்மிற் கீழுள்ளவற்றைக் கழியு முறையாற் கழித்துப் போங்கால் தம்மின் மேலுள்ளதனை யுணர்ந்து கோடற்கிடையே நிகழும் நான்பிரமம் என்றன் மாத்திரையினமைந்து மேலறிய வேண்டுவன அறியாத ஏகான்மவாதிகள் போலாது "தைவமென்றுந்தைவமே" என்னுமுயிரியல்பை உள்ளவாறுணர்ந்துடையர் என்பது தேற்ற "தொண்டர்" எனவும், ஒன்றனையுள்ளவாறுணர்ந்து இதுவே எமக்குத் தகுமெனக்கொண்டார் பின்தகாதவற்றைக் கைக்கொள்ளாதவாறு போல வாக்குமனாதீதமாய நும்மியல்பை உள்ளவாறுணர்ந்து அதனையே மேற்கொண்டு பிறவற்றைக்கீழாகவைத்துக் கண்டுடையார் பிறவிக்கேதுவாய அவ்விழி பொருளைப்பின்னும் வேண்டுமெனக் கொள்வாரென்கை, ஒருவன்கான்ற சோற்றை விரும்பும் என்பதனோடொக்கும் என்பது தேற்ற சூடரென்றொழியாது ஏகாரமுகத்தானினிது விளக்கி "சூடலரே" எனவும், பதிபாசங்கள் சத்தென்னும் சொல்லொப்புமை யுடையனவாயினும் தம்முள் பெரிதும் வேற்றுமையுடைமைபோல பேரின்ப சிற்றின்பங்கள் பெருமணமென்னும் வாக்கியத்தான் ஒப்பனவாயினும் அஞ்ஞானத்தானாவது, மெய்ஞ்ஞானத்தானாவது என்னும் பொருளான் வேற்றுமைப் படுவன வென்பது தேற்ற பல்லூர்ப்பெருமண மென்றாற்போலாது வேறு விசேடணங்காட்டி "சொல்லூர்ப் பெருமணம்" எனவும், உடன் வைத்தெண்ணப்பட்டோர் நால்வரின் முதல் நின்றாரும் அவரன்ன பிறரும், முதனூலும், உலகியல்பு நில்லாத இயல்புடைத்து, ஸ்ரீ தலங்களை வழிபடு மாற்றான் வழிபட்டுடையர் அவ்வுலகியல்பாய சிறுமணம் கைவிட்டு வீடு பேறாய பெருமணப் பேறுடையர் என் நியாயமுகத்தான் வலியுறுத்து வைத்தோதும் பாட்டுக்களின், மெய்ப்பொருள் அவர் அதனைச் சூடுவா ராயின் பொய்யாய் முடியுமென்பது தேற்றவும், சிற்றறிவுடையர் சிற்றின் பத்திற்கேதுவாய்ச் செய்யும் சிறுமணம் போலாது பிறர்பெரும் பயன் பெறுதற்கேதுவாய்ச் செய்யும் நும்மணம் நும்சிறுவர் மணம் ஆய பெருமணங்கண்டோர் பேரின்பெய்துவர் என்றோதும் மணநூல்கள் அம்மணம் போலும் இம்மணங்கண்டோர் பேரின்பெய்தாராயின் பொய்ப்பொருளாய் முடியுமாகலான், இதுகண்டோர்க்கு அதனை ஈந்தருளும் என்பது தேற்ற வும், இருபொருள்தோன்ற "கழுமலம் பல்லூர்ப் பெருமணப்பாட்டு மெய்

யாய்த்தில'' எனவும், ஆகலின் அளவைகளானும் பொருந்துமாற்றானும் அநுபவமுடைய ஆசிரியர் ஆசாரத்தானும் வீட்டின்பம் எவ்வாறு அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையுந் தோற்றமுடைத்து, கட்டாணுந்துன்பம் அவ்வாறேயாம் என்பது தேற்ற, ''கல்'' எனவும் இங்ஙனமாகலின், அது இதுவென நினைப்பினும் நினைந்த மாத்திரையே நெஞ்சது துண்ணென்னும், ஆகலானும் அஃது அகந்தைக் கேதுவாமெனவே அதற்கேதுவாய ஆணவமல மருமையானும், அம்மணத்தாற் றப்பாது காம வெகுளிமயக்கங்கள் நிகழ்ந்து அவற்றான் அழுந்தப்படுமென்பது தேற்ற, ''ஊர்ப்பெருமணம்'' எனவும், ''வேண்டாமை'' வேண்டப் பிறவாமையாம் ஆகலானும் ''தூய்மை யென்பது அவாவின்மை மற்றது வாய்மைவேண்ட வரும்'' ஆகலானும், நும்மை இடைவிடாது பாவித்து அவாவின்மை எய்தப் பெற்றேன் அதுவேவீடாம் என்பது கூறவேண்டாம், ஆகலின், அதுவேண்டாமைமேல் வேண்டுவதுதானே பெறப்படும் என்பதுதேற்ற ''வேண்டா'' எனவும் வைத்து உபதேசித்தருளினர்.

நல்லூர்ப் பெருமணம் மேவியருளிய நம்பிரானே சிவானுபூதி உணர்வுதூர்ந்து மேற்பயின்று போந்த உலகியல் உணர்வு மேம்படுதற்கு ஏதுவாய இம்மணம் எனக்கு வேண்டாவாம், அற்றேல் அது வேண்டாவென்றது என்னையோவெனின் முறையே அநித்தம் நித்தா நித்தம் நித்தமாயபாசம் பசு பதி என்னும் மூன்றனுள் பதி நித்தப்பொருளென யாமுணரும் மெயயுணர்ச்சி மெய்யாகாது பொய்யாய் ஒழியுமாகலான், அற்றேல் இனி நினக்கு வேண்டுவ தென்னையோ வெனின் நம்மனோராய நமது தொண்டர்கள் எல்லாவுலகத்தினும் புகழ்மிக்க வீட்டுலகப் பெருமணமே ஒருவன் சூடும் அலர்போற் சிறந்ததெனப் போற்றிக்கொள்வார், ஆகலின், யாம் கோடற்குரியதும் அதுவேயாம். (எ-று)

கற்றல்=பயிறல். ஊர் இருமடி ஆகுபெயர். பெருகும் என்பது திரிந்துநின்றது. கழுமலம்=கோடற்குரியதாகாது கழுவுதற்குரிய மூலமலம். பல்லூர்=பலவேறுபுவனம். எனவே மாயையின் காரியமாதல் பெறப்படும். பேர்தல்=புடைபெயர்ச்சி. இதனான் ஒழிந்த வினையியல்பு கூறியவாறாயிற்று. ஆகவே முப்பாசங்களும் கண்டுகொள்ளப்படும். சதசத்தாய உயிர் ஏனைச் சதசத்துக்கள்போல் தோன்றல் தோன்றாமை இரண்டுமின்றி இவ்வீரியல்பு முடைமையின் மலரின்கண் விளங்கல் விளங்காமை இரண்டுமின்றி அதனுள் அடங்கித்தோன்றும் மணம்போறலின், அது பற்றி மணம் ஆகுபெயரான் உயிரை உணர்த்தி நின்றது. பாடு=இடம். மூன்றனுட்பதி, ஏனை இரண்டற்கும் ஆதாரமாய் நிற்றலின் அதுபற்றி அதனைப் பாடு என்றார்.



மெய்யாவது=மும்பொருள்கள் சதசத்தாய உயிர், பாசம், அசத்தாகலின் பதியே சத்தென உண்மையியல்பு உணரும் நித்தா நித்தங்களது வேறுபாட்டுணர்வு. சொல்=புகழ், மணமே தொண்டர் சூடு அலர் என இயையும். சூடு அலர்=வினைத்தொகை, ஒற்று இரட்டியாமை இலேசாற் கொள்க. அவராம் என்னும் ஆக்கந்தொக்குநின்றது. அவர்போல் அதனை மேற்கோடலின் அலர்என்று உபசரித்தார். மெய்=இலது. ஆய்த்து என இயைத்துரைத்துக் கொள்க.

(வேறு உரை) நல்லூர்ப்பெரும் மேயநம்பானே, கல்லூர்ப் பெருமணம்வேண்டா=அம்மிமிதித்தலாய இந்த மணம் எனக்கு வேண்டா. (வேண்டில்) கழுமல முதலாகிய பல ஸ்தலங்களுக்கு அருளியதிருப்பதிகங்கள் மெய்யாகியது இல்லை (மெய்யாகமாட்டா) பெருமணம் ஊர் சொல் தொண்டர் சூடலர்=பெருமண மூர்ந்த திருப்பதிகங்களைத் தொண்டர்கள் மேற்கொள்ளார்கள், (ஆகலின் வேண்டா).

(வேறு உரை) நல்லூர்...நம்பானே—கழுமலம் பல்லூர் பெருமணம் பாட்டு மெய்யாய்த்து=திருப்பதிகங்கள் மெய்யாயினவைகள் (இல= சொல்லூர் பெருமணம் சூடலரே தொண்டர்=அப்பதிகங்களில் தீமை யென்று விலக்கப்பட்டன) புதம்பரந்த பெரியமங்களகரமாகக் கொள்ளாது ஊர்களே தொண்டராவார். (சூடலரே=அங்கீகரியாதவர்களே) மெய் யாய்த்து + இல என்றுபிரித்துக் கூறப்பட்டன. ஆய்த்து என்பது ''பாக்கம் நன்மையாய்த்தே என்பதுபோல'' திரிந்து நின்றது.

வி. குஞ்சிதபாதம் பிள்ளை,
வீரசோழகன்
ஸ்ரீ சிவஞானத்திருத்தளி,
ஸ்ரீ சிதம்பரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞான சுவாமிகள் அத்துவிதக் கொள்கை.

## பாயிரம்.*

### ஓங்காரதேவ வணக்க உரை.

வேதங்களையும் ஆகமங்களையும் ஞானசூக்குமங்களைக் கூறும் பலநூல்களையும் என்றுரைத்தொழிப் பலநூல் ஞானசூக்குமங்களை கூறுமென விசேஷித்தொழிந்து அவ்விசேஷணமின்றி வேதங்களையும் ஆகமங்களையும் என்றுரைக்கவே வேதாகமம் ஞானசூக்குமங்களைக் கூறுவென்பதூஉம், இன்னும் ஞானசூக்குமங்களைக் கூறும் பலநூலெனவே ஞான நூலங்களைக் கூறுவன வேதாகமங்களென்பதூஉம் அன்ன பிறவும் பெறப்பட்டன. அவை அங்ஙனமாமோ அன்றோவென ஐயமாதன் மேலும் பலநூலென்பனயாவை, ஞானசூக்குமங்களென்பனயாவை, அவையெத்துணையவென்பவும் பிறவும் ஐயமாம். இன்னுமின்னோரன்ன ஐயமே அதனுள்யாண்டுமாம். ஆகலின், அஃதாய்தல் மணற்சோற்றுட் கல்லாய்தல் போலும். ஆயினு மின்னுமொரு செய்யுளுரை ஐயம் ஒரு சிறிது மாத்திரம் வினவி யொழிதும். 125-ம் பக்கம் 99-வது செய்யுளுரை தத்தம் மதக் கோட்பாடுகளை விசேடித் துணர்த்துதற்கே அத்துவிதத்தோடு விசிட்டம் முதலிய சத்தங்கள் அவ்வம் மதாசாரியராற் சேர்க்கப்பட்டபடி சுத்தம் என்பதும், "புனிதமெனு மத்துவிதம்" என்னுந் தாயுமானவர் முதலியோராற் சேர்க்கப்பட்டதெனினும், சிவஞான முனிவர் விசிட்ட முதலியவற்றுள் யாதானுமொன்றுன் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்தலிற் சுத்தாத்துவிதமென வழங்கப் படுமெனினும் பொருந்து மாறின்று. என்னும் பிரதிஞ்ஞையை 'அவரும் அம்மதங்களும் தோன்றுமுன்னுள்ளது' அம்மண்டலப் பிராமணமாகலின் என்னு மேதுவால் சாதிக்கப்பட்டது. அங்ஙனந் தாயுமானவர் முதலியோரால் இடையே சேர்க்கப்பட்டதென்பது அவர்க்கு முன்னுள்ளது மண்டலப்பிராமண மாகலின் பொருந்தா தென்ப தொக்கும். விசிட்டமுதலிய வற்றுள் யாதானு

*இப்பாயிரம் பரிபூரணாநந்த மென்னுநூலிலுள்ளது.



மொன்றுன் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்தலிற் சுத்தாத்துவிதமென வழங்கப்படும் என்றுரைத்த சிவஞான முனிவர்க்கு முன்னுள்ளது, மண்டலப் பிராமண மென்பது அதிவியாத்தியாய் ஐயமேயாம். என்னை, சுத்தாத்துவிதப் பொருளாவது தூயதன்மையைக் காட்டுமொரு விசேட மொழியாகவே கொள்ளஉளதும் இக்கதிக்கு வேறாய் கூறப்படுவன வெல்லாம் பாசத்தோடுள்ளன வென்பதை அறிவுறுத்த வுளதுமாம் என இங்ஙனம் பரிபூரணாநந்த போத சிவ சூரியப்பிரகாசவுரை யுரைத்தார்க்கும் முன்னுள்ளது அம்மண்டலப் பிராமணம். ஆகலின் அஃததிவியாத்தியாய் ஐயமேயாம். சிவஞானமுனிவருரைப்பொருள் பொருந்தாமைக்கோது மேது எஃது அஃது இப்பொருள் பொருந்தாமைக்கு மொக்கும் என இங்ஙனமஃ ததிவியாத்தியாய் ஐயப்பாடாம் அஃதன்று, சிவஞானமுனிவர் அப்பொருள் வைதிக சைவ நூற்றுணிபென்றாரல்லர் இவ்வுரையுடையார். அப்பொருள் "வைதிக சைவநூற்றுணிபெனவும்" "சுருதிவசனமெனவும்" "சுருதிநெறியான சுத்தாத்துவித மெனவும்" உரைத்தனர். ஆகலின் அவ்வுரையிரண்டுந் தம்முளொக்குமாறு யாங்ஙனமாகலான் அஃததிவியாத்தியாமா றியாண்டைய தெனின், அஃதன்று தூயதன்மையைக் காட்டுமொரு விசேடமொழியான் விசேடிக்கப்பட்ட சுத்தாத்துவித சித்தாந்தமென்னு முரையும் அவர்தம்வாய்மொழியே யல்லது சுருதிமுறை யன்று. என்னை, சுத்தாத்துவிதம் தூயதன்மையைக் காட்டும். ஏனையத்துவிதம் பாசத்துட்படுதலைக் காட்டுமென பாசத்துட்படாமை பாசத்துட் படுதல்கள் பற்றி அவையிரண்டு முறையே அத்துவிதம் சுத்தாத்துவிதமென வழங்கப்படுமென் றிங்ஙனங் கிளந்து, 'அம் மண்டலப் பிராமண மெடுத்தோதாமையின், அஃதன்று அங்ஙனமாதற்கு சரபோபநிஷத்து வசனங் காட்டப்பட்டதாலெனின் அச்சரபோப நிஷத்தும் அங்ஙனங் கிளந்தோதாமை யறிக. இனியங்ஙனங் கோடுமேனும் 'மண்டலப்பிராமண மல்லாத வேறுபல உபநிடதங்களுள் வரும் அத்துவிதம் ஆன்மாவின் பெத்ததசையின் சம்பந்தம். மண்டலப் பிராமணத்துள் வரும் சுத்தாத்துவிதம் முத்ததசையின் சம்பந்தமென" அவருரைத்தொழிதலின் அதுபற்றிய மையப்பாடேயாம். அஃதன்று அத்துவிதம் சுத்தாத்துவிதமென்னும் வேற்றுமைபற்றி யங்ஙன முரைக்கப்பட்டதன்றி, சுத்தாத்துவிதப்பொருள் அவ்வுபநிடத்துள் காட்டப்பட்டது. ஆகலின் அதுபற்றியிழுக் கென்னையெனின், முத்ததசையின் சம்பந்தமாய சுத்தாத்துவித மோதாது பெத்ததசையின் சம்பந்தமாய ஏனை யத்துவிதமோதுஞ் சுருதி, சுத்தாத்துவிதம் பொருள் போதிக்கு மாறியாங்ஙனம், ஆகலி

னஃததிவியாத்தியாய் ஐயப்பாடாதலறிக. அதுநிற்க, இனி 127-ம் பக்கம் 21-வது வரிசையுள் "சுத்தாத்துவித சித்தாந்தம் அநாதி" என்புழி வரும் "அவ்வனாதி,, யென்பது "காரணசரீர" மென்றுரைக்கப் பட்டது. சுத்தாத்துவித சித்தாந்தம் அனாதியென்புழிவரும் அனாதியும் காரண சரீரமோ அன்றோவென ஐயமாம். இனிசுத்தத்தான் விசேடிக்கப்படாத அத்துவிதமும் அதனான் விசேடிக்கப்பட்ட அத்துவிதமும் முறையே பெத்ததசை முத்த தசைகளின் சம்பந்தமென்புழி தூயதன்மையைக் காட்டும் மதமாய தமது மதக்கோட்பாட்டை விசேடித் துணர்த்தற்கே சுத்தாத்துவிதமென விசேடித்தொழிந்து 126-ம் பக்கம் 31-வது வரிசையுள் தத்தம்மதக்கோட்பாடுகளை விசேடித்துணர்த்தற்கே அத்துவிதத்தோடு விசிட்டமுதலிய சத்தங்கள் அவ்வம் மதாசாரியராற் சேர்க்கப்பட்ட தென்றபடி சுத்த மென்பதும் தாயுமானவர் முதலியோரால் சேர்க்கப்பட்டதென்பது பொருந்தாதென்றோதல், அதிவியாத்தியாய் ஐயமேயாம். அஃதன்று, விசிட்டாத்துவித முதலிய வழக்கம் சுருதியுளின்றி அவ்வம்மதாசாரியர் தாமே புதுவது படைத்து வழங்கினர். அங்ஙனமன்றி சுத்தாத்துவித மென்னும் வழக்கம் சுருதிவழக்கம். ஆகலின் இஃதஃ தொக்குமாறு யாங்ஙனமெனின், சுருதியுள் சுத்தாத்துவிதமென்னும் வாக்கியவழக்க மாத்திரையே உள்ளதல்லது "தூயதன்மையைக் காட்டுமொரு விசேடமொழியாகவே கொள்ளவுளது" சுத்தமென இங்ஙனம் அப்பொருளதனுட் போதிக்கப்படாமையின் அஃததிவியாத்தியாய் ஐயமாகாமை யாண்டையது, இனி தூயதன்மைப் பொருள்படும் சுத்தாத்துவிதத்தின் மறுதலையாய தூய்மையின்மைப் பொருள்படுவது ஏனையத்துவிதமெனின் அஃதேல்அஃத சுத்தாத்துவிதமென அங்ஙனம் விளங்கவிளந்து வழங்கப்படுக. அங்ஙனமன்றி அசுத்தமென விசேடிக்கப்படாத ஏனையத்துவிதம் அசுத்தாத்துவிதமெனின் அவ்வாறே. சுத்தமென விசேடிக்கப்படாத அவ் ஏனையத்துவிதமே தூயதன்மைப் பொருள் கொள்ள வுளதுமாம். ஆகவே சுத்தமாய் நின்றே பொருளுணர்த்தலின் சுத்தாத்துவிதமென வழங்கப்படுவ தாகவே கொள்ள வுளதாமோ, அசுத்தாத்துவிதத்தின் மறுதலையாய தூயதன்மையைக் காட்டுமொரு விசேடமொழியாகவே கொள்ள வுளதாமோ தள்ளவுளதாமோ வென ஐயமேயாம். இனி சுத்தாத்துவிதம் "வெண்ணிலா வென்பது போல் இயற்கையடை மொழியாயின் சுத்தாத்துவித மெனக்" கூறிக்கோடலாற் பயனென்று மின்று. ஆகலின் அதுசாலா தென்றார் என்றது "செஞ்ஞாயிறென்றற்போலப் பரமேசுவரன் மகேசுவரன் என்னுமியற்கை அடைமொழிகள் பயனொடுபடுவ" என்னுமாசிரியர் அரதத்தனார் வசனத்தோடு முரணி அபர



ஈசுரனுமுளனோவென இங்ஙன மையமேயாம். 126-ம் பக்கம் 15-வது வரிசையுள் "அந்தமனோலயம் எது அது விண்டு பரம்பதம் அவ்விண்டு பரமபதமே சுத்தாத்துவிதசித்தி" என்புழி விண்டுபரமபதமே மனோலயம் அதுவே சுத்தாத்துவித சித்தியென்னும் சிவகதியென்பது 127-ம் பக்கம் பத்தாவது வரிசையுள் "விண்டுகதியாய பரமபதத்தைக் கீழ்ப்படுத்திக் கூறு" மென்புழிவிண்டுகதி பரமபதமென்னும் பெயர்த்து. அது கீழ்ப்பட்டதென்பதனோடு, மேல்,"விண்டுபரமபதம் மேற்பட்டதென்பது"முரணியையமேயாம். இன்னுஞ் "சுத்தாத்துவிதமே சிவகதி" யென்பது "சுத்தாத்துவிதம் சிவகதிக்கேது" என்னுஞ் சுருதியோடு முரணி யையமேயாம். 127—ம் பக்கம் 21-வது வரிசையுள், "அல்லாதவேறு பல உபநிடதங்களுள் வரும் அத்துவிதம் ஆன்மாவின் பெத்த தசையின் சம்பந்த" மென்பது 159—ம் பக்கம் 9-வது வரிசையுள் அத்துவிதசொரூப அநுசந்தானத்தால் சாயுச்சிய கதியாய முத்ததசை யென்பதனோடு முரணி யையமேயாம்.

இனி 127—ம் பக்கம் 27—வது வரிசையுள் "இச்சம்பந்தம் உடலுயிர்போல் அனாதிகலப்பும் உடனாதலும் வேறாதலுமாகிய மூன்றுமென அறியவுள்ளது, என்னுமிப்பொருள் மண்டலப்பிராமண முதலிய சுருதிப்பொருளோ அன்றி சிவஞானமுனிவருரைப் பொருளோவென ஐயமேயாம். அது பரிபூரணாநந்த போத சிவசூரியப் பிரகாசவுரைக்கு முன்னுள்ள மண்டலப் பிராமணத்துள் யாண்டு மின்மையின் தள்ளவுளதும் சிவஞானமுனிவருரை வழிமொழியாகவே கொள்ளவுளதுமாய் ஐயமேயாம். இனி சிவப்பிரகாசத்துள் "வீடுவைதிக சைவம்பகரு" மென்றபடி முகவுரை 7-ம் பக்கம் 1-வது வரிசையுள் சிவஞான முனிவர் வைதிக சைவ வசனம் அறியா துரைத்து வைத்த உரைக்குறை நிறைப்ப எழுந்த பரிபூரணாநந்த போத சிவசூரியப் பிரகாச வுரைக்குறை நிறைப்ப சிவஞானமுனிவ ருரைத்து வைத்த உரைக்குறை வசனமாய் வேறுடன் கலப்பு என்ற மூன்று வைதிக சைவ வசனங்களை யெடுத்துக்கொண்டு குறையை நிறையும் நிறையை குறையும் நிரப்புதல்பற்றி அந்நியோந் நியாச்சிரயமாய் ஐயமேயாம். மனக்கோட்டம் விட்டு நுண்ணுணர்வும் நடுவு நிலைமையும் உடையராய் நோக்கி யிங்ஙனம் நிகழுமையம் நிகழாதொழிக்குமாறு மிகப்பெரிதும் வேண்டுதோன் முறையான் வேண்டிக்கோடும். இன்னுமின்னோரன்ன பிறவும் எண்ணிரைத்தவாறு பற்றி புணர்ந்தொழித்துக் கொள்க. அன்னபிறவு மன்ன.

அம்பலவாண நாவலன்.
நட்டபாக்கம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அர்ச்சுனனும் பாண்டிய மரபும்.

செந்தமிழ் தொகுதி 3-பகுதி 7-ல் ஸ்ரீமத்-மு-இராகவையங்கார் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:—

"கி. மு. 4-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கிய **நந்தச் சக்கிர**வர்த்தி காலத்தவரும், பாணினிக்கு "வார்த்திகை" எழுதினவருமாகிய **காத்தியாயனர்** பாண்டிய சோழர்களை எடுத்து ஓதுவதோடு **"பாண்டுவமிசத்தவன் ஒருவனிடமிருந்து தோன்றியவர் யாவர் அவர் பாண்டியர"** எனச்சொன் முடிவுகாட்டிப் பாண்டியர் வரலாற்றைக் குறிப்பிக்கின்றார்" என்பர். இன்னும்

"இப்பாண்டியர் பாண்டுவின் வழியினராய் தென்னாடாண்டவராதல் வேண்டுமென்பதற்கு,

(1) அவர் வமிசம் சந்திரகுலம் எனப்படுவதையும்,

(2) வடநாட்டுச் சந்திரகுலத்தினரின் தலைநகருள் ஒன்றாகிய மதுரைபோல, இவர்தலைநகரும் மதுரை என வழங்கப் படுவதையும்,

(3) பாண்டுவின் புத்திரர்களுடைய வழியினரென்பது தேரின்றப் **'பஞ்சவன்'** எனப்பாண்டிய அரசர் பெயர் பெறுவதையும்,

"சிறந்த பிரமாணங்களாகவும் எடுத்துக்காட்டுவர்" என்பர்.

இதனால் காத்தியாயனர் கூற்று ஐயங்காரவர்களுக்குச் சம்மதமே என்று கொள்ளக் கிடக்கின்றது.

இவருடைய கருத்தும் காத்தியாயனர் கருத்தும் "ாண்டு பவமிசத்தொருவனிடமிருந்து தோன்றியவர் பாண்டியர்" என்பதே.

ஆனால் ஐயங்காரவர்கள் **"பாண்டவன்"** என்னும் வார்த்தையும், **"பாண்டியன்"** என்னும் வார்த்தையும் ஒரே மூலத்தைத் (தாதுவை=



**Root)** கொண்டவைகளென்றும், ஒரே பொருளைப் பயக்கும் வார்த்தைகளென்றும், **"பாண்டியர்"** என்னும் பெயர் சித்திராங்கதையின் மூதாதைகளுக்கு வழங்கிவரலில்லை யென்னும் சித்தாந்தமாய்க் காட்டாமற்போனது மிகவும் கவனிக்கத்தக்கது. நிற்க,

மேற்கூறியவாறு "வேளிர் வரலாற்றில்" ஐயங்கார் அவர்கள் கூறிப்போன பின்னர், காலஞ்சென்ற ஸ்ரீமத். கார்த்திகேய முதலியார் அவர்கள் செந்தமிழ் தொகுதி 4-பகுதி 5-ல் ஐயங்கார் அவர்கள் கூறியது தவறு என்பதாக வரைந்திருக்கின்றார். அது வருமாறு:—

"பாண்டுவமிசத் தொருவனிடமிருந்து தோன்றியவர் யாவர் அவர் பாண்டியர் எனில், அவ்வொருவன் யாவன்?

விதந்துகூறாது பொதுப்படவொருவன் என்றமையின் அதன்உண்மை பெறப்படவில்லை.

பாண்டவர் சம்பந்தம் பெறலால் பாண்டியரெனலும், பஞ்சவர் சம்பந்தம் பெறலால் பஞ்சவர் எனவும் ஓர்சார் பொருந்தும். அது கூடாவொழுக்க மென்பர், பொருந்தாது. சம்பந்தமாவது சித்திராங்கதையை மணந்தது.

பாண்டவர் வமிசத்திற் பிறந்தது உண்மையாயின் **பாண்டவன்** என்றாகாது **பாண்டியன்** என்றாகுவதென்னை?

பாண்டவர் பஞ்சவர் என்பதற்கு உண்மைப்பொருள் அதுவேயோ?

மூவேந்தருள் தமிழையே வளர்த்துத் தமிழிசையே செவியாரவுண்டு தமிழ்நாடன் எனப்பட்டோன் யாவன்?

அவன் பாண்டியன் எனல் சாலவும் பொருத்த முடைத்து,

பாண்டி = இசை

பாண்டி + அன் = பாண்டியன்

அன்னோர் குமரிச்சேர்ப்பன் ஆதலின் குமரிப்பாங்கவன் பஞ்சவன் எனல் பொருந்தும்.

ககரம் சகரம் ஆதல் "இலக்கணமுறை" என்று "வேளிர் வரலாற்று மறுப்பில்" தெளிவாக வரைந்திருக்கின்றார்.

மேலும் வார்த்தைகளுக்கு மூல அர்த்தம் (=Root Meaning) தெரியாதவர்கள் விபரீத அர்த்தம் செய்வது சகசமே. நந்தமிழ் நாட்டில் வார்த்தைகளுக்கு மூல அர்த்தம் தெரிந்த தமிழ்ப்பண்டிதர்கள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம்.

"இடுகுறிகாரணப் பெயர்ப்பொதுச் சிறப்பின" என்று பாணினீயத்தை ஒட்டியும், "மொழிப்பொருட்காரண விழிப்பத்தோன்று" என்ற தொல்காப்பியம் முதலிய ஆன்றோர் இலக்கணங்கட்கு நேர்விரோதமாகவும் சூத்திரம் செய்த பவணந்தியைப் பின்பற்றும் மாணவர்களுக்கு அறிவு கொளுத்தும் பொருட்டுத் தமிழ்பாஷையில் எல்லாம் காரணப்பெயர்களே என்று ஸ்ரீமத் கார்த்திகேய முதலியார் தமது மொழிநூலில் பசுமரத்தாணிபோல் நாட்டியிருக்கின்றார்.

பாண்டு=வெண்மை, ஓர் நோய்=வெண்மையான குட்டநோயை உடையவன் ஆனதால் குந்தியின் இரண்டாவது புத்திரனுக்குப் "பாண்டு" என்று பெயர்.

பாண்டுவின் புத்திரர் பாண்டவர் இது தத்திதாந்த நாமம். தசரதன் புத்திரன் தாசரதி என்பதுபோல.

பாண்டவர் புத்திரர் பாண்டியர் என்று ஆனதற்கு என்ன இலங்கணமோ? அறிகிலேம்.

தாசரதியின் புத்திரருக்கு என்னபேர் வந்ததோ? எப்படி வருமோ? அதுவும் தெரிகிலேம்.

{ பாண்டி=திசை
பாண்டு=வெண்மை, ஓர் நோய்

இவ்விரண்டு மூல வார்த்தைகளுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டாவென்று தமிழர்காள்! சற்று யோசித்துப்பாருங்கள்.

இது எதுபோல இருக்கிறதென்றால் வெள்ளாளன், வேளாளன் என்னும் பதப்பிரயோகங்கள் போல இருக்கிறது. நம்நாட்டில் அர்த்தத்தைக் கவனித்துப் பேசுவார் ஒருவரும் இல்லை. நம் நாட்டில் ஒருவன் தான் உயர்குடி வேளாளனாயிருந்தும் அறிவில் மிஞ்சினவனாயிருந்த போதிலும், வெள்ளாளன் (வெள்ளாழன்) என்று தன்னைச் சொல்லிக்கொள்ளுகிறான். சிறந்த தமிழ் வித்வான்களும் கவனியாமல் அப்படியே சொல்லுகிறார்கள். கவனித்துச்சீர்திருந்துவாரும் இல்லை. திருத்து வாரும் இல்லை.



வெள்ளாளன் என்னும் பதமானது வெண்மை (=அறிவின்மை) என்னும் பகுதியடியாகப் பிறந்தது.

வேளாளன் என்னும் பதமானது வேள் (=கொடை, ஈகை, மெய், மண், யாகம்செய்) என்னும் பகுதி அடியாகப் பிறந்தது.

ஆகையால், நண்பர்களே! வெள்ளாளன் என்னும் பதத்திற்கும் வேளாளன் என்னும் பதத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் என்பதைக் கவனியுங்கள். வெள்ளாளன் அல்லது வெள்ளாழன் என்னும் வார்த்தை இழிவானது.

வேளாளன் என்னும் வார்த்தை மேலான அர்த்தம் உடையது,

ஆரியர் இராஜரீகம் செய்யும் காலத்து ஆரிய ஜாதிப்பிரிவினைகளாகிய பிராமண க்ஷத்திரிய வைசியச் சூத்திரப்பெயர்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது முறையே அந்தணர், அரசர், வணிகர், வேள்ளாளர் என்று மொழிபெயர்த்தார்கள்.

ஆரிய ஸ்மிருதிகள் கூறும் வண்ணம் சூத்திரர் என்போர் அறிவின் மழுங்கினவர்களாய் முதன் மூன்று வருணத்தாருக்கும் ஏவல் செய்வோராயுள்ளோர். ஆகையால் அந்தவார்த்தையைத் தமிழ் செய்யும் பொழுது வெள்ளாளன் (=அறிவின்றி ஏவல் கேட்போன்) என்று மொழிபெயர்த்தார்கள். அது தகுதியான மொழிபெயர்ப்பே.

வேளாளர் என்போர் எந்தக்காலத்திலாவது, அறிவில்லாதவர்களாய் ஆரிய முதன் மூன்று வருணத்தாருக்கு ஏவற்றொழில் புரிந்தார்களென்று சரிதைகளிலாவது வாசித்ததுண்டா? அல்லது வாய்மொழியாகவாவது கேட்டதுண்டா?

தமிழ்நூல்களையும் ஆரிய நூல்களையும் ஆராய்ந்தால் வேளாளர் என்னும் வகுப்பார் மிகுந்த ஞானவான்களாயும், அநேக ஆரியருக்கு உபதேச குருக்களாயும், ஞானசாத்திரங்கட்குக் கர்த்தாக்களாயும் இரத்தற்றொழிலை

அறுதொழிலினொன்றாகவுடைய ஆரிய பிராமணருக்குக் கொடுக்கும் தாதாக்களாயும் உள்ளவர்களாய் இருந்தார்கள் இருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

ஆகையால், **வெள்ளாளன்,** வேளாளன் என்னும் வார்த்தைகள் பொருளால் மிகுந்த வேறுபாட்டை யுடையனவாயிருந்தாலும் தெரியாதவர்கள் ஒரு பொருளன என்று மயங்கி வழங்குதல் போல, **பாண்டவன், பாண்டியன்,** என்னும் பதங்கள் பொருளால் தவறாயிருந்தும் ஒரு பொருளன என்று சிலர் மருண்டு நினைக்கிறார்கள். நிற்க.

வேளிர் வரலாற்று மறுப்பில் முதலியார் அவர்கள் ஐயங்கார் அவர்கள் கூற்றை மறுத்து உரைக்கவே, ஐயங்கார் அவர்கள் தாம் கொண்ட கருத்துக்கும் காத்தியாயனர் எழுதிய எழுத்துக்கும் ஆதாரம் தேடுவாராயினர். ஐந்து ஆண்டுகளாய்த் தேடியதின் பலனைச் செந்தமிழ் தொகுதி 8-பகுதி 10-ல் ஐயங்காரவர்கள் தாம் முதலில் கொண்ட கருத்தையே நிலைநிறுத்தித் தமக்குத் தோன்றிய பல நியாயங்களால் எடுத்துச் சொல்வாராயினர்.

அவர் கொண்ட கருத்துச் சரிதானா? அவர் எடுத்துக்காட்டும் நியாயங்கள் வலியுடைவைகள்தானா? என்று ஈண்டு ஆராயத்தக்கது.

நாம் இங்கு அர்ச்சுனன் சித்திராங்கதையை (=அல்லியை) மணந்தது உண்மை தானா? என்று ஆராயவரவில்லை. பார்த்தன் சித்திராங்கதையை (=அல்லியை) மணந்த சங்கதியை ஒப்புக்கொள்ளுவோம்.

சித்திராங்கதைக்கும் அர்ச்சுனனுக்கும் பிறந்த பப்புருவாகனனுக்குப் பின்னிட்டா "பாண்டியன்" என்னும் பெயர்வழக்கு ஏற்பட்டது என்பதே ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டது.

மேலே, வார்த்தை யொற்றுமையும் பொருள் ஒற்றுமையும் இல்லையென்று தெளிவாக மொழிநூல் (Philology) பலத்தைக்கொண்டு நாட்டினோம். இனிமேல், சரித்திர ஆராய்ச்சியைக்கொண்டு பாண்டவன் என்பது பாண்டியன் ஆகாது என்று நாட்டுவோம்.

(இன்னும் வரும்.)

துடிசைகிழார்-அ-சிதம்பரனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

தொகுதி 5. பக்கம் 168. தொடர்ச்சி.

அன்றியும், இக்கோயில்களில் வேளாளர்க்கேயுரிய ஏர்நாட்டல், நாட்கதிர் கொள்ளல், முளைகொட்டல் முதலிய திருவிழாக்கள் பூர்வகாலந்தொட்டு இன்று வரை நடத்தப்படுதலால், இக்கோயில்கள் பூர்வத்தில் வேளாளராற் கட்டப்பட்டவை யென்பதை ஸ்தாபிக்கும். ஆதலின் இச்சிவாலயதருமங்களை மேற்பார்த்து நடத்துவதற்குச் சைவ ஆகமிகளாகிய வேளாளரே தகுந்த யோக்கியதையும் சிறந்த பாத்தியதையு முடையவர்கள். அங்ஙனமாகவும் சிவாகமத்தை "அநாதரணியம் பிரமாணமல்ல" வென்றதமது பாஷ்யத்தில் இகழ்ந்தும் மாயாவாதத்தை உண்மையெனச் சாதித்துமிருக்கிற சங்கராசாரியரைக் குருவாகக்கொண்டொழுகும் அந்நியமதஸ்தராயுள்ள ஸ்மார்த்தரைச் சைவக்கோயில்களுக்குத் தருமகர்த்தர்களாகவும் சிவமதக்கமிட்டிமெம்பர்களாகவும் நியமிப்பது மிகவும் அநீதியானகாரியம்.

விஷ்ணு கோயில்களுக்கு மகம்மதியரையும், மகமதியர் கோயில்களுக்குக் கிருஸ்துவர்களையும் நியமிப்பதைவிடக் கேவலமான செய்கை. ஏனெனில் கடவுள் ஒருவர் உண்டென்று ஒப்புக்கொள்ளும் மகம்மதியரிடம் சைவக்கோயில்களையும் வைஷ்ணவக்கோயில்களையும் ஒப்புவித்தல் ஏகதேசம் சற்றுநியாயம் நடக்கலாம். கடவுள் இல்லையென்பதோடு நில்லாமல் தாங்களே கடவுளென்று சாதிக்கும் மாயாவாதக் காரர்களாகிய ஸ்மார்த்தரிடம், கடவுள் அன்பின் வடிவமெனக் கடைப்பிடித்திருக்கும் சைவர் கோயில்களை ஒப்புவித்தல் ஆட்டுக்குட்டிக்குஓநாயைக்காவல்வைத்ததுபோலாம். இப்பொழுது நம்மவர் கோயில்களிருக்கும் பரிதாபமான நிலைமை மேற்

சொன்ன உபமானத்திற்குப் போதுமான சான்றுபகரும். ஆகமிகளல்லாதார்க்கு ஆகமிகள்கோயில்களில் ஒருவிதமான பாத்தியதையும் கிடையாது.

சைவக்கோயில்களில் தருமகர்த்தர்களாகவிருக்கும் பெருமையும் செல்வாக்கும் விரும்பும் ஸ்மார்த்தன் எவனும் முதலில் சங்கராசாரியரைக் குருவென வொப்புக்கொள்ளாது தள்ளிவிட்டு, திருக்கைலாய பரம்பரையில் வந்த சைவசமயாசாரியராயுள்ள (திருவாவடுதுறைமுதலிய ஆதீன) மடாதிபதிகளின் காலில்விழுந்து சைவனாகவேண்டும். அவ்விதஞ்செய்துகொள்ளுமுன்னர் அவன் சைவவேஷங்களைப் பூண்டு சைவக்கோயில்களுட் புகுதல் அடாதசெய்கையாம். வைஷ்ணவர்களும் மகமதியர்களும் தங்கள் சமய காரியங்களில் அந்நியர்களைப் புகவிடமாட்டார்கள். அவர்கள் அவ்விதக் கண்டிப்பும் வைராக்கியமும் செலுத்துவது மூடபக்தியென்றாவது மதவெறியென்றாவது இகழத்தக்கதன்று. ஒரு சமயத்தை வெளிப்படையாகத் தழுவிக் கொள்ளாதவர்களுக்கும் அச்சமயத்தில் நுழைய இடங்கொடுத்தல் எண்ணிறந்த தீங்குகளை விளைவிக்கும். சைவக்கோயில்களநேகவற்றிற்குத் தருமகர்த்தர்களாகவும் கட்டளை தாராகவும் இருந்து வரும் மடாதிபதிகளும் சைவப்பிரபுக்களும் இவ்விஷயங்களைக் கவனித்து இதன் நியாயங்களை நமது காருண்யமுள்ள ஆங்கில துரைத்தனத்தாருக்கு எடுத்துக் காட்டுவாராகில், அவர்களுடைய உதவியும், தற்காலம் சிவமதக் கமிட்டிகளுக்கும் அதன்மூலமாய் சைவக்கோயில்களுக்கும் இனந்தெரியாமல் ஸ்மார்த்தர்களை நியமிக்கும் ஆங்கில ஜட்ஜூகளுக்கு அவ்விதம் நியமியாதிருக்கும்படி கண்டிப்பான வுத்தரவும் நிச்சயமாய்ப் பெறுவார்களென்பதிற் றடையில்லை. இவ்விஷயங்களில் சைவப்பிரபுக்கள் தாமே முயற்சிசெய்யவும், மடாதிபதிகளை முயற்சிசெய்யும்படித் தூண்டவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவ்விதம் செய்துகொள்ளாமல், அந்நியர் புகுந்துகொள்ள நம்சமயத்திலிடங் கொடுக்கும் பட்சத்தில், சைவசமயம் அருமையாகக் கொண்டிருந்த கொள்கைகளும் கருத்துக்களும் நாளடைவிற்பேதப்பட்டு அச்சமயமும் முடிவில் நாசத்தையடையும்.

உதாரணமாக, ஸ்மார்த்தர்கள் மாத்திரம் தனியாக மேற்பார்க்கும் கோயில்களிலெல்லாம் தமிழ்வேதம் அவமதிக்கப்படுவது மல்லாமல் சிவபெருமானுக்குச் சோடச வுபசாரங்களில் ஒன்றாகிய தேவாரப்பணிவிடை முறைப்படி நடத்தப்படவில்லை. மாணிக்கவாசக சுவாமிகளின் திருவெம்



பாவைத்திருநாள் சீராகநடைபெறவில்லை. இன்னும் கொஞ்சநாளில் இவைகளை முற்றிலும் ஒழித்துவிட முயல்வார்கள் போலும். இவற்றையெல்லாம் நம்சைவசமயிகள் பொறுமையோடு பார்த்துக்கொண்டிருத்தல் இன்னும் பெருங்கேடுகளுக்குக் காரணமாகும், சமயவுண்மைகளில் ஒருவருக்குள்ள அபிமானமே சமயவைராக்கிய மெனப்படும்.

நம் சைவசமயிகள் ஒவ்வொருவரும், வைஷ்ணவரையும் மகமதியரையும் போல், கண்டிப்பும் வைராக்கியமு முடையவராய்த் தங்கள் சமய காரியங்களில் அந்நியர்நுழைந்து கொள்ளாமலும், அணுவளவும் பேதப்படுத்தாதபடியும் காத்துக்கொளல் வேண்டும். அவ்விதம் செய்யாமலிருப்பது, நம்மவர்களுக்கு நமது சமயவுண்மைகளில் போதுமான உறுதியும் திடஞானமுமில்லை யென்பதைக்காட்டும்.

## சமயஞானமும் அநுஷ்டானமும்.

நாம் உண்மையெனவும் சரியெனவும் அறிந்ததை நமது அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருதல் நாம் உலகத்தாருக்குச் செய்யவேண்டிய தருமங்களிலெல்லாம் மிகமேலாகியதருமமாம். அங்ஙனம் அநுஷ்டித்துக் காட்டுதல் ஆயிரக்கணக் காணபிரசங்கங்களையும் வெற்றுரைகளையும்விடபிறரை நல்வழிகளில் நடக்கும்படி தூண்டுதற்கு வலியுடைத்தாதலால், அது நாம் உலகிற்குச் செலுத்தவேண்டிய கடமையுமாகும். இஃதன்றியும் நாம்கற்ற அறிவைப்பயன் படுத்தவேண்டுமானால் அவற்றை நாம் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவராத அறிவையுடைத்தாயிருப்பதைக் காட்டிலும் அறிவில்லாத மிருகஜாதிகளாய்ப் பிறத்தல் நன்று. அளவிறந்த சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ச்சியடைந்தவர்களைவிட அவற்றில் ஒரு சிறிது பாகத்தையேனும் அநுஷ்டானத்திலுடையவனே மேலானவன். அறிவில்லாத மனிதன் அநுஷ்டானத்திற் கொண்டுவராதிருத்தல் மன்னிக்கத்தகுந்தது. அநுஷ்டானமில்லாத மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு அறிவும், கல்வியும், அடையப்பெறுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகவே இகழப்படவேண்டும்.

இன்னும் வரும்

C. சங்கரராயர் B. A.

உ

# சைவமடமும் ஸ்மார்த்தமடமும்.

சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவமடத்திற்கும், கேவலாத்துவித ஏகான்மவாத ஸ்மார்த்த மடத்திற்கும் எவ்வகையிலுஞ் சம்பந்தமில்லையென்பது உலகப்பிரசித்தம். எங்ஙனமெனின், சைவர்-வேதாகமங்களிரண்டினையும் ஈஸ்வரன்வாக்கென்பர். ஸ்மார்த்தர் வேதம் சுயம்பு ஆகமம்கற்பிதமென்பர். சைவர்—தெய்வமொன்றுண்டு அத்தெய்வத்திற்குச் சராசரப் பிரபஞ்சம் எந்நாளும் அடிமைப்பொருளும் உடைமைப்பொருளுமென்பர். ஸ்மார்த்தர்—எல்லாம் பொய்தானே ஏகம்பிரமந்தானே அதுவும் நான்தானே யென்பர். சைவர்—பதிபசுபாச மூன்றும் அநாதிநித்தியமென்பர். ஸ்மார்த்தார்—பதியொன்றே சத்தியம் பசுபாசமித்தை யென்பர். சைவர்-தத்துவமுப்பதாறென்பர், ஸ்மார்த்தர் தத்துவமறு பத்துநான்கென்பர், சைவிர்—விபூதி, உருத்திராட்சம், பஞ்சாட்சரம் சிவபூஜை எக்காலத்துஞ் சத்தியசாதனங்களென்பர். ஸ்மார்த்தர்—இவையனைத்தும் விவகாரத்திலன்றிப் பாரமார்த்தத்தில் பொய்யென்பர். சைவர்—கடவுள் உலகில் உள்ளும் புறம்பும் அத்துவிதமாகக்கலந்து சர்வவியாபகராயிருப்பனென்பர். ஸ்மார்த்தர்—பிரமம் உபாதிவசத்தால் மண்ணும் பிரமம், மனிதனும் பிரமம், ஆடும் பிரமம், மாடும்பிரமம், பல்லக்கும்பிரமம் அதிலேறுபவனும்பிரமம், அதைச் சுமப்பவனும் பிரமம், துன்பஞ்செய்பவனும் பிரமம், அதையேற்றுக்கொள்பவனும் பிரமம் என்பர். சைவர்—ஈஸ்வரனாலதிட்டிக்கப் பட்ட மும்மூர்த்திகளும் தெய்வமென்பர். ஸ்மார்த்தர்—பிரமம் மாயையிற் பிரதிபலிக்கமும்மூர்த்திகள் பொய்த்தோற்றமென்பர். சைவர்—அறுபான்மும்மை நாயன்மார்களைப் பரமஞானிகளென்பர். ஸ்மார்த்தர்—அவர்கள் சாமான்னிய பக்திகாண்டிகளென்பர். சைவர்—தேவாரதிருவாசகங்களைத் தமிழ்வேதமென்பர். ஸ்மார்த்தர்—அல்லவென்பர், சைவர்—ஆன்மாக்கள் தங்கள் அஞ்ஞானநீங்க முத்தியடைவரென்பர். ஸ்மார்த்தர்—முத்தியென்பதொன்றில்லை ஆன்மாவாகிய தன்னைவிசாரணையில் தன்னைப் பிரமமாகக்காணுவதே அந்நிலையென்பர். இவையிங்ஙனமாக, திருப்பணந்தாள் ஆதினம் ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான்சுவாமிகள் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளிடம் சென்று விபூதிப்பிரசாதம் பெற்று அவராசீர்வாத மேற்றுவந்ததாக ஆங்கிலேய இந்து பத்திரிகையினால் தெரியவருகிறது. இஃதுண்மையேல் வைதிகசைவசமயவரம்பு தடுமாறி விட்டதாகக்கொள்ள வேண்டிவருமன்றோ? கொள்ள வேண்டியதில்லையெனில், கொள்ளவேண்டுவது தானென, திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தில் அருள்வண்மையும் கொடைவண்மையும் வாய்ந்து, வைதிக சைவசமயாபி விருத்திக்கு இலக்காக எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானத்தில் ஷை தம்பிரான்சுவாமிகள் உண்மை தெரிந்து கொள்ளும்படி விரும்புகின்றனம். அங்ஙனம்செய்யேம் நம்பிரியப்படி செய்வேமென்பாரேல், நாமினிமௌனம்.

மெய்கண்ட சம்பிரதாயமென்றுமேலு மோங்குக.

**மணவழகு.**

உ

சிவமயம்.

12 OCT 1916 MADRAS

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916ஹு செப்டம்பர்மீ [பகுதி கூ.

## தைத்திரீயோபநிஷத்து.

### ஆனந்தவல்லி.

#### அ-வது அனுவாகம்.

வாயு, சூரியன், அக்கினி, இந்திரன், மிருத்யு இவர்கள் முறையே பிரம்மத்தின் பயத்தால் வீசுகிறான், உதிக்கிறான், ஓடுகிறார்கள்.

ஆநந்த விஷயத்தில் இந்த விசாரணையிருக்கிறது.

யௌனத்திலிருக்கிறவனும், சீக்கிரத்தில் வேலைசெய்யத் திறமையுள்ளவனும், வெகுதிடமுள்ளவனும், வெகுபலமுள்ளவனும், யோக்யமான பூர்வவயதையுடையவனும், வேதாத்தியனம் செய்கிறவனும், ஆவானெவனோ அவனுக்கு இந்தச் சமஸ்தமான பூமி யோக்யசாதனமான தனத்தால் நிறைந்ததாகும். இது மனிதாநந்தம்.

மனிதாநந்தம் பலகூடி யொன்றுள்ளதெதுவோ அஃதொரு மனுடனாயிருந்து தவசு முதலியவற்றால் கந்தருவனாய்ச் செல்வனது மனுடகந்தருவானந்தமாம்.

அதுபலகூடி யொன்றாயுளதெதுவோ அஃதொரு தேவகந்தருவானந்தமாம்.

அதனின் மேம்பட்டது பன்னாள் உறுதியாயிருக்கும் பிதிர்தேவதானந்தமாம்.

அதனின் மேம்பட்டது தேவானந்தமாம். இவ்வானந்தமே வைதிக கன்மங்களால் தேவர்களையடையும் கன்மதேவானந்த மெனப்படும்.

இதனின் மேம்பட்டது தேவலோகத்தில் தேவதைகளாய்ப் பிறந்துள்ள சுபாவதேவானந்தம்.

அதினின் மேம்பட்டது இந்திரானந்தம்.

அதனின் மேம்பட்டது பிருகற்பதி யானந்தம்.

அதனின் மேம்பட்டது நூறு கொண்டது பிரஜாபதியானந்தம். அஃதொரு பிரமானந்தம்.

புருஷனிடத்தில் ஆனந்தஸ்வரூப பரமாத்மா எவனோ அவன் சூரியனிடத்துள்ளான்.

எவன் இப்படியறிகிறானோ அவனிந்த வுலகத்தினின்றும் வெளிசென்று (மரணமடைந்தபின்) இந்த அன்னமயமான ஆத்மாவையடைகிறான்.

## கூ-வது அனுவாகம்.

எதினின்றும் வாக்குகள் மனதுடன் அடையாமல் திரும்பி விடுகின்றனவோ, அத்தகைய பிரமத்தின் ஆனந்தத்தை அறிந்தவன் எதினின்றும் பயப்படுகிறதில்லை.

நான் எந்தக்காரணத்தால் சுபகர்மத்தை செய்யாமற் போனேன், நான் எந்தக்காரணத்தால் பாபகர்மத்தைச் செய்தேனென்ற தாபம் இவனைத்தபிக்கச் செய்கிறதில்லை.

எவனிவ்விதமறிகிறானோ அவனிவைகளை ஆத்மஸ்வரூபமென்பதாகச் சந்தோஷமடைகிறான்.

மணவழகு.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அர்ச்சுனனும் பாண்டிய மரபும்.

தொகுதி 5. பக்கம் 184. தொடர்ச்சி.

ஸ்ரீமத். வி. இராமானுஜாசாரியார் அவர்கள் பதிப்பித்த ஸ்ரீ வியாச பாரதம் ஆதிபர்வத்தே "சித்திரவாகன் என்னும் மணலூர் அரசன் மகளை அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையினிடையில் மணம் புரிந்து பப்புருவாகன் என்னும் புத்திரனைப் பெற்றுத் தன்மாமனுக்கே அம்மகனைப் புத்ரிகா புத்திரனாக அளித்துச் சென்றான்" என்பது விளங்குமே யொழிய வேறில்லை.

மேலும், "அவன் ஒருவருஷமுழுதும் மேலே ஒருமாதமும் வனத்தில் வசித்துத் தீர்த்தயாத்திரையுஞ் செய்து நாககன்னியையும், பாண்டியன் பெண்ணையும் அடைந்து அவர்களுடன் அங்கே வாசஞ் செய்தான்."

என்று ஐயங்காரவர்கள் காட்டிய மேற்கோளாலேயே பார்த்தனுடைய விவாகத்திற்கு முந்தியே சித்திரவாகனுக்குப் பாண்டியன் என்னும் பெயர் இருந்ததாகப் பாண்டியன் பெண் என்றதால் வெளியாகிறது.

அர்ச்சுனனாகிய பாண்டவனுக்குப் பின் பாண்டியப் பெயர் ஏற்பட்டிருந்தால் பப்புருவாகனுக்கும் அவன் பின்னோர்களுக்கும் அப்பெயர் வழக்குண்மையும், சித்திரவாகனனுக்கும் அவன் முன்னோர்களுக்கும் அவ்வழக்கின்மையும் வேண்டும். அப்படி யிருந்ததாக ஒன்றும் தெரியவில்லை.

சித்திரவாகனனுக்கே "பாண்டியன்" என்னும் பெயர் இருந்ததாகப் பாரதம் வெளியாகிறது.

மேலும், "ஹெர்க்கியூலிஸ் போன்ற பெரிய வீரனாகிய அரசனொருவன் பாண்டியை என்று சொல்லப்பட்ட ஒரே புத்திரியைப் பெற்றான்." என்று 2300 வருடங்கட்கு முன்வந்த மெகஸ்தனிஸ் என்பவர் கூற்றாக ஐயங்கார் அவர்கள் காட்டியிருக்கின்றார்கள்.

மெகாஸ்தனிஸ் என்பவர் கூறும் வண்ணம் **பாண்டியை** என்பவள் ஐயங்கார் கருத்துப்படி **சித்திராங்கதை** என்றே ஒப்புக்கொள்ளுவோம். எப்பொழுது சித்திராங்கதைக்குப் பாண்டியை என்று பெயர் வந்ததோ அப்பொழுதே அவன் தகப்பனுக்கு அதாவது சித்திரவாகனனுக்குப் பாண்டியன் என்னும் பெயர் வழக்கு இருந்ததென்று கொள்ளலாம் அல்லவோ? ஏனென்றால் பாண்டியன் மகள்தான் பாண்டியை ஆவாளே யொழிய வேறில்லை என்னும் கொள்கையால்.

ஆகையால், ஐயங்கார் அவர்கள் எடுத்துக்கொண்ட மேற்கோள்கள் இரண்டும் அவர்கள் கருத்துக்கே முற்றும் விரோதமானவை கண்டு தெளிக.

இனி, வீரசோழியம் பதிப்புரை 17-வது பக்கத்தில் ஸ்ரீலஸ்ரீ வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் அடியில் வருமாறு கூறுகின்றார்.

மேலும், பிள்ளை அவர்கள் பாண்டியர்களுடைய வமிசாவளிப்பட்டி கிரமமாகத் தம் கைக்குக் கிடைத்திருந்த ஒரு பலத்தினால் கூறுவதாகவும் எழுதுகின்றார்.

அதுவருமாறு:—

"ஸ்ரீராமர் இலங்கைக்கு வந்தது அனந்தகுண பாண்டியன் காலம். அவன் கூன் பாண்டியனுக்கு 63-வது பாண்டியன் ஆதலாலும், இத்தொகை அதிகமல்லவென்று காண்க. மேலும், இற்றைக்கு மூவாயிரத்தைஞ்நூறு வருடத்தின் முன் இருந்த வியாசர் காலத்தவனாகிய அர்ச்சுனனுக்குத் தன்மகளைக்கொடுத்த சித்திரவாகன் மதுரைக்குச் சமீபமான பூழி என்னும் மணலிபுரத்தில் அனந்த குணபாண்டியனாகிய **சித்திரவிக்கிரம பாண்டியன்** காலத்தில் சிற்றரசு புரிந்தான்" என்று கூறுகின்றார்.

ஆகையால், பாரதகாலத்துக்கு (பாண்டுவின் காலத்துக்கு) மூந்தின இராமாயண காலத்திலே **பாண்டியர்கள்** என்னும் பெயரோடு மதுரையில் அரசர்கள் அரசாண்டார்கள் என்றும், **மதுரையில்** அர்ச்சுனன் காலத்தில் அரசாண்டது **சித்திரவிக்ரம பாண்டியனேயொழிய சித்திரவாகன்** அல்லவென்றும், சித்திரவாகன் பூழி என்னும் மணலூர் **புரத்தில்** சித்திரவிக்கிரமபாண்டியன் கீழ் சிற்றரசு புரிந்து கொண்டிருந்தானென்றும், அர்ச்சுனனுக்குத் தன்மகளைக் கொடுத்தவன் பூழியில் அரசாண்ட சித்திரவாகனே யொழிய மதுரையில் அரசாண்ட சித்திரவிக்கிரம பாண்டியன் அல்லவென்றும் அறிகிறோம்.

மேலும், வால்மீகி இராமாயணத்தில் **பாண்டிய** அரசர்களுடைய இராஜதானியாகிய கபாடபுரத்தையும் பொற்கதவங்களையும் பற்றிக் கூறப்



பட்டிருக்கின்றது. வால்மீகி **பாண்டியன்** என்ற பெயரையே உபயோகப்படுத்தியிருப்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள்.

மேலும், இராமருடைய மூதாதையான இரகு என்பவர் திக்கு விஜயம் செய்தபோது ஒரு **பாண்டியன்** சமுத்திரத்தினின்றும் எடுத்த இரத்தினங்களைக் கப்பமாகக் கொடுத்ததாகக் **காளிதாசர்** இரகுவம்சம் என்னும் நூலில் வரைந்திருக்கிறார். *

**திருவிளையாடற் புராணப்படி** (ஆலஸ்யமகாத்மியப்படிக்கும்) முதன் முதல் இப்பொழுது இருக்கும் மதுரையைக் குலசேகர பாண்டியன் என்பவர் கண்டார் என்றும் அது முதல் ஒன்பது பாண்டியர்கள் அரசுபுரிந்தார்கள் என்றும் ஏற்படுகிறது.

ஒன்பதாவதான குலோத்துங்க பாண்டியனுக்கு அப்புரம் அனந்தகுண பாண்டியன் பெயர்தான் தெரிகிறது. இவர்கள் இருவருக்கும் மத்தியில் யார் அரசுபுரிந்தார் என்பதும் எவ்வளவு காலம் என்பதும் தெரியவில்லை.

10-வது ஆன அனந்த குணபாண்டியனிலிருந்து (=இராமர்காலம்) 26-வது ஆன சித்திரசேன பாண்டியனுக்கு அப்புரம் 27-வது ஆக சித்திரவிக்கிரம பாண்டியன் அரசாட்சிக்கு வந்தான். இவன் காலம் தான் பாரத காலம். இவன் காலத்தில் தான் சித்திரவாகன் பூழியில் சிற்றாசு செய்தது.

சித்திரவிக்கிரம பாண்டியனுக்கு அப்புரம் அவன் மகன் இராஜமார்த்தாண்ட பாண்டியன் அரசுக்கு வந்தான்.

ஆகையால், புராணத்தில் தெரிந்து கொண்டது என்னவென்றால் சித்திரவாகன் என்பவன் மதுரையில் ஒரு காலத்திலும் பேரரசு புரியவில்லை. என்றும் பாண்டிய வம்சாவளிப்பட்டியில் (புராணப்படி) சித்திரவாகன் பெயர் இல்லையென்றும் அறிகிறோம்.

---

*Kalidasa's Raghuvamsa has a description of a tour of conquest made by Raghu, the great grand-father of Rama, to whom the ***Pandiyan King*** rendered homage by sons collected from the Ocean-bed where the Tamparaparni rolled its waves. ("Dranidian Kingdoms" P P 2 by Dewan Bahadur T. Rangachariar B. A., and Dewan Bahadur T. Desikachariar B. A., B. L.,

ஆகையால், இராமாயண காலத்திலும் அதற்கு முந்தின இரகு என்பவர்காலத்திலும் வழங்கின பாண்டியப்பெயர்களுக்கு ஐயங்கார் அவர்கள் எந்தப் பாண்டுவின் புத்திரனால் பெயருண்டாயிற்று என்பாரோ தெரியவில்லை.

காத்தியாயனர் வால்மீகியின் வாக்கை மறந்தது தான் என்னே? அது தான் இல்லாவிட்டாலும். வரப்பிரசாதியாய் விளங்கின மகாகவி காளிதாசரின் கூற்றையாவது கவனித்து எழுதாமற் போனது தான் என்னே?

இவையெல்லாம் கால வித்தியாசம்.

மணலூர் புரம், மணலிபுரம், மணலூர், மணிபுரம் என்பன ஒரே ஊரைக்குறிப்பதாக ஐயங்கார் அவர்களே கூறியிருக்கின்றார்கள். நாமும் அதனை ஒப்புக்கொள்ளுவோம்.

ஆனால் மணலூர் என்பது மதுரையாகாது என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஸ்ரீலஸ்ரீ-சி-வை-தாமோதரம் பிள்ளை அவர்கள் எழுதின வீரசோழியப் பதிப்புரையாலும், ஸ்ரீமத்-இராமானுஜாசாரியர் பதிப்பித்த வியாசபாரதத்தாலும் சித்திரவாகன் என்பான் மணலூரில் அரசாண்டதாக ஏற்படுகிறது.

ஆகையால், அர்ச்சுனன் மதுரைக்குப்போய்ப் பேரரசனாகிய சித்திரவிக்கிரமபாண்டியன் மகளை மணம்புரியவில்லை யென்று சித்தாந்தமாய்க் கூறலாம்.

'ஆரியாவர்த்தத்தில் ஏகச்சக்கிராதிபதியாய் அரசாண்ட துரியோதனன் முதலிய நூற்றுவர்களையும் துரோணாசாரி பீஷ்மாசாரி முதலிய தனுர்வேதத்தில் வல்ல அநேகர்களையும் புறங்காட்டி அடிக்கும் வல்லமை வாய்ந்தவர்களாயும், மிகுந்த பலவானும் விண்டுவின் அவதாரமே என்று சொல்லும்படியாயும் உள்ள துவாரகை நாதனுடைய உபபலத்தைப் பெற்றவர்களாயும் உள்ள பாண்டவர்களில் நடுவன் பிறந்த காண்டீபன் தனக்கு முன்னதாகவே பாஞ்சாலி என்பவள் மனைவியாயிருக்க, மணலிபுரத்தில் ஒரு சிற்றரசு புரிந்துகொண்டிருந்த சித்திரவாகனுடைய பெண் சித்திராங்கதையை மணந்ததை யோசிக்கில் அக்காலத்து நிலை செவ்வனே விளங்குகின்றது. தமிழர்களே! சற்றுக் கவனித்து வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

(இன்னும் வரும்.)

துடிசைகிழார்-அ.சிதம்பரனார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

**தொகுதி 5. பக்கம் 191. தொடர்ச்சி.**

நமது தேசத்தில் ஞானசாஸ்திரங்கள் பலவுளவாயினும் அவற்றை ஆராய்வோரும் படிப்போரும் பலர் இருப்பினும், அனுஷ்டானங்கள் முற்றும் விரோதமாயிருப்பது உயர்ந்தோர் யாவரானும் பரிதபிக்கத்தக்கது. இந்து ஒருவன் எத்தனை சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவனாயிருந்தாலும், அல்லது எவ்வளவு பெரிய தத்துவ ஞானியாயிருந்தாலும், தனது அபிப்பிராயங்களின் உண்மைகளை எவ்வளவு உறுதியாய் அவன் உணர்ந்திருந்தபோதிலும், அவற்றின்படி தான் நடந்து தன் பந்துக்களையும் தான் சுற்றத்தவரையும் நல்வழிப்படுத்த முயல்வது அவசியமான கடமையென அவன் ஒருக்காலுங் கருதுவதில்லை. தாம் உண்மையெனவும் சரியெனவும், அறிந்ததைத் தைரியமாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதாலே திடஞானமெனப்படும். இத்திடஞான நம்மில் யாவரும் எவ்வளவு தாழ்ந்தவர்களும் போக்குப்புகல் சொல்லாதபடி அனுசரிக்கக்கூடிய தருமமு கடமையுமாம். தன்மனதில் உண்மையெனவும், சரியெனவும் அறிந்ததைத் தான் செய்யும் ஆற்றலில்லாதவன் புருஷத்தன்மை யுடையவனாகமாட்டான். இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா முதலிய நாட்டிலுள்ளவர்கள் சிற்சில சாஸ்திரங்களில் தவிர இந்தியர்களைவிட அதிகமாய்ப் படித்தவர்களெனச் சொல்ல முடியாது. இந்தியர்களைவிட ஐரோப்பியரிடத்து மிகுதியாய் விசேஷமாயுள்ளதும் அவர்களை யாவரும் கௌரவப்படுத்தும்படியான மேன்மையடையச் செய்வதும் அவர்களிடத்துள்ள திடஞானமே. இத்திடஞானமே புருஷர்களுக்குரிய குணங்களிலெல்லாம் மிகச்சிறந்ததும். இவ்வொருகுணத்தின் வல்லபத்தினால் ஐரோப்பியர் மற்றெல்லாச்

சாதியாரையும்விட அறிவிலும் நாகரீகத்திலும் சிறந்தது. உலகத்தையெல்லாங் கட்டியாளும்படியான கீர்த்தியும் பெருமையும் சம்பாதித்துக்கொண்டார். ஜப்பானியரைத்தற்கால நாகரீக நிலையில் இவ்வளவு தூரம் உயர்த்தியதும், அவர்கள் ஐரோப்பியரிடமிருந்து கற்றுக்கொண்டதைத் தைரியமாய்அனுஷ்டித்தது திடஞானமே. இத்திடஞானமில்லாத மனிதன் எக்காரியங்களையும் சாதிக்கமாட்டான், இத்திடஞான மில்லாத மனிதன் "கலையெலாமுணர்ந்தானேனும், கரிசறத்தெளிந்தானேனும், மனமயலகன்றானேனும், மலையென உயர்ந்தானேனும்" மக்களுட் பதரெனவே இகழப்படுவான். ஆதலின் இந்தியாவின் குறைகளை நன்கு உணர்ந்த விவேகானந்தர், ஆசித்துச் சொல்லியபடி நமக்கு இப்பொழுது வேண்டுவது ஆண்மகனாகச் செய்யுங்கல்வியே ஆண்மகனாகச் செய்யும் கோட்பாடுகளே நமக்கு வேண்டும். இரும்புபோன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளுமே நமக்கு வேண்டும். நம்மனசில் சரியென அறிந்ததைத் தைரியமாய் அநுஷ்டிக்கும் திடச்சித்தமே நமக்கு வேண்டும். மனதிலொன்றும் செய்கையிலொன்றுமில்லாத ஒருமைப்பாடும் திடஞானமுமே நமக்கு வேண்டும்,

## சைவசமயத்தின் அருமையும்.

இனி, சைவசமயத்தின் அருமையும் அதன் விரிவையும் சிறிது ஆராய்வாம். சைவசமயத்தில் சிவபெருமானை வழிபடுவதற்கு மிகமேலான கருவி ஞானம், சிவஞானமே முத்திக்குவாயில் எனக்கூறப்பட்டது. சிவம்=கடவுள், ஞானம்=ஒருபொருளின் தன்மையை உள்ளபடி அளித்தல். கடவுளின் தத்துவத்தைச் சந்தேகம் விபரீதமின்றி உள்ளபடி உணர்வதே முத்தியையடைதற்குச் சிறந்த உபாயமென சைவசமயம் போதிக்கும். எல்லாச் சமயங்களும் இப்பரம் பொருளினியல்பையே தங்களாலியன்றமட்டும் அறிய முயற்சிசெய்கின்றன. சமயகோடிகளெல்லாம் தந்தெய்வம் எந்தெய்வமென்றெங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது ஒன்றேயாதலால், அச்சமயங்களின் கொள்கைகளெல்லாம் சைவசமயத்தினுடன்பாடே, "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாமே" தேவாரச் சைவசமயமானது எல்லாச் சமயங்களையு முண்மையென ஒப்புக்கொண்டு எவற்றையும் பழியாது. அவை ஒவ்வொன்றும் மனிதரது அறிவு சுபாவத்தின் ஒவ்வோர் பகுதிக்கும் ஏற்றதென்றும் அவர்கள் அப்பகுதியைத்தாண்டி மேற்செல்லும்பொழுது சற்று மேற்சமயங்களை யநுசரிப்பார்களென்றும், கலியில்



சித்தாந்த சைவமாகிய சுத்தாத்துவித நிலையையே வந்த சைவர்களென்னும் சொல்லும் சைவசித்தாந்தமே. அந்தச் சுத்தாதுவித நிலையென்பது "பொய்கண்டார் காணாப்புனித மெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள்மேவுநாளெந்நாளோ" என்ற தாயுமானவர் வாக்காலறிக. ஈண்டுப் பொய்கண்டாரென்றது உபநிஷதங்களின் முடிவுப்பொருள் கேவலாத்துவிதம் அல்லது மாயாவாதம் எனவும், விசிட்டாத்துவித மெனவும், பேதாத்துவித மெனவும் விபரீதப்பொருள் கொண்ட ஏனை ஆசாரியர்களை. மெய்கண்டநாதன் என்றது அத்துவிதத்தின் உண்மை நிலையிதுவெனக் காட்டிய சைவசித்தாந்தத் தலைவராகிய மெய்கண்ட சிவாசாரியரை. இவர்தாம் திருக்கைலாய பரம்பரையில் வந்த சந்தான ஆசாரியருள் முதல்வர். இவர் வெளியிட்ட சிவஞானபோதமே சைவ சித்தாந்த சாஸ்திரங்களுக் கெல்லாம் முதனூல். ஆகமப்பொருள்கள் ஒன்றோடொன்று முரணுவனவாக மலைந்துவினவிய நந்தியம்பெருமானுக்கு அம்மலைவு தீர்தற்பொருட்டுச்சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டது இச் சிவஞானபோதமே (திருப்பெருந்துறையில்) இன்னு மலர்தலை யுலகில் புறவிருளை நீக்கிப் பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுதற்கு எழுந்த சூரியன் போல, அநாதி மலமாயுள்ள அகவிருளை நீக்கி, சிவபரம்பொருளை ஆன்மாவிற்குக் காட்டி அநுபூதி நிலைபெறுவதற்கு ஒரு ஞானபானுவாய் எழுந்ததும் இச் சிவஞானபோதமே, தமிழ்வேத சிவாகமங்களின் உண்மைப்பொருளை விளக்கிக் கடவுளின் தத்துவத்தை உள்ளபடி காட்டுவதும் இச் சிவஞானபோதமே.

தாங்கள் கடவுளின் சொரூபம் என அறிதல் மாத்திரையே ஞானம் என்றும் அஃதேமுத்திக்கு வழியென்னும் சமயங்கள்போலல்லாது சைவசமயமானது "இலங்குபொருளனைத்தும் ஈசன் கோயில் எனக்கருதி" எல்லா மக்களிடத்தும் எல்லா ஜீவன்களிடத்தும் பேரன்பும் கருணையுஞ் செலுத்துதலே முத்தி நெறிக்கு ஆதாரமா யுள்ளதெனப் போதிக்கும். எல்லா மனிதரையும் எல்லா ஜீவர்களையும் அளவின்றிப் பெருகும் பேரன்போடு பார்த்தல் ஜீவகாருணிய வொழுக்கமாம். இஜ்ஜீவகாருணிய வொழுக்கமே நம்மை இறைவன் அருளுக்கு ஆளாக்கிப் பேரறிவையும் முத்தியையும் தரும். ஜீவகாருணிய வொழுக்கமின்றி நாம் இறைவன் அருளுக்குப் பாத்திரராகமுடியாது. இறைவன் அருளின்றி முத்தி சித்தி[illegible]

"கொழுந்தன்பு செய்து அருள்கூற வல்லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே"



161375
N12-5

"அன்போடுருகி யகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியினை யெய்த வொண்ணாதே" திருமந்திரம்.

"விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்.
(அன்பு) உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்=(ஞானம்)
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே"—(தேவாரம்)

"என்பிலதனை வெயிற் போலக் காயுமே
அன்பி லதனை யறம்" (திருக்குறள்)

"எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி இரங்கவும் நின் றெய்வவருள் கருணை செய்வாய் பராபரமே" தாயுமானவர்.

சுயநலங்கருதி ஏற்படுத்தும் ஏற்றத் தாழ்வுகளும் சாதி வித்தியாசங் களும் சைவசமயத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமாம்.

"ஆதிபேதந் தானிலாமை யறிந்தவர்
சாதிபேதஞ் சிறிதுஞ் சாற்றுவரோ—சாதிகுலம்
நல்லார் தொழத்தக்க ஞான முடையவரே
அல்லார் இழிகுலத்தா ராம்"—தத்துவராயர்.

"சாத்திரம்பல பேசுஞ் சழக்கர்காள்=(பொய்யர்)
கோத்திரமுங் குலமும் கொண்டென் செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே"—(தேவாரம்)

சாதி வித்தியாசங்களைத் தான் பாராட்டுவதும் உடந்தையாயிருந்து போதிப்பதும் உண்மையான ஞானியின் லட்சணமல்ல. அவற்றை யெல் லாம் கடந்தவனே துறவறம் பூணுதற்கு யோக்கியதையுடையவன். சன் னியாசியாயுங் கூட தான் தமது சாதி துவேஷ அபிமானத்தை வைத்துக் கொண்டு தாங்களை மகாஞானி என்றும் லோக குருவென்றும் சொல்லிக் கொள்ளுதல் என்னமடமை! என்ன வேஷம்!!

இறைவன் லட்சணத்தையும் ஆன்மாவின் சம்பந்தத்தையும் பற்றி யுள்ள நுட்பமான உண்மைகளையும் இரகசியங்களையும் அறிவதற்குப் படிப் பும் அறிவும் மாத்திரம் போதா. மனமானது எவ்வித அபிமானமும் அழுக்குமின்றி தூய்மையும் பரிசுத்தமும் பக்குவமடைந்திருந்தா லொழிய



உண்மையைக் கிரகித்து உட்கொள்ளுதல் முடியாது. இதனையேமலபரிபாக மென்பர் பெரியோர். ஆனதுபற்றிச் சாதிகுலம் சமயபேதங்களைக் கடந்து நிர்வாணதீக்ஷை பெற்றவரே சிவாகமத்தின் ஞானகாண்டத்தை ஓதுதற்கு அதிகாரமுடையவ ரெனவும்,

"வையமாச்சிரம மென வைத்தவும்
செய்ய சாதிகுல மெனச் சேர்த்தவும்
ஐயமின்றி யறவிட் டறிந் தார்
செய்ய ஞானத்திரளைச் சிந்திக்கவே"—எனவும், "நடுவு நின் றார்க்கின்றி ஞானமில்லை' எனவும் சைவநூல்கள் கூறுவதாயின. தான் தமது என்னும் அகங்காரங்கள் முற்றிலும் அழிந்தாலன்றி மலபரிபாகம் உண்டாகமாட்டாது, ஞானம் உதியாது அகம்பிரமம் நான் தான் கடவுள் என்ற ஆங்காரங்கள் மேலிட அறிவுகுன்றும். பரிபூரணநிலை கிட்டாது. அதனாலன்றோ இம்மாயாவாதிகள் சிவப்பிரக்ஞையே இல்லாமற் போகக் கடவது என முற்காலத்தில் நம் தமிழ் முனிவர்களால் சபிக்கப்பட்டனர். தான் தமது சாதியென்னும் துவேஷங்கள் முற்றிலும் நசித்தாலொழிய அத்துவிதநிலை கைகூடாது. மலபரிபாகம் உண்டாகும் பொருட்டு, இயேசு தமது சிஷியர்களின் பாதங்களைத் தமது கரங்களினால் கழுவித் தமது வஸ் திரத்தினால் துடைத்தனர்.

புத்தர், பள்ளர் பறையர் சேரிகளில் சென்று பிச்சையெடுத்து உண் டனர். இதுதான் உண்மையான ஞானியின் லட்சணம். போலிஞானி களினின்று உண்மைஞானிகளைக் கண்டறிந்து கொள்வதற்குத் தவறுதலில் லாத உபாயமிதுவே. நம் செயலற்று, நாமற்று நமது சாதி, குலம், சம யபேதங்களற்று, எல்லாமக்களையும் நம் சகோதரர் போலவும் மன்னுயி ரெல்லாம் தன்னுயிர்போலவும் பேரன்பு செலுத்தி வாழ்தலே கடவுளின் அருளைப் பெறுதற்கு நிச்சயமானவழி. இதுதான் சைவசமயத்தால் போத திக்கப்படும் உண்மையாம். ஊழிபெயரினும் இவ்வுண்மை பெயராது. ஆதலின் "சைவத்தின்மேற் சமயம் வேறிலை" எனவும் "சைவநெறியே உய்யுநெறி" எனவும் சான்றோரால் போற்றப்பட்டது.

இன்னும் இச்சமயக் கொள்கைகளை ஆராயுமிடத்து உலகத்திலுள்ள மற்றெல்லாச் சமயங்களும் போற்றத்தகுந்த மிகமேலான கொள்கைகளை யும், அவற்றினுக்கு எட்டாத மிக அருமையான கருத்துக்களையும் தன்னுள் ளடக்கித் தான் முற்றிலும் விரிந்து அவைகளுக்கு ஒரு ஆதாரமாகவும

தாயகம்போலவும் நின்று, சாதிகுலம் சமயபேதம் ஒன்றேனுமின்றிச் சுத்த சன்மார்க்க சித்தாந்தத்தைப் போதிப்பதும் இச்சைவசமய மொன்றே என்பது தெற்றென விளங்கும்.

இது பற்றியன்றோ "அந்தோ! ஈது அதிசயம் இச்சமயம்போலின்று அறிஞரெல்லாம். நடுவறிய வணிமாவாதி வந்தாடித்திரிபவர்க்கும் பேசா மௌனம் வைத்திருந்த மாதவர்க்கும் மற்றுமற்றும், இந்திராதிபோக நலம் பெற்ற பேர்க்கும் இதுவன்றி தாயகம் வேறில்லை யில்லை, சந்தான கற்பகம்போல் அருளைக்காட்டத்தக்க நெறி இந்நெறியே தான் சன்மார்க்கம்" எனத்தாயுமானவரும் வற்புறுத்திக் கூறினாரென்க.

## சைவமடாதிபதிகளின் கடமை.

இத்துணைப் பெருமைவாய்ந்து சகல சமயங்களையும் தனக்கு உபகரணமாகக் கொண்டுதான் அவற்றிலும் விரிந்து மேலாக விளங்கும் ஒப்புயர்வற்ற சைவசமயத்திற்குத் தலைவராக விருக்கும் பெரும்பாக்கியம் படைத்தவர் திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய மடாதிபதிகளே. விலைமதிப்புக்கடங்காத பொக்கிஷமாகிய இச்சைவசமயத்தைக் கேடுறாமல் காத்துப் பரிபாலனம் செய்யும்படி எண்ணிறந்த கோடிதிரவியங்கள் மடாதிபதிகள் கையில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதம் செய்து கீர்த்தியையும் புகழையுந்தேடிக் கொள்ளுதல் மடாதிபதிகளின் முதற் கடமையாகும், சைவசமயத்தின் உண்மைகளைக் கல்வி அறிவு சைவவொழுக்கம் முதலியவற்றால் மேம்படுத்துதல், சைவபாலியர்களுக்கு அங்கங்கே பாடசாலைகள் ஏற்படுத்திச் சைவசாஸ்திரங்களைச் சொல்லிவைத்தல்,உலகத்தாருக்கு விவேகம் உதிக்கும் பொருட்டுச் சைவநூல்கள் சைவபத்திரிகைகள் அச்சிட்டு வெளிப்படுத்தல் சைவசமயிகள் அந்நியசமயங்களால் இழுக்குப்படாமல் அவர்களைப்பாராட்டிச் சீர்படுத்தல், சைவசமயம் நாளுக்கு நாள் க்ஷீணித்து அருகிப்போகாமல் மென்மேலும் தழைத்தோங்கி வளரும்படி உண்டான வழிகள் யாவற்றையும் தேடிச்செய்தல், சைவமடாதிபதிகளின் பெருங்கடமையும் சுதந்தரமுமாகும். அங்ஙனம் மடாதிபதிகள் தமது சமயத்தின் உண்மைகளையும் அதன் பெருமைகளையும் எவ்வளவுக்கெவ்வளவு பிரசித்தப்படுத்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தான் அம்மடாதிபதிகளின் பெருமையும் பிரகாசிக்கும்.

(இன்னும் வரும்.)

C. சங்கரராயர் B. A.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பகுத்தறிவு.

பகுத்தறிவென்பது விதிவிலக்குகளை உணரச்செய்யும் அறிவாகும். மனிதன் ஏனைய ஜீவராசிகளினும் மேம்பட்டவனெனப் பெருமையுற்றது பகுத்தறிவினாற்றான். மனிதனை யொழிந்த ஏனைய ஜீவராசிகள் தத்தம் இனத்தின் பொது லட்சணமாயிருக்கும் இயற்கை யறிவிற்கேற்றபடி கருமங்களைச் செய்துவருகின்றன. மனிதனோ தன்னுடைய பகுத்தறிவுக்கேற்றபடி காரியங்களை நிர்வகித்து வருகின்றான். அவரவர்களின் பகுத்தறிவுக் கேற்றவாறு அபிப்பிராயங்களும் அமைகின்றன. பகுத்தறிவை அதிகமா யடையப்பெறாதவர்கள் பெரும்பாலும் கல்வியறிவற்ற மிலேச்சர்களே. அவர்கள் செய்கைகள்யாவும் விலங்குபுள் ஆதியவற்றின் செய்கைகளை ஒத்திருக்கும். மனிதனுடைய பகுத்தறிவு அவன் சார்ந்திருக்கும் இனத்துக்கேற்றபடி யிருக்கிறதென்றும், அவனுக்கு இயற்கையில் பகுத்தறிவென்பது கிடையாதென்றும் சில மனோதத்துவ சாஸ்திரிகள் சாதிக்கிறார்கள். அவர்களிங்ஙனம் கூறுவது மோட்சவீடடைதற்குரிய மெய்யறிவையே. ஆயின் பகுத்தறிவு வேறு மெய்யறிவு வேறோ வென்னில் சாதாரணமான விடயங்களைப் பாகுபாட்டோ டுணர்வது பகுத்தறி வென்றும், மோக்ஷநிலையை உள்ளபடி உணர்வது மெய்யறிவென்றும் கூறுவது அவர்களியல்பு. இதனை "ஐயறிவறிந்தவை யடங்கினரேனு மெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறாரே" என்னும் ஆன்றோர் வாக்கானுங் காணலாம். ஆனால் அவர்களுரைப்பதும் முற்றும் பொருத்தமற்றதென் றுரைக்கலாகாது. மனிதனுடைய இயற்கையறிவு இனத்துக்கேற்றபடி இருக்குமெனாயிருக்கிறதென்பது மாத்திரம் வாஸ்தவமே. இக்காரணம் பற்றியே சேரப்படவேண்டிய ஒவ்வொருவரும் சன்மார்க்கசங்கத்தைச் சாரவேண்டுமென் றும்,நல்லோர் சேர்க்கையடைந்துகொள்ளவேண்டுமென்றும், தியார்சார்பைத்திரஸ்காரம் பண்ணவேண்டு

மென்றும் ஆன்றோர் பலருங் கூறியுள்ளார். பகுத்தறிவு பழக்கத்திற் கேற்றபடி திருந்துகிற காரணத்தினாலேயே அத்தகைய அறிவு இயற்கையில் மனிதனிடத்தில்லையென்று சாதிப்பது நியாயவாதத்தில் நிலைக்காது. ஏனெனினில் "இணக்க மறிந்திணங்கு" என்பது முதலிய சுபோத வசனங்களை யூகித்தறியுமிடத்து மனிதனிடத்தில் இயற்கையிற் பகுத்தறிவமையாதிருக்கின் ஆன்றோர்கள் 'அறிந்திணங்கு' என்பது முதலிய கட்டளைகளையிட்டிரார்களே. ஆகையால் ஆன்றோர்கட்கு மனிதரிடத்துப் பகுத்தறிவு இயற்கையி லுண்டென்பதே கொள்கையென வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. அன்றியும் இப்பூவுலகில் ஒவ்வொருவனும் தான் தான் புரியும் சகல கருமங்கட்கும் கடவுளுடைய சந்நிதானத்தில் உத்தரஞ் சொல்ல வேண்டியவனாக விருக்கிறானென்றும், அவ்வொவ்வொருவனும் இவ்வுலகத்திற் புரியும் நற்காரியங்களுக்காகக் கடவுளிடத்திலிருந்து ஓர்வகைப் பரிசு பெறுகிறானென்றும், தீக்காரியங்களுக்காக ஒருவகைத் தண்டனை யடைகிறானென்றும் சர்வ மதவாதிகளும் சம்மதித்துக் கூறுவர். இதனாலும் இயற்கையிற்றானே மனிதனுக்கு நன்மை தீமைகளைப் பாகுபாடு செய்துணரும் பகுத்தறிவைக் கடவுள் படைத்திருக்கிறாரென்பதிற் சந்தேகமில்லை. இவ்வாறுஅவர் படைத்திராவிட்டால் நன்மைக்காகப் பரிசளிப்பதும் தீமைக்காகத் தண்டிப்பதும் அவர் பட்சத்தில் நீதியற்றனவாய் முடியும்.

ஆயின் அவ்வாறான பகுத்தறிவமையப்பெற்றமானுடர் யாவரும் நன்மை தீமைகளை நன்றாயுணர்ந்து தீயமார்க்கத்தை யொழித்துச் சன்மார்க்கர்களாகின்றார்களா வென்னில் இப்போது இத்தனை நிமிஷம் இவ்வளவுமணி என்று ஓரிம்மியளவும் பேதப்படுத்தாது தன்னை யுடையவர்கள் கவனியாதிருக்கினும் அழைத்துச் செல்லுவதுபோல் அப்போதைக் கப்போது அடித்துக்காட்டுகின்ற கடிகாரங்கள் எல்லோரிடத்திலும் மிருக்கினும் அதற்குச் சாவிகொடுக்கவேண்டிய நாட் கணக்கின்படி தவறாது சாவிகொடுத்துக்கொண்டும் சாமான்களைத் துடைக்கவேண்டிய நாட்கணக்கின்படி துடைத்துக்கொண்டும் காப்பாற்றி வருபவர்களுக்கு அக்கடிகாரங்கள் உதவியாவதுபோல் மேற்கூறிய காரியங்களைச் சற்றுங் கவனியாதோர்க்கு அக்கடிகாரங்கள் உதவுமா? அப்படியே தத்தமக்கு வாய்ந்துள்ள பகுத்தறிவென்னும் வாளைச் சாத்திரவிசாரணைச் சன்மார்க்கசங்கச் சாரிப்பென்னும் சாணையில் அப்போதைக் கப்போது தீட்டிவந்தால் நாம் சமுசாரமென்னுங் காட்டில் காமக்குரோதலோபமோக மதமாச்சரிய மென்னும் மிருகங்கணேர்ந்தபோது அவைகளைத் தக்கபடி தண்டித்து வெற்றியுடன்



நிர்ப்பயமாயுலாவி அக்குடும்பாரண்யானுபவங்களைக் குறைவறக் கைக்கொண்டு குதூகலிக்கலாம். அவ்வாறின்றி அவ்வாளைத் துருப்பிடிக்கச் செய்து வைத்துக்கொண்டிருந்தால் குடும்பாரண்யத்திலுலாவுதல்கூடாது. ஆரண்யத்திலுலாவவே அசாத்தியமானபோது அவ்விடத்திற்றானே நிலையாயிருந்து தவம்புரியநேருமா? நேராது. ஆகவே "இல்லறத்தானல்லேன் இயற்கைத் துறவியல்லேன்" என்று சொன்னபடி இரண்டுங் கெட்டவராய் உபயப்பிரஷ்டர் என்னும் பட்டஞ்சூடிக்கொள்வோம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நமக்கு வாய்த்துள்ள பகுத்தறிவை அதிக சாக்கிரதையுடனே வெகு விரைவில் மேற்செல்லிய சாணைகளிற்றீட்டிக் கூர்மையுண்டாக்கி வைத்திருக்கவேண்டும் என்பதை உறுதியான வேத வசனமாகக் கடைப்பிடிக்கவேண்டும். ஆயின் சில சமையங்களில் பகுத்தறிவுள்ளவர்களும் நன்மையைத் தீமையாகவும் தீமையை நன்மையாகவும் கொள்ளுகிறார்களேயென்னின், அவ்வாறு மாறுபடக்கொள்வது பகுத்தறிவின் குறைபாடன்று. பகுத்தறிவானது சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களாகிய ஐந்தின்வழியே சென்று தான் பகுத்தறியும். அவ்வைந்துள் எது குறைந்திருக்கின்றதோ அதன் விஷயத்தில் அது பயன்படாது. உதாரணமாக கல்வி கேள்விகளில் மேம்பட்டுச் சாது சன்மார்க்கப்பழக்க மெய்திய குருடனும் மூக்கடைப்புள்ளவனு மாகிய ஒருவன் அசுத்தமானவஸ்து விருப்பதால் துர்க்கந்தம் வீசும் ஓரிடத்திலுட்கார்ந்திருப்பானாயின் அவனது கேள்விகளையும் சன்மார்க்கப் பழக்கத்தையும் பகுத்தறிவையும் பற்றிப் பழுது கூறுதற் கிடமுண்டோ? இல்லை. ஏனெனில் அங்கு அசுத்த பதார்த்தம் உளதென்பதைக் காண்பதற்குரிய கட்புலனும் துர்வாசம் வருவதென்பதை உணர்தற்குரிய நாசிப்புலனும் இன்மையினென்க. இதனானன்றோ பிற ஆன்றோரும் "சுவையொளி யூறோசை நாற்றமென்றைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு" என்றார். ஆதலால் பகுத்தறிவை அதிசாக்கிரதையுடன் கூர்மையாக்கி நம்மிடத்தில் இலைமறைகாய்போற் கரந்துள்ள துர்க்குணங்களை வேரறக்களைந்து சற்குணங்களைக் கடைப்பிடித் தொழுகுவோமாயின் ஈருலகத்திலும் இதயமகிழ் வெய்தியிருப்பதுடன் கடவுளின் கருணையுடையோராவோமென்பதற்குச் சந்தேகமில்லை.

இந்துசாதனம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பொறுப்பும் ஆற்றலும்.

"அரியவொன் றாகாததில்லை பொய்ச்சாவாக்
கருவியாற் போற்றிச்செயின்."

ஒரு காரியத்தை அது சிறியகாரியமாயினுஞ்சரி. பெரியகாரியமாயினுஞ்சரி நான் இதனைச்செய்துமுடிப்பேன் என்று உறுதிசெய்து கொள்வதால் ஒருவனுக்கு ஆற்றல் மிகுதிப்படுகின்றது. அதனைச் செய்து முடித்துத் தீரவேண்டும் என்னும் தீராத ஆவலால் அவனுள்ளத்தில் சிதறுண்டுகிடக்கும் சக்திகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து உறுதியளிக்கின்றன. இனி, அவன் அதனைச்செய்து முடிப்பேன் என்று பொறுப்பேற்றுக் கொள்வதாலும் அவனுக்கு ஆற்றல் மிகுதியாகின்றது.

ஒரு காரியத்தைச் செய்துமுடித்துத் தீரவேண்டும் என்று ஒருவன் செய்துகொள்ளும் உறுதியான தீர்மானத்தாலும், ஒரு காரியத்தைச்செய்து முடிக்கும் பொறுப்பை ஒருவன் ஏற்றுக்கொள்வதாலும் ஒருவனுக்குச்சக்தி பெருகுகின்றது. பெருங்காரியத்தின் பொறுப்பு ஒருவனுக்கு ஏற்படுவதால் அவனுக்கு அறிவும் ஆற்றலும் பெருகுகின்றது.

லண்டன் நகரத்துக் கோபுரங்களின்மீது ஏறிக் குரங்குபோலக் குந்தியிருந்தும், சாக்கடைகளில் குறுக்கே படுத்து நீரைப் பெருக்கி அதனாற் கடைக்காரருக்கு இடைஞ்சல் விளைத்து அவர்களிடம் சிறுபொருள் பெற்றுச் சிற்றுண்டி வாங்கித்தின்றும், இன்னும்பல சிறுதொழில்கள் புரிந்தும் ஒன்றுக்கும் உதவாத சிறு பயல் என்று பெற்றோரால் வெறுக்கப்பட்டு, இவன் கணக்கில் சேராத பிள்ளை என்று இந்தியாவுக்கு அதிஷ்டம்போல் நடக்கும் என்று அனுப்பப்பட்ட 'க்ளைவ்' என்னுந் துஷ்டப்பையன் பிற்காலத்தில் இந்தியாவில் மகத்தான பிரிட்டிஷ் இராஜாங்க ஸ்தாபனத்திற்கு



மூல புருஷனா யிருந்தமை, ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று நம்மால் புறக்கணிக்கப்படும் சிறுவர்களிடம் அமைந்து கிடக்கும் அற்புத அபார சக்தியைக் காட்டுகின்றதன்றோ? மூன்று பவுன் சம்பளத்தில் வயிற்றுப் பிழைப்புக்காக வந்த "ராபர்ட் கிளைவ்" இந்தியாவில் செய்த பெரியவேலைகள் இன்னும் ஆச்சரியத்துக் குரியனவா யிருக்கின்றனவே. மேசையிலே இருந்தெழுதும் சிறிய குமஸ்தாவாகவந்த ராபர்ட்கிளைவ் லார்ட் கிளைவ் வாகித் தேசாதிபதியாக இங்கிலாந்துக்குத் திரும்பிய சரித்திரத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும், ஒன்றுக்கும் உதவாதவரென்று கருதப்படுஞ் சாதாரண மனிதர்களிடம் எவ்வளவு அபாரமான சக்தி அமைந்து கிடக்கின்றதென்பதைத் தெளிவாக அறியலாம். ஐரோப்பா முழுமையுங் கலங்குமாறு செய்த நெப்போலியன் சக்கரவர்த்தி சிறிய கார்ச்சிகத் தீவின் சிறுவனன்றி வேறென்ன?

உறுதியான நோக்கமுங் கலங்காத நெஞ்சமும் தளராத முயற்சியும் உலகத்தில் எந்த மகத்தான காரியத்தைத்தான் செய்து முடித்து விடாது? ஒரு காரியத்தை நீ செய்யவேண்டிய சந்தர்ப்பம் நேரும்வரை நீ என்ன செய்யமுடியும் என்பதை நீ அறிய முடியாது. உலகத்திலுள்ள பெரிய மனிதர்களிற்பலர் தங்களுக்குரிய அனைத்தையும் இழந்து அல்லது பெரிய துரதிஷ்டம் அவர்களுக்குச் சம்பவித்தபின், இனி என்னவழி யென்ற கவலை சேர்ந்த ஆவலால் தங்கள் அபார ஆற்றலை உணர்ந்தனர்.

மிகுந்த அவஸ்யம் நேரிடுவதால் சில காலங்களில் நாம் சாதாரண காலங்களிற் செய்யாத பெருங்காரியங்களைச் செய்து முடித்து விடுகின்றோம். ஒரு பெரும் போரில் வென்று ஜெய சீலனாய் வரும் போர்வீரனை விட, அளவற்ற சகித்தற்கரிய கஷ்டங்களையும் நிர்வகித்துத் தனது நோக்கத்தை நிறைவேற்றுபவன் பெரிய சுத்த வீரனாவான். கஷ்டங்களைப் பொறுமையுடன் எதிர்ப்பதால் ஆற்றல் பெருகின்றது. சிலரது அபார ஆற்றலும் சாமர்த்தியமும் எதிர்பாராத சம்பவங்கள் நேர்ந்தபொழுது தான் வெளியாகின்றன. ஐரோப்பா யுத்தமும் ஏற்படாமல் ஜர்மனியர் பெல்ஜியத்தமீது படையெடாமலும் இருந்திருப்பின் பெல்ஜிய நாட்டுச்

சனங்களின் பெரும்பராக்கிரமம் வெளிப்பட்டிருக்குமா? சந்தர்ப்பமும் சமையமும் கிடையாமையால் குடத்தினுள்வைத்த விளக்குப்போல இருப்போர் நம்மில் அநேகர் போர்நடவாத காலங்களில் யுத்தவீரரின் வீரபராக்கிரமங்கள் வெளிப்படுவதில்லை. அதனால் தீரமிகுந்த போர்வீரர் இல்லையென்று கொள்ளலாமா? அதுபோலவே ஒவ்வொருவருள்ளும் அபாரமான அற்புதசக்தி அடங்கிக் கிடக்கின்றது. ஆலமரம் வித்தினுள் உறங்குவதுபோல அண்டங்களை ஆளும் அற்புதமனிதனது சக்தியும் அவனது அகத்தில் அநேகமாய் அவனுக்குத் தெரியாமலே அடங்கிக் கிடக்கின்றது.

அநேகருக்குப் பிறர் உதவி இருக்கும் வரை தங்கள் ஆற்றல் வெளிப்படுவதில்லை. எங்கள் தகப்பனார் இறந்துபோனால் எங்கள் குடும்பமே ஒழிந்துபோகும் என்று கூறும் புத்திரர்கள் அவர் மரணகாலத்துக்குப்பின் குடும்பச் சுமையை ஏற்று அறிவாற்றலோடு நடத்திவரக் காண்கின்றோம் அன்றோ? தாயாற் கவனிக்கப்படாத பறவைக் குஞ்சு விரைவிற் பறக்கத் தொடங்குகின்றது.

எதிர்பாராத சம்பவங்களால், திடீரென்று ஒரு பெரும் பொறுப்பை வகிக்க நேரும்பொழுது பிரதமத்திற் பேய்போல் விழிப்பவர்களில் எத்தனைபேர் பொறுப்பேற்றபின் ஆற்றலுடையவர்களாய் விடுகின்றனர்? அறிவும் ஆண்மையும் பெருகுவதற்குப் பொறுப்பு மிகுதியுந் துணைசெய்கின்றது. ஒரு காரியத்தை அவசியஞ் செய்து தீரவேண்டிய பொறுப்பால் அநேகர் ஆற்றலுள்ளவர்களாகின்றனர். பொறுப்பு ஆற்றலை வளர்க்கின்றது. சிலர் எமக்குப் பொறுப்பற்ற சிறிய வேலைகள் வேண்டும் என்கின்றனர். இவர்களுக்கு அறிவும் ஆற்றலும் விர்த்தியாகப் போவதேயில்லை. சிறிய முயற்சிகளிலும் பிறரிடந்தாழ்ந்த வேலைகளிலும் உள்ளவர்களுக்கு ஆற்றல் விர்த்தியாவதேயில்லை. அவர்களுக்குத் தங்கள் ஆற்றலைப் பரீட்சிக்குஞ் சம்பவம் நேர்வதேயில்லை. அதனால் அவர்கள் ஆற்றல் வெளிப்படுவதேயில்லை. அவர்கள் எப்பொழுதும் மற்றவர் சொல்வதையே யந்திரங்கள் போலச் செய்துகொண்டிருக்கிறார்கள். தனித்து நிற்கவோ, தாமாக ஒரு காரியத்தைப்பற்றிச் சிந்திக்கவோ, ஒரு காரியத்தை ஸ்வயமாகச் செய்யவோ அவர்கள் படிக்கவில்லை.



நமது அபாரசக்திகளும் ஆற்றல்களும், பூமியின் வெளியே தோன்றி வளரும் மரங்கள் போலன்றி, கோலாருள் பூமிக்குள் நாள்தோறும்பெருகி வளர்ந்து மறைந்து கிடக்கும் தங்கக்கனிகள்போல, நமது அகத்தில் அபரிமிதமாக மறைந்து கிடக்கின்றன. அவற்றை அடையுமாறு நாம் முயற்சி செய்வதேயில்லை. நமது சித்தம் விரும்பியது எதனையும் பெறுமாறு கடவுள் நமது சித்தத்தில் எல்லாச் சக்திகளையும் அடக்கி அமைத்து வைத்திருக்கின்றார்.

பிறரது அபாரசக்தியைப் பார்த்து ஆச்சரியப்படும் நாம் நம்மிலும் அந்தச்சக்தி அடங்கிக் கிடக்கின்றதென்பதை அறியவேண்டும். ஒழுங்கான அப்பியாசத்தினால் நாம் நமது ஆற்றல்களை வளர்க்கலாம்.

ஒரு பெரிய காரியத்தின் பொறுப்பு ஒருவனுக்கு ஏற்படும்பொழுது அவனுக்குத் தன்னை வளர்க்கும் முயற்சி ஏற்படுகிறது. அவன் அகத்தில் அடங்கிக் கிடக்கும் ஆற்றல்களெல்லாம் வெளிப்படுகின்றன. "இந்தவேலைக்கு அவர்தான் சரி; என்னால் ஆகாது" என்றுகூறும் எனது சகோதரனே, ஒரு பெருங் காரியத்தின் பொறுப்பு உனக்கு ஏற்படும்பொழுது அதனைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்; உனது ஆற்றலை நீ அறிந்து அடைவதற்கு அது தக்க துணையாகும்.

பாரதி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பரிமேலழகருரைச் சந்தேகவினா அசந்தேகம்.

இஃது, அறிவினாமுதலிய வாறனுளேயவினா வன்றாம் ஆமெனின் அஃததி வியாத்தியேயாம் என்னை உத்தரவேதவுரை யோத்துடையார் "கடவுள் வாழ்த்து மூவர்க்கும் பொதுப்படக் கூறினார்" என்பதூஉம் இஃதொப்பதாகலான் "அவருரையே வாசிரியர் கருத்தாயின் முக்கடவுள் வாழ்த்தெனக் கிளந் ததிகாரித்தலமையும் அன்றிக் கவிக் கூற்றாய அதிகாரத்து முக்கடவுளெனக் கிளவாது கடவுள் வாழ்த்தெனப் பொதுப்பட வதிகாரித்தல் கவிக்கமையா தென்க." என இவ்வாறு அவர் தம் பரிமே லழகருரைச் சந்தேகவினா ஆண்டு நிகழுமாகாலான் இஃது இவ்வாறே இஃதொக்கு மேனைய வற்றினு முய்த்துக்கொண் டுணரப் படும். ஆகலின் நியாயநூற்கும் உத்தரவேதவுரை யோத்துடையார் கருத்திற்கும் மாறுகொளவினா யினார் போலக் காணப்படுகின்றது. அஃதஃதன்று கடவுள் வாழ்த்திரண்டனுள் இஃதேற்புடைக்கடவுள் வாழ்த்து ஆகலின் அது முக்கடவுட்கும் பொதுவென ஏது வோதினர் ஆகலின் ஆண்டதிவியாத்தி யாகாதா லெனின் அஃதன்று அஃதொப்பவீண்டும் அறிவறிந்த வென்னு மேதுப் பற்றிப் பெண்ணொழித்ததென்றாராகலின். ஆகலான் அஃததிவியாத்தி யாகாமை யாண்டைய தென்றொழிக அதுநிற்க. இனி இத்திருமுக முடையார் பெருகாது சுருங்கவுரைக்க வென்றலின் அங்ஙன முரைக்குதும் அவ்வினா வுடையார் புதல்வரென்பது ஆண் பெண் இருபாற் பொதுப்பெய ரென்றார் அஃதேலாது ஏது வெனின் "குறுமக்கள் மகார் சிறாரே கூறுப இவர்தம் பன்மை" என்னும் நிகண்டு நூற்கு மாறுகொளக் கூறலாய் முடியும்/ஆகலான். அவரெடுத்துக்கொண்ட வேது போலியாதன் (மேலும் பிரதிஞ்ஞா வானி யாத



னுங்காண்க. ஆண்மகாரை சுட்டும் புதல்வனென்பதூஉம் பெண்மகாரைச் சுட்டும் புதல்வியென்பதூஉம் தம்முள் வேறெனக் கொள்க. அல்லாக்கால் தேவன் தேவி யென்னும் வேற்றுமையின்றாம் தேவன் தேவியென்ன பன்மைச் செய்கைப்படுங்கால் முறையே தேவர், தேவியர் என்றாமென்பதெல்லார்க்கு மொக்கும், அஃதொப்பப் புதல்வன் புதல்வி யெனவும் முறையே புதல்வர் புதல்வியரெனவே செய்கைப்படு மல்லது அவைதம்முள் பொது மொழியாகா புத்திரன் புத்திரி யென்பன வொப்ப அவைதம்முள் சிறப்பு மொழிகளேயாம். அல்லாக்கால் புத்திர னென்பதூஉம் பொது மொழியாகல்வேண்டும் ஆகலால் புதல்வரென்பது இருபாற் பொது வென்பதேலாது. ஆகலான் எமதிவ்வோத் தென்னுங் கல்லெறிக்கஞ்சி அவர்தஞ் சந்தேகவினா சிறுவரையேனும் நின்றாற்றமாட்டா தோடியொதுங்கும் ஆகலின் "பரிமேலழகருரைச் சந்தேகவினா" வென்பது அசந்தேகமாய் வினாவன்றாம் ஆகலான் இஃதித் துணையினொழிதலமையு மாயினும் இன்னுமொன்றோதி அத்துணையின்மைதும் ஆசிரியர் பரிமேலழகனார் "இருபிறப்பாளர் மூவரென்றுரைக்கும் பின்னோத்து மேலுரைப் பாயிரத்துள்" "வருணந்தோறு மென்றுரைக்கு முன்னோத்தோடு முரணு" மென்றார் அஃதங்ஙன முரணாது வேதமோது மதிகாரம் இருபிறப்பாளர் மூவர்க்கல்லது பிறர்க்கில்லை யென்பது வேதநூற்கும் அதனையுள்ளவா றுணர்ந் துணர்த்து மாசிரியர்யார்க்கு மொப்ப முடிந்தது சிவாகம தீக்காதி காரமுடைய நால்வருணத்தாருக்குமே அத்தீக்கை யொழுக்கமுரியதல்லது பிறர்க்கின்மை யெங்ஙனம் அங்ஙனமே வேதமோது மதிகாரமுடைய இருபிறப்பாளர் மூவர்க்குமே அவ் வேதவொழுக்க முரியதல்லது பிறர்க்கின்மையறிக. ஆகலான் உரைப்பாயிரத்துள் வருணந்தோறு மென்றது அவ்வேத மோது மதிகாரமுடைய இருபிறப்பாளா, மூவரையுமே சுட்டுமல்லது பிறர்க்குச் செல்லாமையின் இருபிறப்பாளர் மூவரென்னும் பின்னோத்தோடு வருணந்தோறு மென்னு முன்னோத்து முரணாமையறிக. முரணுமாயின் ஆகமத்துள் வருணந்தோறுமுள்ள தீக்கையொழுக்கம் என் முன்னோதி யொழிந்து பின் தீக்கை யொழுக்கமுடையர் நால்வருணத்தாரெனின் முன்வருணந் தோறு மெனப்பொதுமையி னோதினும் ஆகமதீக்கை யொழுக்கம் நால் வருணத்தார்க்கல்லது பிறர்க்கின்மையின் 'ஆகமதீக்கை யென்னுங் குறிப்பு மொழி ஆகம்தீக்கைக் குரியரல்லரை யொழித்து நால்வருணத்தார்க்குஞ் சிறப்பாதலொப்ப ஆண்டு வேதவொழுக்கம் என்னுங் குறிப்புமொழி பற்றி வருணந்தோறு மென்பது வேதவொழுக்கத்திற் குரியரல்லரை யொழித்து அவ்

வொழுக்கத்திற்குரிய இருபிருப்பாளர் மூவரையே யுணர்த்தலின் முரணி ன்மை யறிக. ஆகலான் எல்லாஞ் சமஞ்சசமேயாம் "சமன்செய்து" சான் றோர்காள் மனக்கோட்டம்விட்டு நுண்ணுணர்வாளுேக்கிச் சந்தேகவிறைவுடை யர் தமதையும் அசந்தேக அவிறைவுடைய எமதையும் சீர்தூக்கியுரைமின் யாமீண் டெடுத்துரைத்தவாறே உண்மையேது வெடுத்துக் காட்டுக்கள் பற்றி இப்பிரதிஞ்ஞாவாணியெனச் சாதிப்பின் யாமதனையுடம்பட்டுக்கோட ஒருதலையேயாம்.

இனி "வருவிருந்து வைகலுமோம்புவான்" "முகனமர்ந்து நல்விருந் தோம்புவான்" என்னுந் தொடக்கம்பற்றி பெண்ணின்றி உலகியலாய வில் லறம் கடைபோதலின் "பெண்ணின்றி உலகியலாய இல்லறங் கடை போ காமையானும் பெண்பெறுதலும் உலகினுக்கு இன்றி யமையாச்சிறப்புடை மை யாதலானும் அதனையுரைக்கவேண்டு மதிகாரம் வேறின்மையானும் அஃதுரை யன்மையென விடுதல் அமையுமோ" வென்னு மையம் ஐயமின் மையறிக. ஆதலால் அவர்தாம் "முன்னும் பின்னும் முரணெனத்" துணி ந்து பின்னுரைத்த முரண்மொழியும், மேல் மாறுகொளவுரைத்தார் போல க்காணப்படுகின்ற தெனத்துணியாது முன்னுரைத்த மாறுகோள் போறு மென்னுமொழியுமே தம்முள்முன்னும்பின்னும் முரணி அய்யமாவனவன்றி உரையேயத்துள் யாதும் யாண்டும் முரணின்மையின் அய்யமின்மை ஒரு தலையேயாம் ஆகலான் அவ்வுரையே உண்மை யெனவும் இவர் சந்தேகம் பொய்மையெனவும் யாதுமையமின்றி இனிதறிக. இஃதிவ்வாறெழுவன எவற்றிற்குமொக்கு அன்னபிறவு மன்ன.

இங்ஙனம்:

பூ. நா. இராசகோபால பிள்ளை.

ஆசி.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமயசூக்கும பஞ்சாக்ஷரம்.

சமய சூக்கும பஞ்சாக்ஷரத்தின் தாத்பரியம் நான்கு அதன் அக்ஷரம் ஐந்து.

சிவாயநம: இதன்தாத்பரியம் நான்குவகை. பூர்வம், பூர்வபூர்வம், உத்தரம், உத்தரோத்தரம் என்பனவாம். சிவனை நமஸ்கரிக்கின்றேன் என்பது பூர்வத்தின் அர்த்தம். அநாதியில் மலமின்றியும் எல்லாமுடைய சிற்சத்திக்கு எனதுகரணங்களைச் சமர்ப்பிக்கின்றேன் என்பது பூர்வபூர்வத்திற்குத் தாத்பரியம். உத்தரம் உத்தரோத்திரத்தை அனுபவத்தாலறிக.

இதுபோல் மதசன்மார்க்கத்திற்கும் ஷ அக்ஷரமே மேல்குறித்தபடி இதற்கும் நான்கு தாத்பரியமும் உள்ளது. பூர்வத்தின் தாத்பரியம், சி என்பது பதி, வா என்பது சக்தி, ய என்பது ஜீவன், ந என்பது திரோதை, ம என்பது மஹாமாயை. ஆதலால் மஹாமாயை திரோதைநீங்கி ஜீவ போதமற்று அருள்வடிவாய்ச் சிவமாவது.

பூர்வபூர்வத்தின் தாத்பரியம், சி என்பது எல்லாம் உடையது, வா என்பது அபின்னமாகிய அருள், ய என்பது ஆன்மசிற்சாயை, ந என்பது ஜீவன், ம என்பது பசு. ஆதலால் பசுத்தன்மை கெட்டு ஜீவபேதம்போய் ஆன்ம இயற்கைவடிவாய்ச் சத்துவமயமாய் எல்லாம்உடையதுவாய் பூரணமாய் நிற்றல். ஒருவாறு அநுபவத்தில் பரவிந்து பரநாதம் பரத்திலும் அபரவிந்து அபரநாதம் பூர்வத்திலும் வழங்கும் இவ்வளவும் செபமூலமாய்க் கரணசுத்திவந்து அக்ஷரம் உன்னுதலைவிட்டு அறிவாகிருதியாய்க்கருணையுஞ்சிவமே பொருளென்னும்படி நின்றார்க்கு மூதற்றுவாரமாம்.

மற்ற உத்தரத்தில் ஏமசித்தியும் உத்தரோத்திரத்தில் தேகசித்தியும் சொல்லும், இதுமதசன்மார்க்க அனுஷ்டானம். இதுபோல்சமயத்திலும் தேகசித்தி ஏமசித்தி உளது, மேற்குறித்த சமய மதங்களில் விரிவு அநந்த கோடி.

அந்தச்சித்திகள் யாவற்றும் அவ்வச்சமய மதங்களின் கர்த்தா மூர்த்திதலைவன் தலைவிமுதலியவர்கள் பதப்பிராப்தி வரையிலும் நிற்கும். ஆதலால் மேற்குறித்த இரண்டு சித்தியும் எக்காலத்தும் அழிவுறாது இருப்பதாகச் சொல்வது சுத்தசன்மார்க்க பூர்வோத்திரம்.

ஏமசித்தி தேகசித்தி மேற்குறித்த சூக்கும பஞ்சாக்ஷரத்தில் சொல்வதற்குப் பிரமாணம். "சிவாய நம வெனச் செம்பு பொன்னாய் விடும்" "சிவாய நம வென்று சிந்தித் திருப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை."

ஆதலால் மேற்குறித்த அக்ஷரத்தை மகான்கள் குழூஉக்குறி வடிவமாய்ச் சுட்டினார்கள். இதைச் சுக அநுபவிகள் தத்துவார்த்தங்களை அறிந்து அநுசந்தானஞ் செய்வார்கள். சாதகிகளுக்கு நாவினால் உன்னில் கரணம் ஓய்ந்தால் தத்துவாறு சந்தானஞ் செய்யக்கூடும்.

உலகின்கண் நாவினால் உன்னில் தங்கள்மனோரதம் சித்திக்கும். வகரவித்தை உடையவர்கள் மேற்படி அக்ஷரத்தின் உண்மையை பௌதிகம், உலோகம், ஒஷதி, லவணம் முதலியவற்றிற்சேர்த்து வகரத்தை முடிப்பார்கள். தகரத்தை உடையவர்கள் அது போலவே அமைத்துக் கொண்டு தேகத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆதலால் மேற்குறித்த அக்ஷரங்கள் பரிபாஷையாக இருந்தது. உண்மையாவற்றும் சுத்தசன்மார்க்க சகஜசாத்திய ஞானநுபவிக்கு விளங்கும்.

மேலும், சி என்னும் எழுத்துக்குப் பொருள் ஒருவாறு இதில் அடங்கிய பீஜம் ஐந்து. அவையாவன: (1) தோன்றி அசைதலாகிய விந்து (2) அதன்புடைபெயர்ச்சி ஒலியாகிய நாதம். (3) அதன்வர்ண வடிவமாகிய வரி அக்ஷரத்தின் சகர மெய் என்னும் இச்(4) அதனது குணங்களைவெளிப்படுத்தும் ஆதி அக்ஷரமாகிய பிரணவமூல ஆகாசம். (5) இவைதன் வண்ணச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய இகாரம்.

ஆக கூடிய விந்துக்கள் ஐந்தும் ஒருருவமாய் சிகரம் ஆயிற்று. இதன் இலக்கணம் விரிக்கிற் பெருகும். அநுபவத்தால் அறிக.

(திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் எழுதிவைத்த குறிப்பினுள் கண்டது.)

**காஞ்சி. நாகலிங்க முதலியார்.**

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF ... NOV 1916 MADRAS

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916ஞ் அக்டோபர்மீ 1 [பகுதி க0.

## தைத்திரீயோப நிஷத்து.

### பிருகுவல்லி.

பிரசித்தமான வருண புத்திரனாகிய பிருகுவானவர் தமது பிதாவானவருணனை நோக்கிப் பூஜ்யரானவரே பிரம்மத்தை உபதேசியும் என்று அவரிடமடைந்தான்.

அன்னத்தையும் (சரீரம்) பிராணனையும், கண்ணையும், காதையும், மனதையும், வாக்கையும் (சாதனங்கள்) என்பதாய்ப் பிருகுவுக்கு அவர் பிதா சொன்னார்.

பிரசித்தமான எதினின்றும் இந்தப்பிராணிகள் உண்டாகிறார்களோ எதனால் ஜீவிக்கிறார்களோ எதை அடைகிறார்களோ எதில் பிரவேசிக்கிறார்களோ அதையறி அது பிரம்மம் என்று வருணன்சொன்னான்.

பிருகு தவத்தைச்செய்தான் அவன் தவத்தைச்செய்து அன்னத்தைப் பிரமமென வறிந்தான். (அறிந்த பிறகு அன்னத்திற்கு உற்பத்தி முதலியவை யிருக்கிறபடியால் இது எப்படியெனச் சந்தேகித்தான்).

மறுமுறை தவஞ்செய்து பிராணனைப் பிரம்மமென வறிந்தான் (பிராணனுக்கு உற்பத்தி முதலியவை யிருக்கிறபடியால் இது எப்படியெனச் சந்தேகித்தான்.)

மறுமுறை தவஞ்செய்து மனம் பிரம்மமென வறிந்தான் (மனத்திற்கு உற்பத்தி முதலியவை யிருக்கிறபடியால் இது எப்படியெனச் சந்தேகித்தான்.)

மறுமுறை தவஞ்செய்து விஞ்ஞானம் பிரம்மமென வறிந்தான் (விஞ்ஞானத்திற்கு உற்பத்தி முதலியவை யிருக்கிறபடியால் இது எப்படியெனச் சந்தேகித்தான்.)

மறுமுறை தவஞ்செய்து ஆனந்தம் பிரம்மமென வறிந்தான் (இந்த ஆனந்த வித்தையானது சிரேஷ்டமான இருதயாகாசத்தில் வைக்கப்பட்டிருக்கிறதென வுணர்ந்தான்.

எவனிந்தப் பிரகாரம் அறிகிறானோ அவன் பிரம்ம ஸ்வரூபசித்தியை யடைகிறான். அன்னமுடையவனாகிறான். அன்னத்தைப் புசிக்கிறவனாகிறான். சந்தானத்தாலும், பசுக்களாலும், பிரம்மதேஜஸாலும் மகத்தான கீர்த்தியாலும் மகானாகிறான்.

(அன்னமாகிற துவாரத்தின் வழியாகப் பிரம்மம் அறியப்பட்டதாகையால்) சாப்பிடக்கூடிய அன்னம் நிந்திக்கத்தகாதது.

பிராணஸ்வரூபமும் அன்னம், சரீரமானது அன்னத்தைப் பட்சிக்கிறது. பிராணனிடத்தில் சரீரமானது ஸ்திரமாயிருக்கிறது. சரீரத்தில் பிராணனிருக்கிறான். அன்னம் அன்னத்தில் ஸ்திரமாயிருக்கிறது.

ஆகையால் அன்னத்தை விசேஷமாகச் சேகரிக்க வேண்டும். அன்னத்தை யாவருக்கும் கொடுக்கவேண்டும்.

இந்த அன்னம் (பாலியத்தில்) கொடுக்கப்பட்டால் பாலியத்தில் இவனுக்குக் கொடுக்கப்படுகிறது. அன்னம் மத்தியம வயதில் கொடுக்கப்பட்டால் இவனுக்கு மத்தியில் அன்னம் கொடுக்கப்படுகிறது. அன்னம் விருதாப்பியத்தில் கொடுக்கப்பட்டால் இவனுக்கு அன்னம் கடைசியில் கொடுக்கப்படுகிறது.



பிரம்மம் வாக்கில் க்ஷேமரூபம், பிராண அபானங்களில் யோகக்ஷேமரூபம், கைகளில் கர்மரூபம், பாதங்களில் கமனரூபம், பாயுவில் விசர்ச்சனரூபம்.

இனித் தேவதை சம்பந்தரூபமாக மழையில் திருப்திரூபம், மின்னலில் பலரூபம், பசுக்களில் யசஸ்ரூபம், நட்சத்திரங்களில் தேஜோரூபம், உபஸ்தேந்திரியத்தில் அமிருதரூபம், ஆகாசத்தில் சர்வரூபம்.

அந்த ஆகாசமாதாரம் என்பதாக உபாசிக்க, ஆதாரமுள்ளவனாகிறான் அது மஹத்ஸ்வரூபம் என்பதாக உபாசிக்க மகானாகிறான் அது மனது என்பதாக உபாசிக்க மனனத்தில் சமர்த்தனாகிறான் அது பிரம்மமென்பதாக உபாசிக்க பிரம்மமாகிறான் அது பிரமத்தின் சம்ஹார சாதனமானவாயு என்று உபாசிக்க, துவேஷிக்கிறவர்களும், சத்துருக்களும், பிரியமற்ற தம்பி தமயன்மார்களும் பிள்ளைகளும் நாசமாகிறார்கள்.

புருஷனிடத்தில் எவன் ஆத்துமாவோ, அவனும் சூரியனிடத்தில் எவன் ஆத்துமாவோ அவனும், ஒருவனே, எவன் இப்பிரகாரம் தெரிந்து கொண்டிருக்கிறானோ அவன் இந்தலோகத்தினின்று மரணமடைந்து அன்னசொரூபமான ஆத்துமாவையும் பிராணஸ்வரூபமான ஆத்மாவையும் மனோமயமான ஆத்மாவையும், விஞ்ஞானமயமான ஆத்மாவையு ஆனந்தமயமான ஆத்மாவையு மடைந்து கர்மானுசாரமாய் அன்னத்தை யுடையவனாயும் இச்சானுசாரமாக ரூபத்தைத் தரிக்கிறவனாயும் இந்தலோகங்களை யனுசரித்துச் சஞ்சரித்துக்கொண்டு இச்சாமத்தைக் கானஞ்செய்துகொண்டு இருக்கிறான்.

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

**தொகுதி 5. பக்கம் 204. தொடர்ச்சி.**

அவ்விதம் செய்துகொள்ளாத தோஷத்தால், சைவமடாதிபதிகளும் சைவப்பிரபுக்களும் வைதிகலௌகிக நெறி என்னும் இரண்டினும் தாங்கள் முன்னடைந்திருந்த மகிவுன்னதமான நிலையினின்றும் தாழ்த்தப்பட்டு அந்நியசமயாசாரியர்களாலும் அந்நியசமயத்தவராலும் அவமதிக்கப்படுகின்றனர். ஐரோப்பியர்களுட் சிறந்த தத்துவ சாஸ்திரிகளும் அதிசயித்துத் தலைசாய்க்கும் வண்ணம் பரமஞானம் போதித்துள்ள தமது சமயப்பெருமையை அறியாமல், சைவசமயிகள் அந்நியசமயாசாரியர்களை யடுத்து அவர்களால் இழிவுறுத்தப் படுகின்றனர். சைவபிரபுக்களோ யானை, குதிரை, "லோக்குரு" போன்ற டாம்பீகப்பட்டம் முதலியவற்றால் வசிகரிக்கப்பட்டு, அந்நியசமயாசாரியர் கால்களில் பணங்களைக்கொட்டுகின்றனர். அன்றியும் உலகத்திலுள்ள சமயங்களையெல்லாம் தன்னகத்தடக்கித் தான் அவற்றினும் விரிந்து மேம்பட்டு விளங்கும் சைவசமயத்தலைவராகிய மடாதிபதிகளைச் சூத்திரக் குருக்கள்என வாய்கூசாது சொல்லத்துணிந்தனர்.

> "பார்ப்பானுக்கு மூப்பான் பறையன் கேட்பாரின்றிக்
> கீழ்சாதி யானானே."

என்ற பழமொழிக்கிணங்க, முற்காலத்தில் பறையறைக் காட்டிலும் எவ்வளவோ கேவலமான நிலைமையிலிருந்த பார்ப்பார் தங்களைக்கேட்டு நல்வழிப்படுத்த ஆசாரியர் ஏற்பட்ட காரணத்தினால் தற்காலம் வேளாளரோடு சமமாக எட்டிப்பார்க்கும் ஒழுக்கத்திற்கு வந்தபோதிலும், இனி வேளாண் பிரபுக்களும் அவர்கள் சமயாசாரியர்களும் சும்மாவிருந்தால், அவர்களை மித்திரபேதம் முதலிய நானாவித உபாயங்களால் வென்று தங்க



ளிலும் கீழ்ச்சாதியென ஏமாற்றி ஒப்புக்கொள்ளும்படி செய்வார்கள் போலும். வேளாளர் திராவிடரென்பதும், அவர் ஆரியப் பிராமணரில் ஒருவிதத்திலும் தாழ்ந்தவரல்லவென்பதும் அவரை ஆரியர் செய்த நான்கு வருணங்களுள் ஒன்றாகப் பேசுவது ஆங்கிலேயர் ஐரோப்பியரை அவ்வாறு சொல்லுதல் எவ்வளவு பொருத்தமுடையதோ அவ்வளவே பொருத்தமுடையதென்பதும் சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களால் நிச்சயிக்கப்பட்ட விஷயங்களிலொன்று. இதன் உண்மை வேளாளரின் சாதியியல்பைப்பற்றி ஆராயுமிடத்து நன்கு விளக்கப்படும். சூத்திரர் என்றபதம் வடமொழியில் அடிமைகள் எனப்பொருள்படும். சூத்திரர் அடிமை ஊழியத்திற்கே சிருஷ்டிக்கப்பட்டவர்களென்றும், துவிஜர்களாகிய மற்றமூன்று ஜாதியார்களுக்கும் அடிமைத்தொழில் புரிவதே அவர்களுக்குச் சிறந்த அலுவலென்றும், அவர்களை அவ்விதம் கொண்டூழியம் செய்யும்படி அரசன் கட்டளையிட வேண்டுமென்றும் மனுஸ்மிருதியால் விதித்திருக்கிறது. புத்தகம் 1 அத்தியாயம் 91, 123, 410, 413, 414, இவ்விதம் அடிமைத் தொழில் புரிவதற்குச் சூத்திரர் அடையும்பலன், பிராமணன் தின்றுமீந்த சோறும் அவன் உடுத்திக்கழித்த பழந்துணிகளும், சாவியாய்ப்போன தானியங்களும், பழமையாய்ப்போன அவன்வீட்டுச் சாமான்களுமே சூத்திரனுக்குக் கிடைக்கும். புத்தகம் 10. அத்தியாயம் 125. வட இந்தியாவில் சூத்திரர்களை இன்றைக்கும் மற்றமூன்று சாதியாரும் நடத்தி வருவது மேற்கண்ட முறைப்படியே. இனித் தென்தேசத்தில் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" என்ற திருவாக்கின்படி வேளாண்மையே தங்களுக்குச் சிறந்த தொழிலெனக் கைக்கொண்டு "செட்டிமக்கள் வாசல்வழி செல்லோமே செக்காரப் பொட்டிமக்கள் வாசல்வழி போகோமே, முட்டிபுகும் பார்ப்பாரகத்தை எட்டிப் பாரோமே யெந்நாளும் காப்பாரே வேளாளர்காண்" எனக் கம்பரால் புகழும்படி கீர்த்திகொண்ட ஒழுக்கம் அறிவு முதலியவற்றில் தங்களுக் கிணையாகச் சொல்லக் கூடிய சாதி ஒருவருமின்றி விளங்கும் வேளாளரைச் சூத்திரர் என்னில், என்ன அகங்காரம்! என்னமதம்! என்ன கொழுப்பு! எவ்வளவு அக்கிரமம்! எவ்வளவு பொருத்த முடையதென்பதை சைவமடாதிபதிகளே? சைவப்பிரபுக்களே? கவனியுங்கள். "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரென" தாயுமானவரால் இழித்துக் கூறப்படும் இவர்கள் மற்றெப்பாதகந்தான் செய்யக்கூசுவார்களென்பதை அறியுங்கள்.

சூத்திரரென அந்நியர்களாலிடப்படும் இழிவுப் பெயர்களை மறுதலியாது ஏற்றுக்கொள்பவர் அப்பெயர்களாலேற்படும் கேவலத்தையும் இழிவையும் சுமப்பார்களென்பதில் தடையில்லை. தற்காலம் ஆங்கில துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு இந்துக்கள் யாவரையும் கட்டுப்படுத்தும் இந்துலாவினுங்கூடச் சூத்திரருக்கு ஒரு சட்டமும் பூணூலணிந்த மற்றச் சாதியாருக்குப் பிரத்தியேகமான அநுகூலச் சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அச்சட்டங்கள் இனந்தெரியாமல் தங்களைச் சூத்திரரென ஒப்புக்கொள்பவர்களை நிரம்பபாதிக்கும். தம் நாடுதேடிப் பிழைக்கவந்த விருந்து அதிதிகளென மரியாதைபற்றி செய்த சிலஉபசார வழக்குகளை எல்லாம் சுதந்தரம்போல் கொண்டாடுகின்றனர். ஆதலால் உங்களை அநீதியாக, உண்மைக்கு விரோதமாகச் சூத்திரரென்றுயார் சொன்னாலும் அதனையுடனே அவர்களுக்கு மாறிச்சொல்லாது பொறுமையோடு பொறுத்துக்கொண்டிருத்தல் நிர்மூடத்தனமேயொழிய வேறல்ல. இதுவரை நம்மவர்கள் தங்களுடைய பெருமையும் அந்தஸ்தும் இயல்பிலே அமைந்திருக்க அதையாவரும் அறிந்திருக்க, அதைப்பற்றி எடுத்துச் சொல்வது அவசரமல்லவெனச் சும்மாவிருந்தனர். ஆனால் தற்காலம் அவ்விதம் அடங்கியிருப்பது யாதொரு கௌரவத்தையும் உண்டுபண்ணாமல் பெரியகேட்டையும் இளப்பத்தையுமே தருவதாயிற்று. உங்கள் பணத்தைக் கொள்ளையடித்ததோடு நில்லாமல் உங்கள் கௌரவத்தையும் கொள்ளையடித்து உங்களை இழிகுலத்தவரெனத் தப்பாகயாவரும் நினைக்கும்படிசெய்து வந்ததுபோல இனியும் உங்களை அவ்விதம் பேச்சிலாவது செய்கையிலாவது எச்சாதியார் செய்யமுயற்சித்தாலும், அவர்கள் பூர்வோத்திரத்தை உலகத்தாருக்கு விளக்கி உண்மையை நிலைநிறுத்துதல் உங்கள் கடமையாகும். அன்றியும், நம்சமயத்துக்குரிய ஆசாரம் அநுஷ்டானங்களை சரியாய்த்தெரிந்து ஷை விடுதலும் அவற்றை அழுத்தமாய் அநுசரியாதிருந்ததுமே இவ்விதமாகக் கேடுகளுக்கெல்லாம் காரணமாகும். வேளாண்சாதியும் சைவசமயத்தவரும் எவ்வளவு மதிப்பும் பெருமையும் பெறுகிறார்களோ அம்மட்டு மதிப்பும் பெருமையுமே சைவமடாதிபதிகளுக்கு முண்டு. ஆதலால் சைவாசாரங்களை மடாதிபதிகள் தம் சமயத்தவர்க்கும் கற்பித்தல் வேண்டும். அவர்கள் எல்லா விதத்திலும் மேம்பாடு அடையும் வழிகளைத் தேடல் வேண்டும்.

உலகத்தில் ஒவ்வொரு சமயத்தவரும் தங்கள் குல ஆசாரியர்களால் ஆதரிக்கப்பட்டும் சீர்திருத்தப்பட்டும் அதன் பயனாகப் படிப்பு, உத்தியோ



கம் முதலிய பெருமைகளை அடைந்து தங்கள் சமயாசாரியர்களின் பெருமையையும் கௌரவத்தையும் விருத்திசெய்து வருகின்றனர். சைவசமயிகளோ தங்களைக் கவனிப்பாரும் நல்வழிப்படுத்துவாருமின்றி அறிவீனமென்னும் இருட்கடலில் மூழ்கியிருப்பது அவர் குல ஆசாரியர்களுக்குப் பெரியதோர் இழுக்காம். சைவசமயிகள் கவர்ந்துகொண்டிருக்கும் அஞ்ஞானவிருளை நீக்கித் தமது சமயத்தின் பெருமையையும் தமது குலத்தின் மேன்மையையும் உணர்த்துதல் மடாதிபதிகளின் கடமை. அவர்களைக் கல்வியறிவு ஒழுக்கம் முதலியவற்றால் மேம்படுத்தித் தம் சமயத்தின் உண்மைகளையும் உண்மையான சமயாசாரியர்களையும் காட்டுவது மடாதிபதிகளின் கடமை. சைவப்பாட சாலைகள் அங்கங்கே யேற்படுத்தி நூல்களைப் படிப்பித்தல் மடாதிபதிகளின் கடமை.

கிருஸ்துவ சமயத்தவரும் அவர் பாதிரிமார்களும் தற்காலத்தில் தம் சமயத்தவருக்கு மட்டுமேயன்றி அந்நிய சமயத்தவருக்குங் கூட படித்தற்கும் தங்குவதற்கும் பல சௌகரியங்களமைந்த கட்டிடங்களும் கலாசாலைகளும் ஏற்படுத்தித் தமிழுலகைக் கடமைப்படுத்தியிருப்பது யாவரும் அறிந்த விஷயம். அதுபோல, முக்கியப் பட்டணங்கள் ஒவ்வொன்றிலும், சைவபால்யர்களுக்கு மட்டுமாவது தங்குவதற்கும் படித்தற்கும் சௌகரியங்களமைந்த கட்டிடங்கள், ஆஸ்டல்கள் அமைத்து அவற்றில் சிறிதுபொழுது சமயநெறி போதித்தல் மடாதிபதிகளின் கடமை. சைவசாஸ்திரங்கள் ஆராய்ச்சி செய்வதற்குத் தமிழ், ஆங்கில சமஸ்கிருத கலாசாலைகள் ஸ்தாபித்தல் மடாதிபதிகளின் கடமை. அவ்விதம் சைவசமயிகளை எல்லாவிதத்திலும் முன்னுக்குக் கொண்டுவர சைவமடாதிபதிகள் முயற்சிசெய்யவேண்டும். இவையன்றி மடாதிபதிகள் சைவசமயிகளின் நிலைமையையும் அவர்களின் குறைகளையும் அறிதற்பொருட்டு ஐந்துவருஷங்களுக்கொருமுறை, ராஜப்பிரதிநிதிகளைப் போல், தமது சிஷ்யர்கள் மிகுதியாயுள்ள ஊர்களுக்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்யவேண்டும். அவ்வித சுற்றுப்பிரயாணங்களில் தமது ஆளுகைக்குட்பட்ட கலாசாலை, புத்தகசாலை, ஆஸ்டல்கள் மடங்கள் இவற்றைப் போய்ப் பரிசோதித்தும் ஆங்காங்குள்ள சைவப்பிரபுக்களால் உபசார மரியாதை செயப்பெற்றும், அவர்கள் குடும்பங்களில் தகுந்த பிள்ளைகளைத் தங்களுக்குப் பின் வாரிசாக நேரில் தெரிந்தெடுத்தும், சமய விருத்தி அறிவு விருத்திக்கு வேண்டிய விஷயங்களைப் பற்றி அப்பிரபுக்களோடு ஆலோசித்தும் தங்கள் தலை நகருக்குத் திரும்ப

வேண்டும். தமது சிஷ்யர்களில் தகுந்த பிரபுக்களில் சிலரைத் தமது உதவிக்கு ஒரு ஆலோசனைச் சங்கமாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்விதம் செய்யும்படி மடாதிபதிகளைச் சைவப்பிரபுக்கள் தூண்டல் வேண்டும், பிரார்த்திக்க வேண்டும், வற்புறுத்த வேண்டும். எந்த மடாதிபதிகளும் இங்ஙனம் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து அதற்குத்தக்க நல்ல முயற்சி எடுத்துக்கொள்வார்களே யானால், அவர்களே ஜனங்களால் பூஜிக்கத் தகுந்தவர்கள்.

"பரோபகாரம் ஞானிகள் விவகாரம்" என்பதனையும் தங்கள் கைவசமுள்ள பொருள் சமயவிருத்தி கல்வி விருத்தியின் பொருட்டுக் கொடுக்கப்பட்டதென்பதையும் சிறிதும் சிந்தியாமல் தங்கள் சரீர அநுபோகங்களும் உலக இன்பங்களுமே பெரிதென நினைத்து அவற்றிலேயே தங்கள் பூரண கவனத்தையும் முழுமனதையும் செலுத்திக்கொண்டிருத்தல் ஞானிகளின் லட்சணமன்றாம்.

"ஞானியின் ஆட்டமெல்லாம் ஞாலத்தா ருய்வதற்கே
ஞானியின் ஓட்டமெல்லாம் ஞாலத்தார் செழிப்பதற்கே
ஞானியின் நாட்டமெல்லாம் ஞாலத்தார் பருவத்திற்கே
ஞானியின் தேட்டமெல்லாம் ஞாலத்தார்க் கருள்வதற்கே."

கணப்பொழுதில் அழிந்துபோகும் இந்தமானிட உடம்பினால் அநுபவிக்கப்படும் போகயோக்கியங்களே மானுடப்பிறவியின் பயனெனக் கருதி அவற்றிலேயே தங்கள் காலம், வாழ்நாள் முழுவதையும் கழித்துக்கொண்டிருக்கும் மடாதிபதிகள் தமது உன்னத ஸ்தானத்தை நிர்வகிக்கத் தகுதியற்றவரெனக் கருதப்படுவர். தமது உயர்ந்த பதவியும் தம்மைப் பாதுகாக்க வலியற்றதென்பதை உணரும்படி நேரிடும்.

C. சங்கரராயர் B. A.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# தேவாரக் குறிப்பு.

**தொகுதி 5. பக்கம் 179. தொடர்ச்சி.**

புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும்
பூதங்களவையெட்டும் பொழில்களெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சியெட்டுங்
கழற்சேவடியடைந்தார் களைகணெட்டு
நகையெட்டு நாளெட்டு நன்மையெட்டு
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்களெட்டுந்
திசையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோபின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே.*

இதன் பொருள்:— அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய முதல்வரே! சதாசிவ தத்துவத்தின் வைகும் நீயிர் யாமிவ்வாறீண்டு வைகுது மெனின் எம்மை ஆண்டையுயிர்கள் வழிபடுமா றெவ்வாறென் றெண்ணி அவைதாந்தர் நிலையினின்றவாறே எளிதின் வழிபட்டுய்தற் பொருட்டுப் புறத்தே திருமேனி கொண்டருளி பலவேறாகப்பரந்த இந்நிலவுலகின்கண் பலவேறு திருக்கோயில் கொண்டருளுங்கால் அவை தம்முள், இத்திருவாரூர் திருக்கோயிலாக் கைக்கொண்டருளிய திருநாளாவது.

ஒரோ வொன்றும் தனித்தனி எண் வேறுதிறப்பட்ட பதினாற் பகுதியவாய் வகுத்துச் சுட்டிக்காட்டிய வினையீட்டல், துய்த்தல், காரகம், புறமலர், பொழில், மலை, பாலிப்போர், மூர்த்தி, குணம், கரம், மனம், ஆனந்தம், அகமலர், திசையென்னு மிவை தம்மை பொதுவகையான் வைத்து விளக்குதற்கு முன்னை நாளா? பின்னை நாளா? பலதலைப் பட்டனவாய இவைதம்முள் இவையல்ல மற்றிதுவே யென ஒருதலை துணியுமாறின்றி ஐயப்பாடுடைமையின் அதனை யொழித்துத் துணியுமாறு "எந்தை தாட்பால் வணங்கித் தலைநின்று கேட்குமாறென்பது" குறிப்பெச்சம்.

* திருவாரூர்-௪௰-வது திருத்தாண்டகம் ௯-வது திருச்செய்யுள்.

திருவாரூர் கோயிலாக் கொண்டநா ளென்பதூஉம் தெரிப்பதற்கு முன்னே பின்னே என்பதூஉம் முறையே தனித்தனி புகைமுதலிய அனைத்தின் முன்னும் சென்றியைந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நிற்கும், நாளென முன்வருதலின் இதுவும் அதுவென்பது தானே போதருமென்னுங் கருத்தால் "முன்னே பின்னே வென" வாளாவோதி யொழிந்தார். தெரித்தல் என்பதும் அது.

கலையென்பது புகை முதலிய மூன்றனோடும் முரணுமை இலேசாற் கொள்க. புகை, போக்கு, புலம், பூ, பொழில், மலை, காப்பு, நாள், நன்மை, திசை, காட்சி, நகை, மலர், கலைகண் என்னு முறை வைப்புடைமை யுடையவாதற்கு உரியவாயினும் செய்யுளாகலின் இவ்வாறு பிறழ வைத்தார்.

காரக மெட்டாகலின் வினை யீட்டல் துய்த்தல்களு மெட்டாயின. நகுதல் நகையென்பன போல புகுதல்=புகையென்பன ஒரு பொருட்கிளவி. அது தோன்றலென்னும் பொருட்டாகலானும், காரகமுன் வருதலானும், வினை நிகழ்ச்சியின் மேற்றாய் நின்றது. துய்க்கப்படுவன தோன்றுது போதலின் அப்பெயர்த்தாயிற்று. வினையீட்டல், துய்த்தல் கட்கிடமாய் நிற்பனவாய காரகங்கள் அவ்வாற்றான் புலமெனப் பட்டன. இடமென்றது ஈண்டு துணைக்காரணமாதலை. தளம் தலமெனப் போலியாயிற்று. தளப்பூவென விலையும் ஸ்ரீ மேருவின் திசை நான்கினும் படும் பொழில் மூலை நான்கும், உபபொழில் நான்குமாக பொழில் எண் வேறுதிறப்படும் ஆகலின், பொழிலெட்டெனப் பட்டதென்பது,

கலையென்புழி. ஐ பகுதிப்பொருள் விகுதி. கல்லென்பது மலையென்றவாறு. காப்பு ஆகுபெயர். காட்சிப்படும் வடிவை காட்சியென வுபசரித்தார். வடிவு, மூர்த்த மென்பன வொரு பொருட் கிளவி. எஞ்ஞான்றுங் கலைகணின்றி யமையாதாயவுயிர் சேவடியைத் தலைக்கூடுழி; எண் குணங்கள் கலைகளு நிற்பன வாகலின் அது பற்றி யவை யவ்வாறோதப் பட்டன.

நகை யென்பதனுள் நகரம்+கீரன்=நக்கீரன் என்றாற்போல சிறப்புப் பொருள் தந்து நின்றது. நாள் பற்றிச் செய்யப்படு மணத்தை நாளென்றோதினர். அவை அறிவு குணமென்பன போல ஏற்புழிக்கோடலான் ஈண்டு நன்றனை புணர்த்தி நின்றது. நன்மை=ஆனந்தம். அது புனுடானந்த முதல் எண்வகைப்படு மென்பது சிவதருமோத்தர முதலிய



வற்றுட் காண்க. இனி நன்மை=சித்தி யெனினு மமையும். சிறந்த நலத்தாரென விகுதி பிரித்துக் கூறப்பட்டது. நலமெனப்படு மெவற்றினுஞ் சிறந்த நலமாவது வீடுபேறென்ப. ஈண்டு அதனை யுடையாரென்றது சீவன் முத்தரை. ஏனைய வெளிப்படை.

உயிர் காரகத்துள் ஒன்றாக வைத்தெண்ணப்படுதல் பற்றி ஆண்டோதினர். அதுவே எண் வகை வடிவுள்ளும் ஒன்றாகவைத் தெண்ணப் படுதலின் ஈண்டுங் கூறினர். காரகமும் வடிவும் தம்முள் வேறாகலின்.

மலர் மரத்தோடு உடன் றொன்றாமையானுந் தெரித்தற்கு முன்னே பின்னே வென்றதனுன் ஈன்றெடுத்துக் கொண்டது அவை தூலமாய்த் தோன்றற்கேதுவாய காலவிசேடமே பிறிதன்று ஆகலானும் முற்பிற்பாடுடையவாய வவையிரண்டின் தோன்றுங் காலம் இடையிட்டுத் தம்முள் வேறாகலானும், மரமும் மலரும் வேறாக வைத் தெண்ணப்பட்டன. ஈண்டோதிய வற்றை உபலக்கணமாக வைத்து ஓதாதொழிந்த வேனையவுந் தெரித்தற்கு முன்னே பின்னே வென வைத்துரைத்துக் கொள்க.

இஃதென் சொல்லியவாறோ வெனின் இம்மை மறுமை வீடுகட்கு ஏதுவாகிய வினை தோன்றற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளெனக் கடாயினார்க்கு அங்ஙன மையப்படக் கூறுமுகத்தான் அவ்வாறாயினும் "ஆட்பாலவர்க்கருளும்...தலைநின்றிவை கேட்க தக்கார்" என விடுத்தவாறாயிற்று.

இனி யிவ்வாறன்றி புகைபோக் கென்பதற்குப் பொருள் பிறப் பிறப் பெனக்கொண்டு தத்துவம் முப்பத்தொன்றும் இனம்பற்றி யெண் வகைப் படுதலின் அவற்றினின்றுந் தோன்றுந் தூலதேகம் பற்றி நிகழுமவையும் அவ்வாறு எண்வகைப்படுத் தோதப்பட்டன வெனவும், புலமென்பது புரியட்டகமெனக் கொண்டு விட்டும் பற்றியும் வருமேனைத் தூலவுடல் போலாது வீடுபேறுந்துணையு மிடையறவு படாது உயிர் நிற்றற் கிடமாகலின் அதுபற்றி யது புலமென்ப் பட்டதெனவும், பூதல மென்பது உலகமெனக் கொண்டு காணப்படுந் தீவேழனோடு காணப்படாத கீழ் மேலுலகங்களை யொன்றாகவைத் தெண்ணப்பட்டதெனவும், பொழிலென்பதுஞ் சோலை யெனக் கொண்டு மேருவைச் சூழ்ந்த பொழி லெட்டும் அவை மேருவின் திசை நான்கினுமுள்ள உய்யானம் நான்கனோடு மேருவின்மேலுள்ள மரம் நான்கும் ஏனை மரங்கள் நோக்க உயர்மையும் பெருமையுமுடைமையின் அவையுமுளப்பட ஈண்டு பொழிலெனப்பட்டன வெனவும், கலையென்பது தலைமைபற்றி வேதமெனக்கொண்டு மூலவேதம் நான்கும் உபவேதம் நான்கும் எனவும், காப்பு, காட்சி யென்பன வற்றை

முறையே கா + பூ, காண் + பி, எனக் கண்ணழித்துப் புறமலரெட்டெனவும், இலக்குமிகள் எண்மரெனவும், களகமென்பது = எண் வகைப் பத்தியெனவும், நகையென்பது ஒளியாகலானும் அது சத்திக்குப் பரியாயப் பெயராகலானும் அதுபற்றி யீண்டு எண்வகைச் சத்திகளை யுணர்த்திற்றெனவும், நாளமென்பது அம்முக்கெட்டு நின்றதெனக் கொண்டு "மண் முதல் நாள" மென்பதுபற்றி இதய கமல தளமெட்டெனவும், நன்மையென்பதனுள் மை = மலமெனக்கொண்டு மலகுண மெட்டெனவும், அகமலர் என்றது முதனிலைத் தொழிற்பெயரெனக் கொண்டு, இயமம் முதலிய அட்டாங்க யோகங்களை யுணர்த்திற்றெனவும், திகையென்பதை தீ + கை எனக் கண்ணழித்து உயிருணர்ச்சிக் கேதுவாய இறைவன் கைகள் எட்டெனவும், பொருள்கோடலு மொன்று. இவற்றை யின்னு மீண்டுரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக் கொள்க. தீ = அறிவு.

உரைக்குமா றுரைக்கும் பொருள் பொருந்துவவாய்ச் சிறந்தன பிறவுமுளவேல் கோடற்பால அறச்சிறிதாய பர உடலை ஆனந்தமெனத் திரியக் கொண்டு தருக்குப் பெருக்கு முயிர்போலவும் ஓராறும் உணர்விலியாய ஒருவற்கு ஒருவன் ஓர் ஆறுகாட்டுமாயின் பின் அக்காட்டியா னுபகாரத்தை மறந்து தான் கண்டதாய்க் காண்பானொப்பவும் இயைபற உரைத்தற்கெழுவாரும் இழுக்குரைத்தற் கெழுவாரும் இனி உளராவர் போலும்.

## எண்வகைப்பத்தி திருத்தொண்டர் புராணசாரம்.

"தொண்டரடித் தொழல் பூசைத் தொழின் மகிழ்த லழகார் துளங்கிய வர்ச்சனை புரித லுருகுதி நியமங்கள், கொண்டபணி திருவடிக்கே கொடுத்த வீசன் குணமருவு மருங்கதைக் குலவிக் கேட்டு, மண்டிவிழி துளம்பன் மயிர்ச்சிலும்ப லுன்னன் மருவு திருப்பணிக்காட்டி வருவவாங்கி யுண்டிகொளா தொழிதலென விவையே யீரெட்டு முடையரவர் பத்தரென உரைத்துளாரே."

### காரகம் எட்டாவன. சிவஞானசித்தி. 2-ம், சூ-ம். 22.

"உலகுடல் கரணங்கா லமுறுபல நியதி செய்தி
பலவினை கொண்டு கன்மம் பண்ணுவ துண்பதனு
விலவிடாதி வைதாஞ்சென்று நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளா
தலகிலா வறிவனானை யனைத்திடு மருளினாலே."

உலகு, உடல் கரணம், காலம், நியதி, செய்தி, இன்னதற்காக இது பயனாக வென்னும் இரண்டு பதங்களையும் நியதி யென்பதனாற் றழீஇனர்.

வி. குஞ்சிதபாதம் பிள்ளை,
வீரசோழகன்
ஸ்ரீ சிவஞானத்திருத்தளி
ஸ்ரீ சிதம்பரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தமிழர்க்கான சிலகுறிப்புகள்.

கி பி. 1422 முதல் 1449 வரையில் அரசாண்ட விஜயநகரத்து இரண்டாவது தேவஇராயர் என்பவர் தம்முடைய அரசாட்சிக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்தினின்றும் தகுந்த மனிதர்களை வரவழைத்து ஒரு பெரிய கூட்டம் கூட்டி, அதில் கல்யாண சந்தர்ப்பத்தில் மொய்ப்பணம் முதலியன வாங்குவது சாத்திர சம்மதம் அல்ல என்று தீர்மானம் செய்து அந்தப்படியே மொய்வாங்கும் வழக்கத்தை நிறுத்த உத்திரவளித்ததாக ஸ்ரீமான்-S. கிருஷ்ணிசாமி அய்யங்கார் M. A. அவர்கள் காமன்வில் என்னும் பத்திரிகையில் தெரிவித்திருக்கிறார்.

ஆகையால் தமிழர்கள் ஒவ்வொருவரும், இவ்வழக்கத்தை நிறுத்தி, அதற்குப்பதிலாகத் தமிழபி விர்த்தியின் பொருட்டும் சைவசித்தாந்த சாஸ்திரவளர்ச்சியின் பொருட்டும் அக்காலங்களில் பணம் வசூலித்துச் சைவசித்தாந்த சமாஜத்தின் மூலியமாய் மூலதனம் ஏற்படுத்தினால் புகழும் புண்ணியமும் உண்டாம்.

2. மாயை, அருள், மறுபிறப்பு, கர்மம் இவைகளைப்பற்றிய வரலாறுகள் எல்லாம் முதல் முதல் தமிழர்களிடத்திருந்துதான் வெளியாயின; ஆரியரிடமிருந்து அல்ல என்று காலஞ்சென்ற பிரொபசர் சுந்தரம்பிள்ளை M. A. அவர்கள் கூறிப்போந்தார்கள் என்று நியூ ரியார்மர் என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

3 (a) ஆரியர் என்பவர் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு ஜாதியைச் சேர்ந்தவர்கள்.

(b) மகமதியர் என்பார் ஷேக், சைலத், சுன்னில், பட்டான்ஸ் என்னும் நான்கு ஜாதியைச் சேர்ந்தவர்கள்.

(c) தமிழர் என்பார் வேளாளர் முதலிய 18 ஜாதியைச் சேர்ந்தவர்களும், 18 உபஜாதியைச் சேர்ந்தவர்களுமாம்.

(d) கிறிஸ்தவர் என்பார் ரோமன் கத்தோலிக், பிராடஸ்டாண்ட், சீர்ச்சர்ச் என்னும் மூன்று பெரிய ஜாதியைச் சேர்ந்தவர்கள்.

இப்படியே ஒவ்வொரு வகுப்பாருள்ளும் உள்வகுப்புகள் உண்டு. மேற்சொன்ன நான்கு பெரிய ஜாதியாரும் தனித்தனி வகுப்பாரே யொழிய ஒரே வகுப்பினர் அல்ல.

(4) ஆரியர்கள் இத்தமிழ்நாட்டை யடைந்த பின்னர்த்தான் பதி லட்சணத்தையும், பாசலட்சணத்தையும், பசு லட்சணத்தையும் உணர்ந்தார்கள் என்னும் விடயத்தை, அடியில் வருமாறு சாந்தோக்கிய உபநிஷத 5 வது பிரபாடகம் திரிதிய கண்டம், 6, 7, சுலோகங்களில் ஓதப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

"கௌதம கோத்திரியான் சுவேதகேதுவின் பிதாவாகிய ஆருணி யென்பவர், பிரவாகனென்னும் அரசனிடம் போக (அக்காலத்தில் ஆரியர்கள் தமிழ் அரசர்களை இராஜன்னியர் என்று அழைப்பது வழக்கம் இவ்வழக்கு இருக்குவேதத்திலும் உபநிஷத்துக்களிலும் உள்ளது) அவ்வரசன் ஆருணி முனிவரைப் பூசித்துத் திரவியம் வேண்டுமென்றுற் கேளுமென்று சொல்ல, அம்முனிவர் அரசனே எனக்கிவ்வுலக சம்பந்தமான பொருள் வேண்டியதில்லை, எனது குமாரனிடம் நீர் கூறிய வார்த்தைக்குப் பொருள் சொல்லவேண்டு மென்று கேட்க, அரசன் மிகத்துக்கித்து வித்தியாப்பியாசத்தின் பொருட்டு நீர் அநேககாலம் இவ்விடத்தில் வசிக்கவேண்டு மென்று கௌதமருக்குச் சொல்லிப் பின்பு அவரைப்பார்த்து இந்த வித்தையானது இதற்கு முன் பிராமணர்கட்குத் (ஆரியரில் ஒருபிரிவார்) தெரிந்ததல்ல, இப்போது உனக்கு அப்பொருளை விளக்குகிறேன் என்று அதை உபதேசித்தார்."

இதேமாதிரி ஜனகன் என்னும் தமிழ் அரசர் யாஞ்ஞவல்கியர் முதலிய ஆரிய முனிவர்கட்கு உபதேசித்ததை உபநிஷத்துக்களால் அறிகிறோம்.

(இன்னும் வரும்.)

துடிசைகிழார்-அ-சிதம்பரனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நாணயம்.

ரூபாய் அணா பைசா என்பது தான் பண்டமாற்றுக்குப் பிறகு முதல் முதல் உண்டான நாணயமாகும்

அது செம்பினால் செய்யப்பட்டிருத்தலின் பஞ்ச லோகங்களுள் செம்பே முதல் முதல் கண்டறியப்பட்டதெனல் வேண்டும். பைசா என்பது ஓரணாவில் பன்னிரண்டில் ஓர்பாகமாகலின் செம்பு அரிதாயும் பண்டங்கள் மலிந்தும் அக்காலத்திருந்தன என்பது விளங்குகிறது.

பைசா என்பதற்கு அரசன் தனது மார்பின் விற்குறியைப் பொறித்துச் செய்யப்பட்ட நாணய மென்பது பொருள்.

சாப=வில். அது பைசா என நிலைமாறித் திரிந்தது.

இப்பைசாவிலிருந்து தான் நாணயங்கள் பெருகின, நாணயமென்பதற்கு மூங்கிற் குழாயில் பொதிந்து வைப்பதென்பது பொருள்.

அக்காலத்தில் பொன் முதலியவற்றை மூங்கிற் குழாயில் வைத்துக் காத்து வந்தனர்.

நாணம் நாணயமாயிற்று, நாளம், நாணமாயிற்று. நாளம்=மூங்கிற் குழாய்,

நாணக்குழாய்=தாலியுருவில் பக்கத்தே கோப்பது.

நாணயம்=சொல்தவறாமையுமாம். அது பொன்முதலிய வற்றைக் கொடுக்கல் வாங்கல்களா லுண்டாவது.

பண=ஹண—(கன்னடம்)

பகரத்தை ஹகாரமாக உச்சரிப்பது கன்னடர் வழக்கு. பணமென்பது முதல் செப்பு நாணயத்தையும் பிறகு பொன் னாணயத்தையும் உணர்த்தி நிற்கும்.

சின்னபணம் பெரியபணம் மென்பன செப்பு நாணயம்.

பணமென்பது ஓர் பொற்காசினை உணர்த்தின் பொன்னாணயம். பண வெடை, பணம் பொக்குசமாம்.

விராகனென்பதற்கு விற்குறி பொறித்த பொன்னாணய மென்பது பொருள், பிறவும் உணர்ந்து கொள்க.

மாதூறல்-கார்த்திகேய முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவனடியார் சிறப்பும் அடியவர் பூஜாபலனும்.

(தருமசங்கிதை.)

எப்பொழுதுஞ் சிவபெருமானிடத்திலேயே தமது மனவாக்கு காயங்களை யொப்புவித்த சிவபக்தர்களை அச்சிவபெருமானாகவே பாவித்துப் பூஜித்தவன் எண்ணிறந்த போகங்களை யநுபவித்து ஆயுண்முடிவிற் சிவகடாக்ஷத்தாற் கைலாயபதவியை யடைவான். ஆதலின் சிறந்த போகங்களை யநுபவிக்கவேண்டுமென்று கருதுகிறவன் சிவபக்தருக்குத் தன் சக்திக்கியன்றவரையில் வஞ்சனையின்றி, வஸ்திரம் ஆபரணம் அன்னம் முதலியவற்றைத் தானமாகக் கொடுத்துப் பக்தியோடு பூஜிக்கக்கடவன். சிவபக்தனுக்கு வலிசனையின்றித் தன்னாலியன்றவரையில் விதிப்படி பணிவிடைசெய்தவன் பிரபுவாயினும் ஏழையாயினும் அவன் அடையும் பலனைச் சொல்லுகின்றேன். அவன் உயிர் நீங்கினவுடனே சூரியகிரணங்களைப் போன்ற வொளியுடைய திவ்ய விமானத்திலேறி, தன் முன்னோரில் ஏழுதலைமுறைவரையிலும் அதோகதியி லிருப்போரையும் உடன்கொண்டு சிவமந்திரத்தை யடைந்து மனோகரமான போகங்களை யநுபவிந்து, தேவமாந கனிதமான அநேக ஆயிரவருஷங்கள் பலராற் சேவிக்கப்பட்டுப் பின்னர் விஷ்ணுபதவியை யடைந்து அங்குள்ள போகங்களை யநுபவித்து மேற்கூறிய காலவளவு அவ்விடத்துள்ளவராற் சேவிக்கப்பட்டுப் பிரமலோகத்தை யடைந்து அங்குள்ள விமலமான ஸ்திரீ முதலிய போகங்களை மேற்கூறிய வளவுகாலம் அநுபவித்துமுறையே இந்திரலோகம் கந்தவர்வலோகம் யக்ஷலோகம் இவற்றை யடைந்து ஆங்காங்குள்ள அளவிறந்த போகங்களை யநுபவித்து மீண்டும் பூலோகத்திற் சிரேஷ்டமான வேதியகுலத்தில், தான் முன்னடைந்துள்ள விசேஷ ஞானகுணமுடையவனாய்த் தோன்றி, ஜந்மாந்தர புண்ணியவசத்தாற் சற்குருவை யுபாசித்து அக்குரு



வருளால் அகண்டமான சிவஞானத்தை யடைந்து யோகோபாசனை செய்து, சமுசாரபந்தத்தினின்றும் விலகிச் சிவசாயுச்சியத்தை யடைவான்.

யாகம் கர்மயாகம் ஞானயாகமென்றிருவகைத்து அதில் கர்மயாகமானது பலவிதமான தானம் பூஜை அக்கினி காரிய முதலியவற்றாற் பிரசித்தமாயுள்ளது. தியானம் என்பது சர்வேசுரனையடைய வேண்டுமென்னுங் கொள்கையோடுஞ் சாந்திராயணாசரணமும், சுவாத்தியாயமும், ஜெபமுமென மூவகையாகப் பிரசித்தி பெற்றிருக்கின்றது. இதில் ஜெபமென்பது எப்பொழுதும் அடிக்கடி சிவசிந்தனையுண்டாயிருத்தலின் அது ஞானயாகமெனப் பெயருற்றது. அந்த ஞானயாகம் அத்தியாபனம், அத்தியயனம், வியாக்கியானம், சிரவணம், சிந்தித்தலென ஐவகைப்படும். இவை ஐந்தனுள், முதலாகிய அத்தியாபனத்தைக் காட்டிலும் அத்தியயனமும், அத்தியயனத்தைக்காட்டிலும் வியாக்கியானமும், வியாக்கியானத்தைக்காட்டிலும் சிரவணமும், சிரவணத்தைக் காட்டிலும் சிந்தித்தலும் ஒன்றற்கொன்று அதிகமாகச் சொல்லப்பட்டிருந்தலின் ஞானயாகத்தின் ஐவகையிற் சிந்தித்தலே சிவகடாக்ஷத்தால் முக்தியைக் கொடுக்கத்தக்கது. ஞானத்தையின்றித் தியானங் கைகூடாது. யோகமார்க்கத்தாலேயே ஞானம் பெறப்படும். ஆதலின் ஞானமுந் தியானமும் உடைத்தாயிருப்பவன் சமுசாரசாகரத்தை நீந்த வல்லவனாவான். ஞானமென்றது நாமசகுணமின்மையும், விவகாரமற்ற மனமும், அநித்தியப்பொருள்களில் அவாவின்மையுமுடையது. அவ்வகைய ஞானமும் எப்பொழுதும் யோகசாதனமுடைய பரிபூரண விரக்தனுக்கே யுண்டாகும். அந்த ஞானமே முக்திமார்க்கத்தைக் கொடுக்கவல்லது. ஒருவர் சொல்வதைக்கேட்டு உண்டான ஞானமானது விகல்ப புத்தியை யுண்டுசெய்து இராகத்துவேஷாதிகளை யுடைத்தாகிச் சஞ்சலமாதலின் மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாது. யோகமார்க்கத்தால் சுத்தமாகவும் இராகத் துவேஷாதிகளின்றி விளங்கும் ஞானத்தைப் பண்டிதனானவன் சிறிதுசிறிதாக அப்பியசிக்க வேண்டும். முன் கூறிய கேள்வியால் வரும் ஞானமானது ஆரம்பத்திலும் சிரவணத்திலும் அப்பியாசத்திலும் நிஷ்டையிலும் இராகத்துவேஷாதிகளாற் பலவகையாகிப் பரிசுத்தமான ஞானமுண்டாவதற்கு வழியாகும்; பாத்திர சுத்தஞ்செய்யவேண்டினோர் முதலில் அழுக்குஜலத்தாலும் பின்னர் சுத்தஜலத்தாலுங் கழுவுகையில் முதலிற் கழுவிய நீரால்சிறிது அழுக்குப்போமாறு பயன் சிறிது தருமெனக் கொள்ளவேண்டும். புழுதியால் மறைக்கப்பட்ட ஆகாயமானது முறையே சிறிது சிறிதாகப் புலப்படுமாறு விகல்ப ஞானமானது சிறிதாகத் தோன்றி இறுதியில் பரிசுத்தஞானத்தை யுண்

டாகும். அலைகளாற் கலக்கப்பட்ட சமுத்திரமானது அசைவற்று நின்றதுபோல விஷயவாசனையால் அலைந்துகொண்டிருந்த மனமானது சலனமற்றிருப்பதே ஞானமெனப்படும். மற்றவை அஞ்ஞானம். இராகத்துவேஷாதிக ளில்லாததும், பாவனாமயமுமாகிய சிரேஷ்டமான ஞானமே முக்தியை யளிக்கவல்லது. அஞ்ஞானமாகிய பாசத்தாற் கட்டப்பட்டுள்ள புருஷன் அமுக்தனெனப்படுவானாயினும், ஞானத்தால் அஞ்ஞானத்தை யகற்றியபின்னர் அப்புருஷனே முக்தனென்று கூறப்படுவான். சமுசாரத்திற்குக் காரணமாகவுள்ளது அஞ்ஞானம். அஞ்ஞானியானவனே சமுசாரச்சேற்றி லழுந்திக்கிடப்பான். அகண்ட தேஜஸாய், தமசு நசிக்குமாறு ஞானத்தால் அஞ்ஞானம் ஒழியும். அஞ்ஞானமுள்ளவரையில் இராகத்வேஷாதிகளால் தர்மாதர்மங்கள் உண்டாகின்றன. தர்மாதர்மங்களுள்ளவரையில் அவனுக்குச் சரீரமுண்டாகும். சரீரமுள்ளவரையில் கிலேசங்களாற் பாதிக்கப்படுவான். கிலேசத்தை யொழிப்பதற்காக மீண்டும் பிறவியடையாத வுபாயத்தைத் தேடவேண்டியது.

அஃதெவ்வாறெனில், தத்துவஞான மடைந்தாலன்றி அஞ்ஞானம் நசிக்கமாட்டாது. அஞ்ஞான நாசமுண்டான க்ஷணத்திலேயே இராகத்வேஷாதிகள் உண்டாகா. இராகத்துவேஷாதிக ளொழிந்தவுடனே புண்ணிய பாப க்ஷயமுளவாகும். புண்ணிய பாப பரிக்ஷயத்தாற் பிறவியில்லையாகும். பிறவியில்லாதபொழுது கிலேசமுதலியன உண்டாவதற்கிடமில்லை. கிலேசங்களற்றவிடத்தில் முக்தனென்று சொல்லப்படுவான். ஆதலின் மானுடருக்குப் பலவித துக்கங்களும் அஞ்ஞானத்தாலேயே தோன்றுகின்றன. அந்த அஞ்ஞானத்தை ஞானத்தாலன்றிக் கர்மாதிகளால் நசிக்கச்செய்யமுடியாது. ஞானமொன்றாலன்றி மற்றொன்றால் புண்ணியபாப பரிக்ஷயமுண்டாகாது. ஆதலின் மோக்ஷத்தை யடையவேண்டியவன் ஞானத்தையே யடையவேண்டும். வெண்கலம் புளியினாற் புனிதமாகுமாறு ஒருவன் மனம் ஞானத்தாற் புனிதமாகும். ஞானமென்னும் அமிர்த ரசத்தை ஒருமுறை பானஞ்செய்தவன் எல்லாக் காரியங்களையும் விடுத்து மீண்டும் அதனையே பானஞ்செய்ய எப்பொழுதும் விரும்புவான். ஒருமுறையேனும் ஞானாமிர்த ரசபானஞ் செய்தவன் அதன் தன்மையை யுணரானாகி மற்ற விஷயங்களிலேயே மனத்தைச் செலுத்தி நிற்பான். ஞானாமிருதத்தால் திருப்தியடைந்த கிருத கிருத்தியனான சிவயோகி உலகத்திற் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமிராது. அப்படிச் செய்யத்தக்கதொன் றிருக்கும்பக்ஷத்தில் அவன் உண்மையுணரான் தத்

அவஞானியல்லன். இகலோக பரலோகங்களில் அவன் செய்தற்குரிய காரியஞ் சிறிதுமில்லையாதலின், அவன் இவ்வுலகத்திலேயே முக்த தசையை யடைந்து பரிபூரணனாக விளங்குவான். ஞானத்தைக்காட்டிலும் பரிசுத்தமானதும் பரிசுத்தமாக்குவதும் பிறிதொன்றுமில்லை. அதனைப் படிப்படியாக அப்பியசித்தபக்ஷத்தில் ஆத்மசொரூபம் நன்கு விளங்கும். விரதாசாரணங்கள் தானங்கள் தபசுகள் யாகங்கள் ஸந்நியாசமுதலிய ஆச்சிரமதருமங்கள் தீர்த்தயாத்திரைகள் முதலிய யாவுஞ்சுவர்க்கபதவியைமட்டும் உண்டுசெய்ய வல்லவையேயன்றிப் பிறவியை யொழிக்க வல்லவையன்று. சாந்தியை யளிக்கும் சிறந்த ஞானமொன்றே புநர்ஜன்ம நாசஞ்செய்ய வல்லது. எப்பொழுதும் இந்திரியநிக்கிரகமும் ஒரே மனதும் மகருஷிகளாற் கூறப்பட்ட புராண தர்மசிரவணமும் படனமும் உண்டாயிருக்கும் பக்ஷத்திற் பாபக்ஷயமுண்டாகி அவ்வகைய ஞானந் தோன்றி அதனால் முக்தி கைகூடுகின்றது. யாகஞ்செய்தவன் தேவபோகங்களை யடைவான். தவஞ்செய்தவன் பிரமபதவியை யடைவான், தானஞ்செய்தவன் பலவித போகங்களை யடைவான். ஞானப்பியாசஞ் செய்தவன் மோக்ஷத்தை யடைவான். அஞ்ஞானி புண்ணியபாவங்களால் துன்புறுவான். ஞானியோ தன் ஞானமாகிய கத்தியால், தன்னை ஜன்மத்திற்கிடக்கும் புண்ணியபாவங்களாகிய சூத்திரத்தை யறுத்து, பரம்பொருளாகிய சிவத்தை யடைவான். ஞானிகளுக்குச் சுபாசுப கர்மங்களாற் பந்தமுண்டாயினு, விலக்கமிற்றாற் பந்திக்கப்பட்ட அவர்களுக்கு எவ்வாறு பரமுக்தி கைகூடுமென்பாரையிற் சொல்லுகின்றேன். சுபாசுப கர்மங்கள் தேகமுள்ளவரையில் இகலோகத்திலாவது பரலோகத்திலாவது அநுபவித்தே தீரவேண்டும். தர்மாதர்ம பரிக்ஷயத்தால் முக்தி கைகூடுமென்றதால், தர்மத்தைச் செய்யாமலும் அதர்மத்தைச் செய்யாமலுமுள்ளவன் முக்தி பெறுவானோ வெனிற் பெறமாட்டான். எவ்வாறெனில் தர்மஞ் செய்யாதபொழுது அதர்மஞ் சித்தித்து நிச்சலத்துவ முண்டாகாது. அதர்மஞ் செய்யாத பொழுது தர்மமுங் கைகூடாது. ஆதலால் தர்மாதர்மங்களைப் பயன் விரும்பாது செய்து அதனால் விளையும் புண்ணிய பாபங்களை ஞானமாகிய அசியினால் நீக்கி முக்தி யடையவேண்டும்.

(இன்னும் வரும்.)

பா-கண்ணப்ப முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# அறிவும் சமயக் கல்வியும்.

மன்குலத்தார் சன்மார்க்க சீவர்களாய் விளங்குவதற்கு அனைவருக்குச் சமயக்கல்வி அவசியமென்றும் அக்கல்வி யெவ்வித ஒழுங்குடையதா யிருக்க வேண்டுமென்றும் அறிஞர் பலர் சிந்திக்கத் தொடங்கி யிருக்கின்றனர். இவ்விஷயமாய்ச் சில அபிப்பிராயங்களை வெளியிடில், அவைகளையும் அறிஞர் சிந்தையிற்கொண்டு ஆராய்ந்து லோகோபகாரம் புரிவார்கள் என்ற நம்பிக்கையினால் இவ்வியாசத்தை எழுதலாயினேன். ஆதலால் அறிஞர் இதை 'மாறுபடுதர்க்கம்' தொடுப்பதற்காக எழுதப்பட்டதென்று எண்ணாமல், நல்லெண்ணத்துடன் எழுதப்பட்டதென்றே மதித்துக் குற்றங்களைந்து குணங்களைக் கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

இயற்கையறிவு, செயற்கையறிவு என அறிவு இருதிறப்படும். மனித ஆன்மா பரமார்த்த நிலை எய்துவதற்கு இயற்கை அறிவே பெரிதும் வேண்டப்படுவது. செயற்கையறிவு இயற்கை அறிவைத் தீவிரப்படுத்திப் பிரகாசமாக்குவதற்கு உபகரணமாயிருக்குமேயன்றி, அது தன்னளவில் ஜீவாத்துமாவை ஈடேற்றுவதற்கு நேரான காரணமாவதில்லை. இயற்கையறிவைக் கிளர்த்தி விகாசமுறப் பண்ணுவதற்காகவே கல்வியறிவு வேண்டப்படுகின்றது.

நமக்குச் சிறுபிராயத்திற் போதிக்கப்பட்ட ஓர் விஷயம், நாம் பகுத்துணருஞ் சக்திவாய்ந்தபின் தவறாய்த் தோற்றினால், அதில் நம்பிக்கை தானே நழுவி விடுகின்றது. இது இயற்கை யறிவைச் சாதிப்பதால் நேர்வது. சிறு பிராயத்தில் போதிக்கப்படுங் கல்வி, யுத்தி உபமானம் அனுமானம் முதலிய மனோதத்துவங்களின் ஆராய்ச்சிக்கும், அனுபவத்துக்கும் மாறுபடாத கல்வியா யிருக்கவேண்டும். மனிதர் சன்மார்க்கர்களாய் அல்லது ஆஸ்திக சித்தர்களாய் விளங்கவேண்டுமென்று போதிக்கப்படுஞ் சமயக்கல்வியும், அறிவு ஏறிய பின்பும் யுக்தி அனுபவங்களுக்கு முரண்படாததாயிருத்த லவசியம். வெளியாய்க் கூறுமில் ஊனக்கண்கொண்டு பார்க்க



முடியாமலும் ஞானக்கண் கொண்டே பார்க்க வேண்டியு மிருக்கின்ற கடவுள் விஷயமாய்ப் போதிக்கப்படுங் கல்வி கடவுளைப் பற்றிய தத்துவஞானத்தைத் தழுவிய வளவிலேயே யமைந்திருக்க வேண்டும். சிறப்பு விதியாய் அவரவரின் மனோபரிபக்குவத்திற்கேற்ற ஆஸ்திகக் கல்வி சிலருக்கு வேண்டியதாயிருக்கவும் கூடும். ஆனால் பொதுவான வித்தியாலயங்களில் அவ்வித கல்வி போதிக்கப்படுதல் கஷ்டசாத்தியம். ஆதலால் சில பொதுவான மூலதாரக் கொள்கைகளைப் பலவிதமான மனோநிலைமைகளுக்கும் கூடியவரையில் பொருந்தும்படி சாவதானமாய்ப் பொருத்தின ஆஸ்திகக் கல்விமுறை யாவர்க்கும் பயன் படக்கூடியதாகவே யிருக்கும்.

மத விஷயமாய் மூட பத்தியான கொள்கைகளைப் போதித்தலால் தீமை விளையும். (எக்கொள்கை மூட பத்தியானதென்று தீர்மானிப்பது வேறு விஷயம்) உதாரணமாக: ஒருவனுக்குச் சிறுபிராயத்தி லிருந்தே "கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவருக்கு ஒருவன் வருஷாந்தம் நூறு ஆட்டுக்கடாப் பலியிட்டுவந்தால் பத்தாவது வருஷத்தில் கடவுள் பிரசன்னமாவார்" என்று போதிக்கப்பட்டதாக வைத்துக்கொள்வோம். இதை விசுவாசித்து அவ்விதம் நடந்தவனுக்குப் பத்தாவது வருஷத்தில் அப்போதனையினா லுண்டான விசுவாசங் கெட்டுவிடுகின்றது. இவ்விதமான சம்பவங்கள் பல. தான் போதிக்கப்பட்டு விசுவாசித்திருந்த கொள்கைகளுக்கு மாறாய் நேரும்போது, கடவுளைப்பற்றிய விசுவாசமே சிறிது சிறிதாய்த் தானே நழுவிவிடுகின்றது. தத்துவஞான உண்மைகளைத் தானே யுணருஞ் சத்தியும் அவனிடத்தில்லாதிருக்கின், அவன் வெளியரங்கத்தில் எவ்விதம் நடிப்பினும், அந்தரங்கத்தில் நாஸ்திகனாகவே யிருப்பான். இவ்விதம் நாஸ்திகனாகியவனுக்கு அக்காலத்திலே மூடபத்தியை உண்டுபண்ணாமல், கடவுளைப்பற்றிய லட்சணங்களைத் தக்கபடி போதித்திருந்தால் அவன் ஆஸ்திக சித்தமுடையவனாகவே யிருந்திருப்பான். ஆதலால் நல்லதோ தீயதோ ஒருமதக்கல்வியை ஒருவனுக்குப்போதித்து விடுவதனாலேயே ஒருவன் ஆஸ்திகனாயும் சன்மார்க்கனாயும் ஆகிவிடுவதில்லை. தப்பான ஆஸ்திகக் கல்வியைப் போதிப்பதினும் சாவதானமாய் நிர்மாணிக்கப்பட்ட பொதுவான ஒரு ஆஸ்திகக் கல்வி நன்மையைப் பயக்கும்.

சமயக் கல்வி போதிக்கப்படுவதாலேயே மனிதரெல்லாம் சன்மார்க்கர்களாய் விடுவார்களென்ற கொள்கை, இன்னும் சரியாய் அனுசரிப்பின் மேல் அறிந்து தீர்மானிக்கவேண்டிய விஷயங்களிலொன்றாகவே யிருக்கின்றது. ஏனெனில், பரோபகாரம், கருணை, தன்னலமறுப்பு முதலிய உயர்ந்த

மனோபாவங்களுள்ள சன்மார்க்கர்களாகிய நாஸ்திகச் சார்புடையோர் பலரையும், சனசமூகத்திற்கே தீமை புரியும் இழிந்த குணங்களும், தன்னலமுள்ள ஆஸ்திக சித்தமுடையோர் பலரையும், நாம் நுணுகி யாராய்ந்தால் இவ்வுலகிற் காணலாம். முற்கூறப்பட்டவர்கள் பெரும்பாலும் நவீன நாகரிகக்கல்வி யுடையோரிலேயே காணப்படுவர். ஆகவே மேனாட்டாரிலேயே பெரும்பாலாருளர். இவர்களுக்கு இந்து சமயத்திலுள்ள மேலான தத்துவ ஞானங்களைச் சரியானபடி யுணர்த்தினால், வேதாந்திகளாய் விளங்குவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

இனி, ஒருவன் நிலையான ஆஸ்திக சித்தமின்றி யிருப்பதினும் எவ்வகையதாயினும் ஒருமதத்தைத் தழுவியே யிருத்தல்வேண்டு மென்று விதித்தலுஞ் சிலசமயத்தில் தீமையையே விளைக்கும். ஜீவகாருண்ணியத்திற்கு மாறுபட்ட கொள்கைகளை மூலாதாரமாகக் கொண்ட மதங்களை அனுசரித்து அதுகாரணமாய் மனோபரிபக்குவ விருத்தி தடைபட்டு அதோமுகப்படுவதினும், சிறிது நிதானித்துத் தன் போத அறிவு திருப்திகொண்ட ஓர் மதத்தைத் தழுவுதல் அபாயகரமன்று. உயிர்களை வதைத்துப் புசித்தல், தன் மதத்தைத் தழுவாதவர்களை ஹிம்சித்தல் முதலிய பொது நீதிகளுக்கு மாறான கொள்கைகளையுடைய மதங்களை யனுசரித்துப் பிறவுயிர்களுக்கு இடுக்கண் வருவிப்பதினும் சிறிது தாழ்ந்ததேனும் ஓர்மதத்தில் நிலையுறுதல் உத்தமமன்றோ? மனிதரின் ஈடேற்றத்திற்கு விதியும், விலக்குமென இரண்டு வேண்டப்படுகின்றன. விதியிற் றவறுதலினும், விலக்கைச் செய்வதனால் பாவகன்மம் அதிகப்படும். ஆதலால் சாதாரண நிலையில் ஒருவன் விலக்கையே பிரதமத்தில் கவனிக்கவேண்டியவனாகிறான். தற்காலத்துள்ள சமயங்களில் விலக்கை, விதியாய்க் கொண்ட சமயங்களிருக்கின்றனவா வென்று ஆராய்தற்கு ஈங்கு அவசரமில்லை. ஆனால் அவ்விதமான சமயங்களிருக்கின்றன; அல்லது இருக்கக்கூடும், என்பதற்குப் பின் வரலாற்றைக் காண்க:—

ஓர்காணாத்தீவில் அநாகரிகமுள்ள சனங்கள் மூடபக்தியினால் நரபலியிடுதல் முதலிய பாவச்செய்கைகளை மதாநுசாரமாய்க் கொண்டிருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். இவர்கள் மோட்சத்திற்கு முக்கிய சாதனமாயுள்ள ஜீவகாருண்ணியம் ஞானம் என்பவைக்குப் பதிலாக, ஜீவஹிம்சை அஞ்ஞானம் ஆகியவற்றையே கடைப்பிடிக்கிறார்கள். ஆகவே, அம்மதத்திற் பிறந்த சிலர் அறிவு விருத்தியுற்றபின் தாம் அனுஷ்டிக்கும் மதம் தப்பானதென்று விலகி, அதிலும் மேம்பட்ட ஓர் மதத்தைத் தழுவுதல் தவறாகுமா? எல்லாம் பிரமத்தின் செயலே யாதலால் அம்மூடபக்தி



மதத்தில் ஒருவனைப் பிறப்பித்ததும் தெய்வமேயென்றும், ஆதலால் அதன் மனச்சாட்சிக்கும் யுக்தி நியாயங்களுக்கும் பொருந்தாததே யாயினும் அம்மதத்தையே யனுசரிக்க வேண்டுமென்றும் வாதித்தல் யுக்தமாய்த்தோற்றவில்லை. வனத்தில் வசித்துக் கொலை களவே தொழிலாய்க் கொண்ட ஒருவனுக்கு மகனாய்ப் பிறந்ததனாலேயே, ஒருவன் கொலைகளவு செய்யவேண்டுமென்று ஈசுவரசங்கற்ப மிருக்கவில்லை. கடவுள் நமக்கு அறிவை வளரப் பண்ணுவதெல்லாம் அவ்வறிவை உபயோகித்து நல்விருத்தி மார்க்க முறுதற்கே.

இஃதிங்ஙனமாக, இக்காலத்திற் சிலர் மனிதர்க்குள் சுவதந்திர எண்ணம் என்று ஒன்று புதிதாய் முளைத்திருப்பதாகவும் அதனால் மனுகுலத்தார்க்கே ஆபத்துக்கள் விளையப்போவதாகவும், பொய்த்தோற்றங் கண்டு அஞ்சுகின்றனர். சுவதந்திர எண்ணம் ஒருகாலமும் மனிதனைப் பந்தத்துக்குட் கொண்டுவிடாது. இதற்கு மாறாய் அவனை விருத்திக்கிரமமாய் மோட்சத்திற்கே கொண்டு செல்லு மென்பது நமது சாஸ்திரங்களின் துணிபு. நம்மிடத்திற் கிளரும் அறிவை யுபயோகித்து ஆராய்ச்சிசெய்யச்செய்ய, இவ்வுலக விஷயங்களின் மெய் பொய் இன்பதுன்பங்களையும், தத்துவ உண்மைகளையுமே அறிகிறோம். ஆகவே ஈசுவரனின் அபாரமகிமைகளையே உணர்வதற்கும் நிவிர்த்திமார்க்கத்தைத் தேடுவதற்கும் அது சாதகமாகவே ஏற்படுகிறது. ஒருவேளை அவனது மனதில், தனது பூரணமுறாத ஆராய்ச்சியின் பயனாய் ஒரு சகுணமுள்ள கடவுள் இருத்தல் சாத்தியமன்றெனவும், சிருஷ்டி திதி சங்காரங்கள், இயற்கை (nature) என்ற தத்துவத்தின்படி நடைபெறுகின்றன வென்றும், மேகத்தினிடையில் மின்னல் தோன்றி மறைவதுபோல ஓர்வித நாஸ்திக எண்ணம் எழக்கூடும். ஆனால் அவ்வெண்ணம் நிலையுறக் கூடியதன்று. "மனங்குவிந் துரைமாளுதல்" பந்தத்திற்கு ஏதுவென்றும், "மனம் விரிந்துரை மாளுதல்" மோட்சத்திற்கு ஏதுவென்றும் நமது பெரியோர் கூறியிருப்பதின் தத்துவ உண்மையும் மேலே கூறப்பட்டவைகளை வலியுறுத்தும்.

இனி, ஸ்ரீமந் மாணிக்கவாசப் பெருமானே "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" மத ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டாரென்றால் எம்போல்வார் அறிவில் மயங்குதல் அதிசயமன்று. முன் கூறப்பட்ட சுவதந்திர எண்ணத்திற்கு நெருங்கிய படியில் "தன்னிஷ்ட எண்ணம்" என்றொன்றும் மனிதனுக்கிருக்கின்றது. அதுதான் மனம் போனபடி தீய எண்ணங்களையுஞ் சங்கற்பிப்பது. பிறர் கேடுறினும் தானின்புற விரும்புதல்,

தன்னின் மேம்பட்டானொருவனைப் பொறாமையால் தனக்குக் கீழ்ப்படியி னுள்ளவனாக்கி வைக்கக் கருதிச் சதியுபாயங்களை மனதிற் சங்கற்பித்தல், ஆகிய இவைபோல்வன தன்னிஷ்ட எண்ணத்தின் பாற்பட்டவை. இவை களை அடக்கப்பட வேண்டியவை.

மேலும், அறிவில் விருத்தி யடைவோர்க்கோ ஆசங்கைகளும் நிகழ்தல் சகஜமே. இவ்வாசங்கைகளைத் தீர்த்துக்கொள்ளாமல் மனதிற்பொதிந்து மூடுவதால் அநேகருக்குத் தீமையே விளையும் ஆனால், அறிவில் மேம்பட்டோர் அவ்வாசங்கைகளை உடனே தீர்த்துக்கொள்ளத் தருணமின்றி யிருப்பினும், அதனால் தமது பொதுநிலையில் ஒருவித மாறுபாடும் ஏற்படா வண்ணம் அவ்வாசங்கைகளை ஒதுக்கி வைத்திருந்து காலாந்தரத்தில் தீர்த்துக்கொள்வார்கள். எம்பெருமான் தாயுமானவரே பின் வருமாறு ஓர் காலத்தில் ஆசங்கித்தா ரென்றால் நம்போல்வாரது மனதில் ஆசங்கை நிகழ்தல் தவறாகுமா?

அம்மகான்,

இன்றோ விருவினைவந் தேறியது; நானென்றோ அன்றே விளைந்த தன்றோ; ஆற்றேன் பராபரமே.

என்னமுந்தா னின்னைவிட்டு இல்லையென்றால் யான் முனமே, பண்ணவினையேது; பகராய் பராபரமே.

என்னை யின்னதென் றறியா ஏழைக்கு மாகெடுவேன், முன்னைவினை கூடல் முறையோ? பராபரமே.

அறியா நான் செய்வினையை ஐயாநீ கூட்டுங், குறியேதெனக்குளவு கூறாய் பராபரமே.

என்னைக் கெடுக்க இசைந்த இருவினை நோய், தன்னைக் கெடுக்கத் தகாதோ பராபரமே.

வல்லமையே காட்டுகின்ற மாமாயை நானொருவன், இல்லையெனி லெங்கே இருக்கும் பராபரமே.

என்று பிரலாபித்திருக்கின்றார்.

பல ஜன்மங்களில் உலக இன்ப துன்பங்களால் அடியுண்டு அலுத்து ஒன்றிலும் நிலையான இன்பத்தைக் காணாமல் உபசாந்தியை அவாவி நிற்பவனே இவ்வித ஆராய்ச்சியால் உறைத்து நிற்பான். இதுவே அவன் ஸார்த்துவகதி நோக்கி விட்டானென்பதைக் குறிக்கும்.

ஞானகாசம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916௵ நவம்பர்௴ [பதிகு கக.

## தைத்திரீயோப நிஷத்து.

### நாராயணவல்லி.

#### அநுவாகம் க.

அநேகவித சமுத்திர மத்தியிலிருக்கிற ஜலத்திற்கு அக்கரையில் யாதொரு பெரிய லோகாலோக பர்வத முதலியன விருக்கின்றனவோ அவற்றை விடவும், இந்தப் பரமேச்வரன் மிகவும் பெரியவர். பிருதிவி முதலிய லோகத்தின் மத்தியில் யாதொரு பெரிய மேரு முதலிய பர்வத முண்டோ அவற்றை விடவும் நிரம்பப் பெரியவர். சுவர்க்கத்துக்குமேல் யாதொரு பெரிய பிர்ம்ம லோகாதி யுண்டோ அவற்றை விடவும் நிரம்பப் பெரியவர். பிரகாசிக்கிற ஜீவசைதன்ய ரூபத்தால் பிரகாசிக்கிற அந்தக் கரணங்களிற் செவ்வையாக அவர் பிரவேசித்தார். பிரம்மாண்ட ரூபகர்ப்பத்தின் மத்தியில் விராட்ரூபமா யிருக்கிறார்.

இந்தச் சமஸ்த ஜகத்தும் எந்த அவ்வியாகிருதத்தில் அதாவது மூல காரணத்தில், சிருஷ்டிகாலத்தின் உற்பன்னமான சத்துப்போய்ச் சேர்ந்து விடுகிறதோ, சங்கார காலத்தில் லயமடைந்த சத்து வெளிப்பட்டதாகிறதோ, இரண்ணியகர்ப்பர் விராட் அக்கினி இந்திரன் முதலான சமஸ்த தேவதைகள் எந்த மூலகாரணத்தில் விசேஷமாய் ஆசிரயித்திருக்கிறார்களோ, அதுவே சிருஷ்டி சங்காரங்கட்கும் தேவதைகட்கும் ஆதாரமான அவ்வியாகிருதமே. முன்னிருந்த ஜகத்தும் வரப்போகிற ஜகத்தும் இப்போதிருக்கிற ஜகத்தும் அந்த அவ்வியாகிருதமே. அத்தகைய அவ்வியாகிருதம் விநாசமற்ற உத்கிருஷ்டமான ஆகாசம்போல அமூர்த்தமான பரமாத்மாவிலிருக்கிறது.

எந்தச் சத்சித்ரூபமான காரணத்தால் அந்தரிக்ஷலோகமும் த்யுலோகமும் மகிபூலோகமும் இவையெல்லாம் வியாபிக்கப்பட் டிருக்கிறதோ, எந்தப் பரமேச்வரனால் அனுக்கிரகிக்கப்பட்ட சூரியன் தன்னுடைய மண்டலத்திலிருக்கிற பிரகாசத்தாலும் பிரசரிக்கும் கிரணங்களான பிரகாசத்தாலும் சமஸ்த ஜகத்தும் பிரகாசிக்கும்படி செய்கிறானோ, ஞானிகள் பரமாத்மாவைச் சமுத்திர சப்தத்தால் குறிப்பிடப்பட்ட சகல சகத்திற்கும் மத்தியில் நூல்கள்போல் அறிகிறார்களோ அந்தப் பிரம்மம் நாசமற்ற உத்கிருஷ்டமான நிஜஸ்வ ரூபத்திலிருந்து கொண்டு பிரஜைகளைப் பண்ணுகிறது.

முன் சொல்லிய ஜகத்தின் சிருஷ்டியானது எந்த அவ்வியாகிருதத்துடன் கூடின சைதன்யத்தினின்றும் பிரவிர்த்தித்ததோ, அது ஜலத்தால் உபலட்சிதமான பூதபஞ்சகத்துடன் மனுஷ்ய பசு முதலிய ஜீவ தேகங்களைப் பூமியில் சிருஷ்டித்தது. மாயையுடன் கூடின சைதன்யமாகிற காரணம் நெல் எவை முதலியவைகளால் கூறப்படும் அன்ன மாவாகி மனிதர்களையும் பசுக்களையும் சராசரங்களான பூதங்களையும் ஸ்தாவர ஜங்கமமான சர்வசரீரங்களையும் பிரவேசித்தது. விருட்சங்களில் மழை ஜலரூபமாகப் பிரவேசித்தது. இந்தச் சைதன்னியத்தால் சகல ஜகத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறது.



எந்த வஸ்துவானது உத்கிருஷ்டமான இரணிய கர்ப்பாதிகளைவிட அத்தியந்த முத்கிருஷ்டமோ, எது ஆகாச முதலியவைகளைவிட பெரியதாயிருக்கிறதோ, எது ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேத மற்றதோ, இந்திரியத்திற்கு விஷயமன்றோ, தேசகாலவஸ்து பரிச்சேத மற்றதோ, ஜகத்ஸ்வரூபமோ, அனுதிசித்தமோ அஞ்ஞானமாகிற தமசுக்கு வேறாக விருக்கிறதோ, அத்தகைய வஸ்துவைவிட அத்தியந்தம் பார்க்கக்கூடாததாயும் உத்கிருஷ்டமாயும் இருக்கிற வேறு வஸ்து இல்லை.

மனதினாலுள்ளபடி சிந்தித்தல் ரிதம்; வாக்கினால் அதை யுச்சரித்தல் சத்தியம் இவ்விரண்டும் அதிஷ்டானமான பிரம்மமே ஞானிகளுக்கு வேத சாஸ்திர பாரங்கதர்களுக்குப் பிரமாணமாக விருப்பதா லாதரிக்கும்படியான யாதொரு வேதரூபவஸ்து உண்டோ வதுவும், அவர்களுக்கு அதிஷ்டானமான பரப்பிரம்ம ஸ்வரூபமே தர்சபூர்ணமாசாதி சுரௌதகர்மம் என்ன குளம் வெட்டல் முதலிய ஸ்மார்த்தகர்மம் என்ன இவ்விரண்டும் அந்தப் பிரம்மமே. அப்படியே யிப்போது முண்டாயிருக்கிற சமஸ்த ஜகத்தையும் சக்கிரத்தின் குடம்போலச் சகல லோகத்துக்கும் ஆதாரமான பரமாத்மா தரிக்கிறார். ஆதீயமான சர்வமு மதிஷ்டானரூபமே அக்கினியும் வாயுவும் சூரியனும் சந்திரனும் பிரகாசிக்கிற நட்சத்திர முதலியனவும் தேவர்களால் சேவிக்கப்படும் அமிருதமும் அதிஷ்டான பிரம்மமே, ஜலத்தால் உபலட்சிதமான பஞ்சபூதங்களும் விராட்ரூபமும் அந்த வதிஷ்டானமே.

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தேவாரக் குறிப்பு.

### தொகுதி 5. பக்கம் 225. தொடர்ச்சி.

மைப்படிந்த கண்ணாளுந்தானுங் கச்சிமயானத்தான்வார் சடையான் மாசொன்றில்லான், ஒப்புடையனல்ல னொருவனல்ல னொருவமனில்லி, அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படிய னிந்நிறத்தனிவ் வண்ணத்தனிவ னிறைவனென் றெழுதிக் காட்டொணாதே.

மயானத்தான் வார்சடையா னென வாக்கு மனம் பற்றி யுரைத் துணர்த்துமாயின், அவன் அவ்வாக்கு மனாதீதனாய் நிற்றல் செய்கின்றா னென்னை? யவற்றானோதி யுணர்தற்குரிய வொப்புடையனாகலும், அதுபற் றிவைகுமோரு ருடையனாகலும் அல்லனாகலான். ஆகவி னவ்வாற்றா னோதியோதியுளர்தற்குரிய அவ்வொப்பு முதலிய மூன்று மிலனாய அவ னது அவ்வாக்கு மனாதீதத்தில் கோசரிக்கு மியல்பாய அப்படி முதலிய மூன்றனையும் அறியு மறிவு அவனருளேயாகக் கொண்டு அறியலுறினாண் டேயறியப்படும். அவ்வாறன்றி யம்மூவே றியல்பிவை, அவற்றையுடைத் தாய அவ்விலக்கியப் பொருளிஃதென வுலகப் பொருள்போல் இவ்வுலகப் பொருள்களுக்கு மளவை பற்றி யறிவுறுத்த லாகாதென்றவாறு.

ஏனைப்பொருளின் வேறுபடுத்துமோ ரியல்பாய முடிதலின் அல்லா னெனப்பட்டது. ஒன்றலாவொன்று என்றதுமது. முன்வரும் அல்லன் இறுவாய் மூன்றும் மேல் நிற்கும் அல்லானெனஎன்னு மேற்கோளைச்சாதிக் குங் குறிப்பேதுவாய் நின்றன. உவமனில்லி யென்பது மேல்நிற்கும் மூன்றனையு முளப்படுத்துஞ் சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது. ஆண் டாறுவது விகாரத்தாற் றொக்கது. இல்லியென்பது வில்லியென்றாற்போல நின்ற குறிப்பு வினைப்பெயர். ஏனையபோறல் அன் ஈறுபடுத் தோதாமை



பற்றியு மஃதங்ஙனமாத லறிந்து கொள்க. கண்ணவனருளே யாகவென மாறுக அறியு மென்பது சொல்லெச்சம். கண் அறிவு ஆவது காணினென வே காண்டற்கருவி அதுவே யாகலும் அனுவாகமுகத்தா னீண்டே பெற்றும். எழுதிக்காட்டல் — ஆகம வளவை பற்றி யறிவுறுத்தல். அது கூறவே அதனை வலியுறுக்கும் அனுமான வளவையும் ஆண்டே யடங்கு மென்ப துணர்த்தற் பொருட்டு எனின் என்றார். உரையளவை யென்ப துணர்ந்து கோடற்கு அளவை யறிவைப் பிரித்தமையின், ஏகாரம் முன்னை யது பிரிநிலை. பின்னையது ஈற்றசை. "அல்லை யீதல்லை யீதென மறைகளுமன்மைச் சொல்லினால் துதித்திளைக்குஞ் சுந்தரன்" எனவும், "பூதங்களல்ல பொறியல்ல வேறு புனலல்லவுள்ள மதியின், பேதங்களல்ல விவையன்றி நின்ற பிறிதல்லவென்று பெருநூல், வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளி யென்பர் கூடன்மறுகிற், பாதங்கணோவ வளையிந்தனாதி பகர்வாரையாயு மவரே" எனவும், "முன்னதின் முன்னென மொழியுமே யெனின், பின்னதிற் பின்னுமாய்ப் பேச நிற்றியால், அன்னவையே யெனிணொழிந்த தல்லையோ, வென்னென நின்னையா மேத்துகின்றதே" என்றற்றொடக்கத்த பற்றி யுருவும் அருவு மென்னு மிருகூற்றுப் பிரபஞ்சத் துள் ஒரு பொருளாய் வைத்தெண்ணப்படான் என்பார் "அல்லான்" எனவும், ஊர் பேர் உருவுடைய ரொருவர்க்கே யொப்பு முதலிய வுளவாம் அவர்க் கவையின்மையின் அளவை பற்றி யறிவுறுத்தற் கெடுத்துக்காட்டு மவ்வெடுத்துக் காட்டு முதலிய மூன்று முள்ளாகா னென்பார் "அலனல்லனல்லன்" எனவும், இருவினையொப்பு நிகழ்ந்து அருள்வழி வழுவாது நிற் பார்க்கு அவ்வியல்பு தெளிய படுமன்றி யது வழீஇனார் தாம் தெளியப் படாதது உ மன்றி தெளிந்தார் தெளிப்பினும் அது தெளியாதென்பார் "ஒணாது" எனவும், வைத் துபதேசித்தருளினார்.

இனி "என்னி னல்லான்" என்பது பாடமாயினென வெடுத்தோதி லது பேதைபருவத்துப் பெண் காமநூற்பொருளுணர்ந் துரைக்குமாறு வாசகஞானமாய் முடியுமன்றிப் பிறிதன்றென் றுரைத்துக்கொள்க. இப் பொருட்கு அன்றி யென்பது அல்லாலெனத் திரிந்து நின்றதென்பது. எனின் ஒப்புடையனல்ல னல்லாலெனக் கூட்டுக. என்னினல்லா னென் பதனை என்னின் + னல்லால் எனக் கண்ணழித்து நல்லாள்போல வென வைத்துரைத்தலு மொன்று இதற்கொற்றுமைபற்றி ளகரம் ளகரமாயிற்று. நல்லாளென்பதீண்டுப் பேதைப்பருவத்துப் பெண்மேல் நின்றல்.

## வேறு பொருள்.

உலகப் பொருளெல்லாம் வாக்கு மனங்களா னோதி யுணரப்படும். ஆகலினவற்றுட் படாமைபற்றிப் பொருளல்லனாய அவன் என்னைப்போலுருவுடையனா யோரிடைப்பட்டு ஒரு துணைவியோடு கூடிவாழுமாற்றான் அவ்வுலகரெடுத் தோதப்படும் உவமையை யுடைத் தொழிப்பானன்றி யொருபுடைத் தன்மை யுண்மையின் அஃதுடைமைபற்றி யொருவனுமாயினும் அநேகமாய வுயிர்களின் வேற்றுமையற்றுக் கலந்து நிற்கும் இயல்பு பற்றி அநேகனுமாமாகலின் ஏகனாதலும் அதுபற்றியவன் வைகுதற் குரித்தாயவூர் ஒன்றென வரை யறுக்கப்படாமையி னுரியதோரூரும் இலனாமன்றி யுளனாகான் இனி யவ்விரண்டு முடையர்தாமே ஒன்றனோ வேக்கப் படுதல் உலகின்கட் கண்டாமன் றேயவற்கு அவையின்மையின் அதுவுமிலனாதல் தானே போதரும். அற்றேல் இவ்வாற்றான் அறியப்படாமை பற்றி அவனியல்பு எவ்வாற்றானும் அறியப்படாதுபோலு மெனமலையற்க. ஏனைப்பசுபாச அறிவின் மேம்பட்டு நின்று தாமறியும் அறிவு அவனருளேயாக வைதத றிக. என்றவாறு.

"சிலமோவுலகம் போலத் தெரிப்பரிதவன் றானின்றகோலமு மறிவாரில்லை." என்றதுமது.

அன்மைக்கு மறுதலைப்பொருள் வருவித் துரைக்கப்பட்டது அல்லானெனின் மயானத்தான் வார்சடையான் ஒப்புடைய னல்லன் எனவியையும் உடையன்—இறந்தகால வினைப் பெயர். உடையன்—உடைத்தல் செய்தவன். உடைத்தல்—ஒழியச் செய்தல். ஆகலான், ஆயினும், என்பன சொல்லெச்சம். ஏனைய வற்றிற்கு மேலுரைத்தாங்கு உரைக்க. என்னின் என்புழி இன்—உவம உருபு. ஆண்டு இரண்டாவது தொக்கு நின்றது.

இது வார்சடையான் என்னின் அல்லான் ஒப்புடைய னல்லன், ஒருவனல்லன், ஒரூரனல்லன், ஒருவமனில்லி என்னும் பாடத்திற்கு எனக் கொள்க.

## 3-வது. வேறுபொருள்.

நமக்கு இறைவனாவா னொருவனுளனேல் ஆகுக. ஒருவன் ஒருவற்கு அறியாப்பொருளை அறிவுறுக்கு முபாயமாவது அறிந்தபொரு ளொன்றின் வைத்துக்காட்டி அஃது இஃதன்னது என அவ்வொப்புமையானே



முதற்கண் நிருவிகற்பத்தின் வைத்துத் தெரிப்பப்பின்பு அவன் அது வைகுழிப்போந்துநேரே சவிகற்பத்தின் வைத்து அறிந்துகோடல் உலகின்கட் கண்டாமன்றே? அதுபோல நமதிறைவர்க்கு ஒப்புறுத்தும் அவ்வொப்பும், அதுபற்றி அறியும் பொதுவியல்பும், அதற்குரிய நிலைக்களமும், அவ்விறைமையீந்தாரும் ஆய இன்னவை உளவோ இலவோ எனின்! அற்றன்று அனாதிபெத்த சித்துருவாய உயிர்கள் வாக்கு மன கோசரமாமாறு தெளியக் கண்டு வழிப்பட லாகாமையின் அவைதாம் தம்மைச் சோபான முறையான் வைத்து, எளிதின் வழிபட்டுய்தற் பொருட்டு மூவேறு வடிவுடையன் ஆகலின் அவற்றுள் அவன் தாதான்மிய சத்தியும், கச்சிமயானமே தனக்குரிய நிலைக்களமும், ஆண்டே நிலைபேறுடைய அவ்வடிவுமுடையன் என அவனுடைய பொதுவியல்பை முன்னர் சிந்தித்தறிந்துகொண்டு அவ்வாற்றானே பின்னர்ச் சிறப்பியல்பும் அறியப்படும். மற்றிம் முறையானன்றி அனீசராயநம்மனோர் போல் அவன் தன்னோ டொப்புறுத்தும் ஒப்புப்பொருள் யாதும் இலனாமன்றி உளனாகான். அவ்விறைமையுடையர் பலருளராகலின், அங்ஙனமாகவே அவர்க்குரியதொரு திருவுரு அதற்குரிய நிலைக்களமாய ஊர் எனவும், அவ்வாறே இலனாமன்றி யுளனாகான். இவை இலனாகவே தன்னின்மிக்கார் இலனாமென்பது தாமே போதரும்.

அற்றேல் முற்றொப்போது மாறின்றேனும் ஒருபுடை யொப்புப் பற்றி உத்தேசம் பொதுவியல்பு சிறப்பியல்பு என்பன நூல்களுட்கேட்கப் பட்டன வன்றே யெனின், பேதைப் பருவத்துப் பெண் காமநூற் பொருளுணர்ந்து சொல்லுமாறுபோல அவனியல்பும் பொதுவகையான், அங்ஙனமாயினும் அதற்கெடுத்துக் காட்டுமவ் வொப்புபற்றி யறியுமுத்தேசம் அதுபற்றி யறியும் பொதுவியல்பு, ஏனைச்சிறப் பியல்பாய விவை தம்மை தன்னறிவென் வேறாய் முனையாது அவனறிவினுளடங்கி அவனறிவுதான் அதற்குரிய வறிவாக வைத்து அறிக.

இவ்வாறன்றி யவனிவ் வொப்புடையன் இவ்வுருவுடையன் ஆகலினவற்குப் பொதுவியல்பிது இருந்தவாற்றான் எமதிறைவனே யெனக் கொண்டு குறையறிவாகிய பாசவறிவான் அறிவுறுத்தலாகாது. பசுவறி

வும் இவ்வியல்பிற்றுகாலா னதனியல்பு மன்னதே யாமென்றொழிக. என்பது குறிப்பெச்சம்.

அல்லுழி யிலனுகலின், கோயிலுளதாய வித்தலத்தி னிறைவனுளன் என்னுமொருசாரார் வழக்குப்போல பொதுவகையான் ஒருவாறெடுத் தோர்தவும் அவ்வாறுணரவும் படுமென்றி, யவனதுண்மை யியல்புணர்தற் குரிய வுவமை முதலியன இன்றென்பார் "ஒப்புடையனல்லன் ஒருவமனில்லி" எனவும், வழங்கற்பட்டபாலதாமாறு ஒப்புமுதலிய வுடையனுக அங்ஙனம் வைத்தோதப்படுமாயினும் அவனியல்புள்ளவா றறிய வுறுவார்க்கு எந்தை தாட்பால் வணங்கித் தலைநின்று கேட்டலாய சிவஞானத்தானன்றி யேனைப் பசுபாச வறிவுகளான் அறிய லாகாதென்பார் "அப்படியும் எழுதிக் காட்டொணுதே" எனவும், அருளிச் செய்தார்.

போகமோக்ஷ மிரண்டனையு மீயுமுழுமுதற் கடவுளென்பார் "மைப்படிந்த சடையான்" எனவும், அசிந்திதனுய் நிற்கும் தான் உயிர்கள் பொருட்டுச் சிந்திதனுய் நிற்பினும், அசிந்திதனுதற் கிழுக்கின் றுகலின் "திறம்பிய பிறவிச் சில தெய்வம் போலாது அவ்விழுக்குகட்கு நெடுஞ் சேய்த்தாய இறப்பியல்புடைய னென்பார் மாசொன்றில்லா" னெனவுங் கூறினர்.

இதனுனே இறைவனுக்குத் தள்ளப்பட்ட குணங்கள் இவையென்பதூஉம், கொள்ளப்பட்ட குணங்களிவை யென்பதூஉம், அவற்றை யறியுமாறிதுவென்பதூஉம் கூறப்பட்டன.

(இஃதன்னது—அதுபோல்வது.) அனீசர்—சுதந்தர மில்லாதவர். ஈசன்—சுதந்தர முடையவன். தலைமையுடையன். (அன்மை இன்மைச் சத்தங்களெல்லாம் தள்ளப்பட்ட குணங்கள்) (அல்லுழி) இன்றுகலின்—கோயிலில்லா விடத்துச் சுவாமியில்லை.

வி. குஞ்சிதபாதம் பிள்ளை,
வீரசோழகன்
ஸ்ரீசிவஞானத்திருத்தளி
ஸ்ரீ சிதம்பரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முத்திரை.

முத்திரை யென்பது சூலக்குறி. பண்டைக்காலத்து அரசர்போர்க்களத்துப் பெற்ற தமது மார்பின் சூலக்குறியை மோதிரத்திலமைத்துக் கைச்சாத்து முதலியவற்றில் பொறித்துக்கொண்டு வந்தமையால் அதற்கு முத்திரையெனப் பெயர் வந்தது.

முத்தல மென்பது முத்தரம், முத்தரை, முத்திரை என வழிவழித் திரிந்தது. முத்தரம்—முத்ர தலமென்பது மூங்கிலையையும் மற்றைய இலை முதலியவற்றையும் உணர்த்தி நிற்கும்.

மூங்கிலை அச்சவடிவாயும் கூர்மையாயும் இருத்தலால் அவ்விலைபோல் இரும்பினுல் மூன்று வடிவமாகச் செய்யப்பட்ட ஆயுதத்திற்கு முத்தல மென்பது பெயர்; இதுவேசூலம். பிறகு முத்தல மென்பது முத்தலையாயிற்று.

முத்தலைவேல்=மூவிலைவேல்.
முத்தலைவேலோன்=சிவன், வயிரவன்.

"காளநல்வசி சூலம் கழுமுள்
மூவிலைவேலே முத்தலைக் கழுவெனல்"

என்ற சூலத்தின் பெயருள் மூவிலைவேல், முத்தலை என்பவற்றானுந் தெளிந்துகொள்க. மூவிலைவே லென்பதுள் இலை மூங்கிலை யென்பதே பொருள்.

"கவிரேதி நாட்டம் கடுத்தலை நாந்தகம்
வசியே கட்கம் வஞ்சம் காளே". (பி-தி)

என்ற வாளின் பெயருள் கடுத்தலை யென்பதற்குக் கூரிய மூங்கிலிலை போல்வதென்றே பொருள்கொள்ள வேண்டும். மூங்கிலைகளுக்குள்ளது

"முன்னளந்த மூவர்க்கும் முதலானான் காண்
மூவிலைவேற் சூலத்தெங் கோலத்தான் காண்."
(திருக்கோகரணம் அ-தே)

தலமென்னுஞ் சொல் இலையென்னும் பொருளில் பழந்தமிழி லிருந்தது. வழுதலை யென்பது முதல் பார்ப்பார முள்ளியையும் பிறகு இனமாகிய கத்தரி முதலியவற்றையும் உணர்த்தும.

வழுதலை = முள் நிறைந்த இலைகளையுடையது
வள் = கூர்மை. தலம் = இலை.
வளுதலம் — வழுதளம் — வழுதணம் — வழுதணை
— வழுதுணை = கத்தரிக்காய்.

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" (ஔவைபாடல்)
தண்டலை = சோலை, பூந்தோட்டம், ஊர்.
தண்டலம் தண்டலை யாயிற்று.
தண்டலம் = சோலை, குளிர்ந்த இலைகளையுடையது.

தண்டலம் ஓர் ஊருமாம்

தலம் — தளம் — தளிர் — தளிர்த்தல்
தளம் — தழை — தழை — தழைத்தல்

கீரை தளதளென வளர்கின்றது.

"தளங்கிளருந் தாமரையா தனத்தான் கண்டாய்" (அ-தே)

இதனால் தலமென்னும் சொல்லுக்கு இலையென்னும் பொருளுண்டென்பது துணிபாயிற்று.

தலம் = மூங்கில், இலை தழை முதலியன.

இனி சூலத்தை யுணர்த்தும் முத்தலையென்பதற்கு மூங்கிலிலைபோல் வதென்னும் பொருளே துணிபாகின்றது. இம் முத்தலை யென்பது முத்தரை முத்திரை யென்றாய்ச் சூலக்குறியையும் அடையாளத்தையும் உணர்த்தும். இதுவே முதல் முதலுண்டாயது. முத்திரைக்கோல், முத்திரைப் பலகை, முத்திரைக்கல், முதலியவற்றானும் தெளிக.

"பெருமுத்தரையர் பெரிதுவந்தீயும்
கருணைச் சோறார்வர் கயவர். (நாலடியார்-தாளாண்மை)

"நெல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே
செல்வரைச் சென் றிரவாதார். (நாலடியார்-மானம்)

என்பவற்றுள் முத்தரையர் என்பது முத்தலையரென்பதன் றிரிபு.



லகரம் ரகரமாயிற்று. முத்தலையரென்பதற்குச் சூலத்தாற் குத்திப் பொருதவல்லா ரென்பது பொருள்.

இம்முத்தரையர், பாளையகார வகுப்பினைச் சேர்ந்தவர்கள். பாளையகாரராவார் அரசர்க்குக் கீழ்ச் சில சேனையோடும் ஒவ்வோர் புறங்களுக்கு அதிகாரிகளாக இருப்போரும், கூடாரத்தி லிருப்போரும், படைத்தலைவருமாவார். இவருட்சிலர் ஊர்காவலருமாவார். ஊர்காவல ரெனினும் தலையாரி யெனினும் ஒக்கும். இவர்களுக்கு முத்திரிய ரென்னும் பெயருண்டு.

முத்தலையா ரென்பது தலையாரி யெனவும், முத்தரைய ரென்பது முத்திரிய ரெனவும் திரிந்தன.

முத்தலையார = சூலத்தாற்குத்திப் பொருதவல்லார்.

இவர்கள் ஊக்கமும் வஞ்சமும் ஒருப்பாடு முள்ளவர்கள். வாய்ப் புழிக்கொலை செய்வதற்கும் அஞ்சார். இவர்கள் சூழ்ச்சியைத் தேவர்களும் அறியார். இவ்வகுப்பாருள் பொருதுவென்று ஊர்ப்பரிசு முதலியன பெற்றார் செல்வராயினர். அதனால் முத்தரைய ரென்பதற்குப் பெருஞ்செல்வ ரென்னும் பொருள்வழக் குண்டாயிற்று. இவர்கட்குக் கோட்டை முதலியன வுள்ளன. இவர்களை ஒருவரும் எதிர்க்கலாகாது எதிர்க்கின் அவர்தலை போய்விட்டது. பழைய பாளையபட்டைச் சார்ந்த கிணறுகளை ஆராயின் அவற்றுள் மனிதருடைய மண்டைகளே கிடைக்கும் "வீரன்கேண்மை கூரம்பாகும்."

## மோதிரம்.

முத்தரம் என்பது மோதிரம்—மோதிர மென்றாய்ச் சூலக்குறி பொறித்த விரலணியை யுணர்த்தும்.

பிறகு மோதிர மென்பது பொதுப்பெய ரானமையின் முத்திரை மோதிர மெனப்படலாயிற்று.

கணையாழி; கணை = அம்பு. அரசன் தனது மார்பின் அம்புக்குறிப் பொறித்த மோதிரமென்பது பொருள்.

மோதிரம் = சூலக்குறியுள்ளது. கணையாழி = அம்புக்குறி யுள்ளது. தம்முள் வேறுபாடுணர்க.

மோதிரம் முற்பட்ட வழக்கு; கணையாழி பிற்பட்டவழக்கு.

முத்திரையை யுணர்த்தும் சாபா என்பதற்கும் விற்குறி யுடையதென்பதே பொருள். சாபம் = வில்.

விற்குறி யெனினும் அம்புக்குறி யெனினும் ஒக்கும். பிறவும் ஆராய்ந்துணர்ந்து கொள்க.

மாதுறல்-கார்த்திகேய முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அர்ச்சுனனும் பாண்டிய மரபும்.

தொகுதி, 5. பகுதி 9. பக்கம் 198. தொடர்ச்சி.

உலகத்தில் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் வகுப்பு அல்லாதவர்களை வேறு பெயரிட்டு அழைப்பது வழக்கம். இது சரிதக்காரர் துணிபு. உதாரணமாக:—

(a) கிறிஸ்தவர் தங்களை **ஞானிகள்** என்றும் ஏனையோரை அஞ்ஞானிகள் என்றும்

(b) மகமதியர் தங்களை இஸ்லாம் மதத்தினர் என்றும் பிறரை **கர்ப்பிரிகள்** என்றும்

(c) சீனர்கள் தங்களை **வானவர்** என்றும் மற்றவர்களை **நரகர்கள்** என்றும்

(d) கிரீக்ஸ் தங்களை க்ரீக்ஸ் என்றும் அன்னியர்களை **எரிடிக்ஸ்** என்றும்

(e) தமிழர் தங்களை **தமிழர்** என்றும் இதரர்களை **மிலேச்சர்** என்றும் அழைப்பது வழக்கு.

இவ்வழக்கை நூல்களினால் அறியலாம். ஆரியர்கள் முதன்முதல் இந்நாட்டிற்கு வந்து சிந்து நதி தீரத்தில் குடியேறின பிற்பாடு கங்கைக்கும் சரஸ்வதிக்கும் இடைப்பட்ட நாட்டையும் கைப்பற்றிக்கொண்டார்கள். பின்னால் ஆரியாவர்த்தம் (இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடைப்பட்ட நாடு) பூராவையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அக்காலத்தில் தமிழர்கள் ஆரியர்களை "மிலேச்சர்" எனக்கூறி அழைத்தார்கள். (vide பிங்கலந்தை நிகண்டு "மிலேச்சர் ஆரியர்"). அவர்கள் பேசும் ஆரிய பாஷையை மிலேச்ச பாஷையெனக் கூறினார்கள். அவர்கள் குடியேறிய நாட்டிற்கு "மிலேச்சர் நாடு" என்று கூறினார்கள்.



(1) ஆரியர்கள் நரபலி மிருகபலி, இவைகளைச் செய்து மாமிசம் புசித்தார்கள்.

(2) சோமபானம் என்ற ஒருவிதக்கள்ளை அருந்தினார்கள்.

(3) தமிழத் தாபதர்களுக்கும் பெண்களுக்கும் கெடுதியைச் செய்தார்கள்.

(4) தமிழர்களைக் கண்டால் கருவறுக்கும் தொழிலையுடையவர்களாயிருந்தார்கள்.

(5) இரக்கம் என்பது சிறிது இல்லாதவர்களாயிருந்தார்கள்.

(6) தமிழர்களில் இழிந்த சாதியர்களாகிய பறையர், சக்கிலியர், செம்படவர், வண்ணார் முதலிய சாதிகளுடன் உறவாடிக் கலந்தார்கள்.

இன்னும் விரிக்கிற் பெருகும் இவற்றின் விரிவெல்லாம் "தமிழுலகம்" என்னும் நூலிற்காணலாம்.

தற்காலம் இந்நாட்டிற்கு வந்த ஆங்கிலேயர்களுடன் முதன் முதலிற் கலந்தவர்கள் தமிழரில் இழிந்த ஜாதியாரான பறையர் முதலானவர்களே. இது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அதுபோலவே, அக்காலத்து வந்த ஆரியர்களாகிய *வெள்ளையர்களுடன் கலந்தது இழிந்த சாதியார்களே. இதற்கு அக்காலத்து இருந்த ஆரியர்களுடைய கீர்த்திபெற்றவர்களின் சம்பந்தத்தைக் கவனித்தால் தெரியவரும்.

"பிரமற்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த **வசிட்டரும்**
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த **சத்தியரும்**
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த **பராசரும்**
பராசருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த **வியாசரும்**

என்ற கபிலர் அகவலால் நன்கு தெளியலாம்.

---

*வெள்ளையர்=வெண்மை நிறத்தையுடையவர் அதாவது [illegible] தையுடையவர் அதாவது தேவர் குளிர் நாட்டிலிருந்து வந்ததால் வெள்ளை நிறத்தை யுடையவர்களா யிருந்தார்கள்.

சுரர்களா என்றும் சோமபானத்தைச் செய்யக்கூடியவர்க [illegible] ஆரியருக்குச் சுரர் என்று ஒரு நாமம்.

அசுரர்=சோமபானம் செய்யாதவர்கள் அதாவது தமிழர்.

பிறகு இருக்க இருக்க ஆரியர்கள் தங்களுடைய மதத்தில் அநேகரைச் சேர்த்துக்கொண்டார்கள். தமிழர்களுள் பலசாதியாரும் ஆரியமதத்தில் சேர்ந்தார்கள். இப்போது கிறிஸ்துவ மதத்தில் சேர்வதுபோல ஆரியர் தேகவலிமையோடு கூடினவர்களா யிருந்ததால் ஆரியர் வர்த்தத்தை ஸ்தாபித்துக்கொண்டு தங்களுடைய குருக்கள்மார்களாகிய (Mishonaries) பிராமணர்களைக்கொண்டு ஆரியமதத்தை (Conversion) விருத்திசெய்ய ஆரம்பித்தார்கள். பலவித உபாயங்களையும் செய்து மதத்தை விருத்தி செய்தார்கள்.

ஆனால், விந்தியமலைக்குத் தென்பாகமாகிய தமிழர் நாட்டில் ஆரியர்களுடைய காரியம் பலிக்கவில்லை, தமிழர் ஆரியர்களுடைய கோட்பாட்டிற்கு இணங்கினார் இல்லை.

பிற்பட்டு ஆரியர்கள் தென்னாட்டிலும் குடியேறத்தலைப்பட்டார்கள். அக்காலத்தில் தான் தமிழர்கள் ஆரியர்களை ஊருக்குள் விடாமல் "பார்ப்பனச்சேரி" என்று ஊருக்கு வெளியில் ஊரைச்சேர்ந்தாப்போல் சேரிகட்டி வசிக்கும்படி செய்தார்கள். 'பார்ப்பனச்சேரி' என்னும் வழக்கு சங்கநூல் இருக்கிறதை ஒவ்வொருவரும் அறிவார், இக்காலத்திலும் பழய நத்தங்களில் ஊரைச் சேராமல் தனிப்பட அக்கிராரம் இருப்பதைக் கவனித்தால் இது அக்காலத்து வழக்கம் என்று பூர்வீக சரித்திரத்தை நினைப்பூட்டும்.

இப்படித் தமிழர்கள் ஆரியர்களை அதிக இழிவாக நடத்தி வருவதை பாரதகாலத்தில் இருந்த பதினெண்பாடை வல்லுநராகிய வியாசர் தமக்கு அக்காலத்து இருந்த பதவியையும் பலத்தையும் கொண்டு ஆரியர்களை உயர்த்தி அநேக நூல்கள் எழுதினார். ஆரியரில் முதல் சாதியாராகிய பிராமணர்களை மிகவும் உயர்த்தி பூலோக தெய்வங்கள் என்றும், அவர்கள் இல்லாவிட்டால் உலகம் நடவாது என்றும் ஏனையோர் அவர்களுடைய பாதங்களில் விழுந்து பொருள்களை யெல்லாம் காணிக்கையாக ஈந்து அவர்களிடும் குற்றேவல்களை மனமுவந்து செய்யவேணும் என்றும் பிராமணர் எல்லாருடைய பெண்களையும் கட்டிக்கொள்ளலாம் என்றும் ஏனையோர் பிராமணப் பெண்களைக் கட்டிக்கொள்ளக் கூடாதென்றும் ஆரிய சாதி விருத்தி யடைவதற்கும் மேன்மை யடைவதற்கும் என்னென்ன வழிகள் உண்டோ அவ்வளவு வழிகளையும் கற்பித்து அதற்குத்தக்க கதைகளை உண்மைச் சரிதமென நம்புமாறு புனைந்துரைத்துப் பதினெண் புராணங்களையும் இன்னும் அநேக நூல்களையும் இதிகாசங்களையும் எழுதினார். அவர் நூல்களுக்கு ஆதாரமாயிருந்த தமிழ்நூல்களை நெருப்புக்கிரை கொடுத்து



விட்டார். இப்போது அவ்வியாசர் எழுதிய புராணங்களே நிலவுகின்றன. அவர் செய்தது எல்லாம் கற்பனையே என்பதை "வியாசர் கட்டு" என்னும் பழமொழியே சான்று பகரும்.

அவ்வியாசரானவர் எழுதினதுடன் நிற்காமல் தென்னாட்டரசருடன் உறவாடிக்கலக்க நினைந்து ஆரிய அரசரில் கண்மணிபோன்று சிறப்பினையுடைய அர்ச்சுனனைத் தம்முடன் அழைத்துக்கொண்டு தமிழ் நாடுகள் மேற்சென்றார்.

அல்லி அரசாணிமாலை, பவளக்கொடிமாலை, பாரதம் முதலிய நூல்களால் அர்ச்சுனன் அல்லியையும், நாககன்னியையும், பவளக்கொடியையும் இன்னும்அநேக தமிழ்நாட்டுப் பெண்களையும் மணந்ததாகஏற்படுகிறது. ஒவ்வோர் இடத்திலும் தனக்குக் கலியாணம் ஆகவில்லை யென்று சொல்லி விவாகம் செய்திருக்கிறான் பார்த்தன் இதுவியாசருடைய சூழ்ச்சிபோலும்.

இப்பொழுது நாம் பேசுங்காலம் பாரதகாலம். அதாவது ஆரியர்கள் வந்து அப்போதுதான் ஏறக்குறைய மூவாயிரம் வருடங்கள் ஆகின்றன. அவ்வளவு ஆண்டுகள் கழிந்த பிற்பாடுதான் ஆரியர்கள் இழிந்த சாதியாரைவிட்டுக் கொஞ்சம் மேலான சாதியாரிடத்தில் உறவாடிக்கலக்க நேர்ந்தது.

இப்போழ்து ஆங்கிலேயப் பெண்களைத் தமிழர்கள் மணந்திருப்பதையொப்ப ஆரியப்பெண்களையும் (தேவப் பெண்களையும்) தமிழர்கள் மணக்க ஆரம்பித்தார்கள்.

இக்காலத்தில் தான் ஆரிய அரசன் ஒருவன் வேளாளர் வமிசத்தில் பெண்கேட்க, வேளாளர்கள் ஆரிய அரசனாகிய மாப்பிள்ளையை அழைத்து வீட்டுப் பெண்ணையைப் பந்தலிலே கட்டிவிட்டு ஓடியது.

"பெண்கேட்ட வேந்தனுக்குப் பெண்ணையைப் பந்தலிலே கட்டிவிட்ட" எனவரும் ஆத்திசூடி வெண்பாவினால் அறியலாம்.

இதுகாறும் கூறிய வாற்றால் ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வும் சம்பந்தாசம்பந்தங்களும் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருந்த மனவுணர்ச்சியும் நன்கு ஏற்படும்.

தமிழர்களால் வெறுக்கப்பட்ட ஆரியச்சாதியைச் சேர்த்த அர்ச்சுனனுக்கு மணலூர் அரசனாகிய சித்திரவாகன் பெண் கொடுத்தான் என்றால் சித்திரவாகன் ஆரியமதத்தைத் தழுவினவனாயாவது இருக்கவேண்டும் அல்

லது அல்லி என்னும் பாண்டியை அவனுக்கு வேறு விதமாய் (அதாவது பட்டமகிஷி வயிற்றுப்பெண்) அல்லது பிறந்தவளாகவாவது இருக்கவேண்டும் அல்லது சித்திரவாகனே சரியாய்ப் பாண்டிய மரபில் உதியாதவனாகவாவது இருக்கவேண்டும். இராஜாவா யிருந்தாலும் சாதி விட்டுச் சாதி பெண் கொடுக்கச் சரியான தமிழன் ஒருவனும் சம்மதிக்க மாட்டான். அதைக்குறித்தே **"பாத்திரமறிந்து பிச்சையிடு கோத்திர மறிந்து பெண்ணைக்கொடு"** என்ற பழமொழியும் எழுந்தது. ஆகையால் அல்லிஅர்ச்சுன விவாகத்தைப் பற்றி யோசிக்கவேண்டியது தமிழ்ப் பண்டிதர்களுடைய கடமை. சும்மா "வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ" என்று கூறி விட்டால் கட்டமாய் முடியும்.

ஐயங்கார் அவர்கள் பாண்டிதேசத்து வேளாளர்களை அதாவது பாண்டியன் மரபினர்களைக் கோளக குண்டக அநுலோம பிரதிலோம சங்கர சாதிகளில் சேர்க்கவல்லவோ பார்க்கிறார் இது நியாயமாகுமா?

நூல் எழுதும் புலவர்கள் எந்தக் காலத்துச் சங்கதியை எழுதினாலும் அக்காலத்து நிலையைக் கவனித்து வழுதவேண்டும்.

சித்திரவாகன் தன் மகளைப் பார்த்தனுக்குக் கொடுத்த காரணத்தால் ஆரியமதத்தை அனுசரித்தவனாகிறான். அவன் ஒருகுடும்பம் ஆரியமதத்தை அனுசரித்ததினாலேயே தென்னாட்டிலுள்ளவர்கள் எல்லாம் ஆரிய சம்பந்தம் பெற்றவர்கள் ஆய்விடுவார்களா?

சித்திரவாகன் தான் ஆரிய மதத்திற்குச் சென்றகாலையில் "பாண்டு" வின் பெயரை கோத்திரப்பெயராக வகித்துக்கொண் டிருக்கலாம். தற்காலம் கிறிஸ்துமதத்தைத் தழுவுகிறவர்கள் பீடர் துரைசாமி, பால்(Paul) கண்ணப்பன், மேரி முனியம்மாள் என்னு ஆங்கிலேயே கோத்திரங்களை வகித்துக்கொள்ளுவது போல. அதனாலேயே சித்திரவாகனாவது மற்றத் தமிழர்களாவது பாண்டுவின் வமிசத்தவர்கள் ஆய்விடுவார்களா? அப்படி வகித்துக்கொள்ளுவதானது போலிப்பெயரே யொழிய உண்மையல்ளவே.

பிற்காலம், சங்கரர், இராமானுஜர், மாத்வர் முதலிய தமிழ் ஆரிய ஆசாரியர்கள் காலத்திலும் அநேக தமிழர்கள் ஆரிய மதத்தைத் தழுவினார்கள் என்பதும் அப்போது ஆரிய கோத்திரப்பெயர்களை அநேகர் வகித்துக் கொண்டார்கள் என்பதும் வெள்ளிடைமலையே. அதனாலேயே தமிழ் நாட்டிலுள்ள தமிழ் ஆரியர்கள் உண்மையான ஆரிய மகரிஷிகளின் வமிசத்தவர்கள் ஆய்விடுவார்களா?



இவற்றை யெல்லாம் கூர்ந்து நோக்காது பாண்டு வமிசத்தவன் ஒருவனிடமிருந்து தோன்றியவர் யாவர் அவர் பாண்டியர் என்று கூறிவிட்டால் அது எப்படிப் பொருந்தும்.

அர்ச்சுனனுக்கும் அல்லிக்கும் பிறந்தவன் பப்புருவாகன். சித்திரவாகன். பாரதயுத்தத்தில் மடிந்த பிற்பாடு புராணத்திலாவது சரிதநூல்களிலாவது பப்புருவாகன் பெயர் காணோம். அவனுக்குச் சந்ததியார் ஏற்பட்டார் என்பதும் தெரியவில்லை.

ஆகையால், பாண்டியர்கள் என்று பப்புருவாகன் வமிசத்தவர்கள் என்று நினைத்து ஒரு நூல் கற்பித்து எழுதியது எவ்வளவு தவறு என்று நீங்களே யோசித்துப்பாருங்கள்.

அர்ச்சுனன் நாகநாட்டுப் பெண்ணாகிய (Nagas=சர்ப்பக் கொடியுடையவர்கள். நாகபட்டின முதலிய் இடங்களில் இருந்தவர்கள்) நாககன்னியை மணந்ததால் நாகர்களுக்கும் பாண்டியப்பெயர் வந்திருக்கவேண்டுமே. அப்படி வந்ததாக ஏற்படவில்லையே.

**(இன்னும் வரும்.)**

**துடிசைகிழார்-அ-சிதம்பரனார்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பொறாமையும் அதனால் விளையும் கேடுகளும்.

பொறாமை யென்பது பிறரது செல்வம் கல்வி கீர்த்தி முதலியவற்றைக்கண்டு சகியாமையாம். சகியாதிருத்தல் தன்னளவில் ஓர் பாவமான செய்வினை யன்றெனினும், பின்விளைவில் வித்துப்போலிருந்து இழிந்த பாவங்களையும் செய்ய ஏவுதலாலும், மனத்தை அசுத்தப்படுத்தி ஆத்மார்த்த ஞானத்தை மறைத்தற்குக் காரணமாகலாலும், பொறாமையும் மனிதர் அத்தியாவசியகம் விலக்க வேண்டியவற்று ளொன்றாகின்றது. ஆயின், பிறரடைந்திருக்கும் கல்வி செல்வங்களின் மேன்மையைப்போன்ற அல்லது அதினும் மேம்பட்ட பெருமையை நியாய வரம்புகடவாமல், மற்றொருவன் தனது ஊக்கத்தினால் பெறமுயலல் பொறாமையாகாது. அவ்விதம் முயலும்போது தான் லக்ஷியத்தில் குறித்திருப்பவரது அபிவிருத்தியைத் தடைப்படுத்துவதினால் தான் முன்னேற நினைந்து அதற்கான சதியுபாயங்களைச் சிருட்டித்தால் அதுபவச் செயலாகும். வாழ்க்கை நடையில் தீவிரமாய் முன் செல்வோருடன் சமமாகவேனும் செல்லல் அசாத்தியமே யென்று நம்பிக்கை யிழந்த மனச்சோர்வினால் பொறாமைகொண்டு முன் செல்வோர்களைப் பின்னாலிழுத்து விழுத்த நினைத்தல் இழிந்த குணமாகும். இவ்விதம் சிலர் தமது புத்தி சாதுரியம் காலம் முதலியவற்றைத் தம் எதிரிகள் தம்மினும் மேம்படாதிருக்கும் வண்ணம் சதி சூழ்வதிலேயே துர்விநியோகஞ் செய்வதைப் பலரறிந்திருக்கலாம். அந்தோ! இவர்கள் தம் வாழ்நாளை இழிந்த வீணாளாக்கிப் பிறரையுந் தம்மைப்போன்ற கதிக்குள்ளாக்கச் செலவிடும் அரியகாலத்தை வேறு நற்பயனுள்ள முயற்சிகளில் விஜயஞ்செய்து தாமே மேனிலை யெய்தக்கூடாதா? திருவள்ளுவ



நாயனார் இவ்விதமானோரைக் குறித்தே போலும் "அறனாக்கம் வேண்டாதானென்பான், பிறனாக்கம் பேணாதழுக்கறுப்பான்" எனக் கூறினர்.

மனிதர் பரமார்த்த நிலையெய்துதற்கு ஜீவகாருண்ணியம் எவ்வளவில் முக்கியசாதனமா யமைந்திருக்கின்றதோ அவ்வளவில், மனிதர் அதோகதியடைதற்குப் பொறாமை முக்கிய காரணமாகின்றது. பொறாமை என்னும் ஆமையானது ஒருவனது இருதயத்துட் புகுந்துவிடினே அது அங்கே பல கோர சந்ததிகளைப் பெருக்கி அவனை அழுக்காறு என்னும் ஆற்றின் பாதலத்திற்கே கொண்டு சென்று விடுகின்றது. அதிலாழ்ந்தோரின் இழிந்தகதையையும் அவர்களின் குணக்கேட்டையும் உள்ளவாறெடுத்துரைக்க இவ்வுலகில் பரிபாஷையே கிடையாது. தந்தை தாய் சோதராதிய சுற்றத்தவருக் கிடையிற்றானும் இப்பொறாமை சிலபோது புகுந்து அவர்களை நிலைகலக்கி விடுகின்றதெனில் இதன் கொடுமையைக் கூறுவதெங்ஙனம்.

இவ்வுலகில் சிலர் ஜீவகாருண்ணியம், பரோபகாரம், தரும சிந்தையாதிய சற்குணங்களுடையராயும், தமது சத்துருக்கள் தாமும் நன்னிலையடையவேண்டுமென்று கருதுஞ் சுபாவமுடையராயு மிருக்கின்றார்களல்லவா? இவ்விதமானோர்க்குத் தானும் சிலர் கோபங்கொள்ள யாதொரு காரணமுமின்றி யிருக்கவும், கொடிய தீங்குகள் புரிகின்றார்களே! இதன் காரணமென்ன? பொறாமையே. பிறரது காரியங்களில் தலையிடாமல் தாமும் தம்பாடுமாயிருக்குஞ் சிலரைச் சிலர் அரங்கத்தில் வலிந்திழுத்து அவதூறு செய்கின்றார்களே! இதன் காரணமென்ன? பொறாமையே. வேறு சிலர் "தன்மூக்குப் போனாலும் எதிரிக்குத் துர்ச்சகுனமாயிருந்தாலே போதும்" என்பதற்கினமான இழிந்த செய்கைகளைச் செய்கின்றனரே! இதன் காரணமென்ன? பொறாமையே. சுருக்கிக் கூறுகில், பொறாமையே இவ்வுலகில் அனேக பாவச்செயல்களுக்கு மூலகாரணமாயிருக்கின்றது. பொறாமையால் விளையுங் கொடிய செயல்களைக் கருதியே நமது ஆப்தர்கள்,

> "அழுக்காறெனவொருபாவி திருச்செற்றுத்
> தீயுழியுய்த்துவிடும்" எனவும்,
>
> "அழுக்காற்றால் நெஞ்சமழுங்கிய புன்மாக்கள்
> இழுக்காற்றால் இன்பநலமெய்தார் பராபரமே"

எனவும் கூறியருளினார்கள்.

இனி, ஒருவன் தனது பாமார்த்திக க்ஷேமத்திற்காக மாத்திரம் பொறாமையை விலக்க வேண்டுமென்பதன்று, தனது தேசத்தின் பொது நன்மைக்காகவும் தனது லௌகிக நன்மைக்காகவும் பொறாமைக்கிடங்கொடாதிருக்கக் கடமைப்பட்டிருக்கின்றான். ஒரு தேசத்தார்—முக்கியமாய் அரசியல் ஆசாரவியல் சமய வியலுக்குரிய மேற் பதவிகளை வகிப்போர்—பொறாமையைத் தம்மனத்துள் நுழையவிடின் அத்தேசத்திற்குப் பலவித கேடுகள் சம்பவிக்கும். எவ்விதமென்னில், அவர்கள் தேசத்தில் உள்ளவாறு விவகார சாதுரிய முடையோரது தகைமைகளைப் பொறாமையால் அங்கீகரியாதுவிடவே அத்தகைமையாளரின் யுத்திசாதுரியங்கள் தேசத்தின் பொது நன்மைக்கு உபயோகமாகாமல் தடைப்படவும், தகுதியற்றோர் 'குரங்கின்கைக் கொள்ளி' போல் தமது அதிகாரத்தைத் தவறாயுபயோகிக்கவும் சந்தர்ப்பமுண்டாகித் தேசத்தின் பொது நன்மைக்கே யீனமுண்டாகும்.

நம் தேசம் ஜப்பான் அமரிக்கா முதலிய தேசங்களைப் போலத் தீவிரத்தில் அபிவிருத்தியுறாமல் தடைபட்டதற்கும், தடைபட்டுகொண்டிருப்பதற்கும், நம்மவர் பலரிடத்திலுள்ள பொறாமையும் ஓர் காரணமாகும். நாம் சன்மார்க்க நெறியிற்சிறந்த இருஷிகளின் சந்ததியாரென்று பெருமை பாராட்டுகின்றோம். அவர்களோ பொறாமை முதலிய துர்க்குணங்களைக்களைந்து சமத்துவத்தில் மனத்தை வைக்கும்படி நமக்குக்கற்பித்திருக்கின்றார்கள். அவர்களது போதனைக்கும் உள்ளக் கருத்துக்கும் மாறாய்ப் பிற்காலத்தில் நம்மனோர் தத்தமக்குள்ளேயே அசூயையும் பொறாமையையும் வளரவிட்டது, அதுகாரணமாய்த் தம் தேசத்தின் பொதுநன்மைக்கே ஈனமுண்டாக்கியதும் உண்டாக்கிக் கொண்டிருப்பதும் தர்ம மாகுமா? இவ்விஷயத்தில் நாம் ஐரோபியரிலும் பன்மடங்கு தாழ்ந்தவர்களாய்விட்டோமென்பதை மறுக்க முடியாது.

மேனாட்டார் ஆத்மார்த்த ஞான விஷயங்களில் நம்மினும் தாழ்ந்தவரேயாயினும், பொறாமைக் குணம் அவர்களிடத்தில் பொதுவாய்க் குறைந்தே காணப்படுகிறது. இதன் பயனாய் அவர்கள் லௌகிக விஷயத்தில்



நம்மினும் பன்மடங்கு மேம்பட்டிருத்தலைக் கண்கூடாயறிகின்றோம். அத்தேசங்களில் இராசாங்கத்தை யியக்கும் பொறுப்புக் கூட, பொது ஜனங்களிலேயே தங்கியிருக்கின்றது. அவர்கள் தமது தலைவர்களையும், அரசியலை நடாத்தும் மந்திரிமாரையும், சிலதேசங்களில் சக்கிரவர்த்தி ஸ்தானத்தை வகிக்குந் தேசாதிபதிகளையும் தாமே தெரிந்து நியமிக்கின்றனரென்றால், அன்னோரிடத்தில் எவ்வளவு ஐக்கியமும் பொறாமையின்மையு மிருக்கவேண்டுமென்பதை யூகித்துணர்க. அவர்கள் உள்ளவாறு தகுதியுடையோரை அவரவர் தகுதிக்கேற்ற பதவிகளில் வைத்து, தேசத்தின் பொது நன்மையையே முக்கியமாய் நாடுகின்றனர். இயல்பாகவே யொருவன் யுத்தி சாதுரியம் இராசதந்திரம் முதலிய விவகாரங்களில் வல்லவனாயிருப்பின் அவனைப் பொறாமையால் சிறுமைப்படுத்த நினையாமல் மென்மேலும் உயர்ந்த நிலைக்கு வரும்படி ஊக்கப்படுத்துகின்றனர். இங்ஙனங் கூறுவதால் அவர்களெல்லோரும் சிறிதும் பொறாமையற்றவர்களெல்லோரும் சிறிதும் பொறாமை யற்றவர்களென்பதன்று, தமது சுய சாதியாரிடத்திலேயே அசூயைகொள்ளும் இத்தேசத்தவர் பலரிடத்துள்ள இழிவான பொறாமைக் குணத்திற்கும் மேனாட்டாரிடத்தில் சிறுபான்மையாய்க் காணப்படும் பொறாமைக் குணத்திற்கும் மிகு வித்தியாசமுண்டென்பதே. அங்கும் சாதாரணமாய் ஜனங்கள் உயர்ந்த பதவிகளைத் தாமும் பெற வேண்டுமென்று இயல்பாகவே விரும்புவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், அதுகாரணமாய்த் தம்மினும் தகுதியுடையாரைச் சிறுமைப்படுத்தித் தாம் தகுதியுடையார்போல் நடிக்கத்துணிபவர் அரிது. இவ்விஷயத்தில் மேனாட்டார் சிறந்தவர்களா யிருத்தலினாலேயே அவர்கள் கிருஷிகம் கைத்தொழில் வியாபாரம் கல்வி முதலியவற்றில் மேம்பட்டோராகி, பல்லாயிரமைல் தூரத்திற்கப்பால் பலவேறுபட்ட சாதியாரையடக்கியுள்ள தேசங்களிலும் தமது ஆதிக்கத்தையும் இராச்சியத்தையும் நிலைநாட்டிக் கோடிக்கணக்கான சனங்களையும் ஆள இயன்றவர்களானார்கள். தமக் கீனத்தை யுண்டாக்கும் பல வழிகளில் ஐரோப்பியரது மாதிரிகளைப் பின்பற்றும் நம்மவர்பலர், மேற்கூறப்பட்ட நல்விஷயங்களில் அவர்களது மாதிரிகளைப் பின்பற்றல் தகாதா?

நியாய வுரிமைப்படி தமக்குக் கிடைக்கவேண்டிய ஒரு பெருமையைப் அன்னியரடையச் சகித்தாலும், தம்மவரடையச் சகியார் சிலர். குணசீலம் தருமசிந்தை விவகாரசாதுரியம் முதலிய பெருந்தகைமைகளுடையா னொருவன் தனக்குப் பகைவனாய் மாத்திரமிருந்துவிடின் அவனிடத்தில் அசூயைகொண்டு அவனுக்குப் பலவித குற்றங்களைக் கூறிப் பொது நன்மைக்குரிய விஷயங்களிற் றலையிடாதபடி அதைரியப் படுத்திவிடுகின்றனர் சிலர் இவ்விதமானோராலேயே நமது தேசம் மற்றைய தேசங்களைப் போன்ற பெருமையை யடையாதிருக்கின்றது.

பொறாமை கொள்வோர் தனித்தனி மனிதரேயாயினும், அவர்களிடத்துள்ள பொறாமையின் பலன்கள் சமட்டிரூபமாய்ச் சேர்ந்து தேசத்தின் பொது நன்மைக்கே தீங்குகளை விளைக்க, அதுகாரணமாய்த் தொடர்வட்டியுடன் பெருகிய தீங்குகள் பின்பும் வியட்டிரூபமாய்ப் பிரிந்து அப்பொறாமையுற்ற தேசத்தினருக்கே தீய பலன்களை யளிக்கின்றது.

ஆகலின், நமது எதிரியேயாயினும் ஒருவனிடத்தில் உயர்வான மனோபாவமும் அதற்கேற்ற தகைமைகளும் பொருந்தியிருப்பின், நாம்அவனது தகைமைகளை உணர்ந்து மென்மேலும் உற்சாகப்படுத்தி அவனது தகுதிக்கியைந்த தானத்தின் அவனை வைத்து மதித்தல் வேண்டும். அவனது தகைமைகளை யுணர்ந்தும், தேசத்தின் பொதுவான நன்மைக்கு அவைகள் பிரயோசன மாகாவண்ணம் தடை செய்தலும் உபேட்சை செய்தலும் தவறாகும். உபேட்சை செய்தலே தவறாகும்போது அத்தகைமைகளைப் பொறாமையாற் பிறர்கண் முன் சிறுமைப்படுத்த முயலுதல் பெருந்தவறாமன்றோ? ஆதலால் பொறாமை என்னுங் கொடிய இராக்ஷதன் நம்முள்ளத்தைச் சிறிது சிறிதாய்க் கவராதிருக்கும்படி நாமெல்லாம் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.

ஞானாகாசம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவனடியார் சிறப்பும் அடியவர் பூஜாபலனும்.

**தொகுதி 5. பகுதி 10. பக்கம் 235. தொடர்ச்சி.**

அக்கினியானது உலர்ந்த விறகைக் தகிக்குமாறு, ஞானமென்னுந் தீயானது சுபாசுபங்களாலுண்டான தர்மாதர்மங்களாகிய விறகினைத் தகித்துவிடுகின்றது. மணிமந்திரௌஷதங்களை யுடையவன் பாம்பொடு பழகியிருப்பினும் விஷபாதை யடையாததுபோல, ஞானமுடையவன் இந்திரியங்களாகிய பாம்புகளுடன் கூடியிருப்பினும் அவற்றால் ஒரு துன்பமுமடையான். மந்திரௌஷதியுடையவன் விஷபானஞ் செய்யினுந் துன்பமடையான்போல ஞானமுடையவனைப் பாபங்கள் துன்புறுத்த மாட்டா. ஞானத்தைப்போலவே தியானமும் விளங்கும். அவையிரண்டும் சமானமாக வுள்ளவை. ஞானத்தியானங்களையுடைய முனிவன் சௌக்கியமடைந்து ஆயுளிறுதியில் மோக்ஷத்தை யடைவான். தியானத்தால் அகண்டைசுவரியமும், ஐசுவரியத்தால் உத்தமமான சுகமுமுண்டாகும், பின்னர் ஞானத்தால் அந்தச் சுகத்தை வெறுத்துப் பிறவியை யொழித்து முத்தியை யடைவான். உத்கீதாதி யுபசரணைகள்-யாகதானாதி-அனுஷ்டானங்கள்-தியான சமாதி முதலியவற்றால், உண்டாக்கத்தக்க ஞானமானது சித்தமும் சுத்தமும் சூக்ஷ்மமும் பிரசன்னமும் தோஷரகிதமும் சிரேஷ்டமும் முத்திக்கேதுவுமானதாகும். தியானயாகமே பிற யாகங்களைக் காட்டிலுஞ் சிறந்ததென்று கொள்ளவேண்டும். அந்தர்யோகமான இந்தத் தியானயாகத்தால் எப்பொழுதும் சிவபெருமானைப் பூஜைசெய்பவன் அடைதற்கரிய உயர் கதியை யடைவான். இந்திரியங்களை யடக்கி மனத்தைச் சிவபெருமானிடத்திலிருத்தி, பத்துத்திசைகளிலும் நடுவிலும் இன்னும் பிற விடங்களிலும் அச்சிவபிரானே யிருக்கின்றார் என்று தியானிப்பவனைப் பரமயோகியென் றுணரவேண்டும். கர்மயாகத்திலுந் தபோயாகம் மத்

துப்பங்கு உயர்ந்தது. தபோயாகத்தைக் காட்டிலுந் தியானயாகம் நூறு பங்கு உயர்ந்தது. ஞானத்தியானஸ்வரூபமும் சூக்ஷ்மமுமான சிவயோகமே சிறந்த மஹாயாகமாம்.

சிவபூஜை செய்தவன் அகண்டமான பிரபல ராஜபோகமும், அக்கினி காரியஞ் செய்தவன் சம்பத்தும், ஜபஞ்செய்தவன் பாபநிவாரணமும், ஞானத்தியானங்கள் செய்தவன் முக்தியும் பெறுவான். பாபக்ஷயஞ் செய்தவனுக்கே ஞானத்தியானங்களில் மனஞ்செல்லும். ஒருகோடி வருஷப் பிரயத்தனத்தால் யோகசித்தியும், அரைக்கோடி வருஷப் பிரயத்தனத்தால் அக்கினி காரியசித்தியும், காற்கோடி வருஷப் பிரயத்தனத்தாற் புண்ணியஸ்தலவாசமும் புண்ணிய தீர்த்த ஸ்நானமுங் கைகூடும். அக்கினிகாரியஞ் செய்பவனுக்குப் பகவான் அக்கினியிலும், பண்டிதர்களுக்கு அவர்கள் இதயத்திலும், அஞ்ஞானிகளுக்கு விக்ரஹங்களில் மாத்திரம் ஞானவான்களுக்கு எல்லாப் பொருள்களிலும் விளங்குவதாகக் கொள்கை. மகா யோகிகள் தங்கள் ஆத்துமாவே பரசிவமென்று கொள்வரன்றி விக்கிரஹங்களில் மாத்திரம் தியானஞ் செய்யமாட்டார்கள். அவ்விக்கிரஹங்களும் யோகிகளின் மனத்திற் றரிசித்தவகையாகவே நிர்மாணஞ் செய்யப்பட்டுள்ளன. சர்க்தஸ்வரூபியாகிய சிவபெருமானைச் சர்வவியாபகனென் றுணர்ந்து ஸ்மரணைசெய்பவன் எவனோ அவனிதயத்திலேயே சங்கரபகவானும் நீக்கமற எழுந்தருளியிருப்பர். இதயத்தில் தன்னுள்ளேயே விளங்குந் தலைவனைக் காணமாட்டாதவர்கள் இறைவனெங்கேயோ இருக்கிறனென்று திரிகிறார்கள். சர்வாந்தர்யாமியாய் எல்லாப் பொருள்களிலும் சிவபெருமானே நிறைந்திருக்கின்றார் என்றுணர்ந்த சிவயோகிகள் ஒருநாளாகிலும் அரைநாளாகிலும் வசித்த இடத்தின் பாக்கியமே பாக்கியம். அதுவே தீர்த்தம். அதுவே தபோவனம். யோகஞ் செய்யவேண்டுமென்று கருதியுளன் அவ்வாறு நினைத்தமாத்திரத்திலேயே அடையும்பலனை அநேகயாகங்கள் செய்தவனும் அடையமாட்டான். நவமணியுங் கல்லும் இரண்டுங் கற்களேயாயினும், கல்லைச்சுமந்தவன் தேககஷ்ட முதலியன அநுபவித்தும் விசேஷ சுகத்தை யடையாமல், மணியைச் சுமந்தவன் சுகமடைவான்போல, கர்மயாகஞ்செய்தவன் கஷ்டமநுபவித்தும் விசேஷபலனை யடையாமல் ஞானத்யான யாகஞ்செய்தவன் சிறந்த பலனை யடைவான்.

(இன்னும் வரும்)

ப. கண்ணப்ப முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தோகுதி ரு.] 1916ளு டிசம்பர்மீ [பதிகு கஉ.

## தைத்திரீயோபநிஷத்து.

### நாராயணவல்லி.

சுயம்பிரகாசமான அகண்டமான ஈஸ்வரனிடத்தில் நிமிஷம், காஷ்டை, முகூர்த்தம், அகோராத்திரம், பட்சம், மாதம், வருடம் உண்டாயின.

அந்த ஈஸ்வரனை இன்ன அளவனென யாரும் கிரகிக்க முடியாது. ஆகலின் அவனை யாரும் மஹத்யச: என்பர். அவர் உருவம் ஆன்மாக்களின் திருஷ்டியிலில்லை.

அவனை இருதய மத்தியிலிருக்கிற அந்தக்கரணத்தால் அதோமுகப் பார்வையில் ஏகாக்கிரமனத்தால் கிரகிப்பவரே மரணமற்றவர்.

தீரர்களால் அனுபவிக்கப்பட்ட அத்தேவர் அஷ்டதிக்குகளிலும் பிரவேசித்திருக்கிறார். சகலமு மவரேயாகிறார். அவர் ஒருவராகவே யிருக்கிறார்.

உலகப் பிரசித்த பிதாவானவன் புத்திரனுடைய தேகத்தை மட்டும் உண்டுபண்ணுகிறான். பிரம்ம தத்துவத்தை அறிந்தவனே பரமாத்ம ரூபமாகச் சகல ஜகத்தையும் உண்டுபண்ணுகிறபடியால் தமது தகப்பனையும் உண்டுபண்ணுகிறவனாக வாகிறான்.

அவர் வியவகாரகாலத்தில் சகல பிராணிகட்கும் உபகாரஞ் செய்கிறார். பரமார்த்தத்தைப் பகர்கின்றவர்கட்கு முத்தியைக்கொடுக்கிறார்.

## சிவாக்கினி பிரார்த்தனை.

அநிஷ்டத்தைச் செய்யும் பாபதேவதையை நாசஞ்செய்து, பசு முதலியவைகளையும் தீர்க்காயுளையும் சம்பாதித்துக் கொடும்.

ஜாதவேதஸரே! எங்களுடைய பசு குதிரை பிரஜை கிரகம் பூமி முதலியவைகளை நாசஞ்செய்ய வேண்டாம். அக்கினியே நீர் எங்களுடைய அபராதத்தை மனதில் தரிக்காமல் அநுக்கிரகிக்கவாரும், தனதானியாதி சம்பத்தை என்னை அடையும்படி செய்யும்.

## விசுவரூப ருத்திரபிரார்த்தனை.

அறிவோம் அடைவோம் அதற்காக அந்த விராட்டின் சுவரூபத்தைத் தியானஞ்செய்கிறோம். அந்தத் தியானத்தில் எங்களை உருத்திரன் விராட்ரூபமாகப் பிரேரணை செய்க.

## உருத்திர பிரார்த்தனை.

ஆகம பிரசித்தமான புருஷரூப மகாதேவரை அறிவோம் அந்தத் தியானத்தில் எங்களை உருத்திரன் பிரேரணை செய்க.

## விநாயக பிரார்த்தனை.

வக்கிரரூபமான துதிக்கையுடைய விநாயகக் கடவுளைத் தியானிக்கின்றோம். அந்த விநாயகர் எங்களைப் பிரேரணை செய்க.



## நந்திகேசுவர பிரார்த்தனை.

பரமசிவனுக்கு வாகனரூபமான புருஷாகாரந் தரித்த சக்கிரமான முகமுடைய நந்திகேசுவரரை அறிவோம் தியானிப்போம். அவர்எங்களைப் பிரேரணை செய்க.

## சுப்பிரமணியர் பிரார்த்தனை.

அந்தர்யாமியாகச் சகலத்திலும் பூர்ணமாயிருக்கிற தேவசேனையையுடைய சுப்பிரமணியரை அறிவோம் தியானிப்போம். அவர் எங்களைப் பிரேரணை செய்க.

## கருட பிரார்த்தனை.

அழகாகப் பரக்கச்சாதனமான இரக்கைகளை யுடையவன். அவனையறிவோம் தியானிப்போம். அவன் எங்களைப் பிரேரணை செய்க.

## பிரம்ம பிரார்த்தனை.

சதுர்முக ஸ்வரூபத்தைப் புண்ணியபாப கர்மங்களில் பிரேரணைசெய்யும் அவனைக் குருகுவாசஞ்செய்து அறிவோம், நித்தியாசனத்தின் பொருட்டுத் தியானிப்போம்.

## நாராயண பிரார்த்தனை.

பக்தஜன சமூகத்திற்கு ஆதாரமான வாசுதேவ புத்திரரை அறிவோம் தியானிப்போம் அவர் எங்களைப் பிரேரணைசெய்க.

## நரசிம்ம பிரார்த்தனை.

வஜ்ஜிரநகமும் தீட்சண்ய பல்லுமுடைய நாரசிம்மனை அறிவோம் தியானிப்போம் அவன் எங்களைப் பிரேரணை செய்க

## சூரிய பிரார்த்தனை.

மூன்று லோகங்களிலும் பிரகாசத்தைச்செய்கிற சூரியனை யறிவோம் தியானிப்போம் அவன் எங்களைப் பிரேரணை செய்க.

### அக்கினி பிரார்த்தனே.

தன்னிடத்திலே கொடுக்கப்பட்ட அவிசைத் தான் சாப்பிடாமல் இதர தேவதைகட்கு உத்தேசப்படி கொடுக்கிறவனும், சகல வைதிக காரியங்களில் இதமாயிருக்கிறவனுமாகிய அக்கினியை அறிவோம் தியானிக்கின்ருேம் அவன் எங்களைப் பிரேரணை செய்க.

### துர்க்கா பிரார்த்தனே.

காத்தியாயனியை அறிகிருேம் தியானிப்போம் அவள் எங்களைப்பிரேரணை செய்க.

### மிருத்திகை மந்திரம்.

குதிரை இரதம் விஷ்ணு இவர்களின் பாத சம்பந்தத்தால் பரிசுத்தமான பூமியே! ஸ்னனகர்மத்தில் என்னுடைய சிரசால் தரிக்கப்பட்டவளாயும் பிரகாச ரூபியாயுமிருக்குநீ ஸ்னனத்தின் பொருட்டு ஜலத்திற்குப் போகுமென்னை அடிக்கடி இரட்சிப்பாயாக.

காமதேனுபோல பிரியமானவளாயும், கிருஷ்ணவர்ணமுள்ள அநேக கைகளுள்ளவராக அவதாரத்தால் வெளிப்படுத்தப்பட்டாய். எந்தப்பாபம் என்னுற் செய்யப்பட்டிருக்கிறதோ அதை நாசம் செய், பரமாத்மாவால் பூமிரூபமாக ஸ்தாபிக்கப்பட் டிருக்கிருய். எனக்குப் புஷ்டியைக் கொடு. என்பாபத்தை நாசஞ்செய் அதனுல் மோட்சத்தை யடைவேன்.

முணவழகு.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## அர்ச்சுனனும் பாண்டிய மரபும்.

### தொகுதி 5. பகுதி 11. பக்கம் 257. தொடர்ச்சி.

மலையாளதேசத்துப் பெண்ணுகிய பவளக்கொடியைப் பார்த்தன் மணந்திருக்கிருனே, மலையாளத்தாருக்கும் பாண்டியப் பெயர் வந்திருக்க வேண்டுமே, அப்படி வந்ததாக ஏற்படவில்லையே.

ஆகையால், ஐயங்காரவர்கள் எடுத்துக்கொண்ட "பாண்டு வமிசத்தவன் ஒருவனிடமிருந்து தோன்றியவர் யாவர் அவர் பாண்டியர்" என்னும் மேற்கோளானது வலியற்ற வெற்றுரையாயிற்று என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே.

ஆனுல் காத்தியாயனர் அப்படிக் கூறுவானேன் என்ருல் அக்காலத்து ஆரியக்கவிகளின் தொழில் அது. தாழ்ந்திருந்த ஆரியர்களை உயர்த்தவேண்டியது அவசியமாய் விட்டது. அதை யுத்தேசித்தே ஆரியர்கள் தங்களுடைய கோத்திரப்பெயர் வகித்த ரிஷிகளின் மூலத்தைச் சொல்லக்கூடாதென்றும் சொல்லித் தமிழர்களாயிருந்து ஆரியமதத்தை அனுசரித்தவர்களுக்கும் அந்தக்கோத்திரப் பெயரை வைத்துப் பிறர் தங்களைப் பற்றிப் பேசாவண்ணம் கற்பனைசெய்து வந்தார்கள். ஆகையால், காத்தியாயனர் கூற்றுவேரற்று வீழ்ந்தது.

இனி ஐயங்காரவர்கள் மூன்று வேறுகாரணங்காட்டுகிருர். அவைகளை ஒவ்வொன்ருய் ஆராயலாம்.

1. பாண்டுவமிசமும் சந்திரகுலம், பாண்டியர்வமிசமும் சந்திரகுலம் இவ்வொற்றுமைபற்றி ஐயங்கார் அவர்கள் ஸ்தாபிக்கிருர்.

உடுக்கள், கிரகங்கள் இவைகளின் பெயரை வகிப்பது தமிழர்களுடைய வழக்கம். சூரியச்சோழன், சந்திரபாண்டியன், சுக்கிரகவுண்டன், ஞாயிறு கிழவன் முதலிய பெயர் வழக்கால் அறியலாம். ஆகையால் பாண்டிய வமிசத்தை முதல் முதல் ஸ்தாபித்தவனாகிய சந்திரபாண்டியன் பெயரால் ஏற்பட்டதே யொழிய வேறின்று.

தமிழர்களில் கோத்திரப் பெயர்கள் எல்லாம் அவ்வமிசத்தில் கியாதி பெற்ற ஒருவனுடைய பெயரே யொழிய வேறின்று. உதாரணமாக:—

1. சேர்க்கிழார் கோத்திரம்.
2. செய்யாத்து வென்றான் கோத்திரம்.
3. ஏகம்பவாணன் கோத்திரம்.
4. சிவபூத இராயர் கோத்திரம்.
5. கரிசைகிழார் கோத்திரம்.

இப்படிப் பன்னீராயிரம் கோத்திரங்களும் அவைகளுக்கு மேலும் உள. ஆகையால் சந்திரகுலம் அக்குலத்து மூலபுருஷனை சந்திரபாண்டியனிலிருந்து ஏற்பட்டதே யொழிய வேறின்று.

2. வடநாட்டுச் சந்திரகுலத்தினரின் தலைநகருள் ஒன்றாகிய மதுரை என வழங்கப்படுவதால் என்று பிரமாணங்காட்டுகிறார்.

இது முற்றுந் தப்பு என்பதைக் காட்டுவாம்.

இராமயண காலத்தில் தான் ஆரியர்கள் தமிழ் நாட்டைக் கைப்பற்ற முயன்றது. அக்காலத்தில் பாண்டியஅரசர்களின் இராஜதானி கபாடபுரம் இலங்கைநாட்டில் இருந்தது. கபாடபுரம் அழிந்தது கடைசிப் பிரளயத்தில், அங்கே தான் இரண்டாம் சங்கம் இருந்தது. கடைசியாக ஏற்பட்ட பிரளயத்தின் பின் தான் கபாடபுரம் கடல் கொண்டொழிந்தது. இதற்கு முந்தின பிரளயத்திற்கு முந்தித்தான் முதற்சங்கம் இருந்தது. அது தென்மதுரையில் நிறுவப்பட்டது. தென்மதுரை பாண்டியர்களுடைய இராஜதானி. தென்மதுரையில் பாண்டியர்கள் அரசுபுரியுங் காலத்தில் ஆரியர்கள் இந்நாட்டிற்கு வரவேயில்லை யென்பது சரிதக்காரர் துணிபு. ஆகையால் இவ்வளவு பூர்வீககாலத்தில் "தென்மதுரை" என்னும்பெயர் எப்படி வந்தது. அப்போது வடநாட்டில் ஆரிய அரசாங்கம் இல்லையோ. இவையிற்றினை யெல்லாம் ஐயங்காரவர்கள் அறியாதவருமல்லர்.



ஐரோப்பிய பண்டிதராகிய மிஸ்டர் எலியட் என்பவர் கூறும் வண்ணம் 5 பிரளயங்கள் இவ்வுலகந்தோன்றின நாள் முதல் உண்டாயிருக்கின்றன. ஒவ்வொரு பிரளயத்துக்குப் பின்னிட்டும் தமிழர்கள் தெற்கே குமரி நாட்டிலிருந்து வடக்கே இமயமலை வரை குடியேற ஆரம்பித்தார்கள். அப்போது தங்களுடைய முக்கியபட்டணத்தின் பெயரை அங்கங்கே பட்டணங்கள் புதிதாக ஸ்தாபித்துப் பெயரிட்டுக் கொண்டார்கள் இதனாலேயே வடக்கே இமயமலை வரைக்கும் பாண்டியர்கள் அரசாண்டார்கள் என்பது தேற்றம். மேலும் புராணப்படி பாண்டியர்கள் இமயமலை வரையில் அரசாண்டதாக ஏற்படுகிறது. ஆகையால் தென்மதுரையிலிருந்து வடமதுரை என்னும் பேர் உண்டாயிற்றே யொழிய வடமதுரையிலிருந்து மத்திய மதுரைப் பேர் (குலசேகர பாண்டியன் காலத்து ஏற்பட்ட தற்கால ஆலவாய் என்னும் மதுரை) உண்டாகவில்லை.

3. இனி மூன்றாவதாகிய ஆதாரத்தைச் சற்று ஆராயலாம்.

பாண்டுவின் புத்திரர்களுடைய வழியினர் என்பது தோன்றப் 'பருசவன்' எனப் பாண்டிய அரசர் பெயர் பெறுவதால் எனப் பிரமாணம் காட்டுகிறார்.

இது தவறான கொள்கையென்று முன்னமேயே கூறியிருக்கின்றாம். ஆகையால் பருசவன் என்னும் பெயர்க்காரணம் அறியலாம்.

பாண்டியர்கள் இமயமலைவரைக்கும் அரசாண்டார்கள் என்பதைமுன்னமே கூறினும், ஆகையால் பாண்டியர்கள் பஞ்சந்தி தீரமாகிய (பஞ்சாப் Punjob) மாகாணத்தையும் அரசாண்டவராதலால் அந்நதிகளின் பெயரால் 'பஞ்சவன்' என்னும் பெயராயிற்று.

சேரனுக்குப் பொருநைத்துறைவன் என்றும் சோழனுக்குப் பொன்னித்துறைவன் என்றும் நதியால் பெயர் ஏற்பட்டதுபோல பாண்டியனுக்கும் வையையந்துறைவன், பொருநைத்துறைவன், குமரிச்சேர்ப்பன், பஞ்சவன் என்னும் பெயர்கள் உண்டாயின.

இதுபோல மற்றப் பெயர்களையும் அடியில் வரும் அட்டவணையால் அறியலாம்:—

| | சேரன். | சோழன். | பாண்டியன். |
|---|---|---|---|
| 1 மலையால் | கொல்லிவேந்தன், பொறையன், மலையமான், மலையன் குட்டுவன், வானவன் | நேரிவெற்பன் நேரியன் | மலயவெற்பன் பொதியவெற்பன் |
| 2 நதியால் | பொருநைத்துறைவன் | பொன்னித் துறைவன் | வையையந் துறைவன், பொருநைத் துறைவன், குமரிச்சேர்ப்பன், பஞ்சவன் |
| 3 நாட்டால் | கொங்கன், குடகன் குடக்கோன், பூழியன் | புன்னாடன் | தமிழ்நாடன் தென்னவன் கன்னிநாடன் |
| 4 நகரத்தால் | வஞ்சிவேந்தன் | கோழிவேந்தன் | கூடற்கோமான் கொற்கையாளி பூழியர்கோன் |
| 5 கொடியால் | வில்லவன் | புலிக்கொடியோன் | மீனவன் |
| 6 மாலையால் | போந்தின்றாரோன் பனந்தாரான் | ஆரங்கண்ணியோன் | வேம்பின்றாரோன் |
| 7 வளப்பத்தால் | ,, | வளவன் | செழியன் |
| 8 இசையால் | ,, | , | வழுதி, பாண்டியன் |
| 9 வணங்கும் கடவுளால் | | சூரியன் | கௌரியன் |

கௌரியன் என்னும் பெயர் பாண்டியர்களுக்குச் கௌரவ குலத்தார் சம்பந்தத்தால் வந்ததென ஐயங்கார் அவர்கள் சூசிப்பிக்கின்றார். அப்படி அவர் கூறுவதற்கு ஆதாரம் ஒன்றும் காட்டிலர். கௌரவர் நூற்றுவர்களில் எவனும் அர்ச்சுனனைப் போலத் தமிழ்ப் பெண்களை மணந்ததாக பாரதமாவது மற்றைய நூல்களாவது கூறவில்லை. ஆகையால் ஆரியாசாரப்படி பெயரைக்கொண்டு கதைகட்டினதாக ஏற்படுகிறது. பாண்டியர்களுக்கு எல்லாம் மீனாட்சியம்மன் குலதெய்வம் என்பதை திருவிளையாடற் புராணம் வாசித்த ஒவ்வொருவரும் அறிவர். ஆகையால், மீனாட்சி பெயராகிய 'கௌரி என்னும் பெயரை பாண்டியர்கள் சூடிக்கொண்டார்களே யொழிய வேறின்று.



இனிப் பண்டிதர் சவரிராயர் Tamilian Antiquary Vol I No. 8-ல் என்ன கூறுகின்றார் என்பதைச் சற்றே கவனிப்பாம்.

1. குலசேகரன் மதுரையில் அரசாள வில்லை மணலூரில் அரசாண்டான் என்றும், ஆனால் அவன் கடம்பவனத்தில் சிவபெருமானுக்குக் கோவில் உண்டுபண்ணினான் என்றும் உக்கிரபாண்டியன் தான் தற்கால மதுரையை உண்டாக்கி அரசாண்டதாகவும் கூறுகின்றார்.

இது ஆலசிய மகாத்மியத்திற்கும் திருவிளையாடற் புராணத்திற்கும் முற்றும் விரோதம். இவ்விரண்டு புராணங்களையும் நிராகரித்து வேறு கூறினதற்கு ஆதாரங்காட்டிலர். ஆகையால் அவர்கூற்றை அறிஞர்கள் ஒவ்வார் என்பது தேற்றம்.

இரண்டாவது குலசேகர பாண்டியனுடைய மகனாகிய மலையத்துவச பாண்டியன்தான் சித்திரவாகன் என்றும், மலையத்துவசன் மகளாகிய தடாதகைப் பிராட்டிதான் சித்திராங்கதையாகிய அல்லி யென்றும், சோமசுந்தரக் கடவுள்தான் அர்ச்சுனன் என்றும், தடாதகைப் பிராட்டியின் திருக்குமாரனாகிய உக்கிரபாண்டியனே பப்புருவாகன் என்றும் வாய் கூசாது வரைந்துள்ளார். ஆனால் ஆதாரங்காட்டிலர். இவருக்கு இருந்த தைரியந்தான் என்னேயோ அறிகிலேன். பண்டிதர் என்று பெயர்படைத்தவர்கள் வாய்க்கு வந்தவாறு கூறலாம் என்றசட்டம் எங்கே இருக்கிறதோ அதுவும் அறிகிலேன்.

மலையத்துவச பாண்டியன் இறந்தபிற்பாடு தடாதகைப்பிராட்டியார் பட்டத்திற்கு வந்து திக்கு விஜயம் செய்தகாலத்தில் சோமசுந்தர பாண்டியரை மணந்ததாக ஏற்படுகிறது.

மேலும் தடாதகைப் பிராட்டியார் காலம் இராமாயண காலத்தவனாகிய அனந்தகுண பாண்டியனுக்கு ஏழுதலை முறைகளுக்கு முந்தி சித்திரவாகனுடைய காலம் பாரதகாலம். அப்படியிருக்க தடாதகைப் பிராட்டியார் சித்திரவாகன் மகள் என்பது எவ்வளவு பொருத்தம் என்பதை அறிஞர்கள் கவனிக்க வேண்டுகின்றேன்.

மேலும் வில்லிபாரதம் கர்னபருவம் 17-ம் போர்ச் சருக்கம் 196-ம் பாடலில்

"போன வப்புரவித்தாமா புரிந்தபோர் தொடங்குங்காலை
சேனைகள் நான்கினோடும் சித்திரவாக னென்னும்
மீனவன் வழுதி மாறன் வெண்மதி மரபில் வந்தோன்"

சித்திரவாகன் பாரத யுத்தத்தில் பார்த்தனுக்கு சகாயமாக யுத்தஞ் செய்ததாக ஏற்படுகிறது. மலேயத்துவசன் மருமகனேக் கண்ணுலேயே பார்க்கவில்லேயே. இறந்துபோன மலேயத்துவசனு சித்திரவாகன் என்னும் பெயரோடு பாரதயுத்தத்தில் சண்டைசெய்தது. இது நன்ருயிருக்கிறது!! இது நகுதற்கிடமே யொழிய வேறின்று.

இராமாயண காலத்திற்கு முந்தின மலேயத்துவச பாண்டியனேயும் இராமாயண காலத்துக்கு 3000 வருடங்கள் பின்னிட்ட பாரதகாலத்தவனுகிய சித்திரவாகனேயும் ஒன்று என்பது காலத்தால் தவறு.

தடாதகைப்பிராட்டியார் கல்லியாணத்திற்கு முன்னமேயே இறந்துபோன மலேயத்துவசனேப் பாரதகாலத்தில் அர்ச்சுனனுடன் சண்டைசெய்த சித்திரவாகன் என்று கூறுவது பொருளால் தவறு.

ஆகையால், காத்தியாயனரும், ஸ்ரீமத் இராகவ ஐயங்கார் அவர்களும் ஸ்ரீமான் பண்டிதர் சவரிராயரும் கூறும் மாற்றம் வலியற்றது என்பதை இதனுல் அறிவிக்கலானேன்.

முற்றும்.

துடிசைகிழார் அ. சிதம்பரனுர்.

---

# வேண்டுகோள்.

## இலக்கியங்கண்ட பெரியீர்?

அடியிற்குறித்த பத்திரிகை அச்சிட்டு வழங்குவதாயினும் எளிதிலே விளங்காமையால், 'சித்தாந்தம்' எனும் பத்திரிகையில் வெளிவரின் தூய தமிழ்ப்புலமை வாய்ந்த பலரும் படித்து எல்லார்க்கும் விளங்குமாறு மிக எளியநடையில் சொற்ருெடரைப்பிரித்துப் பொருள்விளக்குவார்கள் என்று எண்ணி வெளியிடலானேன். அன்புகூர்ந்து விளக்கஞ் செய்வீராக.

மோ. கந்தசாமி B. A,

---

# இலக்கண வியனடை வழக்கப்பாடுறுத்துவிக்கும் பத்திரிகை.

உணர்ந்தோரானியல் வகையவின்ன வென்றவற்றிற் பின் மொழிமதிக்கு முன்மொழிமறைக்கு முதலீறுவிளங்க முடிப்பதாயபின் மொழியடைசார் முன்மொழிஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு.

பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளேத்து வணக்கஞ்செய்த ககனநீரெழிலென்றும் வான்வழங்கு பண்ணிகாரமென்றும் நாகச்சுட்டு மீனென்றும் வேறு குறிப்பதொன்று.

அண்மைச்சுட்டடுத்த வேழாவதன்பொருண்மை யும்மையடுத்த பல்லோர்வினப் பெயர்ப் பொருள் குறிஞ்சியிறைச்சிப் பொருளொன்றனேடு புணர்ப.

செய்மைச்சுட்டடுத் தவத்திறத்தியல்யாது.

இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப்பன்மையாறுவதன் பொருட்டாக்கினர்க்குய்த்தகற் பியலதிகரிப்பின் வருந்தலேமகட்பெயரவிரண்டனேடிரண்டேகக்கழிவிலேப் பெயரவுமாகர்ரவீற்று முதனிலேத் தனிவினேச் செயவென்வாய்பாட்டு வினேயெச்சத்தனவாகக் கலப்பகச் செய்யுறுதற்பொருந்திறத்தும்.

இருவகைமுதற் பொருளொன்றன் பாகுபாட்டுறுப்பிற்குறித்தவைம்பெரும்பூதத்தோர் விசேடணத்தெதிர்மறைத் நடுக்குறைநீயற் சொற்பெயரவுயிர்ப்பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது.

சிலவினேச்சார்வான் விலங்குகுடிய வரைவில் வெளியாம்.

இதனேடிருவகைப்பட்ட வோர்சார்புதுநிலஞ் செலவுய்த்தனம்.

வேண்டுழி வேண்டியாங்குய்க்க. மற்றையபின்னர் வரைதும்.

இற்றேவிசும்பிற்கணேச்சலம்.

இங்ஙனம்
தங்கோச்சோழன் வீரமணிச்
குடியார் திருவாணைப்படிக்கு
அடிமை
தொழூர். வேலாயுதம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சந்தானகுரவர்.

## சித்தாந்த பத்திராசிரிய ரவர்களுக்கு:—

ஐய,

சைவசமயத்தில் சந்தான குரவர்களெனப் படுவோர் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவரும், திருத்துறையூர் அருணந்திசிவாசாரியரும், திருப்பெண்ணாகடத்து மறைஞானசம்பந்த சிவாசாரியரும், கொற்றவன் குடி உமாபதிசிவாசாரியருமன்றோ? இவர்க்கு முன்னும் பின்னும் ஆசாரியர் பலர் இருப்பினும் உலகத்தில் சந்தானசாரியரென்று பலராலுங் கொண்டாடப்படுபவர் இந்நால்வருமே யாவர். இதற்கு வேறுசாட்சி வேண்டிய தில்லையாயினும் சில கூறுவேன். திருவாரூர்ச் சுவாமிநாத தேசிகரென்பவரியற்றிய சந்தானசாரிய புராண சங்கிரகத்தில் கூறப்படுவது இந்நால்வருடைய சரிதமேயாகும். காஞ்சிப்புராணத்தின் முகத்தில் சிவஞான யோகிகள் வரலாறெழுதிய இராமநாதபுரம் இராமசுவாமிப் பிள்ளையும் திருக்கைலாச பரம்பரை ஆசாரியர்களாக இந்நால்வரையுமே முதலிலெடுத்துக் கூறுகின்றனர். இந்நால்வருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரும் தாமியற்றிய சிவப்பிரகாசத்துள்

"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல்பூண்ட
திருநந்தியவர் கணத்தோர் செல்வர்பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலான்மாறு
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மையோரே"



என்று தமக்கு முன்னிருந்த மெய்கண்ட தேவர் முதலிய மூவரையும் சந்தான குரவரென்றனர்.

இங்ஙனமாகவும் சிற்றம்பல நாடிகள் மாணக்கராகிய தத்துவப் பிரகாச சுவாமிகளென்பவர் தாமியற்றிய தத்துவப் பிரகாசத்தில் சந்தான குரவர் வணக்கம் கூறுமிடத்து

"நந்தி சனற்குமரன் சத்தியஞானி யடிசேர்
நாதனும் பரஞ்சோதி மெய்கண்ட தேவன்
மூந்து சண்பையர் தலைவன் கொற்றவன் குடியே
முதுபதியா முமாபதி யிம்முறைமையிலே யாண்ட
செந்திருவின் பயன் சிற்றம்பல நாடினன் மெய்ச்
சிவஞான வடிவான திருமேனி யடைவாய்த்
தந்தவிவர் சந்தான குரவரிவர் மலர்த்தாள்
தப்பாம லென்மனத்தி லொப்பாக வைப்பாம்"

என்று உமாபதிசிவாசாரியருக்குக் குருவாகிய திருப்பெண்ணாகடத்து மறைஞானசம்பந்த சிவாசாரியரை நீக்கியும் உமாபதி சிவாசாரியருக்குப் பின் வந்தவரும் தமக்குக் குருவுமாகிய சிற்றம்பல நாடிகளைச் சேர்த்தும் துதி சொல்லினர். சிற்றம்பல நாடிகள் மெய்கண்டதேவர் சந்தானத்தில் வந்தவராதலால் அவரைச் சேர்த்ததில் குற்றமுளதாகக் காணவில்லை; மறைஞானசம்பந்த சிவாசாரியரை நீக்கினது யாதுகாரணத்தால் என்பது விளங்கவில்லை. பத்திராசிரியரே, நீங்களாவது உங்கள் பத்திரிகையை வாசிக்கும் மற்றைய சித்தாந்திகளாவது அன்புகூர்ந்து எனக்கு நிகழ்ந்த இந்தச் சந்தேகத்தைத் தீர்ப்பீர்களென்று உங்களிருதிறத்தாரையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த விஷயத்தில் இன்னுமொரு சந்தேகமெனக்குண்டு. அஃதென்னெனில், கூறுவேன்: மேலெடுத்துக்காட்டிய 'நந்தி சனற்குமரன்' என்றற் றொடக்கத்துச் செய்யுளில் தத்துவப்பிரகாசர் அருணந்தி சிவாசாரியரைச் 'சண்பையர் தலைவர்' என்கின்றனர். இப்பாட்டில் மாத்திரமன்று,

"நற்பொருளாம் பரன்பாலி னந்தியரு ளானும்
நல்வழியா மெய்கண்டான் சண்பையர்த நாதன்
அற்புதமா முமாபதிதா மிவருரைத்த நூலும்
ஆகமத்தி னுட்பொருளு மளப்பில் பரசமயப்

புற்புதமா நிலையில் பொருளனைத்தும் பார்த்துப்
பொருண்மைப் பாலறியாத மருண்மைப் பாலுடையேன்
சொற்பொருளாற் றத்துவப் பிரகாசமெனச் சொன்னேன்
சொல்லிரவி யொளியை மின்மினிதொடரு நெறியே"

என்று தமது நூல்வந்தவழியும் நூற்பெயருங் கூறுமிடத்தும் அருணந்தி சிவாசாரியரைச் "சண்பையர் நாதன்" என்கின்றனர். சண்பையர் நாதன் என்பது சண்பை நகரத்தார்க்குத் தலைவன் என்று பொருள்படும். சண்பை நகரமென்பது சீகாழி. அருணந்தி சிவாசாரியார் சீகாழியிற் பிறந்தவரென்றாவது சீகாழியைச் சார்ந்தவரென்றாவது வேறெங்குஞ் சொல்லப்படவில்லையே. அவருடையவூர் திருத்துறையூரன்றோ?

இன்னுமொன்று. சிற்றம்பல நாடிகளைப் பலரும் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் மாணாக்கரென்பர். மேற்கூறிய சந்தானசாரிய புராணசங்கிரக முடையாரும் மெய்கண்டதேவர் புராணத்தில்,

"மெய்புணர்ந்தார் புகழுமரு ணந்தியோடு
மேவுநிகை மனவாசகங் கடந்தார்
பொய்யகல் சிற்றம்பலநாடிகண் மூன்றுகப்
புகழுறு மாணாக்கர் நாற்பத்தொன் பதின்மர்
மையகலும் பரிபாக நன்குணர்ந்து
மன்னுசிவ தீக்கைமுறை மருவச்செய்து
தெய்வவருண்மே விடமுப்பொரு ளுணர்த்திச்
சின்மயராந் தன்மையினைச் செய்துபின்னர்"

எனச் சிற்றம்பல நாடிகளை மெய்கண்ட தேவருக்கு மாணாக்கராக்குவர். ஆயினும் மேலெடுத்துக் காட்டிய "நந்திசனற் குமரன்" என்றற்றொடக்கத்துத் தத்துவப் பிரகாசச் செய்யுள், சிற்றம்பல நாடிகள் நேரே மெய்கண்டதேவர் மாணாக்கரல்லரென்றும் அம்மெய்கண்ட தேவர் சந்தானத்தில் உமாபதி சிவாசாரியருக்குப் பின் பலதலை முறைகழித்து வந்தவரென்றும் நன்குதெரிக்கும். இவ்விருகூற்றில் சிற்றம்பலநாடிகளோடொரு காலத்திருந்தவராகிய தத்துவப்பிரகாசர் கூற்றன்றிப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த சந்தானசாரியர் புராணசங்கிரக முடையார் கூற்றுக் கொள்ளத்தக்கதன்று.

சி. தி. கனகசுந்தரம் பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவனடியார் சிறப்பும் அடியவர் பூஜாபலனும்.

தொகுதி 5. பகுதி 11. பக்கம் 264. தொடர்ச்சி.

உலகத்தில் அரசனாயிருப்பவனுக்கு அவனருகிலிருக்கும் மந்திரி முதலானோர் பிரீதியுண்டுசெய்து பிறர் பிரீதிசெய்யாததுபோல், தியானயோகஞ்செய்தவர்கள் சிவபெருமானுக்குப் பிரியவான்களாய்க் கர்மயாகஞ் செய்தவர்கள் பிரியவான்களாகமாட்டார்கள். யானையின் தந்தங்களில் உள்ளே யிருப்பவை அறுக்கப்படாமற் சுகமா யிருப்பவையும் வெளியே தோன்றுபவை அடிக்கடி அறுபட்டுக் கஷ்டமடைவனவும்போல, சிவபெருமானை அந்தரங்கமான தியானயாகத்தாற் பக்திசெய்பவர்கள் சுகமடைபவர்களாகவும் புறம்பே கர்மயாகத்தாற் பக்திசெய்பவர்கள் கஷ்டமடைபவர்களாகவுங் கொள்ளவேண்டும். ஆதலின் தியான யோகத்தால் மனத்துக்கு மாத்திரம் விஷயமாகவும் மகத்துவமுடையதுமான ஞானமுண்டாகும். அவ்வகைய தியானயோகத்தை அறிவுள்ள புருஷன் அப்பொழுதுஞ் சிவார்ச்சனையாகச் செய்யவேண்டியது. ஆனால் கர்மயாகத்தாற் பலனில்லையோ எனக்கேட்பாயாயின், கர்மயாகத்தாலும் பயனுள்ளது. அஃதெங்ஙனமெனில், யானையைப் பிடிக்கவேண்டியவன் தன்னிடத்தில் நெடுநாளாகப் பழகிவந்த ஒரு யானையை உடன்கொண்டு வனத்தை யடைந்து ஆங்குப்பல யானைகளுடன் போர்செய்து கொண்டிருக்கும் யானையைத் தன் யானையாற் பிடித்துக்கொண்டு வருமாறு, அடைதற்கரிய ஞானயாகத்தைத் தான் நெடுநாள் பழகிவந்த கர்மயாகத்தினாலேயே யடையவேண்டியது. ஆகாயத்திற் பறக்க விரும்பும் பறவையானது தன் ஒரு சிறகினாற் சாத்தியப்படாது இரண்டு சிறகுகளாலும் பறக்குமாறு, சிவசாயுச்சியத்தை யடைய வேண்டியவன் கர்மயாகத்தால் அடைந்த தியானயாக வுதவியாலடையவேண்டியது என்றும் பெரியோர்சிலர் சொல்லுவர். ஒருமுகூர்த்த

காலம் சிவபெருமானைத் தியானயாகத்தால் அர்ச்சித்தவன் பெறும்பேறு இத்தன்மையதென்று அளவிட்டுச் சொல்ல ஒருவருக்குந் தரமன்று. தியானயாகஞ்செய்ய யத்தனித்தவனுக்குத் தெய்வீகமாக அநேக விக்கினங்கள் சம்பவித்தபோதிலும், சிரத்தையும் குருபக்தியுமட்டும் உண்டாயிருப்பதுபற்றி, உருத்திரலோகத்தை யடைந்து ஆங்குள்ள சகல சுகங்களையு மநுபவித்து யோகிகளது புனிதமான குலத்தில் ஜனித்து ஞானயாகம் பெற்றுச் சமுசார விரக்தியடைவான். அதமம் மத்திமம் உத்தமமெனச் சிரத்தையானது முத்திறப்படும். ஞானயோகமானது மூன்றுஜனனங்களிலுங் கைகூடப்பெறாதவனுக்கு அசிரத்தையுண்டென்று கொள்ளவேண்டும். பக்தியோடு சிவபெருமானைத் தியானஞ்செய்வோன் விரதத்தாலுந் தவத்தாலுங் கோரத்தக்கவையாவும், பெற்று ஞானமடைந்து நித்யமான மோக்ஷசுகத்தை யடைவான்.

கர்மயாகஞ் செய்வோருக்கு ஒருதரம் தானஞ்செய்தால், சாதாரணமான வேதியருக்குப் பத்துஜனனங்களில் தானஞ்செய்த பலனும், தபோநிஷ்டர்களுக்குத் தானஞ்செய்தால் நூறு ஜனனங்களில் தானஞ்செய்த பலனும், கர்மயாக தயோகமுடையவருக்குத் தானஞ்செய்தால் ஆயிரஞ் சனனங்களிற் செய்தபலனும், சிவபக்தர்களான தியானயாக முடையவருக்குத் தானஞ் செய்தால் லக்ஷ ஜனனங்களிற் செய்த பலனும் உண்டாகி, அது அற்பதானமாயினும் எக்காலமும் பலனளிக்கத்தக்கதாக முடியும். இதில் தேசம் காலம் விதி சிரத்தை முதலியவற்றாற் சற்பாத்திரமான சிவபக்தனுக்கு அற்பமாயினும் விசேஷமாயினுஞ் சக்திக்கேற்பச் செய்த தானமானது அக்ஷயமான பதவியைக்கொடுக்கும். தேசகாலங்களைக் கவனித்து விதிப்படி சிரத்தையோடு சத்பாத்திரனுக்குத் தானஞ்செய்தவனும், ஹோமஞ்செய்தவனும் அக்ஷயமான பலனடைவதிற் சிறிதும் ஐயமின்று. ஞானமாகிய ஜலத்தால் புனிதமாக்கப்பட்ட மனத்துடன் ஆசாரம் வமிசம் விபூதிதாரணம் முதலியனவுடையவன் சற்பாத்திர சிரேஷ்டனும், தானஞ்செய்தவனது கோரிக்கைகளைக் குறைவறக் கொடுக்கவல்லவனு மாவான். ஞானமின்மையாகிய நுரையையுடைய சமுசாரமாகிய சாகரத்தில், ஞானமாகிய தெப்பத்தால் தாண்டித் தன்னுடன் பலரையுந் தாண்டச் செய்கிறவனும், பெரும்பாவமாகிய சமுத்திரத்தை ஞானமாகிய படகினாற் கரைகண்டு பலரையுந் தன்னுடன் வரச்செய்து அவர்களால் எண்ணிறந்தவர்களையுங் கரைகாணச் செய்விக்கிறவனும், உத்தமபாத்திரமாவர். சிவயோகியானவன் எவன் வீட்டில் ஒருவேளை பிக்ஷை யேற்கின்றானோ அவனுடைய



வமிசத்திலிருப்பவர்கள் யாவரையும் முக்திக்கனுப்புவான். யாகத்தினாலும் தீர்த்தயாத்திரை முதலியவற்றினாலும் உண்டாகும் பலன்களெல்லாம் சிவபக்தர்களுக்கு அன்னதானஞ் செய்தவனாலேயே உண்டாகும். சாந்தமும் சிவத்தியானமுமுடைய ஞானவானுக்குச் சிரத்தையுடன் ஒருமுறை அன்னமளித்தவன் தன்பாவங்களை யெல்லாம் அப்பொழுதே ஒழித்து இஷ்டகாமியங்களை யெல்லாங் குறைவின்றி யடைவான்.

பிதுர்க்களை யுத்தேசித்துச் சிரார்த்தகாலங்களிற் சிவபக்தர்களுக்கு அன்னமளித்தவன் தன் குலத்தவர்களைப் பதினொரு தலைமுறை வரையில் உடன்கொண்டு சிவலோகமடைவான். போஜனகாலத்தில் சிவா! சங்கரா! என்று பகவன் நாமத்யானஞ் செய்தவன் புசித்த உணவுகளெல்லாம் சிவப்ரீதியாய்ப் பலனை யுண்டுசெய்யும். சாஸ்திரோக்தப்படி சிவநிவேதனஞ் செய்து, அக்கினிகாரியம் (வைசுதேவம்) முடித்துத் தன் குருபாகத்தைக் குருவிற்குக் கொடுத்து அங்குவந்த பிராமண அதிதிகளுக்கும் அன்னமளித்துப்பின்னர் புசிக்கவேண்டும். அல்லாதவன் அன்னம்புசித்தவனாகாது சமஸ்த பாவங்களையும் பக்ஷித்தவனாவான். அஃதெங்ஙனமெனில் கிருஷிவ்ருத்தி வர்த்தகம் கோபம் ஸம்மார்ஜனம் முதலியவற்றாற் பலவிதமான பாவங்கள் புருஷருக்கு விருத்தியாகிக் கொண்டிருக்கின்றன. அப்பாவங்களின் விருத்தியால் ஸம்மார்ஜனம் அஞ்சனம் தேர்யம் அக்கினிகுண்டம் நிபேஷணமென்னும் பஞ்சஸூநங்கள் எப்பொழுதுங் கிரகஸ்தர்களை ஆச்சிரயித்தே யிருக்கின்றன. தான் புசிக்கும் பக்குவான்னங்கள் யாவும் சிவ அக்னி குரு அதிதிகளுக்கு நிவேதித்துப் புசித்தால் இப்பஞ்ச ஸூநங்களும் இதரமான அநேகபாவங்களும் இல்வாழ்வோரை யடையமாட்டா. ஆதலின் அவ்வுணவினைச் சிவாதிகளுக்கு ஆராதித்தே புசிக்கவேண்டும். சிவ அக்கினி குரு முதலியவர்க்கு எத்தனை பறிக்கை நிவேதிக்கின்றார்களோ அத்தனையாயிர வருஷங்கள் சிவபுரத்தில் வசித்திருப்பார்கள். நெய் பக்ஷியங்கள் அன்னம் இவற்றை நிவேதித்தவன் நூறுபங்கு விசேஷ பலனை யடைவான். சாஷ்டிகோதன நிவேதனஞ்செய்தவன் ஆயிரம்பங்கு பலனை யுறுவான். சுகந்தமான சாலியரிசியாற் சமைத்த அன்னத்தை நிவேதித்தவன் முற்கூறியதிலும் பத்துப்பங்கு பலனை யடைவான். செஞ்சாலியன்னம்படைத்தவன் முற்கூறியதிலும் பத்துப்பங்குபலனைப் பெறுவான், கமலசாலியன்னம் நிவேதித்தவன் லக்ஷக்கணக்கான பலன் பெறுவான். இவ்வாறு ஒன்றற்கொன்று விசேஷ பலன் கொடுக்கத் தக்கவை. நல்ல பதார்த்தங்களோடு கூட்டி அன்னம்படைத்தவன் புண்ணியவிருத்தி யடை

வான். க்ஷீரான்ன நிவேதனத்தால் பத்துப்பங்கு விசேஷபலன் கைகூடும். தயிர் சர்க்கரை கூட்டிய அன்ன நிவேதனத்தால் முந்தியதிலும் பத்துப் பங்கு அதிகபலன் வரும். நல்லசுவையும் குளிர்ச்சியும் பச்சைக் கர்ப்பூர முதலியவற்றின் மணமுமுடைய அறுசுவையோடு கூடிய அன்னம்படைத் தவன் பத்துக்கோடிபங்கு விசேஷ புண்ணியத்தை யடைவான். நெய் யாற்செய்த அதிரசங்களைப் படைத்தவன் பெறும் புண்ணியத்தைப் பெறு வான். இப்படி உருசியுடையதும் நெய்யாற்செய்ததும் மணமுடையது மாகிய இவற்றைப்பக்தியுடன் சிவ அக்னி குரு பந்துக்களுக்குச் சமர்ப்பித் துப் பின்னர்தான் புசித்தவளவில் அக்ஷயமான பலனையடைவான். சிவ யோகிகளைப் பிதுர்தினத்தில் வருவித்து இப்படிச் சுவையோடு கூடிய உணவைப் பக்திபூர்வமாக அவர்களுக்குப் படைத்தவன் தன் பிதுர்க்கள் செய்த பாவங்களை நீக்கிச் சுவர்க்கலோக மடைவிப்பன். வஸ்திரம் அன் னம் பான முதலியவற்றைச் சிவயோகிகளுக்குச் சிரத்தையுடன் ஒருமுறை யாவது கொடுத்துப் பூஜைசெய்தவன் அப்பொழுதே பிரம விஷ்ணு ருத் திரர்களைப் பூஜித்தபலனை யடைவான். சிரார்த்த தினத்திற் சிவாராதனை செய்து சிவயோகிகளைப் பிக்ஷைகொள்ளும்படி விளித்த பொழுதே அவ னுடைய பிதுர்க்கள் ஆனந்தித்து நடனஞ் செய்தும் கானஞ்செய்தும் அவனை ஆசீர்வதிப்பார்கள்.

விபூதியை உத்தூளனஞ் செய்துகொண்டு உருத்திராக்ஷ மணிமாலை யணிந்து சிவாதி நாமங்களை யுச்சரித்துக்கொண்டு சிவயோகி யொருவன் வந்து வாயிலினின்றவுடனே, அவ்வீட்டிற்குத் தனதானிய சம்பத்துகள் சேரும். உத்தமமான சொர்க்கபதவியு முண்டாகும். ஆதலின், அதிதி வருவதுணர்ந்தவன் அவனை அஞ்சலியஸ்தனு யெதிர்கொண்டு அழைத்து வந்து சக்திக்கேற்றபடி பக்தியுடன் அன்னபானாதிகளால் அவனைத்திருப்தி செய்யவேண்டும். அவ்வதிதி தேஜோரூப முடையவனாயினும் விரூபியாயி னும் மலினனாயினும் மலினவஸ்திர முடையவனாயினும் அவன் இவ்வகை யினனென்று விசாரியாமல் இவன் சிவயோகியே யென்று உள்ளத்திற் கொண்டு உபசரிக்கவேண்டும்.

பா. கண்ணப்ப முதலியார்.

---

## சைவசித்தாந்த மகாசமாஜ அங்கத்தவர்களுக்கு:—

ஐயன்மீர்!

1915ஆம் டிசம்பர்மீ 27உ தஞ்சையில் நடந்த மகாசமாஜக் கூட்டத்தில் தீர்மானித்த தீர்மானங்களின் பிரகாரம் சைவசித்தாந்த சமயசாஸ்திர விஷயமாய்ப் பரீக்ஷைகள் இவ்வருடம் நவம்பர்மாதம் கடைசியில் நடத்தும்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பரீக்ஷை கள் புராணப்பரீக்ஷை, சித்தாந்தப் பிரவேசப்பரீக்ஷை என இரண்டு வகுப்புகளாக பரீக்ஷிக்கப்படும். அவைகளுக்கு ஏற்படும் பாடங் களையும் பரிசுகளையும் மற்றோர்முறை அறிவிக்கப்படும். பரீக்ஷை களை ஊக்கமுள்ள சைவப்பிரபுக்கள் இதற்கெனதனியாக பொருளுதவி செய்யின் மிகுந்த பரிசுகளை மாணவர்களுக்கு அளிக்கப்படும், இப் போது சிலமடாதிபதிகளும் பிரபுக்களும் ஒத்துக்கொண் டிருக்கின்ற னர். அவர்கள் பெயர்களை மறுமாதத்தில் அறிவிக்கப்படும்.

## துண்டுப்பத்திரிகைகள்.

சித்தாந்த விஷயமாகத்துண்டுப்பத்திரிகைகள் அச்சிட்டு பலருக் கும் உதவுதற்குத்தனியாக ஓர்நிதி சேகரம் செய்தல் வேண்டுமென்று மகாசமாஜக்கூட்டத்தில் தீர்மானித்திருப்பதால் சைவசபைகளும் சைவாபிமானிகளும் பொருளுதவிசெய்யின் அப்பொருளைத் துண்டுப் பத்திரிகைகள் அச்சிடுவதிலேயே செலவழித்து, பொருளுதவிய சைவ சபைகளுக்கும், மற்றைய சைவர்களுக்கும், ஏனையர்க்கும் கொடுத்து சைவசித்தாந்தக் கொள்கைகளைப் பரவச்செய்தல்கூடும். ஆதலால்ஒவ் வொருவரும் தத்தமக்கியன்ற பொருளுதவி செய்யக் கேட்டுக்கொள்ளு கின்றேன். பொருள் அனுப்புவோர் தாம்அனுப்பும் பொருள் இதற் கென எழுதி அனுப்பக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்:
நி. குப்புச்சாமி.
காரியதரிசி,

M. L. V. Press, Madras.

# சித்தாந்த அநுபந்தம்.

உ

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

திராவிட மகாபாஷ்ய கர்த்தரும்,

சித்தாந்தசைவப் பிரதிஷ்டாசாரியருமாகிய

ஸ்ரீமாதவச்

## சிவஞானயோகிகள் திருநக்ஷத்திரம்.

சிவபெருமானே முழுமுதற் கடவுளென்றும், ஆன்மாக்கள் அனைவரும் அவருக்கு மீளா அடிமைகளென்றும், உயிர்களைப் பந்தித்திருக்கிற ஆணவாதி மலங்கள் அவரது அநுக்கிரகத்தாலே நீங்கப்பெறுமென்றும், அம்மல நீக்கத்திற்கு வேண்டப்படும் சாதனங்கள் ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபமும், விபூதி ருத்திராக்ஷங்களாகிய சிவசின்ன தாரணமும், சிவோபாசனையுமே யாமென்றும், அவற்றைச் சிறப்பு வகையால் விதித்த நூல்கள் சிவாகமங்களேயென்றும் உணர்ந்து, சிவாகம விதிப்படி சைவாசாரியரிடத்தே தீக்ஷை பெற்று அவ்வழிநின்று சிவபெருமானை மனம் வாக்குக் காய மென்னும் மூன்றானும் வழிபடும் சமயமே சைவசமயமெனப்படும்.

இச்சைவ சமய உண்மைகளைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமிகளென்னும் சமயாசாரியர் நால்வரும் தோத்திரவாயிலாகவும், மெய்கண்ட சிவாசாரியர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்னும் சந்தானாசாரியர் நால்வரும் சாத்திரவாயிலாகவும் வெளியிட்டு சமயஸ்தாபனம் செய்தருளினார்கள்.

இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய சைவசமய ஒழுக்கம் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்குமுன் அந்நிய மதத்தர்களாலே பேதிக்கப்பட்டுப் பெரிதும் க்ஷீண தசையையடைந்தது. அக்காலத்திலே பாண்டிய நாட்டில் தாம்பிரபன்னி நதியின் வடகரையிலே பாபவிநாசத்திற்குச் சமீபத்திலுள்ள விக்கிரம சிங்கபுரத்திலே சைவ வேளாளர் குலத்திலே அகத்திய மகாமுனிவர் வரப்பிரசாதத்தினாலே திருவவதாரஞ்செய்து, மெய்கண்ட சிவாசாரியர் சந்ததியிலே வந்த ஞானபாநுவாகிய திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதமாசாரியர் நமச்சிவாய தேசிக சுவாமிகள் மரபிலே அருளுபதேசம் பெற்ற

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் புறமதக்களைகளை யெல்லாம் நியாயவாயிலாகக்களைந்து சைவசமயத்தைப்பண்டை நிலையில் பிரதிஷ்டை செய்தருளினார்கள்.

ஸ்ரீ சிவஞானயோகிகள் திருவவதாரஞ்செய்து, வேதசிவாகமாதி சாஸ்திரங்கட்கெல்லாம் சிரஸ்தானமானதும், ஸ்ரீ மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகளாலே அருளிச்செய்யப்பட்டதுமான சிவஞான போதத்திற்குத் 'திராவிடமாபாஷியம்' என்னும் பேருரையும், பிறிதோர் சிற்றுரையும், சிவஞானபோதத்தின்வழி ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகளாலே அருளிச்செய்யப்பெற்ற சிவஞான சித்தியாருக்கு அருமருந்தன்ன பொழிப்புரையும் லோகோபகாரமாக அருளிச்செய்யாதொழியின் நமது சைவ சமய வொழுக்கத்தைக் காண்பார் யாவர்? இற்றைக்கு யாமெல்லாம் விபூதி ருத்திராக்ஷதாரணர்களாய் சிவோபாசனா விசிஷ்டர்களாய் இறுமாந்து வாழும் பெரும் பேறு ஸ்ரீ சிவஞானயோகிகளால் வந்த வாழ்வன்றோ?

ஆதலின், சைவசமயிகள் ஒவ்வொருவரும், ஆங்காங்குள்ள சைவசபையார்களும் சுவாமிகள் அத்துவித சித்தாந்த முத்தியடைந்த திருநக்ஷத்திரமாகிய சித்திரைமாதத்து ஆயிலிய நக்ஷத்திரத்தன்று விதிப்படி சிரத்தையோடு குருபூஜைசெய்தல் வேண்டும்.

## ☞ சுவாமிகளின் 132-வது குருபூஜை நிகழும் சித்திரைமீ 28உ புதவாரதினமாகும்.

### குருபூஜைக்கிரமம்.

சுவாமிகளது திருநக்ஷத்திரதினத்திலே திருக்கோயிலிலே சிவலிங்கப்பெருமானுக்கும், சுவாமிகளுடைய திருவுருவம் உள்ளதாயின் அதற்கும் விசேஷபூஜையும், வேதபாராயண தேவார பாராயணங்களோடு உற்சவமும் செய்வித்தல்வேண்டும். சிவாகமப்படி தீக்ஷைபெற்ற நான்குவகைமாகேசுரர்களையும் அன்போடழைத்து வந்து அவ்வடியார்களைச் சுவாமிகளாகப்பாவித்து விதிப்படி பூசித்து நமஸ்கரித்துத் திருவமுதூட்டல் வேண்டும். சுவாமிகளுடைய சரித்திரத்தையும், அவர்கள் அருளிச்செய்த சாஸ்திரங்கள், பாஷ்யங்கள் முதலியவற்றின் பொருள் நுட்பங்களையும் ஓதுதலும், ஓதுவித்தலும், கேட்டலும் வேண்டும்.

இவ்விதம் சுவாமிகளுடைய குருபூஜா மகோற்சவத்தைச் சைவர்கள் அனைவரும் நடத்தி ஸ்ரீ சிவபெருமானுடைய திருவருட்பேறடைவார்களாக.

சுவாமிகள் சரித்திரம் வேண்டுவோர் அரையணாத் தபால் முத்திரை அனுப்பி எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

1091-ம் ௵ அனல ௵ சித்திரைமீ 12உ

இங்ஙனம்,
சைவசித்தாந்த சபையார்,
தூத்துக்குடி.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

22 JUN 1916 MADRAS.

## சைவசித்தாந்த மகாசமாஜப் பரீக்ஷை விதிகள்.

சைவசித்தாந்த தத்துவ நூல்களாகிய சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலியவற்றையும், சைவபுராணங்களாகிய பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், முதலியவற்றையும் யாவரும் கற்று அவற்றின்கண் செறிந்துகிடக்கும் உண்மைகளை உணர்ந்து நலமெய்தவேண்டும் என்னும் நன்னோக்கம்பற்றிச் சைவசித்தாந்த மஹா சமாஜத்தினர் சிலபரீக்ஷைகள் நடத்தித் தகுதிக்கேற்றபடி பொற்பதக்கம், வெள்ளிப்பதக்கம் புத்தகங்கள் முதலிய பரிசுகளையும், ஒப்புச்சீட்டும் கொடுக்க முடிவுகட்டி யுள்ளார்கள். அவற்றின் வரலாறு இங்கே குறிக்கப் படுகின்றது.

### பரீக்ஷைகள்.

1. சைவபுராண பிரவேச பரீக்ஷை
2. சித்தாந்த பிரவேச பரீக்ஷை
3. சைவபுராண இரண்டாம் பரீக்ஷை
4. சித்தாந்த இரண்டாம் பரீக்ஷை
5. சைவபுராண பண்டித பரீக்ஷை
6. சித்தாந்த பண்டித பரீக்ஷை

என அறுவகைப் பரீக்ஷைகள் நடைபெறும்.

இவ்வருடம் முதலாகையால் முதற் குறித்த சைவபுராண பிரவேசபரீக்ஷை சித்தாந்தபிரவேசபரீக்ஷை என்னும் இரண்டுபரீக்ஷைகள் மட்டும் நடைபெறும்.

## நடைபெறும் இடங்கள்.

1. சென்னை 2. தஞ்சாவூர் 3. மதுரை 4. திருச்சிராப்பள்ளி 5. திருநெல்வேலி 6. கூடலூர் 7. வேலூர் 8. காஞ்சிபுரம் முதலிய பிரபல நகரங்களில் நிகழ்ப்பெறும். அன்றியும், ஒரு நகரத்தில் 6 மாணவர் பரீக்ஷைக்கு வருவதாயின் அந்நகரத்திலும் நடத்தப்படும். ஒரு நகரத்தில் பரீக்ஷைக்கு வரும் மாணவர் தொகை 6-க்குக் குறையின் பரீக்ஷை நடக்கும் அடுத்த நகரத்துக்கு அவர்கள் வருதல் வேண்டும் இதுமுன்னர் அறிவிக்கப்படும்.

## அம்ஸவிவரம்.

மொத்தத்தில் நூற்றுக்கு 60 அம்ஸம் பெறுவர் முதல் வகுப்பினராவர். நூற்றுக்கு 40 அம்ஸம் பெறுவர் இரண்டாம் வகுப்பினராவர். இதனுள் ஒவ்வொரு பரீக்ஷைகளிலும் அதிக அம்ஸம் பெறும் முதன் மூவர்க்குப் பதக்கப்பரிசு கொடுக்கப்படும்.

புராணபரீக்ஷைக்கு முதற்பரிசு ரூபாய் 25 பெறும் ஒருபொற்பதக்கம்
,, இரண்டாம் பரிசு வெள்ளிப்பதக்கமும், மிகுதிரூபாயும்
,, மூன்றாம் பரிசு வெள்ளிப் பதக்கம்

சித்தாந்த பரீக்ஷை முதற் பரிசு ரூபாய் 35 பெறத்தக்க ஒரு பொற்பதக்கம்
,, இரண்டாம் பரிசு ரூபாய் 25 பெறத்தக்க ஒருபொற்பதக்கம்
,, மூன்றாம் பரிசு ரூபாய் 15 பெறத்தக்க ஒரு வெள்ளிப் பதக்கம் மிகுதி ரூபாயும்.

புத்தகப்பரிசு விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இப்பரீக்ஷைகட்கு ஆண்பாலாரும் பெண்பாலாரும் வரலாம். பரீக்ஷைக்கு வர விரும்புவோர் 1916ஆ செப்டம்பர்மீ 30உக்குள் தங்கள் விண்ணப்பங்களைச் சென்னைச், சமாஜ ஆபீசுக்கு அனுப்பிவிடல் வேண்டும். பரீக்ஷைக்குக் கட்டணத் தொகை அணா நான்கு, தபால் முத்திரையாகவேனும் சிலர் சேர்ந்து மணியார்டர் மூலமாகவேனும் அனுப்பலாம். பரீக்ஷைக்கு வருபவர் தங்கள் விண்ணப்பங்களில் ஒரு தமிழ்ப்பண்டிதர் கையெழுத்தையாவது சைவசித்தாந்த மஹாசமாஜ அத்தியக்ஷர் ஒருவர் கையெழுத்தையேனும் வாங்கி அனுப்புதல் வேண்டும். இவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.



## காலம்.

1916ஆ நவம்பர்மீ மூன்றாம் சனிக்கிழமை காலை 10-மணி முதல் மாலை 5-மணிவரை மேல் குறித்த இடங்களில் பரீக்ஷைகள் நடைபெறும். மற்ற விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பரிசுகள் முதலியன அவ்வவ்வருட மஹா சமாஜகூட்டத்தில் அளிக்கப்பெறும். அவ்விடங்களுக்கு வருதற்கு வேண்டும் பிரயாணச் செலவும் சமாஜத்தாரில் அளிக்கப்பெறும்.

## பாடங்கள் விவரம்.

சைவபுராண பிரவேச பரீக்ஷை.

| | | | |
|---|---|---|---|
| வசனம் | 1. | பெரியபுராண வசனம் | ஆறுமுக நாவலர் பதிப்பு |
| | 2. | திருவிளையாடற் புராண வசனம் | |
| | 3. | கந்தபுராணவசனம் | |

சரித்திரங்கள் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் முதலியன கேட்கப்படும்.

செய்யுள் 1. பெரியபுராணம் முதலிலிருந்து தடுத்தாட்கொண்டபுராணம் முற்றும்

2. திருவிளையாடற் புராணம்

(1) இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்

(2) வெள்ளையானைக்குச் சாபந்தீர்த்த திருவிளையாடல் இரண்டும் பதப்பொருள், விஷயம் முதலியன கேட்கப்படும்.

மனப்பாடம். தோடு 10, கூற்று, 10 பித்தா 10, நீற்றுப்பதிகங்கள் 10, திருத்தொண்டத் தொகை, 10 நமச்சிவாயப் பதிகம் 40 திருவடித் திருத்தாண்டகம் 10, திருவாசகம் திருச்சதகம் 100

ஆக 200 திருப்பாசுரங்கள்.

இலக்கணம் தப்பின்றி எழுதத் தெரிந்தால் போதும்.

## சித்தாந்த பிரவேச பரீக்ஷை.

செய்யுள் திருவருட்பயன் மூலமும் நிரம்ப அழகியர் உரையும் விஷயங்கள் முதலியன கேட்கப்படும்.

மனப்பாடம் 1. சிவஞானபோத 12 சூத்திரங்கள் மூலமட்டும்
2. சிவஞான சித்தியார் சுபட்ச முதலிரண்டு சூத்திரங்கள் மூலமட்டும்.

இலக்கணம் பிழையின்றி எழுதத் தெரிந்தால் போதும்.

குறிப்பு:—மேற்குறித்தஇரண்டு பரீக்ஷைக்கும் 20 வயதுக்கு மேற்படாதவர் மாத்திரமே வருவதற்கு உரியர். பெண்பாலார்க்கு இவ்விதியில்லை. இது சம்பந்தமாக இன்னும் ஏதேனும் அறியவிரும்புவோர் சைவசித்தாந்த மஹாசமாஜ காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

பாடங்கள் தவிர ஏனைய விதிகள் சிலமாறுதற்கும் உரியவை.

வேண்டுகோள்.

இப்பரீக்ஷைகளை இனிது நிறைவேற்றுதற் பொருட்டு, சமாஜ அத்தியக்ஷர்களும், அங்கத்தினர்களும் முயற்சி செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

66-சாமி நாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

இங்ஙனம்,
கி. குப்புச்சாமி,
காரியதரிசி,
சைவசித்தாந்த மஹாசமாஜ ஆபீஸ்.

M. L. V. Press, Madras.

குகமயம்.

## புதுவிளம்பரம்.

# சிவஞானபோதவசனாலங்காரதீபம்.

இந்நூல், ஸ்ரீ நீலகண்டபாஷியத் தமிழ்மொழிபெயர்ப்பாசிரியராகிய சித்தாந்த ஞானபாநு **ஸ்ரீ காசிவாசி செந்திநாதைய** ரவர்களாலியற்றப்பட்டு அச்சிடப்படுகின்றதென்பது முன்னர் விளம்பரமூலந் தெரிவிக்கப்பட்டது. அதனைக் கண்ணுற்ற அன்பர்க்கு ஞாபகமிருக்குமென்று கருதுகின்றேன்.

இப்பொழுது அச்சிட்டு முடிந்து பயிண்டாகி விலைக்கு வெளிவந்துவிட்டது. சிவஞானபோதச்சிற்றுரை பாடியம் இரண்டினும் வேதம் உபநிடதம் ஆகமம் திருமுறை முதலியவற்றினின்று மெடுத்துக்காட்டப்பட்ட பிரமாணங்களேயன்றி இவற்றினின்று மவற்றில் எடுத்துக் காட்டப்படாத அனேக பிரமாணங்களும் இவ்வசனநூலில் எடுத்துக் காட்டப்பட்டிருத்தல் இதுகாறும் என்போல்வார் கொண்டிருந்த ஐயம் திரிபு அறியாமை என்பன நீங்கி உண்மைஞானம் உதித்தற் கேதுவாயிருக்கின்றது. அதன் அருமை பெருமைகள் வித்துவாவிப் பிராயமாகிய சிறப்புப்பாயிரம் முகவுரை முதலியவற்றால் யாவரும் அறியக்கிடத்தலின் ஈண்டு விரித்தல் மிகையெனவிரியாதுவிட்டேன். ஆயினும் ஒன்றுகூறி முடிக்கின்றேன்.

ஒருசீடன் சற்குருவையடைந்து வழிபட்டுச் சிவஞானபோத உண்மை யுணர்ச்சியை அடைதற்கு முன்னர் அதிலே பொதிந்துள்ள விடயங்கள் இவையெனத்தானே உபாயஞானம் வாயிலாக மிகவும் இலகுவில் அறிந்துகோடற்கு ஒவ்வோர் சூத்திரத்தின் இறுதியிலும் வினாக்களும் அவற்றின் விடைகளை உணருமாறு அவற்றின் எண்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இத்துணை இலகுவாகச் சிவஞானத்தை உதிப்பிக்கவல்ல இவ்வசனநூல் சைவசமயிகளாகிய ஆண்பாலார் பெண்பாலார் யாவர்க்கும் அத்தியாவசியகம் வேண்டற்பாலதாம் பெறலரும் பெருநிதியே யென்பது சொல்லாதே விளங்கும்.

இதில் பொல்லாப்பிள்ளையார், தக்ஷிணாமூர்த்தி, மெய்கண்டதேவர், சிவஞானசுவாமிகள் திருவுருவப்படங்கள் முன்னர்ச் சேர்க்கப்பட்டிருந்ததலோடு ஈற்றில் ஆக்கியோன்படமும் சேர்க்கப்பட்டது.

காகிதக்கிரயமும் பைண்டுக்கூலியும் முன்னையினும் மும்மடங்கு அதிகப்பட்டிருக்கு மிக்காலத்து யாவரும் எளிதாக வாங்கும் பொருட்டு இதன் குறைந்தகிரயம் ரூபா 2 அணா 8 ஆக ஏற்படுத்தப்பட்டது. வாங்க விரும்பும் அன்பர்கள் எனக்குத் தெரிவித்தால் வி. பி. மூலம் அனுப்பப்படும்.

**சி. ஏகாம்பர முதலியார்**
44—சாமிநாய்க்கன் ரோட்
சிந்தாதிரிப்பேட்டை சென்னை.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் வெளியீட்டுக்குப்புச் சாரியதரியோரா கிய-ஏ. ஆண்டாளம்மாளெனப் பெயரியஸ்ரீமதி-மங்கையர்க்கரசியார் அவர்களால் வெளியிடப்பட்டன:—

## சிவலிங்கமகத்துவம்.

சிவாலயத்திற்சென்று வழிபடும் அன்பர்களாகிய அடியார்கட்குக் காட்சியளிப்பதற் கேதுவாயுள்ள சதாசிவமூர்த்தியாகிய சிவலிங்கப்பெருமான் திருமேனியின் உண்மைப்பொருளைப் பல உபநிடதப் பிரமாணங்களைக் கொண்டு விரிவாக வெழுதப்பட்டுள்ளது.

இதன் விலை அணு 4.

## திருநீற்றின் உண்மை.

சைவபூடணங்களு ளொன்றாகிய விபூதியின் வரலாறும், மகிமையும், தரிக்கப்படும் விதமும், பயனும், ஆக்கும் விதமும், அற்புதச் செய்கையும், மற்றும் நன்குவிளக்கிச் சுருதிப் பிரமாணங்களுடன் விரிவாக வெழுதப் பட்டுள்ளது.

இதன் விலை அணு 4.

சைவசித்தாந்த மகாசமாஜம் ஆபீஸ்,
66-சாமிநாய்க்கன் வீதி
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

161395



| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |